

இடைவெளி
அதிகமில்லை
ரமணிசந்திரன்

எப்படித்தான் இப்படியெல்லாம் எழுதுகிறீர்கள் என்று ஒரே வியப்பு. இந்தியாவுக்கு வர முடிந்தால் உங்களைச் சந்திக்க முடியுமா? சந்தித்து கோடிக்கணக்கான நன்றிகள் சொல்ல வேண்டும். உங்களுடைய பேனாவுக்கும் கைக்கும் கோடி முத்தம் கொடுக்க வேண்டும். ப்ளீஸ் கட்டாயம் பதில் போடுங்கள். உங்களுடைய பதிலையாவது எழுதி என் ஆசையை நிறைவேற்றுங்கள் என பணிவுடன் வேண்டுகிறேன்.

அன்பு வாசகி
இர்பான் அப்தீன்

# இடைவெளி அதிகமில்லை

1

"உனக்கு நான் எத்தனை தரம் சொல்லட்டும், சுமா? திருமணம் வரையும் பரபரப்பும் படபடப்புமாக உனக்கு ஒன்றும் தெரியாது? ஆனால் பிறகு கணவனோடு காலம் முழுவதும் வாழப்போவது நீதான் அல்லவா? அதனால், உனக்கு வரப்போகிறவன் யார், என்ன, எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்பதை எல்லாம் தீர்மானிக்கிற உரிமை - முதல் உரிமை, முழு உரிமை எல்லாம் உனக்குத்தான் உண்டு. இதில் அடுத்தவர் தலையீட்டை நீ அனுமதிக்கக் கூடாதுடா. அது உன்னை வளர்த்து வரும் தாத்தா என்றாலும் சரிதான்!" என்றாள் மாலதி அழுத்தம் திருத்தமாக.

''மெய்யாகவா சொல்லுகிறீர்கள், சித்தி?'' பரம சாதுவாய் வியப்புடன் விழிகளை விரித்து விவரம் கேட்டாள் சுமாலினி.

தலையில் அடித்துக் கொள்ளத் தூக்கிய கையால் கூந்தலை ஒதுக்கி விடுவது போலப் பாவனை செய்த படி, ''சத்தியமாய் கண்ணம்மா! நீயாக - நீ மட்டுமாக யோசித்து, அலசி ஆராய்ந்து முடிவு செய்யவேண்டிய விஷயம், இது!'' என்று பொறுமையோடு விளக்கினாள் பெரியவள்.

சட்டெனக் கண்களில் குறும்பு மின்ன, ''கொஞ்சம் கூட அடுத்தவர் தலையீட்டை அனுமதிக்கவே கூடாதா, சித்தி?'' கேலிக்குரலில் சின்னவள் கேட்க, அவளுடைய சித்திக்குச் சிரிப்பு வந்தது.

அடக்க மாட்டாமல் நகைத்துவிட்டு, ''வாலு, வாலு!'' என்று தமக்கை மகளைச் செல்லமாகக் கடிந் தாள். ''என்னையும் அடுத்தவள் ஆக்குகிறாயாக்கும்? இருக்கட்டுமே! நான் ஒன்றும் உன்னை ஒரு வார்த்தை கேளாமல் என் விருப்பம் போல உனக்கு ஒரு திருமணத்தை நிச்சயித்து விடவில்லையே! இந்த விஷ யத்தில் சர்வாதிகாரத்தனமாக உன் தாத்தா நடந்து கொள்வதும், அதற்கு நீ விட்டுக் கொடுப்பதும் தப்பு என்றுதானே சொல்கிறேன்! உன் உரிமைகளைப் பற்றி உனக்கு எடுத்துச் சொல்கிறேன். அவ்வளவு தானே? இது எப்படித் தலையீடு ஆகும்?'' என்று கேட்டாள்.

எழுந்து வந்து பெற்றவளுடைய தங்கையின் அருகே அமர்ந்து, சுமாலினி தன் இரு கைகளாலும் அவளை அணைத்துக் கொண்டாள். ''கோபமா சித்தி?'' என்றாள் கெஞ்சலும் குழைவுமான குரலில்.



மறைந்து விட்டிருந்த தமக்கையின் நினைவில் விழிகளில் லேசாக நீர்த் திரையிட, அக்கா மகளின் கன்னத்தை மாலதி லேசாகத் தட்டினாள். ''கோபம் இல்லைடா, கண்ணு. ஆனால் அந்த சம்பத் பற்றி ஒன்றும் தெரியாமல், தாத்தா சொல்கிறார் என்பதற்காக மட்டுமாய் அவனுக்குக் கழுத்தை நீட்டப் போகிறேன் என்கிறாயே, அதுதான் மனதுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது... கொஞ்சமென்ன? நிறையவே!''

''சம்பத்குமாரை நான் பார்த்திருக்கிறேன், சித்தி.''

சற்றுத் திகைத்துவிட்டு, ''ஒருதரம் பார்த்தால் மட்டும் போதுமா? அதிலேயே உனக்கு, அந்தப் பையனைப் பற்றி எல்லாம் தெரிந்து விட்டதா? அவன் குணம், பழக்க வழக்கங்கள்... உனக்கு அவன் தகுதி தானா... சுமாக்கண்ணு, நீ எவ்வளவு அழகான பெண் என்று உனக்குத் தெரியுமா? உயரம், நிறம், கொடி மாதிரி உடல், கண், மூக்கு, புருவம், உதடு என்று எல்...' என்று அடுக்கிக் கொண்டே போன சித்தியை ''போதும் சித்தி'' என்று அலுப்புடன் இடைமறித்தாள் பெண்.

''தினமும் கண்ணாடி பார்த்துத்தானே பொட்டு வைக்கிறேன்; தலை வாருகிறேன். அப்புறம் என்ன? கொடி கிடி உடலா? இந்த வீடு தாத்தாவுடைய அப்பா கட்டியது தெரியுமல்லவா? அந்தக்காலப் பணக்கார ஸ்டைல்! குறைந்தபட்சமாய் இரண்டு ஆளுயரக் கண் ணாடி இல்லாத அறை ஒன்றுகூடக் கிடையாது! வேண்டு மென்று பாராவிட்டாலும், கொடி உடலானாலும் சரி; தடி உடலானாலும் சரி; கண்ணை மூடிக்கொண்டு

நடக்காவிட்டால் பார்த்துத்தானே ஆகவேண்டும்!" என்று சலிப்பாகத் தோளைக் குலுக்கினாள்.

உள்ளூர வலியுடன் சமாலினியை நோக்கினாள் மாலதி. அவளுக்கும் ஒரு மகள் இருக்கிறாள். இவளுக்கு மிஞ்சி மிஞ்சி ஓர் ஆண்டு சின்னவளாக இருப்பாள். இவள் அழகில் பாதி தேற மாட்டாள். என்னதான் கணவனிடம் காதல் உள்ளவளாக இருந்த போதும் காதலித்துப் பிடிவாதமாக மணந்த போதும், மாலதியே பல முறை, இந்தப் பெண் அப்பா வீட்டு ஜாடையில் பிறக்காமல் இருந்திருக்கலாமே என்று எண்ணியிருக்கிறாள். ஆனால் ரம்யா அவள் மகள் அதைப்பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. இருக்கும் அழகை மிகைப்படுத்தும் வண்ணம் பொருத்தமாக அலங்காரங்களைச் செய்துகொள்வதும், அதை ரசிப்பது மாகப் பாதிநேரம் கண்ணாடி முன்னேயே நிற்பாள். நடைஉடை பாவனைகளாலேயே பிறரைக் கவர்ந்து விடுவாள்! அதில் பெருமையும்கூட.

இவள்! ரம்யாவை விடவும் ஒரு வயது பெரியவள்!

தட்டிக் கொடுத்துத் தூங்கும் தாயில்லாவிட்டால் இப்படி தன்னம்பிக்கை அற்றுப் போய்விடுமா?

குற்றக் குறுகுறுப்பில் மாலதியின் மனம் கனத்தது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், அவளுடைய அக்கா சுகந்தியும் அவளுடைய கணவரும் விபத்தில் மாண்டபோது பிடிவாதமாக இந்தப் பெண்ணைத் தன்னுடன் அழைத்துச் சென்றிருக்க வேண்டுமோ என்று காலம் கடந்து வருந்தினாள்.



ஆனால் அன்று, அந்தப் பேச்சை அவள் தொடங்கியதற்கே சமாலினியின் தாத்தா பயங்கரமாய்க் கத்தத் தொடங்கிவிட்டார்! என்னவெல்லாம் சொல்லிவிட்டார்!

ஊரில் எல்லோரின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய திருவாளர் குமாரசாமியுடைய பேத்தி, இருந்திருந்து ஓர் அன்னக்காவடியின் பின்னே ஓடிய ஒருத்தியின் வீட்டில் வளர்வதா? சேச்சே! கேவலம்! நாளைக்குக் குமாரசாமியுடைய பேத்தியும் இப்படி மானம் கெட்டு ஓடுவதற்கா?

அன்றைக்கு மாலதிக்கு நெஞ்சு கொதித்தது.

ஓடினாள் ஓடினாள் என்கிறாரே? மாலதியாக வீட்டை விட்டு வெளியேறவா செய்தாள்! பெற்றோர் அனுமதியோடுதான் திருமணம் என்று சுகந்தியும் பிடிவாதமாய் காத்திருந்தாள்.

வீட்டில் அவள் செய்த சத்யாகிரகம் தாளாமல், அவளுடைய தந்தையே பச்சைக்கொடி காட்டி, மகளுக்கும், மாதவனுக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார்.

உண்மை முழுவதையும் அறிந்து கொண்டும், சொல்லாவிட்டால் சம்பந்தி தப்பாக எண்ணிக் கொண்டு விடக்கூடாதே என்று மாலதியுடைய தகப்பனார், இவரிடம்தான் ஓடிஓடி வந்து சொன்னது; சொல்லி ஆலோசனை கேட்டது! படி தாண்டுகிற காலை முறித்து அடுப்பில் வைக்க வேண்டும் என்று அவர் அருமையான ஆலோசனை நல்கியதாகவும் கேள்வி! அவ்வளவும் தெரிந்தும் 'ஓடினாள்' என்பதா?

ஆத்திரம்தான் மாலதிக்கு. ஆனாலும், ஏற்கெனவே மனைவியை இழந்தவர். இப்போது ஒரே மகனையும்

மருமகளையும் இழந்து தவித்துக் கொண்டு இருப்பவர் இவர், தன் வசமிழந்து, ஒன்று சொன்னார் என்று சினம் கொள்வது பிழை என்று தன்னை மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டு திருப்பிப் பேசாமல் மாலதி பொறுத்துப் போனாள்.

ஆனால், துக்கம் சற்று சமனப்பட்டபிறகும், குமாரசாமி, பேத்தியை அவளுடைய சித்தியிடம் அனுப்ப மறுத்து விட்டார். அவளுடைய பேத்தி அவருடன்தான் இருந்தாக வேண்டும் என்று விட்டார்.

''உன் வீட்டுக்கு வந்தால், என் பேத்தி பஸ்ஸில் பயணம் செய்ய நேரும். எங்களுக்குக் கேவலம்!'' என்றார்.

அப்போது மாதவன் - மாலதி தம்பதியிடம் அவ்வளவாகப் பணம் கிடையாது. மாதவன் செய்த வேலையால் வந்த சம்பளம் மட்டும்தான்! மாதவன் நல்ல உழைப்பாளி என்பதால் சம்பளம் ஓரளவு நன்றாகத்தான் வந்தது. ஆனால் பிள்ளைகள் பெரியவர்கள் ஆகும்போது இது போதாது என்று எண்ணம் கணவன் மனைவி இருவருக்கும் இருந்தது.

குமாரசுவாமியின் இளக்காரப் பேச்சு ஒரு தூண்டுகோலாக அமைய, 'ரெடிமேட்' ஆடைகள் தயார் செய்து விற்கத் தொடங்கினார்கள். மாலதி, 'டிரஸ் டிசைனிங்' படித்தவள்.

முதலில், வேலை நேரம் போக மற்ற நேரத்தில் மாதவன் கடை கடையாகச் சென்று 'சப்ளை' செய்து ஆர்டரும் பிடித்து வந்தார். ஆனால் கடைக்காரர்களின்



தேவைகளை, அவரால் மனைவியிடம் சரிவர விளக்க முடியவில்லை என்று ஆகவும், மாலதியும் அவரோடு கடைகளுக்குச் செல்லத் தொடங்கினாள்.

தொடக்கத்தில் மாலதியே முதுகு ஒடியத் தைத்தாள். விரைவிலேயே சில பெண்களை வேலைக்கமர்த்தினார்கள். இப்போது, ஒரு பெரிய ஆடை ஏற்றுமதிக் கம்பெனிக்குச் சொந்தக்காரர்கள்!

இப்போதுகூட, சுமாலினிக்குத் திருமண நிச்சயம் என்பதோடு, ஏற்றுமதிக்காக ஆடை தயாரிப்பாளர்கள் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகவும்தான் மாலதி சென்னைக்கு வந்தது.

அவளே தனியாக காரை ஓட்டிக் கொண்டு வந்தாள் என்பது தெரிந்ததுமே, உதட்டைப் பிதுக்கிவிட்டுப் போய் விட்டார் குமாரசுவாமி.

போகிறார்! என்று அவரை அலட்சியப்படுத்திக் கொண்டு, அக்கா மகளிடம் விவரம் கேட்டபோது மாலதி பெரும் ஏமாற்றத்துக்கு ஆளானாள்.

தனியாக மதுரையிலிருந்து காரை ஓட்டிக்கொண்டு சென்னைக்கு, ஒரு தொழில் அதிபர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருக்கிறாள், மாலதி! ஆனால் அவளுடைய அக்கா மகளோ, கொஞ்சமும் முதுகெலும்பே இல்லாத ஒரு மண்புழுவாக இருந்தாள்!

அக்கா மகள் இவ்வளவு கோழையாக வளரும்படி விட்டுவிட்டுச் சும்மா இருந்துவிட்டோமே என்று மாலதிக்கு மிகவும் வருத்தம் தான். ஆனால், மணலில் சிந்திய பாலுக்காக அழுவது போலப் பயனற்றது இந்த வருத்தம்

என்பதை விரைவிலேயே உணர்ந்து, உடனே அதை உதறிவிட்டு, அக்கா மகளுக்குத் தென்பூட்ட முனைந்தாள்.

ஆனால், அவள் எவ்வளவோ முயன்றும், அந்த முயற்சிக்குப் பலன்தான் உருப்படியாக எதுவும் உண்டாகவில்லை.

சுமாலினி அந்த அளவுக்குத் தாத்தாவுக்கு அடிமையாக இருந்தாள். கொத்தடிமை! என்று மாலதி ஆத்திரமாக எண்ணினாள். ஆனால் அதற்காக ஒதுங்கி விடவும் அவளுக்கு மனம் வரவில்லை. எனவே மீண்டும் மீண்டும் சுமாலினியை உசுப்பி விட முயன்றாள்.

ஆனால், தன் தோற்றத்திலேயே அக்கறை அற்ற ஒரு பெண்ணை - ஓர் இளம்பெண்ணை வேறு எதைக் கூறி உசுப்புவது?

''என்ன பெரிய அழகு சித்தி? அழகை மட்டும் பார்த்தால், உங்களுக்குச் சித்தப்பா, இடுப்பளவு வருவாரா? ஆனால் மனதில்? உங்கள் இருவரையும் போல வெற்றி அடைந்த தம்பதி வேறு யார் இருக்கிறார்கள்? அதில் பத்தில் ஒரு பங்கு அதிர்ஷ்டம் இருந்தால் எனக்குப் போதுமே!'' என்றாள் சுமாலினி சாதாரணமாக.

சுமாலினி, நான் உன் சித்தப்பாவைப் பல முறை பார்த்துப் பழகி, இவருக்கும் நமக்கும் எண்ணத்தில், கொள்கையில், குணத்தில் ஒற்றுமை இருக்கிறது; இருவரும் மணந்து கொண்டால் வாழ்க்கை ஆனந்தமாக இருக்கும் என்று முடிவுபண்ணி, அதற்குமேல் மணந்து



கொண்டோம். சொல்லு, உனக்கு அந்தப் பையன் சம்பத்குமாரிடம் அப்படி ஏதேனும் எண்ணம் இருக்கிறதா? அவனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? குணம், பழக்க வழக்கங்கள்? என்ன தெரியும் உனக்கு?''

மாலதி விடுவதாக இல்லை! ஆனால் சுமாலினி திமிர்வதாகவும் இல்லை!

''சம்பத்குமாரை மணந்து கொண்டால் நன்றாக இருப்பேன் என்று தாத்தா சொல்கிறாரே, சித்தி, அவர் யோசியாமல் சொல்லுவாரா? அல்லது, எனக்குக் கெடுதலுக்குச் சொல்லப் போகிறாரா? அவருடைய ஒரே பேத்தி நான்! என் நல்ல வாழ்வுதானே அவருக்கும் முக்கியமாக இருக்கும்?'' என்றாள் பெண்.

''ஆனால் நல்ல வாழ்வு என்று அவர் நினைப்பதும், நீ எண்ணுவதும் ஒன்றாக இருக்க வேண்டுமே, கண்ணு! அதை யோசித்தாயா? சொத்தோடு சொத்து சேரட்டும் என்று அவர் ஆசைப்பட்டிருக்கலாம். ஆனால், அன்பான, உண்மையான கணவன் தான் நல்ல வாழ்வுக்கு முக்கியம் என்று நீ அபிப்பிராயப்பட்டால்?...''

''என் அபிப்பிராயமா, சித்தி?'' என்றாள் சுமாலினி சற்று கசந்த குரலில். மடியில் கிடந்த கைகளையும், தன் போக்கில் மூடித் திறந்த விரல்களையும் சற்று வெறித்துவிட்டு ஒரு சின்னப்பெருமூச்சுடன் சொன்னாள். ''போன ஆண்டு தாத்தாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் போயிற்று. மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் பார்த்தோம். குணமாகி வீட்டுக்கு

வந்தபிறகும், ஒரு டாக்டர் தினமும் வந்து, தாத்தாவைப் பரிசோதித்து விட்டு மருந்து கொடுப்பதோ, நிறுத்துவதோ சொல்லிவிட்டுப் போவார். நன்றாகப் பேசுவார். என்னிடமும் பேசுவார்... எனக்கும் அவரோடு பேசப் பிடித்திருந்தது... கொ... கொஞ்ச நாள் கழித்து அவர் வருவது திடீரென்று நின்றுவிட்டது. எனக்கு உள்ளூரக் கொஞ்சம் தவிப்பாக இருந்தது. வரவில்லையே என்று வருத்தமாகவும் இருந்தது. ஏன் என்று புரியாத துன்பம் வேறு! ஒருநாள், கொஞ்ச நாளாக அவரைக் காணவில்லையே என்று தாத்தாவிடம் மெல்..லக் கேட்டேன்... அப்போது.... அப்போது....''

ஏதோ கேட்க மாலதி வாயைத் திறந்தாள்.

''பொறுங்கள் சித்தி. நான் சொல்லி முடித்து விடுகிறேன். அனேகமாக, இனி ஒருதரம் இதை நான் யாரிடமும் சொல்லக்கூடும் என்று எனக்குத் தோன்றவில்லை. அதனால், முதலும், கடைசியுமாகச் சொல்லி விடுகிறேன்!'' என்ற சுமாலினி ஒரு மூச்சு எடுத்துக் கொண்டு உரைத்தாள். ''அவர்... அந்த டாக்டர் என்னை மணக்கவென்று தாத்தாவிடம் கேட்டதாகவும், அப்படி மணந்து கொண்டால் கட்டிய துணி தவிர ஒரு பைசா கூட என்னோடு வராது என்று தான் சொன்னதாகவும், டாக்டர் உடனே வேறு இடத்தில் வேலை தேடிக் கொண்டு ஓ.. ஓடிவிட்டதாகவும் தாத்தா சொன்னார். என் அபிப்பிராயத்தின் தரம் தெரிகிறதா, சித்தி?'' என்று ஏளனமும் சுயவெறுப்புமாக முடித்தாள்.

பெண்ணின் முகத்தைப் பார்த்த மாலதிக்கு மனம் நொந்தது. குமாரசாமி மீது கோபம் பொங்கியது. இது



உண்மையாகவே இருந்தாலும் கூட.. இந்தச் சிறுபெண்ணிடம் இதைச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்ன கட்டாயம்? தன்னம்பிக்கையை அடியோடு அழித்துவிட்டாரே!

அக்கா மகளின் இறுக மூடியிருந்த கையைப் பற்றி மெல்ல வருடி விரல்களைப் பிரித்து விட்டாள். ''பார் செல்லம்! யாரும் கீழே விழாமலேயே, நடந்து விடுவது இல்லை. அனுபவக் கல்வியின் அடிப்படையே தவறுகளில் இருந்து கற்றுக்கொள்வது தான். ஒரு தவறான மதிப்பீட்டினாலேயே, உன் கணிப்புகள் எல்லாமே தவறாகி விடும் என்று நினைக்கக் கூடாதும்மா!'' என்றாள் தேறுதலாக.

சுமாலினி பேசாமலே இருக்கவும், ''உன் மகிழ்ச்சிக்காகத்தான் நான் சொன்னதெல்லாம்! ஆனால் சுமாக் கண்ணு, நான் சொன்னதைக் கேளாததினாலேயே நீ என்னை விட்டுவிட வேண்டும் என்பது இல்லை, என்றைக்கு, எப்போது என்றாலும், நீ கவுரவம் பாராமல் என் வீட்டுக்கு வரலாம். எது வேண்டுமானாலும் - என்ன உதவி வேண்டுமானாலும் கேட்கலாம். கேட்பாயில்லையா?'' என்று ஆதரவாகக் கேட்டாள்.

சுமாலினியின் முகத்தில் சட்டென ஒரு முறுவல் மலர்ந்தது. புன்னகையுடனேயே தலையசைத்து, ''சித்திக்குச் சந்தேகம் தீருவதாகவே இல்லை! அப்படித்தானே, சித்தி? ஆனால் நீங்கள் நினைப்பதுபோல ஒன்றும் இல்லை, சித்தி. சம்பத்குமாரோடு நான் பல முறை பேசியிருக்கிறேன். இங்கே வீட்டுக்குக் கூட நிறையத் தடவை சாப்பிட வந்திருக்கிறார்!'' என்றாள்.

மாலதி சந்தேகமாக நோக்கவும், "அய்யோ நிஜம் சித்தி! சம்பத் குமாருடைய குடும்பத் தொழில் 'டர்ன்கீ ப்ராஜக்ட்' என்பார்களே! அதுபோலத் தொழிற்சாலைகளை முழுமையாகக் கட்டிக் கொடுப்பது. அதற்குப் பல உதிரிப் பாகங்கள் தாத்தாவின் 'ஃபவுண்டரி'யில் வாங்குவார்கள். பிசினஸ் பேச்சு முடிந்ததும் தாத்தா அவரை வீட்டுக்குச் சாப்பிட அழைத்து வருவார். அவருக்கும் எனக்கும் ஒரு பெரிய ஒற்றுமை இருக்கிறது. சித்தி! இங்கே எனக்குத் தாத்தா மாதிரி சம்பத்குமாருக்கு ஒரு பெரியப்பா பிள்ளை! இவர் என்னை மாதிரிக் கொஞ்சம் தகராறுக்குப் பயந்து பணிந்துபோய்விடுகிற ரகம் என்பதால் அந்த சர்வாதிகாரி அவரை விரட்டிக் கொண்டே இருப்பானாம். இங்கே போ, அங்கே போ என்று, ஒரு சாதாரணக் 'கிளார்க்' சென்று செய்யக்கூடிய வேலைக்கெல்லாம் கூட இவரையே ஏவுவானாம்! தாத்தா பாருங்கள்! காலை எழுந்ததில் இருந்து, பல் துலக்கு, காபி குடி, குளி, சாப்பிடு, காரில் ஏறு, கல்லூரிக்குப் போ, அங்கே எப்படிப் படிக்க வேண்டும், யாரிடம் பேச வேண்டும், யாரிடம் பேசக்கூடாது என்று கட்டளையிட்டுத்தானே அனுப்புகிறார்! எனக்கும் பணிந்தே பழகிவிட்டது. அவருக்கும் அப்படித்தானாம்! இருவரும் சரியான ஜோடிதானே?" என்று கேட்டு, லேசாகச் சிரித்தாள்.

மாலதி சற்று நேரம் தீவிரமாகச் சிந்தித்தாள்.

இப்போது என்ன செய்வது?

இந்தத் திருமணத்தை நடக்க விடுவதா, வேண்டாமா? திருமணத்தை நிறுத்திவிடலாம்! அது அவளுக்கு சாத்தியமே!



ஆனால் பிறகு?

இவளுடைய தாத்தா, இவளை நாவாலேயே கொத்திக் குதறிவிட மாட்டாரா?

இவள் தாங்கிக் கொள்கிறவள் போலத் தோன்றவில்லையே!

கூடவே கூட்டிப் போய்விடலாம் என்றால் அதற்கும் இவள் தாத்தா விட மாட்டார்!

ஒருவேளை....

அருகில், சோபாவில் அமர்ந்திருந்த சுமாலினி எழுந்து, தரையில் விரித்திருந்த கார்ப்பெட்டில் அமர்ந்து, சிறிய தாயின் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டு மேலே பேசினாள்.

"இதில் இன்னொரு சாதகமான விஷயம் இருக்கிறது, சித்தி!"

"என்னது?"

"சம்பத்குமாருடைய பெரியப்பா பிள்ளை பற்றிச் சொன்னேன் இல்லையா? அவன் எப்படியோ, இவருடைய அப்பாவை ஏமாற்றி, தொழிலில் தலையிடாமல் இவர்களை ஒதுங்கியிருக்கும்படி எழுதி வாங்கிக் கொண்டு விட்டானாம்! கோடிக்கணக்கில் பெறுமான முள்ளதை அப்படியே கைக்குள் வைத்துக் கொண்டு சம்பத்குமாருக்கு, அவர் அப்பாவுக்கெல்லாம் மாதாமாதம் சம்பளம் மாதிரிக் கொடுக்கிறானாம்! லட்சக்கணக்கில் செலவழித்துப் பழக்கப்பட்டவர்களுக்கு எப்படி இருக்கும்? சிலசமயம் ரொம்பவும் கஷ்டமாக இருக்கும் என்று சம்பத்குமார் சொன்னார்.'

''என்னடி சொல்கிறாய்? அவர்களுக்கே சிரமம் என்றால், இனி உனக்கும் சேர்த்துச் செலவுக்கு என்ன செய்வார்கள்? அப்படி அவன் ஏமாற்றினான் என்றால், ஏமாறுவதற்கு இவர்கள் என்ன பச்சைப் பிள்ளைகளா? அல்லது முட்டாள்களா? 'காட்பரீஸ்' காட்டியா ஏமாற்றினானாம்? எனக்கு ஒன்றும் சரியாகப்படவில்லையே? இதில் நமக்கு சாதகமாக என்ன இருக்க முடியும்?''

''அவருடைய அப்பா ஏமாளியாய் இருப்பதற்கு, சம்பத்குமார் என்ன சித்தி, பண்ணுவார்? எப்படியோ, அதை விடுங்கள், எழுதிக் கொடுத்தது முடிந்து விட்ட விஷயம். இப்போது, பழைய வழக்கம் போலச் செலவழிக்க முடியாமல் கொஞ்சம் சங்கடப்படுவது உண்மை. இப்போது, தாத்தா எங்கள் 'ஃபவுண்டரி'யைச் சீதனம் மாதிரி எனக்குக் கொடுக்கப் போகிறாராம். அந்த வருமானம் கைக்கு வரும்போது, அந்தச் சிரமம், சங்கடம் எல்லாம் தீர்ந்து விடுமல்லவா? இவளால்தானே நம் கஷ்டம் தீர்ந்தது என்று என்னிடம் பிரியமாய் இருப்பார்கள் அல்லவா?''

மகளின் தலையை வருடிவிட்டபடியே மாலதி சற்றுநேரம் பேசாமல் அமர்ந்திருந்தாள். சிந்தனை மீண்டும் தொடர்ந்தது.

ஒருவேளை இவளுக்கு வாய்க்க இருக்கும் வாழ்வு என்பது இதுவே தானோ? அப்படி இருந்தால், மாலதி அதில் புகுந்து குட்டை குழப்புவது சரியாகுமா?

முழுக்க முழுக்க அயோக்கியனாகத் திரிந்தவர்கள் எல்லாம்கூட திருமணம் ஆனதும் உத்தமக் கணவர்களாக மாறி விடுவது நடந்துதானே இருக்கிறது? இவன் அப்படி ஒன்றும் இல்லையே!



அத்தோடு, சுமாலினி நல்ல அழகி. அறிவுள்ளவளும் கூட! இவளை மணப்பவனுக்கு இவளைத்தவிர, வேறு உலகம் நினைவில் இருப்பதுகூட அதிசயமே!

மனம் சமாதானமுற்றவளாக, மாலதி மறுநாளைய விழாவை வெற்றிகரமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டாள்! சுமாலினியும், அதில் உற்சாகமாகவே கலந்து கொண்டாள்!

## 2

ஏற்பாடுகள் என்று செய்வதற்கு அதிகமாக ஒன்றும் இல்லை... செய்வதற்குக் கிட்டத்தட்ட ஒன்றுமே இல்லை என்றுகூடச் சொல்லலாம்.

விழாவும் ஒன்றும் அப்படி ரொம்பப் பெரியது அல்ல.

மறுநாள் காலை பத்து மணி சுமாருக்கு, மணமகனான சம்பத்குமாரும், அவனுடைய பெற்றோரும், சுமாலினி இருக்குமிடம் வந்து, அவளுக்குப் பூ வைத்து, மோதிரம் போட்டு, வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்ளப் போகிறார்கள்.... அவ்வளவே. உணவும் ஓட்டலில்தான்.

வெளி ஆள் என்று சுமாலினியுடைய தாய் வீட்டுச் சொந்தமான மாலதிக்கு மட்டுமே தகவல் கொடுத்திருந்தார், தாத்தா குமாரசாமி.

தகவல்தான்! கட்டாயமாக வரவேண்டும் அது இது என்று வாய் உபசாரமாகக் கூட குமாரசாமி, மாலதியிடம் பெரிதாக அழைத்துவிடவில்லை.

''காலை பத்தரையிலிருந்து பன்னிரெண்டுக்குள் வெற்றிலை பாக்கு மாற்றித் திருமண உறுதி செய்கிறோம். சுமாலினிக்குக் கொஞ்சம் நல்லபடியாக அலங்காரம் செய்ய வேண்டும். வருகிறவர்களை உபசரிக்க வேண்டும்! ஓட்டலில் 'சூட்' ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். ஏதாவது தேவைப்பட்டால் வாங்கக் கொள்ள வசதியாக முன்தினமே வந்துவிடு'' என்று கட்டளையிட்டார்! அவ்வளவே!

சும்மா என்றால், இவர் யார் என்னை அதிகாரம் பண்ண என்று மாலதி பேசாமல் வீட்டோடு உட்கார்ந்திருப்பாள்!

ஆனால், சுமாலினி அவளுடைய அருமையான ஒரே அக்காவுடைய மகள்! அந்த அக்கா இப்போது உயிரோடும் இல்லை. சுகந்தி இப்போது உயிரோடு இருந்தால் கூட வேறுமாதிரி. அவளும் இல்லாத நிலையில், அந்த அக்காவுடைய ஒரேமகளை மாலதியால் எப்படிக் கைவிட முடியும்?

ஆனால், அவள் எதிர்பார்த்ததுபோலவே, மாலதியுடைய கணவர் மாதவனுக்கு மனைவியின் பயணம் பிடிக்கவில்லைதான்.

ஆயினும், இடையூறின்றி முடிவெடுத்துச் செயல்பட அவர் அவளுக்கு உரிமை அளித்திருந்ததால், அவள் கிளம்பியபோது, அவர் அவளைத் தடுக்கவும் இல்லை.

கூடவே ஒரு கல்லில் இரு மாங்காயாக, ஏற்றுமதி ஆடைத் தயாரிப்பாளர்கள் கூட்டம் ஒன்றினுக்கு



அழைப்பும் வரவே, 'திருமண உறுதி' முடிந்தபிறகு மாலதி கான்பரன்சிலும் கலந்து கொண்டு வரலாம் என்று முடிவு செய்தார்கள்.

காரைத் தானே ஓட்டிக் கொண்டு மாலதி தனியே வந்தாள் என்பதே குமாரசாமிக்குக் கொஞ்சம் எரிச்சல்தான். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல், ''சரிசரி, போய் வேண்டியதைப் பார். என் பேத்திக்கு ஏதாவது வாங்க வேண்டியிருந்தால் கூட்டிப் போய் வாங்கிக் கொடு. மாப்பிள்ளை வீட்டார் வெளிநாடு எல்லாம் போய்வந்தவர்கள். பார்க்கக் கொஞ்சம் ஸ்டைலாக அதற்காக உன் போல முடியைக் கிடியைக் குட்டையாக வெட்டிப் போட்டுவிடாதே. கொஞ்சம் நன்றாய் இருக்கும்படிச் செய். இந்த... முகம் எல்லாம் பளிச்சென்று ஆக்க ஏதோ இடமெல்லாம் இருக்கிறதாமே! அங்கே கூட்டிப்போ! சுமாலினியே பார்க்க நன்றாய்த்தான் இருப்பாள். அதனால்தானே மாப்பிள்ளை வீட்டில் கல்யாணப் பேச்சை எடுத்ததுமே சரியென்று விட்டார்கள். ஆனாலும் நாகரிகமாய்த் தெரிவதற்காக மட்டுமாய் கொஞ்சம் ஏதாவது பண்ணச் சொல்லு...'' என்றவர், மாலதியை ஒரு தரம் ஏற இறங்க நோக்கிவிட்டு, உதடு வளைய, ''இந்தச் சாயமெல்லாம் ரொம்பப் பூசி கோரம் பண்ண விட்டுவிடாதே. போய்ச் சீக்கிரமாக குளித்துவிட்டுக் கிளம்பு'' என்று ஏவினார்.

பணிந்து பணிந்து அன்றைக்கு என் அக்கா ஏற்றிவிட்ட திமிர் என்று உள்ளூரப் பொருமியபோதும், தமக்கை மகளை மனதில் நினைத்து, ''குளிப்பு, சாப்பாடெல்லாம் ஓட்டலிலேயே முடித்துவிட்டுத்தான் வந்

தேன், மாமா'' என்று மாலதி அமைதியாகவே பதில்
உரைத்தாள்.

தனியாக அவ்வளவு தூரம் காரை ஓட்டிக் கொண்டு
வந்து, தனியே ஓட்டலில் தங்கி... எல்லாம் கலிகாலம்
என்று எண்ணினார் குமாரசாமி. இந்தத் திமிர் சமாளி
னிக்கு வந்துவிடக் கூடாதே என்றுதான், இவள் சங்காத்
தமே கூடாது என்று இருந்தார். ஆனால் ஒரு நல்ல
காரியம் என்று வரும்போது கூப்பிட்டுத்தானே ஆக
வேண்டியிருக்கிறது?

''இங்கேதான் 'சூட்' எடுத்திருப்பதாகச் சொன்
னேனே! இங்கேயே வந்திருப்பதுதானே? ஏசியில்
சுகமாக இருந்திருக்கலாம். வேண்டுமானால், அங்கே
காலி பண்ணிவிட்டு வந்து விடேன், தனியாக எதற்
கு...?'' என்று பெருந்தன்மையோடு யோசனை சொன்
னார் பெரியவர்.

ஆனால், ''அங்கேயும் ஏசி ரூம் தான் மாமா''
என்று, இன்னொரு ஐந்து நட்சத்திர ஓட்டலின் பெயரை
சொல்லி, ''அங்கே நாளை மாலை 'கான்பரன்ஸ்'
இருக்கிறது. அழைக்கப்பட்டவர்கள் எல்லோருக்குமே
அங்கேயே ஓட்டலில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கி
றது'' என்று மாலதி உள்ளூர ஒரு திருப்தியுடன் கூற,
அவள் எதிர்பார்த்ததுபோலவே பெரியவரின் முகம்
சுருங்கியது.

''சரி, சரி, போய் சமாளினியைப் பார். நான்
கொஞ்சம் வெளியே - ஒரு பழைய சினேகிதனைப்
பார்த்து வரவேண்டியிருக்கிறது. நீங்கள் இருவரும்
வெளியே போவது என்றால், சாவியை 'வரவேற்'பில்



கொடுத்து விட்டுப் போங்கள், தெரியுமல்லவா, கீழ்த்த
ளத்தில், 'லாபி'யின் பக்கவாட்டில் வரவேற்பு இருக்கி
றது. அங்கே கொடுத்தால் சாவியை வாங்கி வைத்துக்
கொள்வார்கள். நான் வந்து வாங்கிக் கொள்வேன்.
வேறு யாரிடமும் கொடுத்து விடக் கூடாது என்று
சொல்லிவிட்டுப் போங்கள்'' என்று ஒரு முறைக்கு
இருதரமாகச் சொல்லிவிட்டு ஒருவழியாகக் குமாரச
வாமி கிளம்பினார்.

அவசியமற்ற விவரங்கள்! சாவியை வரவேற்பில்
கொடுத்துவிட்டுப் போகவேண்டும் என்பது கூடத்
தெரியாத அளவு மாலதி முட்டாள் அல்ல. வரவேற்பி
லும், அறைச் சாவியை, அப்படி வேற்றாளரிடம்
கொடுத்துவிட மாட்டார்கள்! தன்னைப் பெரிதாகக்
காட்டிக் கொள்வதற்காகச் சும்மாவேனும் வாயில் வந்
ததை எல்லாம் சொல்லுகிறார்!

எரிச்சலுடனேயே பேசாமல் நின்ற மாலதிக்கு,
பிடிவாதமான நிமிர்வுடன் அந்த நரைத்தலைக்காரர்
செல்வதைப் பின்னிருந்து காணவும் மனம் இளகிவிட்
டது!

மனம் விட்டுப் பேசவும்தான் இந்தப் பெரியவ
ருக்கு யார் இருக்கிறார்கள்?

மனைவியில்லை, மக்கள் இல்லை; எதிர்பாராமல்
விழுந்த இடிகளைத் தாங்கிக் கொண்டு தனி ஆளாய்த்
தொழிலையும் நடத்தி பேத்தியையும் வளர்த்து - ஒரு
வகையில் ரொம்பவும் பாவம் தான்! ஆனால், இந்த
அதிகாரப் போக்கைக் கைவிட்டிருந்தால் நட்பு, உறவு
என்று எப்படியும் கொஞ்சம் பேராவது நெருக்கமாக
இருந்திருப்பார்கள்....

பின்னிலிருந்து இருகரங்கள், தோளைச் சுற்றிப் படரவும் மாலதி முறுவலோடு திரும்பினாள்.

சுமாலினிதான்!

''இவ்வளவு நேரம் உங்களைக் காணாததால் நீங்கள் வரவில்லையோ என்று பயந்து விட்டேன் சித்தி. தாத்தாகூட...'' என்று தொடங்கியவள் பேச்சை அத்தோடு நிறுத்திக் கொண்டாள்.

பெரியவர் என்ன சொல்லியிருப்பார் என்று ஊகித்தவளாய், ''தாத்தா என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்! நான் வந்து இவ்வளவு நேரமாய் உன்னை எங்கே காணவே இல்லை?'' என்று கேட்டபடி அக்கா மகளோடு நடந்து சென்று சோஃபாவில் அமர்ந்தாள் மாலதி.

''அங்கே வீட்டில் என்றால் பெரிய இடம். தோட்டம், வீட்டிலும் நிறைய அறைகள், ஃபவுண்டரிக்குப் போவார், வருவார். இங்கே இந்த மூன்றே அறைக்குள் தாத்தா ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டார், சித்தி, உங்களையும் காணவில்லையா...'' லேசாக முறுவலித்துத் தோளைக் குலுக்கினாள் பெண்.

''புரிகிறது! புரிகிறது!'' என்று மாலதி சிரித்தாள். அதற்காகப் பெண்ணாகி அறைக்குள்ளேயே சிறையிருந்தாயாக்கும்? போகட்டும் சொல்லு. மாப்பிள்ளை யார்? ஆள் எப்படி? உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று விவரம் கேட்டாள்.

அப்படிக் கேட்டறிந்த விவரங்கள் அவள் மனதிற்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லைதான். ஆனால், சுமாலி



னியின் முதுகெலும்பை நிமிர்த்துவது முடியாத காரியமாகத் தோன்றவும், அந்த முயற்சியைக் கைவிட்டாள்.

கூடவே, சுமாலினிக்கு மணமகனைப் பிடித்திருப்பது போலவும் தோன்றவே, 'நடப்பது நடக்கட்டும், நல்லதாகவே நினைப்போம்' என்று முடிவு செய்து, விழா வேலைகளில் ஈடுபட்டாள்.

மறுநாள் வருகிறவர்கள், பையன், பையனுடைய பெற்றோர், தவிர, ஒருவேளை அந்தப் பொல்லாத சர்வாதிகாரி சம்பத்குமாருடைய பெரியப்பா பிள்ளையும் வந்தாலும் வரலாமாம்.

''அப்படி என்னடி ஓட்டல் அறையில் - ஐந்து நட்சத்திர ஓட்டல் என்றாலும், அறைக்குள்தானே நடத்துகிறார்கள்! ஹாலில் அல்லவே! எதற்கு நடத்த வேண்டும்? என்ன அவசரம்? நிதானமாய் உறவு, நட்பு என்று நிறையப் பேரை வரவழைத்து உங்கள் வீட்டிலேயே நடத்தலாமே!'' என்றாள் மாலதி.

''இது வெறுமனே பூ வைப்பது தானே சித்தி. வெற்றிலை பாக்கும் மாற்றுவார்கள். இது பொதுவாக இரு வீட்டார்களுக்கும் இடையே மட்டுமாக நடப்பதுதானாமே? ஆனால், அங்கே நம் வீட்டிலேயே நடத்தியிருக்கலாம்.. என்னவோ, இங்கே வேலையை விட்டு வரமுடியவில்லை... தள்ளிப்போட நாள் இல்லை என்றார் தாத்தா. அடுத்த மார்கழி மாதம் பிறப்பதற்குள் இதையாவது முடித்து விட வேண்டுமாம்! கடந்த ஆண்டு சுகவீனத்துக்குப் பிறகு... என் திருமண விஷயமாக தாத்தாவுக்கு ஏனோ அவசரம்தான்!... ஒருவேளை, அந்த டாக்டரை நான்தான் தூண்டி

விட்டதாக நினைத்தாரோ என்னவோ?'' என்றாள் சுமாலினி வரண்ட குரலில்.

அந்தப்புண் இன்னமும் முழுமையாக ஆறவில்லை என்பதைக் கண்ட மாலதி பேச்சை மாற்றினாள். ''உன்னை நாகரிகமாகவும் அதேசமயம் அவர் பேத்தியாகவும் காட்ட வேண்டுமாமே! எனக்கு உத்திரவு அப்படி! நாளைக்குக் கட்ட என்ன வைத்திருக்கிறாய்? உன் தாத்தா வழக்கமாக வாங்கித்தரும் மஞ்சள் அல்லது அரக்குக் கலர் தானா?''

''ஊகூம்!'' என்று கூந்தல் சுருள் அழகாக அசைய தலையசைத்தாள் சின்னவள்.

எழுந்து சென்று கைப்பையுடன் திரும்பி வந்து, ஏதோ மாயாஜாலம் செய்கிறவள் போல, ஒரு 'கிரெடிட் கார்'டை எடுத்துக் காட்டினாள். ''புதிது வாங்கிக் கொள்ளும்படி தாத்தா சொல்லியிருக்கிறார்!'' என்றாள் பெருமையோடு.

மாலதிக்கு மெய்யாகவே ஆச்சரியம்தான். பெண்கள், பாங்க் வரை சென்று பணம் கையாள்வது கூடத் தவறு என்பவர்! கிரெடிட் கார்டு வாங்கிப் பேத்திக்குக் கொடுத்திருக்கிறாரே!

''என்ன ஆச்சரியம் சுமா!'' என்றாள் மனதை மறையாமல்.

''அதிசயம்தான்! ஆனால், இந்தப் பட்டணத்துக்கார மாப்பிள்ளை வீட்டாரிடம் நாங்களும் நாகரிகமானவர்கள் தான்; திரேதாயுகத்துக்காரர்கள் அல்ல என்று வேறு எப்படிக் காட்டுவது? சொல்லுங்களேன், பார்ப்போம்?'' என்று புருவம் உயர்த்திக் கேட்டாள் மகள்.



''ஓகோகோ! அப்படியா விஷயம்? ஆனால் இதைப் பயன்படுத்துவது பற்றி...''

''ஐயோ! ப்ளீஸ் சித்தி! நீங்கள் வேறு தொடங்காதீர்கள்! இது வந்ததிலிருந்து, இந்த நாலு நாளில் குறைந்தது நாற்பது தடவையாவது இதை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி உபதேசம் பெற்றாகி விட்டது போதும்!''

''அதில்லைடா! சேலை எல்லாம் வாங்குவது என்றால் ஆயிரக்கணக்கில் ஆகுமே! இதைப் பயன்படுத்தி நம் இஷ்டம் போல, வாங்கினால் உன் தாத்தா கோபப்பட மாட்டாரா என்று தான் கேட்க நினைத்தேன்!''

''அதெல்லாம் மாட்டார், சித்தி. எவ்வளவு ஆனாலும் எனக்காக என்றால், செலவுபற்றித் தாத்தா ஒன்றும் கணக்குப் பார்க்க மாட்டார். போன தீபாவளிச் சேலை என்ன விலை தெரியுமா? கழிவுபோகப் பத்தாயிரத்து இருநூறு ரூபாய்! ஆனால், நீங்கள் சொன்ன மாதிரி அரக்குதான். போன ஆண்டு மஞ்சள். அதனால் மாற்றி வாங்கி வந்தாராம்! ஏன், சித்தி? எனக்காக எவ்வளவு செலவு செய்யவும் அவர் தயாராக இருக்கிறார், அதை எனக்குப் பிடித்த மாதிரி, என்னிடம் கேட்டுச் செய்தால் என்ன, சித்தி? ஒருவேளை, நான் ரொம்பவும் முட்டாளோ, சித்தி? அதனால்தான், எனக்காக ஒன்றும் செய்யத் தெரியாது என்றுதான், இப்படிச் செய், அப்படி நட, என்று தாத்தா ஏவிக்கொண்டே இருக்கிறாரோ?''

சுமாலினி மெய்யாகவே கலங்குவதை உணர்ந்து, ''சேச்சே! அதெல்லாம் ஒன்றுமில்லை! இந்தப்பழைய கால மனிதர்களுக்கே அவர்களுக்கு மட்டும்தான் எல்

லாம் தெரியும் என்கிற எண்ணம்! அவ்வளவுதான்!'' என்றாள் மாலதி, மகளுக்கு ஆறுதலாக.

''இருக்கும்? மற்றபடி தாத்தாவுக்கு என்னிடம் பாசம் இல்லை என்று சொல்ல முடியாது. இப்போது கூடப் பாருங்கள், இந்த ஃபவுண்டரி தாத்தா வைத்து வளர்த்தது அது. பிற்காலத்தில் பேத்திக்கு என்றால் கூட யாரும் தகராறு பண்ணப் போவது இல்லை. ஆனாலும், கல்யாணமாகிப் போகிறபோதே மதிப்போடு போனால் தான், புகுந்த வீட்டில் எனக்கு அதிக மரியாதை கிடைக்கும் என்று, ஃபவுண்டரியை என் பெயருக்கு மாற்றி விட்டார். டெப்பாசிட் பணத்துக்கு வட்டியும், நிலத்து வருமானமும் அவருக்குப் போதுமாம்! இதெல்லாம் அவசியமில்லை என்று கொஞ்சம் சொல்லலாம் என்று தொடங்கினேனா, கத்து கத்து என்று கத்தி விட்டார்! முட்டாள், அது இது என்று முதலில் ரொம்பவும் கஷ்டமாக இருந்தது. ஆனால், உண்மையில், என்மேல் உள்ள பாசத்தால், தாத்தா யோசித்துச் செய்வதைப் பற்றிப் பேச எனக்கு என்ன தகுதி இருக்கிறது? வாயைத் திறந்ததே தப்புதான்!'' என்று பெருமூச்சுடன், 'கிரெடிட் கார்டை அதற்குரிய கவரில் வைத்துக் கைப்பையில் திணித்தாள் சுமாலினி.

சொத்தையும் சேர்த்துக் கொடுப்பதுதான் அன்பா? மணமகனைத் தேர்ந்தெடுப்பதிலும் கூடக் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால்...

இனி, இதை யோசித்தோ, பேசியோ பயன் இல்லை என்பதை உணர்ந்து, ''கிளம்பு, வெளியே போய் நன்றாகச் செலவு செய்துவிட்டு வரலாம். நான் தங்கியிருக்கும் ஓட்டலில், 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்'



இருக்கிறது. அதில் ஓர் அழகுச் சேலை பார்த்தேன். சட்டைக்கும் துணி இருந்தது. இரு மடங்கு கூலி கொடுத்தால் உடனேயே தைத்துத் தருவார்கள் என்றார்கள். அதை வாங்கி வரலாம்'' என்று எழுந்தாள் மாலதி.

''உன்னைப் 'பார்ல'ருக்கு அழைத்துப் போய்க் கூந்தல், முக அலங்காரம் எல்லாம் செய்யும்படி சொன்னார்!'' என்றவள், பெரியவர் மேலே சொன்னதை மகளிடம் மறைத்து, அவளையும் கிளப்பிக்கொண்டு கடைநாடிச் சென்றாள்.

முதலில் சேலையை வாங்கினார்கள். ஓர் அபூர்வமான, ஆரஞ்சும், 'பிங்க்'கும் கலந்த வண்ணப் பட்டுச் சேலை அது. சேலையோடு இணைந்திருந்த சட்டைத் துணியைப் பார்த்துவிட்டு, ''இது 'காஞ்சிபுரம்' இல்லை போலத் தோன்றுகிறதே, சித்தி! தாத்தாவுக்குப் பிடிக்காது. காஞ்சிப்பட்டு தவிர வேறு எதை வாங்கினாலும் அவர் பட்டுச்சேலை என்றே ஒத்துக் கொள்ள மாட்டார். வேறு பார்ப்போமா?'' என்று அந்தச் சேலையை ஆசையுடன் வருடிவிட்டு, நகர்த்தி வைத்தாள் சுமாலினி.

''இதோபார், இந்தச் சேலை உனக்குப் பிடித்திருக்கிறதா, இல்லையா?'' என்று மாலதி அழுத்தமான குரலில் வினவினாள்.

''பிடித்திருக்கிறது. ஆனால்... தாத்தா...''

''தாத்தாவா இந்தச் சேலையைக் கட்டப் போகிறார்? நீதானே? உன் விஷயம் நீதானே முடிவு செய்யவேண்டும்? இந்த நிறம் உனக்கு மிகவும் எடுப்பாக இருக்கும்... இதையே பில் போடுங்கள். நீ கிரெடிட் கார்டைக் கொடு, சுமா.'' என்று மாலதி

முடித்துவிட, உள்ளூர மகிழ்ச்சியுடன், சுமாலினி கிரெடிட் கார்டை எடுத்துக் கொடுத்தாள்.

பில் தயார் பண்ணிவிட்டு, கிரெடிட் கார்டை சுமாலினியின் பக்கம் தள்ளிவிட்டு விற்பனையாளர் அவளைப் பில்லில் கையெழுத்திடச் சொன்னார்.

பெருக்கல் குறியிட்ட இடத்தில் சுமாலினி கையெழுத்திடும்போதே, "சுமா, இங்கேயே சட்டை தைக்கக் கொடுத்து விடலாம். நாம் பார்லர் சென்று வரும்போது பிளவுஸ் ரெடியாக இருக்கும் என்கிறார்கள். வா, அளவு கொடு" என்று பக்கத்து அடைப்புக்கு மாலதி, சுமாலினியை அழைத்தாள்.

வாங்கிய பொருட்களைப் பில்போட அந்த அகன்ற 'கவுண்டரில்' அடுத்து வந்தவர் பரப்ப, பால் பாயிண்ட் பேனாவைத் திருப்பிக் கொடுத்து விட்டு, எதையும் விட்டுவிடவில்லையே என்று கவுண்டர் பரப்பை ஒரு நோட்டம் விட்டுவிட்டு, கைப்பையை எடுத்துக்கொண்டு சுமாலினி விரைந்தாள்.

சேலையிலிருந்து 'பிளவுசு'க்கான துணியை அதற்குள் அங்கே வெட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பிளவுசுக்கு அளவு கொடுத்துவிட்டுச் சேலைப் பாக்கெட்டை எடுத்துக் கொண்டு நடந்தபோது சுமாலினியின் முகம் மலர்ந்து விகசித்திருந்தது.

'ஷாப்பிங் காம்பளக்'சை விட்டு வெளியேறும் போது மகளிடம் ஏதோ கேட்க வாயெடுத்துவிட்டு, அடக்கிக் கொண்டு பில்போடும் கவுண்டரை மாலதி ஓரக்கண்ணால் நோட்டமிட்டாள். அவள் தேடியது



அங்கே இல்லாததால், நிம்மதியோடு முன்னோக்கி நடந்தாள்.

அவள் தேடியது, சுமாலினியின் 'கிரெடிட் கார்டை' கார்டை எடுத்துக் கொண்டாயா என்று மகளைக் கேட்கத்தான் அவள் வாய் திறந்தது. ஆனால், இந்த 'கிரெடிட் கார்டு' பற்றி சுமாலினி முன்னர் சொன்னது நினைவு வரவே, 'நாமும் அவள் தாத்தா மாதிரி அவளை நடத்தக் கூடாது' என்று எண்ணியே வாயை மூடிக்கொண்டு ஓரக்கண்ணால் பில் கவுண்டரை அவள் நோட்டமிட்டது. அங்கே 'கிரெடிட் கார்ட்' அவள் கண்ணுக்குப் புலப்படவில்லை. கார்டை சுமாலினி எடுத்துக் கொண்டிருப்பாள்; நல்ல வேளை கேளாமல் இருந்தோம் என்று தன்னைத்தானே மாலதி பாராட்டிக் கொண்டாள்.

அழகு நிலையத்தில் சுமாலினிக்கு அதிகம் எதுவும் வேலை செய்யத் தேவை இராது என்பதை உணர்ந்து, மாலதி அவளது அறைக்கே மகளை அழைத்துச் சென்று தானே அவளுக்குத் தேவையானவற்றைச் செய்து அழகு பார்த்தாள். எனவே, வேறு எதற்கும், சுமாலினி, தன் 'கிரெடிட் கார்டை' எடுக்க வேண்டிய அவசியம் நேரவில்லை.

அப்படி நேர்ந்திருந்தால், சேலை வாங்கிய இடத்தில் கார்டை விட்டு விட்டு வந்ததை அப்போதே கண்டுபிடித்து, அங்கே சென்று கார்டைத் திரும்ப வாங்கிச் சென்றிருப்பார்கள்!

அந்த 'கிரெடிட் கார்டை' வாங்கவென்று சுமாலினி திரும்ப அங்கே சென்றிருக்க மாட்டாள்! அதன் விளைவாக, அவளது வாழ்வு அடியோடு திசைமாறவும் நேர்ந்திருக்காது.

## 3

மாலை நாலு மணி அளவில் சுமாலினியை அவளுடைய தாத்தாவும் அவளும் இருந்த ஒட்டலுக்கு மாலதி கூட்டிவந்து விட்டாள்.

''இனி நான் அந்தக் 'கான்ஃபரன்ஸ்'க்குப் போக வேண்டும்,சுமா. இன்னும் கொஞ்ச நேரத்தில் தொடங்கி விடும். இன்று மாலையும், நாளை முழுதும் இருக்கிறது. ஆனால் நாளை முற்பகல் கூட்டத்துக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு இங்கே வந்துவிடுவேன், சரிதானா? எதையும் எண்ணி மனதைக் குழப்பிக் கொள்ளாமல் மகிழ்ச்சியோடு இரு. இரவு நன்றாகத் தூங்க முயற்சி செய். அப்போதுதான் காலையில் கண்கள் பளிச்சென்று இருக்கும். மறக்காமல், இரவு முகத்துக்குக் 'க்ரீம்' தடவிக்கொண்டு படு. வரட்டுமா?'' என்று விடைபெற்றுச் சென்றாள்.

''தன்னந்தனியாக அங்கே ஒட்டலில் தங்குவதற்கு, இங்கே உன்னோடு இருந்திருக்கலாமே, உன் சித்தியிடம் நீ சொல்லவில்லையா?'' என்று சிறு எரிச்சலோடு கேட்ட தாத்தாவிடம் சித்தியின் 'கான்ஃபரன்ஸ்' பற்றி சுமாலினி கூறியும், அவர் அதை அவ்வளவாக ஒத்துக் கொள்வதாக இல்லை.

பெண்களைப் பற்றிய அவரது இலக்கணம் அறிந்திருந்தால், சுமாலினி மேற்கொண்டு அதிகமாக அதைப் பற்றிப் பேசவில்லை.

சேலைக்கு என்ன சொல்லப் போகிறாரோ என்று அஞ்சியபடியே சேலையைக் காட்டிவிட்டு, மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.



தொட்டுப்பார்த்துவிட்டு, ''காஞ்சீபுரம் போலத் தெரியவில்லையே!'' என்றவர், தலையை ஆட்டி, ''சரிசரி, எடுத்து பத்திரமாய் வை, இங்கே உள்ள நாகரிகப்படி இருந்தால் போதும், அது என்ன?'' என்று அவர் கேட்கவும் உள்ளூரச் சிறு கவலையுடன் அந்தப் பாக்கெட்டைப் பிரித்துக் காட்டினாள் பேத்தி.

சுமாலினிக்கு என்று மாலதி மூன்று சுரிதார் செட்டுகள் கொண்டு வந்திருந்தாள். அதைப் பாட்டனாரின் கண்ணில் படாமல் உள்ளே கொண்டு செல்ல சுமாலினி எண்ணியது நடவாது. அவரிடம் பிரித்துக் காட்டும்படி ஆயிற்று.

சுரிதார், குமாரசாமியால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆடை அல்ல. ஆண்பிள்ளை மாதிரி அதென்ன கால்சட்டை அசிங்கமாய் என்பார்.

இப்போதும் 'தூர எறி' 'தூக்கி எறி' பெட்ரோல் ஊற்றிக் கொளுத்து' என்ற சீறல்களுக்காகக் காத்திருந்த சுமாலினி, அவர் அப்படி ஏதும் கூறாது போகவே, வியப்புடன், ஓரக்கண்ணால் அவர் முகத்தைப் பார்த்தாள்.

''இப்போது இங்கே எல்லோரும் - தெருவில், கடையில், இந்த ஒட்டலில் கூடக் கண்ணில் படுகிறவர்கள் முக்கால் வாசி இதுதான் அணிந்திருக்கிறார்கள்! நான், நம் ஊரில், தான், புதிதாகக் கண்டதும் இதில் போய் விடுகிறார்கள் என்று நினைத்தேன்... அணிந்து கொள். இல்லாவிட்டால் மாப்பிள்ளையுடைய அம்மா உன்னைப் பட்டிக்காடு என்று எண்ணிவிடப்போகிறார்கள்! ஆனால்... மேல் தாவணியையும் சரியாகப் போட்டுக் கொள். அது இல்லாவிட்டால், நன்றாயில்

லை!'' என்று குமாரசாமி கூறவும், அவருடைய பேத்திக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று!

பேத்தியை புகுந்த வீட்டில் யாரும் குறைவாக நினைத்து விடக் கூடாது என்று இவ்வளவு விட்டுக் கொடுக்கிறாரே! பாசம்தான். ஆனால் இந்தப் பாசத்தைப் புரிந்து கொண்டதாகக் கொஞ்சம் காட்டிக் கொண்டால் கூட, முகத்தில் அடித்தாற்போல ஏதாவது பேசிவிடுவார்!

''சரி தாத்தா'' என்று பணிவுடன் பதிலிறுத்துவிட்டுத் துணிமணிகளை எடுத்துக் கொண்டு அவள் பயன்படுத்திய அறைக்குச் சென்றாள்.

சொன்னபடியே மறுநாள் காலையில் மாலதி வந்து விட்டாள்.

ஏற்கெனவே சுத்தம் செய்யப்பட்டு, அழகாக அலங்கரிக்கப்பட்டும் இருந்த அறைகள் தான். ஆனால், அதிலும், மேற்கொண்டு சில வேலை அவள் செய்ய இன்னமும் அழகாகி விழாக் கோலம் பூண்டன.

சோபாக்களில் சிறு குஷன்களை சரியான முறையில், அடுக்கினாள். கார்ப்பெட், சோபா நிறங்களுக்கு ஏற்றபடி, பூங்கொத்துகள் கொண்டுவரச் சொல்லி அங்கங்கு பொருத்தமாய் வைத்தாள். ஜன்னல் திரைகளைக் கூட ஒரேமாதிரி ஒதுக்கிவிட்டு, சூரிய ஒளி அளவோடு, பாய்ந்து அறையை அழகுபடுத்தச் செய்தாள்.

கூடவே, சுமாலினிக்கும் லேசாகப் புருவம் தீட்டி, மையிட்டு, முக அலங்காரம் செய்து, கை கால் நகங்களுக்கு லேசான சாயம் பூசிவிட்டாள்.

சேலையையும், இடுப்பு வளைவு அழகாகத் தெரியும்படி கட்டிவிட்டாள்.



குமாரசாமியுடன் கலந்துபேசி, வருகிறவர்களுக்கு வந்ததும் கொடுக்க, குளிர்பானம் கொண்டுவரச் சொல்லி ஃபிரிஜ்ஜில் வைத்தாள். எதற்கும் இருக்கட்டும் என்று ஃபிளாஸ்கில் காஃபியும் வரவழைத்துத் தயாராக வைத்தாள்.

சிற்றுண்டி வகைகள், வெற்றிலை பாக்குத் தட்டு... எல்லாம் தயாராக இருந்தன.

கட்டிய வீட்டுக்குப் பழுது சொல்வதுபோலக் குமாரசாமி அவ்வப்போது ஏதாவது சொன்னபோதும், நிகழ்ச்சி நல்லபடியாக நடக்கவேண்டும் என்ற ஆவலும் அவருக்கு இருந்தபடியால், பிரச்னை என்று எதுவும் ஏற்படவில்லை.

ஒன்பதிலிருந்து பத்தரைக்குள் நல்லநேரம் என்றிருந்தார்கள்.

ஒன்பதரை மணிக்கு ''ஹிஹிஹி'' என்றபடி, சம்பத்குமாருடைய பெற்றோர் இருவரும் வந்து சேர்ந்தனர்.

இவர்களை முறைப்படி வரவேற்று உபசரித்தனர்.

ஒருவர் குளிர் பானம் குடிக்கிறேன் என்று சொல்லி, அடுத்தவர் காஃபி கேட்க, இருவருக்குமே அவரவர் விரும்பியதை அளித்தனர்.

''சேலை நன்றாயிருக்கிறது!'' என்றாள் வந்த பெண்மணி. பிறகு, ''நீயும் நன்றாய்த்தான் இருக்கிறாய்! சும்மாவா, எங்கள் சம்பத்து உன்னிடம் அப்படி மயங்கி விழுந்துவிட்டான்! ஒன்று சொல்கிறேன், கேட்டுக் கொள். இந்த ஆண் பிள்ளைகளை மட்டும் நம்பவே கூடாது! இப்படி மயங்கி நிற்கிற நேரம், அப்படியே முந்தானையில் கட்டிவைத்து விடவேண்டும்!'' அந்தப்

பக்கம் இந்தப்பக்கம் பார்வைகூடப் போய்விடாமல் வகாளை இறுகப் பிடித்து வைத்துக் கொள்! மாமியார், நான் சொல்கிறேன்! தைரியமாய்ச் செய்! நான், ஒரு வார்த்தை, உன்னைக் குறை சொல்ல மாட்டேன்!'' என்று பெரிதாக அறிவித்தாள் சம்பத்குமாருடைய தாயார்.

முந்தானையில் கட்டுவதா? அது எப்படி? அத்தோடு ஏன்? உள்ளூர ஏதோ நிரட, சுமாலினி வெறுமனே புன்னகை செய்தாள்.

''இதோ காஃபி!'' என்று அவள் கேட்ட காபியைக் கொணர்ந்து கொடுத்து விட்டு மாலதி அமர்ந்தாள்.

அவளிடம் பேசத் தொடங்கினாள் சுமாலினியுடைய வருங்கால மாமியார் வருணி. ''நீங்கள்தான் சுமாலினியுடைய சித்தியா? நிறைய உடல்பயிற்சி செய்வீர்கள் போல? பட்டினியும் கிடப்பீர்களோ? அதனால் தான் உங்கள் உடம்பு இப்படி ஒட்டிக் கிடக்கிறது! ஆனால், பட்டினி கிடந்தால் முகம் கிழடு தட்டி விடுகிறது என்று என் கணவர் 'டயட்'டே கூடாது என்று விட்டார்! இப்போது பாருங்கள், எல்லாரும் இவ்வளவு சின்ன வயசில் உனக்கு மருமகள் வரப்போகி றாளா, என்று கேட்கிறார்கள்!'' என்று கூறிச் சிரித்தாள்.

தன் சிறிய தாயையும் வருங்கால மாமியாரையும் ஒருதரம் பார்த்து விட்டு, முகம் இறுகத் தரையைப் பார்த்தாள் சுமாலினி.

என்ன பொய்! சித்தியின் முகம் அப்போதுதான் முப்பதைத் தாண்டினாற்போலத் தெரிய, வந்தவளின் முகம் குறைந்தது ஐம்பதைக் காட்டியது. மருமகள் எடுக்க, ஐம்பது சின்...ன வயதாமா? என்ன அசட்டுப் பேச்சு!



ஆனால், அதை விடவும் சித்திமுகம் பட்டினி கிடந்து கிழடு தட்டிவிட்ட மாதிரி அவள் பேசிய பேச்சுதான் சுமாலினிக்கு எரிச்சல் மூட்டியது. இந்த மாதிரிப் பேச்சைத்தான் சுமாலினி இனி எப்போதும் கேட்டு, சகித்தாக வேண்டுமா?

பொய்ப் பெருமை?

ஆனால், மாலதி எதையும் கண்டுகொள்ளாமல், சாதாரணமாகச் சிரித்துப் பேசினாள். சும்மா, பொழுது போக்கும் நோக்கம் கொண்ட பேச்சு.

வேறு பிள்ளைகள் இருக்கிறார்களா? என்னென்ன பிடிக்கும், பிடிக்காது என்பதுபோலச் சாதாரணப் பேச்சு கள். இனிதாகவே யோசனை ஓடும்படி வந்தவள், தொடர்பான கேள்விகள், அவளை அமைதிப் படுத் தவோ? வேண்டியவளாக உணர வைக்கவோ?

இப்படித்தான் இருக்க வேண்டுமா? இத்தனைக்கும் இந்த வருணி அம்மாள் சித்தியையே மட்டம் தட்டி தற்பெருமை பேசினாள்!

தாத்தா அதட்டி, அதிகாரம் செய்யும்போது முகம் இறுகப் பேசாமல் நின்றது சுமாலினிக்கு நினைவு வந்தது. இப்படி வேறு ஏதாவது வழியில், தாத்தாவுக்குப் பிடித்த மாதிரியாக ஏதாவது பேசிப் பார்த்திருக்க லாமோ, என்று காலம் கடந்து இப்போது தோன்றியது.

''ஆனால், சிறிய தாயைப் பார்த்து பிரமிப்பும், அவளைப் போலப் பிற்காலத்தில் வளர்ச்சி பெற வேண்டும் எனும் ஆவலும் அவளுக்கு மிகுதியாக உண்டாயிற்று.

சிறிது நேரம் பேச்சின்பின், ''வருணி, உன் பிள்ளை எப்போது வருகிறேன் என்ன ஏது என்று

சொன்னானா?'' என்று சம்பத்குமாருடைய தந்தை மனைவியிடம் வினவினார்.

''இல்லையே டியர்! பத்தரைக்குள்ளாக எப்படியும் வந்து விடுவதாகச் சொன்னான். பாபு எங்கேயும் அழைத்துப் போய் விட்டானோ என்னவோ? சம்பத் கூட பாபுவும் வரப்போகிறேன் என்றானே!''

''சச! கஷ்டகாலம்! பட்டதுபோதும்! திருப்பதியிலிருந்து சேர்ந்தேயா வரப்போகிறார்கள்! கூடப் பிறந்த அண்ணன் தம்பி மாதிரி அவ்வளவு ஒற்றுமை! சாப்பிட, தூங்க, தொழிலைப் பார்க்க என்று இருவரும் ஒன்றாகவே தான் இருப்பார்கள். இப்போதும் ஒன்றாகவே வருவார்களோ என்னவோ...''

''இங்கே ஒரு நிலம் பார்க்க வேண்டும் என்று பாபு எங்கள் அண்ணன் மகன் சொன்னான். அங்கே யாரிருக்கிறார்கள்'' என்றார் சம்பத்குமாருடைய தந்தை.

அந்த சர்வாதிகாரி கட்டளை பிறப்பித்திருப்பானா யாருக்கும்! என்று ஆத்திரமாக எண்ணினாள் சமாலினி.

வருணி அம்மாள் மீண்டும் சமாலினியிடம் பேசினாள். ''பாரும்மா! ஆண்பிள்ளைகள் என்றால் கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பார்கள்! ஹிஹி....நாம் தான் லகானைக் கொஞ்சம் விட்டுப்பிடிக்க வேண்டும். சும்மா எதற்கும், 'எங்கே, என்ன' என்று குடைந்தெடுக்க் கூடாது! என்ன, பாபு என்றுவிட்டால், நாம் எங்கே போய் நிற்பது?'' என்று மீண்டும் புத்தி சொன்னவளைச் சமாலினி ஆச்சரியமாக நோக்கினாள்.

வந்தவுடன், 'லகானை இறுகப் பிடித்து வை' என்ற அதே வாய் இப்போது 'விட்டுப்பிடி' என்கிறதே! ஏன்?



என்ன விஷயம்? இப்படி மாற்றி மாற்றிப் பேசுகிறவளை எந்த அளவுக்கு நம்புவது? மகன் இன்னமும் வரவில்லையே என்கிற பரபரப்பில் உளறுகிறாளா, அல்லது இந்த மாற்றிப் பேசுதலில் ஏதாவது உள்கருத்து இருக்கிறதா?

இடையே சந்தித்த சித்தியின் உணர்ச்சியற்ற பார்வையும் இதே சந்தேகத்தை எடுத்துரைப்பது போலவே சமாலினிக்குத் தோன்றியது.

மேலும் சற்று நேரம் இப்படி அர்த்தமற்ற பேச்சுகளில் கழிந்தது.

குமாரசாமி எந்தப் பேச்சிலும் கலந்து கொள்ளாமல் இருப்பதைக் கவனித்துவிட்டு, மாலதியிடம் சமாலினி ஜாடை காட்டினாள்.

''இன்னொரு கப் காஃபி குடியுங்களேன்!'' என்று மாலதி எழவும், ''ஓ! குடிக்கலாமே! எனக்குக் காஃபி குடிக்க ரொம்பப் பிடிக்கும்! ஒரு நாளைக்குக் குறைந்தது பத்துக் கப் குடிப்பேன். சர்க்கரை மட்டும் இன்னும் கொஞ்சம் அதிகமாய்ப் போடுங்கள்! ஹிஹிஹி!'' என்றாள் வருணி.

''சும்மா, கொஞ்சம் வாம்மா. சர்க்கரை தனியாக எங்கேனும் இருந்தால் எடுத்துக் கொடு'' என்று தமக்கை மகளையும் அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குள் சென்று கதவைச் சாத்தினாள்.

''என்னடி?''

''தாத்தாவைப் பார்த்தீர்களா, சித்தி? மாத்திரை போட வேண்டிய நேரம் வேறு தாண்டி விட்டது. சம்பத்குமார் நேரத்துக்கு வராதது அவரை ரொம்பவும் பாதித்து விட்டது, என்று தோன்றுகிறது!''

''அவரை மட்டும்தானா? உன்னைப் பாதிக்கவில்லையா? வாழ்வில் எவ்வளவு முக்கியமான தருணம்! இதற்குக் கூடக் குறித்த நேரத்துக்கு வராமல் அவன் என்ன பண்ணுகிறான்?'' என்றாள் மாலதி எரிச்சலோடு.

''ஆ...மாம்! என்ன சித்தி? இதற்குக் கூட வராமல் ஓ! எல்லாம் அந்தப் பொல்லாத பெரியப்பா மகன் வேலை, சித்தி! சம்பத்குமாரை அவன் அழைத்துப் போயிருப்பதாக ஏதோ சொன்னார்களே! அவன் வேண்டுமென்றே ஏதாவது தாமதப்படுத்தியிருப்பான். சம்பத்தின் பெயரைக் கெடுக்க அவன் ஏதாவது செய்து கொண்டே இருப்பான் என்று அவர் சொல்லியிருக்கிறார்!''

''அவன் அழைத்துப் போனால் இந்த சம்பத் ஏன் போக வேண்டும்? முடியாது என்று சொல்வதற்கென்னவாம்?'' என்று பொறுமையற்றுக் கேட்டபடி ஃப்ளாஸ்கில் இருந்த காபியை இன்னொரு கப்பில் ஊற்றி, காபியுடன் கூடவே வந்திருந்த சர்க்கரை 'ஜாரி'ல் இருந்து கொஞ்சம் சர்க்கரை எடுத்துக் காபியில் போட்டுக் கலக்கினாள்.

சட்டெனச் சிரித்து, ''ஒரு நாளைக்குப் பத்து கப் காபியாம். அதில் இவ்வளவு சர்க்கரை வேறு போட்டுக் குடித்துவிட்டு, உடம்பு முகம் இளமையாய் இருப்பதாகக் கற்பனை வேறு செய்து கொள்கிறார்களே!'' என்று மீண்டும் நகைத்தாள்.

சிறிய தாயோடு சேர்ந்து முறுவலித்து விட்டு அவளது முந்தையைக் கேள்விக்கு சமாலினி பதில் சொன்னாள். ''ஒருவர் விரட்டிக் கொண்டே இருக்கும் போது, அதற்குப் பணிந்தும் பழகிய பிறகு, எதிர்ப்பது



ரொம்பக் கடினம், சித்தி. என்னால் எதற்காவது தாத்தாவை மறுத்துப் பேச முடிகிறதா? அதுபோலத்தானே சம்பத்குமாரும்? பாவம், சித்தி!'' என்று மகள் உருகவே, அதற்குமேல் சம்பத்குமாரைப் பற்றிய பேச்சை மாலதி விடுத்தாள்.

''போகட்டும். இப்போது உன் தாத்தா விஷயம்? அவருக்கு மாத்திரை எடுத்துப் போய்க் கொடுக்கிறாயா?'' என்று வினவினாள்.

''அம்மாடியோவ்! அப்புறம் நான் தொலைந்தேன்!'' என்று உடல் நடுங்களினாள் மகள். ''இப்படி ஒரு பார்வை பார்ப்பார்...'' புருவம் நெறித்து ஓரக்கண் விரித்து உதடு சுளித்து ஒரு போஸ் கொடுத்து விட்டு, ''அவராகக் கேட்கிறவரை பொறுத்திருக்க வேண்டியதுதான், சித்தி!'' என்று சோர்வுடன் முடித்தாள். ''அவரது நன்மைக்காகத்தான் என்றாலும்... ஊகூம்... எனக்குத் தைரியமில்லை, சித்தி.''

''சரிசரி. மாத்திரையை என்னிடம் கொடு. காபியை நீ எடுத்துக் கொள். என்று அவள் மாத்திரையோடு ஒரு தம்ளர் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு முன்னே நடக்க, காபி கப்புடன் சமாலினி பின் தொடர்ந்தாள்.

வருணி, ஆவலுடன் காஃபியை வாங்கி, உறிஞ்சிக் குடித்தாள்.

மாத்திரையுடன் பெரியவரிடம் மாலதி சென்றாள். ''இந்தாருங்கள், மாமா, உங்கள் மாத்திரை நேரம் தாண்டிவிடக் கூடாதே என்று உங்கள் பேத்தி மாய்கிறாள்! சாப்பிடுங்கள்!'' என்றவள், விருந்தினர் பக்கம் திரும்பி, ''பார்த்தீர்களா எங்கள் பெண்ணின் பாசத்தை! அவளுக்குத் திருமண நிச்சயநேரம்! மாப்பிள்ளையை

இன்னும் காணவில்லையே என்ற கவலை ஒரு பக்கம்! அப்படியிருந்தும், உரிய நேரத்தில் மாத்திரை சாப்பிடாமல் தாத்தா கஷ்டப்பட்டு விடக்கூடாது என்று என்ன தரிசனம் பாருங்கள்! இப்படி ஒரு மருமகள் கிடைக்க நீங்கள்... நீங்கள் என்ன உலகத்தில் யார் என்றாலும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்! அப்படித்தானே?'' என்று புன்னகையோடு, ஆனால் அழுத்தமான குரலில் வினவினாள்.

''ஆமாம்! ஆமாம்!'' என்று சம்பத்குமாருடைய பெற்றோர் ஆமாம் பாட்டுப் பாடுவதையும்; கூடவே குமாரசாமி, மாலதியிடமிருந்து மாத்திரையை வாங்கி வாயில் போட்டு விழுங்குவதையும் கண்ட சுமாலினி பிரமித்துப் போனாள்!

தாத்தா மறுப்பதற்குச் சித்தி இடமே கொடுக்கவில்லையே! என்ன சாமர்த்தியம்! துணிச்சலும்தான்! இந்த சாமர்த்தியமும் துணிச்சலும் என்றேனும் தனக்கு கைவரக்கூடுமோ என்று ஆசையுடன் எண்ணிவிட்டு, எங்கே? பகல் கனவு! என்று முடித்தாள் அவள்.

ஆனால், இந்த சம்பத்குமார் எங்கே? அவன் விரல் அளவு இரு தினங்களுக்கு முன்புதான் கேட்டு அறிந்தான். ஒருவேளை மோதிரம் சரியாகக் கிடைக்கவில்லையோ?

மீண்டும் மாலதி பேச்சைத் தொடங்கினாள். ''நல்ல நேரம் முடிய இன்னும் பத்து நிமிடங்கள்தான் இருக்கின்றன! இன்னும் உங்கள் மகனைக் காணோமே! ஒரு வேளை... உங்கள் பிள்ளைக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம்தானே?'' என்று அவள் கேட்கவும், சுமாலினியோடு, குமாரசாமியும் சேர்ந்து அதிர்ந்தார்.



''மாலதி, இது என்ன கேள்வி? மாப்பிள்ளை என்னிடம் நேருக்கு நேராக, சுமாலை மணக்க சம்மதம் சொன்னாரே!'' என்றார் குமாரசாமி.

''ஆ... ஆமாம். எங்களிடம் கூட அப்படித்தான் பாபு சொன்னான்! அதனால், சம்புவுக்கு சுமாலினியை மணக்க விருப்பம்தான்'' என்றாள் சம்பத்குமாருடைய தாயார் வருணி.

''பாபு சொன்னாரா? யார் அது?'' என்று புருவம் சுருக்கி மாலதி வினவினாள்.

''இவருக்கு அண்ணார் பையன்! இது தெரியாதா?'' என்று வருணி சிரித்தாள். என்னவோ, இந்திய ஜனாதிபதியின் பெயர் தெரியவில்லையே என்பது போலக் கேலிச் சிரிப்பு!

''இதுவரை தெரியாது! ஆனால் புரியாதது வேறு ஒன்று. உங்கள் பையனின் சம்மதம் பற்றி அந்த பாபு என்ன சொல்வது?''

தலையைச் சொறிந்து கொண்டு ராகவன் விழிக்க, ''எங்கள் பையனுக்கு வெட்கம் அதிகம், பெரியவர்களிடம் மரியாதையும் அதிகம். அது தான் பெரியப்பா பையன் மூலம் சொன்னான்!''

''ஆமாம் ஆமாம்... அதுதான் காரணம்!'' என்றார் ராகவன், பிரச்னை தீர்ந்த திருப்தியுடன்.

''இப்போதும்கூட பெரியவர்கள் முன் தனியே வர வெட்கப்பட்டுத் தான் பெரியப்பா மகனைத் துணைக்கு அழைத்தார்போல?'' என்று மாலதி அப்பாவி போலக் கேட்கவும் சுமாலினிக்கு உள்ளூர அவமானமாக இருந்தது.

இந்த மாதிரி அவள் தலைகுனிய நேரும்படி, சம்பத்குமாரை அந்த பாபு எங்கே இழுத்துப் போனான்?

அவளது கேள்விக்கு விடை தருவது போல டெலி∴போன் மென்மையாகக் கிணுகிணுத்தது.

## 4

திடுமென டெலி∴போன் மணி அடிக்கவும், அறையில் இருந்த எல்லோருமே சற்று திடுக்கிட்டார்கள்.

சற்றே எழுந்த குமாரசாமி, மீண்டும் அமர்ந்து கொண்டு, '' நீ எடம்மா மாலதி'' என்றார்.

எடுத்துக் கேட்டுவிட்டு, ''கொஞ்சம் பொறுங்கள்'' என்று டெலி∴போனில் பேசியவரிடம் கூறி, ரிசீவரின் வாயைப் பொத்திக் கொண்டு குமாரசாமியை நோக்கி, ''மிஸ்டர் ராகவனுடைய அண்ணன் மகன் அந்த மிஸ்டர் பாபுதான், மாமா. ஆவடிப்பக்கம் ஏதோ டிரா∴பிக் ஜாமில் சிக்கிக் கொண்டாராம். தாமதம் ஆகிவிட்டதற்கு உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறார்'' என்றவள், குமாரசாமியின் 'பரவாயில்லை'யை அந்த பாபுவிடம் தெரிவித்தாள்.

''ஆனால் இப்போது...'' என்று தொடங்கியவள், ''என்னது?'' என்று அதிர்ந்துவிட்டு, ''மிஸ்டர் சம்பத் குமார் உங்களோடு வருவதாக உங்கள் சித்தப்பாவும் சித்தியும் சொன்னார்களே அவர் இங்கே இல்லை மிஸ்டர் பாபு!'' என்று உரைக்கவும் அறையில் இருந்த மற்ற அனைவருமே திகைப்பும் குழப்பமும் எய்தினர்.



வருணி, ராகவன் முகத்தில் தோன்றிய அசட்டுச் சிரிப்பு சுமாலினியின், ஏற்கெனவே சற்றுக் கலங்கியிருந்த வயிற்றில் மேலும் புளியைக் கரைத்தது.

''உங்களிடம் பேசவேண்டுமாம்'' என்று ராகவன் தம்பதியிடம் ரிசீவரைக் கொடுத்துவிட்ட மாலதி சுமாலினியின் அருகே வந்து அமர்ந்தாள். ''சொன்னது எல்லாம் கேட்டாயல்லவா? நேரத்துக்கு சம்பத்குமார் இங்கே இருக்க வேண்டும் என்பதால், அந்த பாபு அவரைக் கூட்டிப் போகவே இல்லையாம். இன்னமும் இந்தப் பையனை மணக்கப் போகிறாயா, சுமா?'' என்று மெல்லிய குரலில் வினவினாள்.

சுமாலினி பரிதாபமாக நோக்கவும், ''பார் சுமா, நம் வாழ்க்கை நம்முடையது. நம் விருப்பம்போல நாம் நடத்த வேண்டியது! இதை யார் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் என்று விடக் கூடாது! நினைவு வைத்துக் கொள்!'' என்றாள் வேகமாக.

''சம்பத்குமார் வராததற்குத் தகுந்த காரணம் இருந்தால்...'' என்று இழுத்தாள் சின்னவள்.

''டெலி∴போன் டெலி∴போன் என்று ஒன்று இருக்கிறது தெரியுமா? இதோ, தாமதமாக என்றாலும் இந்தப் பையன், சொல்லவில்லை? அதுபோல அந்த ஆளும் சொல்லியிருக்கலாமில்லையா?'' என்று படபடத்தவள் சுமாலினி சோர்வுடன் தலைகுனிந்து கொள்ளவும், ''என்னடி? என்ன, காதலா?'' என்று லேசாக அதட்டினாள்.

மெல்லத் தலையசைத்தாள் சுமாலினி.

சம்பத்குமாரை மணந்து கொள்வது பற்றி அவள் சாதகமாக நினைத்த காரணங்கள் இரண்டு. ஒன்று,

தன்னைப்போலவே அவனும் அவனது சொந்த விருப்பு வெறுப்புகளைப் பற்றிப் பொருட்படுத்தாத ஒருவருக்குக் கீழ்ப்படிந்தே வாழும் ஒத்த நிலை! அடுத்தது, ஒருவாறு தாத்தாவின் ஏவல்களில் இருந்து தப்பிக்கலாம் என்பது! ஏவல்களுக்குப் பணிந்து பழகிய ஒருவன், அவளை ஏவமாட்டான் அல்லவா? எப்படியும், அவளது மன நிலை, உடல்நிலை எதையும் கவனியாது இடப்படும் ஆணைகளிலிருந்து விடுதலை கிடைக்கும் என்பது!

இதையெல்லாம் சித்திரிடம் இப்போது எப்படிச் சொல்ல முடியும்?

டெலிஃபோன் பேச்சில் ஒரு காதை வைத்திருந்த மாலதி, குனிந்த தலையுடன் சிலையாய் அமர்ந்திருந்த மகளிடம், "இதோபார், இப்போதைக்கு ஒரு காரியம் பண்ணப் போகிறேன். உன் நன்மைக்காகத்தான். கொஞ்சம் அவகாசம் கிடைக்கும். அதன்பிறகு நடப்பது நடக்கட்டும்" என்று எழுந்து சென்று, குமாரசாமியின் அருகே கிடந்த சோபாவில், அவர் பக்கமாக அமர்ந்தாள்.

"ம்ம்... சரிம்மா... சரிப்பா. இன்னும் மூன்று நிமிடம் இருக்கிறதே! நீ சொல்கிறது போலச் செய்து விடுகிறோம்" என்று கணவனிடமிருந்து ரிசீவரைப் பிடுங்கி, "பாபுக் கண்ணு, வீட்டுக்குப் போனதும், சுடுதண்ணீரில் குளித்து விட்டு, விக்ஸ், அமிர்தாஞ்சனம் ஏதாவது தடவிக்கொள். கண்ணு, 'டிராபிக் ஜா'மில் வேர்த்து நனைந்ததில் சளி பிடித்து விடக் கூடாதுப்பா..." என்றவள், ரிசீவரைப் புரியாத பார்வையுடன் நோக்கி, கட்டாகி விட்டது போல" என்றுரைத்தாள்.



அதற்குள், ராகவன், "சரிசரி... ஃபோனைக் கீழே வை. தட்டு மாற்றுவதை முடித்து விடும்படி பாபு சொன்னான். சீக்கிரம், சீக்கிரம்! கொஞ்சம் பூவை எடுத்து, நல்ல நேரம் முடிவதற்குள் மணமகள் தலையில் வை. சார் நாம் தட்டை மாற்றிக் கொள்ளுவோமா?" என்று அவர்கள் கொண்டு வந்து ஓரமாய் வைத்திருந்த தட்டை நோக்கி ஓடினார்.

"பொறுங்கள்!" என்றாள் மாலதி. "அவசரக் கோலம், அள்ளித் தெளித்தாற்போல என்று இப்படி அரையும் குறையுமாகச் செய்வதை விட, ஒரு மாதம் பொறுத்திருந்து, தை மாதம் நல்லபடியாக நாலு பேரைக் கூட்டி இந்த விழாவை நடத்தலாம் என்று நாங்கள் நினைக்கிறோம்..."

குமாரசாமி கல்லாய் இறுகி அமர்ந்திருக்க, மாலதியின் பேச்சில் ராகவன் இடையிட்டார். "ஆனால் எங்கள் பாபு சொல்லிவிட்டானே! தட்டு மாற்றித் திருமணத்தை உறுதி செய்து விடுங்கள் என்று அவன் உத்தரவு போட்டபிறகு அதை எப்படி மாற்றுவது?" என்றார் அவர்.

சற்றே அசைந்த குமாரசாமியை முந்திக்கொண்டு "அது உங்கள் பிரச்னை?" என்றாள் மாலதி. "பாருங்கள், எங்கள் மாமா, ஊரில் பெரிய மனிதர். பெரிய பரம்பரை ஆள் அம்பு அதிகம். அங்கேயே நாலு பேரைக் கூட்டிப் பெருமையாய், ஆரவாரமாய் அவருடைய கவுரவத்துக்கு ஏற்றபடி செய்வதை விட்டு, பேர் தெரியாத புள்ளிகள் போல, இப்படி யாரும் அறியாமல் தப்புக்காரியம் போல் ஏன் செய்ய வேண்டும்? ஏதோ, மாப்பிள்ளையும் வந்து அவசரப்படுத்தினாலாவது 'பர

வாயில்லை' என்று செய்யலாம். இப்போது அவரையும் காணோம் என்கிறபோது...'' என்று நிறுத்தினாள்.

''வந்துவிடுவான். வந்துவிடுவான். நல்லநேரம் முடியப் போகிறதே! முதலில் தட்டை மாற்றிக் கொண்ட பிறகு பேசுவோமே! பாபு சொல்லிவிட்டான் பாருங்கள்!'' என்று அவசரப்பட்டார். ராகவன்.

அசையாமல் இருந்து கொண்டு, ''யார் சார் அந்த பாபு? இப்போது டெலிஃபோனில் பேசினாரே, அவர் தானே? அதேபோல, உங்கள் பிள்ளையும் 'வரமுடியவில்லை; காரணம் இப்படி' என்று ஏதாவது சொல்லியிருக்கலாமில்லையா?... என் வாயால் சொல்லவேண்டாம் என்று பார்த்தேன். ஏன் சார், பேசக்கூடிய நிலைமையில் இருந்தால் உங்கள் பையன் இவ்வளவு முக்கியமான விஷயத்தில் - ஒரு தகவல் கொடுத்திருக்க மாட்டாரா? ஊரில், உலகத்தில் எத்தனை விபத்து... எத்தனை நடக்கின்றன! அவர் என்ன ஆனார் என்று பாராமல், அவர் கல்யாணத்துக்கு இப்படிப் பறக்கிறீர்களே!'' என்று மாலதி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

மற்ற நால்வருமே அதிர்ந்துதான் போயினர்.

சமாலினி மிரண்டு விழிக்க, ''ஆமாம்! முதலில் சம்பத்குமாரைத் தேடுங்கள். இங்கே எங்கே தங்கியிருந்தார்... எப்போது கிளம்பினார் என்று பாருங்கள்'' என்றார் குமாரசாமி கவலையுடன்.

விரைவில் சமாளித்துக் கொண்டவர்கள் ராகவனும் அவர் மனைவி வருணியும்தான். ''அதெல்லாம், சம்புவுக்கு ஒன்றும் ஆகியிராது. வேறு ஏதாவது வேலையாகப் போயிருப்பான்...'' ''போன இடத்தில் டெலிஃபோன் இருந்திராது...'' ''இல்லையில்லை. டெலிஃபோன் தொடர்புதான் கிடைத்திராது...'' என்று கணவனும் மனைவியும் தட்டைக் கீழே வையாமலே மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டே போயினர். கடைசியாக, இருவரும் சேர்ந்து ''அதனால்...'' என்று தொடங்கிய போது மாலதி குறுக்கிட்டு, ''இப்போது நல்ல நேரம் முழுவதுமாய் முடிந்து விட்டது'' என்று முடிக்கவும் இருவரும் பேந்தப் பேந்த விழித்தனர்.



அப்போதும், ''நல்லநேரம் முடிந்தால் என்ன? சும்மா செய்வோமே!'' என்று ராகவன் தொடங்கவும், ''அதுசரியில்லை!'' என்று குமாரசாமி ஒருவழியாக முடித்து விட்டார். ''நீங்கள் முதலில் மாப்பிள்ளையைப் போய்ப் பாருங்கள்'' என்று அவர் கூறவும், மறுத்துக் கூற முடியாமல் கணவன் மனைவி இருவரும் கிளம்பினர்.

கிளம்பும்போது தயக்கத்துடன், ''என் மருமகளுடைய தங்கை சொன்ன மாதிரி, ஏதாவது பிரச்னை என்றால், தயங்காமல் என்னைக் கூப்பிடுங்கள்! எதற்கும் மாப்பிள்ளை சகத்துக்கு உடனே டெலிஃபோன் செய்யுங்கள்'' என்று கூறி, அவர்களைக் குமாரசாமி வழியனுப்பி வைத்தார்.

விருந்தினர் சென்ற பிறகு, சற்றுநேரம் அங்கே அமைதி நிலவியது.

அமைதியைக் கலைத்தவர் குமாரசாமிதான். ''அனாவசியமாய் உன்னை வரவழைத்துத் தொல்லை கொடுத்துவிட்டேன். விழா நடந்திருந்தால், வந்து செய்ய வேண்டியது உன் கடமைதான். ஆனால் அதுதான் நடக்கவில்லையே! சரிசரி... வந்ததற்கு, சுமா

லினிக்குக் கொஞ்சம் நாகரிகம் கற்றுக் கொடுத்திருக்கிறாய்... ஏதோ அது ஒரு லாபம் என்று எண்ணிக் கொள்ள வேண்டியதுதான். இப்போது...''

''அப்படியானால் நான் கிளம்பட்டுமா, மாமா?'' என்றாள் மாலதி அமைதியாகவே.

''இல்லையில்லை. அவர்கள் பிள்ளையைப் பார்க்க வேண்டும். அவசரமாகப் போய்விட்டார்கள்! நீ இருந்து சாப்பிட்டு விட்டுப் போ. இருவருமாய் டைனிங் ஹாலுக்குப் போய் சாப்பிட்டு விடுங்கள். எனக்கு இப்போது கோதுமை சாதம் வரும். இங்கேயே கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். சுமாலினி, சித்தியை அழைத்துப் போய் சாப்பிட வை. 'ரூம் பில்' போட்டுவிடு. எப்படி என்று தெரியுமில்லையா?'' என்று கேட்டு ஒரு தரம் 'ரூம் பில்' போடுவது பற்றி விளக்கிவிட்டு, அவர்கள் கிளம்ப, குமாரசாமி அனுமதித்தார்.

''சேலைமாற்றி விட்டுப் போகிறேன், தாத்தா! சித்தி, இந்தத் தலை அலங்காரம் எடுத்து விடுங்கள்!'' என்று, மாலதியை அழைத்துக் கொண்டு சுமாலினி அறைக்குள் சென்றாள்.

சிறிய தாயின் கையைப் பிடித்துக் கொண்டு, ''ரொம்ப சாரி, சித்தி, உங்களுக்கு வீண் அலைச்சலாகி விட்டது. வீண் கஷ்டம்! ரொம்ப ரொம்ப சாரி சித்தி!'' என்று மன்னிப்புக் கேட்டாள்.

மாலதியை அனாவசியமாய் அலைக்கழித்துவிட்டு, அதற்கு, உரியபடி வருத்தம் தெரிவிக்காமல், அவளது அலைச்சலில் குமாரசாமி, தங்களுக்கு ஒரு லாபம் கண்டுபிடித்து, அதைச் சொல்லவும் செய்தது அவளுக்கு



உள்ளூர வருத்தமாய் இருந்தது. எனவே, தனியே அழைத்துச் சென்று மன்னிப்புக் கேட்டாள்.

''சீச்சீ! பைத்தியம்! இதற்கெல்லாம் நீ என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமா? சுகந்தி இருந்திருந்தால், லீவுக்கு லீவு. நீ அங்கேயோ, நாங்கள் உன் வீட்டுக்கோ வந்துபோய் இருந்திருப்போம்! ஏதோ, இரண்டுநாள் பார்ப்பதற்காவது கொடுத்து வைத்ததே! அத்தோடு எனக்கு இது ஒன்றும் வீண் அலைச்சலும் இல்லையே! அந்தக் 'கான்பரன்ச'க்காக, எப்படியும் நான் சென்னை வருவது நிச்சயம்தானே! இதைச் சாக்கிட்டு உன்னைப் பார்க்க முடிந்தது. மற்றபடி, விழுப்புரம் வந்து உன்னைச் சந்தித்திருப்பேனா? சொல்லு!'' என்று இதமாகப் பேசி, சின்னவளின் முகத்தை மலர வைத்தாள் மாலதி.

சிறு அமைதிக்குப் பின், ''சித்தி, நீங்கள் சும்மா தானே சொன்னீர்கள்? சம்பத்குமாருக்கு ஓர் ஆபத்தும் நேர்ந்திராதே?'' என்று சிறு கவலையுடன் கேட்டாள். ''அப்போதைக்கு நிச்சயத்தை நிறுத்தத்தானே...? ம்?''

''ஆமாம்...'' என்று மாலதி ஒத்துக்கொண்டாள். ''எனக்குக் கோபம், சுமா. நல்லது ஒன்று செய்வது என்றால் அதை ஒழுங்காக, முறைப்படி செய்ய வேண்டாமா? இவர்கள் இப்படி நடந்து கொண்டாலும், நாம் வளைந்து கொடுப்போம் என்கிற தைரியம் முதலிலேயே வந்துவிடக் கூடாது, பார். அப்புறம், உன்னை அங்கேயும் ஓட ஓட விரட்டத் தொடங்கி விடுவார்களே என்றுதான்... இப்போது, நம் விருப்பத்தையும் மதித்தாக வேண்டும் என்பது புரியும் அல்லவா? இனி உன்னிடம் ஒழுங்காக நடந்து கொள்வார்கள்!''

"ஓகோ!" என்றாள் சுமாலினி விழிகள் விரிய. "அதற்காகத்தான் இந்தப் போடு போட்டீர்களா?" என்று அதிசயத்துடன் வினவினாள்.

சற்றுத் தயங்கிவிட்டு, "அதுமட்டுமில்லை, சுமா! சமூக நியதி என்று ஒன்று இருக்கிறதில்லையா? ஒப்புக்கொண்ட நேரத்துக்கு வர முடியா விட்டால், தகவல் தெரிவித்து மன்னிப்பாவது கேட்க வேண்டாமா? அந்த 'பாபு' கேட்கவில்லை? அதை, அறிவுறுத்த வேண்டியது பெற்றோர்தானே? அதனால்தான் சொன்னேன்" என்றாள் மாலதி.

"அது சரிதான்..." என்று ஒத்துக் கொண்டபோதும், "ஆனால், சம்பத்குமார் எங்கே போயிருக்கக் கூடும், சித்தி? அதுவும் ஒரு வார்த்தைகூடத் தெரிவிக்காமல்?" என்று சுமாலினி மீண்டும் குழம்பினாள்.

"எங்கே சென்றிருந்தாலும், இவர்கள் இருவருக்கும் அடியோடு தெரியாமல் செல்லவில்லை! அதுமட்டும் நிச்சயம். அவர் வரவில்லையே என்று நாம் சஞ்சலப்பட்ட அளவு அவர்கள் உணர்ந்தார்களா? இல்லையே! அவர்கள் சொன்ன மாதிரி வேலை விஷயமாகவே சென்றிருக்கலாம். ஆனால், கடைசி நிமிடத்தில் மகன் வந்துவிடுவான் என்றோ அல்லது அந்த பாபு அழைத்து வந்து விடுவான் என்றோ எதிர்பார்த்திருக்கிறார்கள் என்பது என் ஊகம். இரண்டும் இல்லை என்றானதும் கொஞ்சம் குழம்பி விட்டார்கள் என்று தோன்றுகிறது!" என்றாள் மாலதி.

ஆனாலும் இந்த சம்பத்குமார் ஏன் இப்படிச் செய்தான் என்ற கேள்வி உள்ளூர உறுத்தியபோதும், சுமாலினி அதை வாய்விட்டுச் சொல்லாமல், "சாப்பிடப்



போவோமா, சித்தி?" என்று கிளம்பினாள். ஏனோ, மாலதிக்கு சம்பத்குமாரைப் பிடிக்கவில்லை என்று அவளது உள்ளுணர்வு கூறவே, அவனைப் பற்றி மாலதியிடம் பேசாமல் இருந்துவிட்டாள்.

பிற்பகல் கூட்டம் விரைவில் தொடங்கிவிடும் என்பதால், உடனே கிடைக்கக் கூடிய உணவு வகைகளையே கொண்டுவரச் சொல்லிச் சாப்பிட்டு விட்டு திரும்பி வந்தார்கள்.

அறைக்குள் வந்ததும், சம்பத்குமாருக்கு ஒன்றும் இல்லை என்று தகவல் வந்தது என்று சுருக்கமாய் உரைத்தார் குமாரசாமி. "இரண்டொரு நாளில் மாப்பிள்ளை வந்து என்னைப் பார்ப்பாராம்!" என்றார். அப்படியே அநேகமாக இரவிலேயே ஊருக்குக் கிளம்பி விடப் போவதாகக் குமாரசாமியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட சிறிய தாயோடு, அறைக்கு வெளியே, 'காரிடாரி'ல் 'லிஃப்ட்' வரை கூட வந்து சுமாலினி வழியனுப்பினாள்.

மீண்டும் ஒருதரம், "இந்த சம்பத்குமாரைத்தான் மணந்தாக வேண்டும் என்று இல்லை, சுமா. அவனை மணப்பது பற்றி யோசித்து முடிவு பண்ணு. தாத்தாவுக்குப் பயந்தோ, பணிந்தோ உனக்குப் பிடிக்காததைச் செய்யாதே! உனக்கு யாரும் இல்லை என்றும் எண்ணாதே! எந்த நேரமும் சித்தியின் வீடு உனக்காகத் திறந்திருக்கும்! என்று கூறி, அன்போடு, அக்கா மகளின் தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டு, லிஃப்டினுள் சென்று மாலதி லிஃப்ட் கதவை மூடினாள்.

சித்தியின் பேச்சை அசைபோட்டபடி சுமாலினி மெல்லத் திரும்பிச் சென்றாள்.

மதிய ஓய்வுக்காகக் குமாரசாமி படுக்கச் சென்று விட்டார்.

சத்தத்தைக் குறைவாக வைத்துக் கொண்டு சுமாலினி டி.வி. சேனல்களை ஒவ்வொன்றாக மாற்றிக் கொண்டிருந்தாள்.

ஆனால், அவள் மனம் எந்த நிகழ்ச்சியிலும் பதியவில்லை.

இந்த சம்பத்குமார் ஏன் இப்படிச் செய்தான்? ஒரு பெண்ணோடான திருமணத்தை உறுதி செய்வதற்காக மோதிரம் போட வருவதாகச் சொல்லி விட்டு, ஒரு காரணமும் சொல்லாமல் வராமலும் இருந்தால், அது அவளை அவமதிப்பதாகும் என்று கூடத் தெரியாதா?

அல்லது அவமதிப்பதற்காகத்தான் அவன் அப்படி நடந்து கொண்டானா?

படபடவென்று அடித்துக் கொண்ட நெஞ்சை அழுத்திக் கொண்டு, 'இருக்காது, அப்படி இருக்காது' என்று திருப்பித் திருப்பி தனக்குத்தானே உருப்போட்டாள்.

அப்படியேதான் என்று ஐயத்துக்கு இடமின்றி, அவளது சொந்தக் கண்களாலேயே கண்டு அறியும் வரை, அவள் அவ்வப்போது, அப்படி உருப்போட்டுக் கொண்டேதான் இருந்தாள்.

## 5

சும்மாவே குமாரசாமி யாருடனும் மனம் விட்டுப் பேசிப் பழகுகிறவர் அல்ல. அவருடைய



மகனும் மருமகளும் விபத்தில் இறந்த போது, பத்து வயதுச் சிறுமியாக இருந்த சுமாலினியிடம், பேத்தி என்கிற பாசம் அவருக்கு இருந்தபோதும், அந்தச் சிறுபெண்ணுக்குச் சரியாக அவளோடு பேசிப்பழக அவரால் முடியவில்லை.

அவருக்கு, நேர் அடுத்த தலைமுறையான மகன், மருமகளிடமே தன் கம்பீரம் விட்டு எளிதாகப் பேசிப் பழகாதவர் அவர். அதற்கும் அடுத்த தலைமுறையான சின்னப் பெண்ணிடம் என்ன மாதிரிப் பழகியிருப்பார்?

பண்டிகை, பிறந்த நாள் என்றால் முழு அகலச் சரிகை போட்ட பாவாடை வாங்கிக் கொடுத்தார். 'இந்தா, உன் பாட்டியுடையது. உனக்கென்று அவள் வைத்தது. போட்டுக்கொள்' என்று நாலு பட்டைச் சங்கிலியை எடுத்து மாட்டி விட்டார். 'பத்திரம், கவனம்' என்று அவர் விரட்டிய விரட்டலில் அவளுக்கு நகையே வெறுத்துப் போயிற்று. ஓடாதே, ஆடாதே, குதிக்காதே என்று எப்போதும் கட்டுப்பாடுகளில் மிரண்டு, அவளாகவும் தாத்தாவிடமிருந்து விலகி, ஒதுங்கிப் போகலானாள்.

கருத்துப் பரிமாற்றம் என்பது அவர்கள் இருவருக்குள்ளும் ஒரு போதும் நடந்தது இல்லை. எல்லாமே, 'இதைச் செய்'', அதைச் செய்யாதே' தான்.

மறுப்பு, அவரது கோபத்தைத் தூண்டி விட்டதால், மறுப்பின்றி, பணியவும் சுமாலினி பழகிக் கொண்டாள்.

'சம்பத்குமாருக்கு உன்னை மணமுடிப்பதாக இருக்கிறேன்' என்று குமாரசாமி சொன்னதையும், சுமாலினி தன் வழக்கம்போல, விருப்பு வெறுப்பின்றிதான் ஏற்றாள்.

ஆனால், பின்னர் அவன் தன்னைப் பற்றிப் பேசப்பேச, அவன்மீது அவளுக்கு இரக்கம் ஏற்பட்டது. தன்னைப்போலவே என்பதில் ஒரு நட்பு உண்டாயிற்று. தாத்தாவின் ஏவல்களிலிருந்து காக்க வந்தவன் என்று பாசமும் உண்டாயிற்று.

எனவே, இந்தத் திருமணத்தைச் சுமாலினியும் சற்று ஆவலாகத் தான் எதிர்பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

ஆனால், நடந்த குளறுபடி, அவள் மனதைக் கொஞ்சம் நோகடித்து விட்டது. கூடவே சித்தியின் பேச்சு அவள் மனதில் குழப்பத்தையும் உண்டு பண்ணி விட்டது. சித்தி சொன்னது போல, திருமணத்திற்கான அவளது காரணங்கள் தவறானவைதானோ?

சும்மா இதையே நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது என்று சுமாலினி நினைத்தாள். ஆனால், மூன்று அறைகளைக் கொண்ட அந்த ஓட்டல் 'சூட்'டில் அவள் செய்வதற்கும் எதுவும் இல்லை.

திரையை ஒதுக்கினால் தெரிந்த காட்சிகளும், அப்படி ஒன்றும் மனதைக் கவர்வதாக இல்லை. செய்வதற்கு வேறு எதுவும் இல்லாமல், மாலதி கொண்டு வந்து, விட்டுவிட்டுப் போயிருந்த பத்திரிகை எடுத்துப் பிரித்தாள். அவளது நல்லநேரம், குறுக்கெழுத்துப் போட்டி ஒரு பெரிதாக அதில் வந்திருந்தது. பேனாவை எடுத்துக் கொண்டு, அதைச் செய்ய முற்பட்டவளுக்கு மற்றது மறந்து போயிற்று.

வழக்கம் போல நாலரை மணிக்கு எழுந்து வந்த குமாரசாமி காபி வரவழைத்தார்.



சுமாலினிக்குக் காபியுடன் வடை கொண்டுவரச் சொன்னவர், தன் காபியுடன், இரண்டு 'திருப்டின்' பிஸ்கட்டுகளை உடைத்து உண்ணலானார்.

காபி வேலை முடிந்ததும், "நாமும் நாளைக் காலையிலேயே கிளம்பி விடலாம், சுமாலினி. சாமான்களை எடுத்துத் தயாராக வைத்துவிடு. நாளைக் காலை பலகாரத்துக்கே நாம் வீடு போய்ச் சேர்ந்து விடலாம்" என்றார் பேத்தியிடம்.

வழக்கம்போல, ஒரு பணிவான சரியுடன் சுமாலினி எழுந்து, தாத்தாவின் அறைக்குள் சென்றாள். அவரது பொருட்களைப் பெட்டியில் அடுக்கி வைத்தாள். இரவுக்கும் மறுநாள் காலைக்கும் தேவையானவற்றைத் தனியே வைத்துவிட்டு அவள் பயன்படுத்திய அறைக்குச் சென்றாள்.

அங்கும் வேண்டியவை, வேண்டாதவை பிரித்து அடுக்கினாள். மாலதி கொண்டு வந்திருந்த சுரிதார்களை ஆசையுடன் பிரித்துப் பார்த்துவிட்டு மடித்து வைத்தாள்.

கையில் பணம் இருந்தால், சித்தி அவளுக்குக் கொண்டு வந்த மாதிரி, சுமாலினியும் ரம்யாவுக்கும் தம்பிகளுக்கும் ஏதாவது வாங்கி அனுப்பியிருக்கலாம்! ஆனால், பெண்கள் கையில் - அதுவும் திருமணமாகாத சின்னப் பெண்கள் கையில் பணம் கொடுக்கக் கூடாது என்று ஒரு பிடிவாதம், என்ன செய்வது?

எண்ணமிடும்போதே ஒன்று உறைத்தது. 'கிரெடிட் கார்டு' அதைப் பயன்படுத்தி வாங்கியிருக்கலாம்! 'இந்தச் சுரிதார்களுக்குப் பதிலாக' என்றால் தாத்தா கூட ஒன்றும் சொல்லியிருக்க மாட்டார்! நன்றிக்கடன் மட்டும் வைத்துக் கொள்ளக்கூடாது என்பவர் ஆயிற்றே!

அடடா! விட்டுவிட்டோமே என்று எண்ணமிடும் போதே மீண்டும் ஒன்று உறைத்தது. அந்த 'கிரெடிட் கார்டை' மீண்டும் வாங்கி கைப்பையில் வைத்த ஞாபகம் அவளுக்கு வரவில்லை!

அவசரமாக ஓடிப்போய், அலமாரியினுள் இருந்த கைப்பையைத் திறந்து பார்த்தாள். அங்கே 'கிரெடிட் கார்டு' இல்லை!

கண்ணை இருட்டிக் கொண்டு வர, அப்படியே உட்கார்ந்து விட்டாள்! எத்தனை தடவை! எத்தனை முறை தாத்தா சொன்னார்! ஒரு தடவை சொன்னால் போதாதா? நான் என்ன முட்டாளா, இத்தனை தரம் சொல்லி உருவேற்றுவதற்கு? என்று உள்ளூரப் பொருமிப் புகைந்தாளே!

கடைசியில் முட்டாள் என்று நிருபித்து விட்டாளே!

சேலை வாங்கியதும், கிரெடிட் கார்டு கொடுத்து, பில்லில் கையெழுத்திட்டதும், சட்டை தைக்க அளவு கொடுப்பதற்காக மாலதி அழைத்ததும் எல்லாம் அவள் மனதில் திரைப்படம் மாதிரி கைப்பையை எடுக்கும் போது, எதையாவது விட்டுவிட்டோமா என்று 'கவுண்டர்' மேல் ஒரு தரம் பார்வையைச் செலுத்தியது கூட அவளுக்கு நினைவு வந்தது.

அடுத்து பில் போட வந்த ஆள் தன் சாமான்களை அவளது 'கார்டு' மேலும் சேர்த்துப் பரப்பியிருக்க வேண்டும்! என்ன மடத்தனம்!

ஆனால், பிறரை நொந்து என்ன லாபம்? கிரெடிட் கார்டு கொடுத்து விட்டு மீண்டும் வாங்கி பத்திரப்படுத்த மறந்தது அவளது பிழைதானே!



தண்டனையாக, இப்போது தாத்தாவிடம் தலை குனிந்து நின்றுதான் ஆக வேண்டும்! எத்தனை தரம் சொன்னேன் என்று அவர் எத்தனை தடவை சொல்வாரோ, அத்தனையையும் கேட்டுத்தான் ஆக வேண்டும்!

இன்னமும் நேரம் ஆனால், அதற்கும் ஏதும் சொல்லக் கூடும்! மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அவரிடம் சென்று நடந்ததைத் தரையைப் பார்த்தபடி சொன்னாள்.

தலையில் அடித்துக் கொண்டார் அவர். ''எல்லாம் தலையில் எழுதி இருப்பதற்குத் தக்கபடிதான் புத்தியும் இருக்கும்! என்ன தலைவிதியோ? ஏதோ ஒன்று நல்லபடியாகச் செய்யலாம் என்றால் அதுவும் கந்தர் கோலமாகி விட்டது. எத்தனை முறை...'' என்றபடி பேத்தியின் முகத்தைப் பார்த்தவரின் பேச்சு நின்றது.

உதட்டைப் பற்களால் அழுத்தியபடி அழுகையை அடக்கிக் கொண்டு அவள் நிற்பது நன்றாகவே தெரிந்தது. வாடிய தாமரைமொட்டாய்க் குனிந்திருந்த முகத்தில் இருந்து, ஏற்கெனவே இரு சொட்டு நீர் மணிகள் உருண்டு தரையில் விழுந்து சிதறியாயிற்று!

சாதாரணமாக என்றால், ''அதற்குள் அழுகையா'' என்று சீறக்கூடியவர்தான்! ஆனால், அதற்காக வாயைத் திறக்கும்போது, மதியம் மாத்திரையை தந்து மாலதி கூறியது நினைவுக்கு வந்தது. அவளுக்கும் கவலை தானே, பாவம் என்று மனம் சற்று இளகியது.

''சரிசரி. அழாதே. அங்கே அந்தக் கடைக்குப் ஃபோன் பண்ணி, கார்டு இருக்கிறதா என்று கேள்'' என்றார்.

சமாலினி ஏற்கெனவே செய்ய நினைத்ததுதான். அதற்காக கார்டு நம்பரையும் குறித்துக் கொண்டு வந்திருந்தாள்.

அவளது 'கிரெடிட் கார்டு' அங்கே... அந்த கடையிலேதான் இருந்தது. அடுத்தடுத்து வந்த பில்களைப் போட்டுவிட்டுக் கடைசியாக பில் கவுண்டரில் உள்ள ஆள் அந்தக் கார்டைப் பார்த்தபோது சேலை வாங்கிய இரு பெண்களும் அங்கிருந்த சென்று விட்டிருந்தனர். எனவே கார்டைப் பொறுப்பாளரிடம் கொடுத்து பத்திரப்படுத்தியிருந்தான் அந்த ஆள்.

"நல்லதாயிற்று!" என்றார் குமாரசாமி. "போய் வாங்கிக் கொண்டு வந்துவிடு!" என்று தொடர்ந்து அவர் கூறவும், சமாலினி திகைத்தாள்.

"நானா தாத்தா?" த... தனியாகவா?" என்று தடுமாறினாள் அவள்.

"ஏன்? உன் சித்தி மதுரையிலிருந்து தனியாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்னைக்கு வருகிறாள்! உன்னால், ஒரு டாக்சி எடுத்துக் கொண்டு அந்த ஓட்டல் வரை போய்வர முடியாதா? வழி மறக்கிற அளவு தூரம் ஒன்றும் இல்லையே?" என்று ஒருமாதிரிக் குரலில் பெரியவர் கேட்டார்.

"இல்லை தாத்தா! வழி மறக்கவும் இல்லை!" என்ற சமாலினிக்கு ஆர்வமும் பரபரப்பும் மிகுந்தது.

"இந்த ஓட்டல் வளாகத்து டாக்சியை ஏற்பாடு செய். வெளி டாக்சி வேண்டாம்! வண்டி நம்பரை எதற்கும் குறித்து வைத்துக் கொள். வண்டி வேறு வழி சென்றால், திரும்பி வந்துவிடு. அல்லது நிறுத்தச்



சொல்லி இறங்கிவிடு..." என்று அவர் சொன்னதையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டாள்.

கைப்பையை எடுக்கச் சென்றவள், அவசரமாக மாலதி கொடுத்த சரிதார்களுள் ஒன்றை எடுத்து அணிந்தாள். துப்பட்டாவையும், பாட்டனார் சொன்ன மாதிரியாகப் பின்குத்திக் கொண்டு வந்து, அவரிடம், "சித்தி தந்த சரிதார்!" என்று காட்டினாள்.

"வரட்டுமா தாத்தா?" என்று உற்சாகத்துடன் கிளம்பியவள் சற்றுத் தயங்கி, "வந்து... தாத்தா..." என்று இழுத்தாள்.

"என்ன?" என்றார் அவர் சள்ளென.

முகம்வாட, "ஓ...ஒன்றுமில்லை, தாத்தா, சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று சமாலினி சோர்வுடன் கிளம்பவும் அவருக்குப் புரிந்து போய் விட்டது.

"சரி, சரி அங்கே வேணுமானால், உன் சித்தியைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்து விட்டுவா. திரும்பி வரும்போது உன் சித்தியைக் கூட வந்து உன்னை விட்டு விட்டுப் போகச் சொல்லு. ராத்திரி தனியே டாக்சியில் வரவேண்டாம்" என்று பெரியவர் கூறவும், சமாலினிக்குத் துள்ளிக்குதிக்கலாம் போல இருந்தது.

தொடர்ந்து, "கதவைப் பூட்டிக் கொண்டு போய் விடு. நான் மாத்திரை போட்டுக் கொண்டு படுத்து விடுவேன்" என் தூக்கம் கலைந்து விடாமல் சத்தமின்றி வந்து படுத்துக்கொள்" என்றார் அவர்.

"சரி தாத்தா, சரி தாத்தா!" என்று தலையை உருட்டிவிட்டு, ஒரு டாக்சி பிடித்துக் கொண்டு மாலதி தங்கியிருந்த ஓட்டலுக்கு சமாலினி சென்றாள்.

கிரெடிட் கார்டை வாங்கிப் பையினுள் வைத்தவள் சற்றே யோசித்தாள். சித்தி மக்களுக்கு - அவளுடைய ஒன்றுவிட்ட தம்பி தங்கைகளுக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்தால் அதற்காகத் தாத்தா ஒன்றும் சொல்லமாட்டார் என்றுதான் அவளுக்குத் தோன்றியது. பொதுவாக, பெற்றார் என்பதை விட கொடுத்தார் என்று சொல்வதே குமாரசாமிக்குப் பிடிக்கும்.

ஏன் என்று கேட்டாலும்கூட, சித்திக்குப் பிரதி உதவி என்று சொன்னால் விட்டுவிடுவார் என்று மனதில் நிச்சயப்படவும், தங்கை, தம்பிகளுக்காக அதிக விலை இல்லாமல், ஆனால் அழகானதாக என்று பரிசுப் பொருட்கள் தேடினாள்.

தம்பிகள் இருவருக்கும் வெள்ளியில் 'ஃபிலிகிரி' வேலை செய்த 'அட்ஜஸ்டபிள்' மோதிரங்கள் வாங்கினாள். ரம்யாவுக்கு இரண்டு அழகான 'ஹேர் பாண்ட்'கள் வாங்கி எல்லாவற்றையும் கைப்பையுள் வைத்தவள், ஞாபகமாக கிரெடிட் கார்டையும் வாங்கி, அதற்கென்று இருந்த உறையுள் போட்டு கைப்பையுள் வைத்தாள்.

பார்த்துக் கொண்டே இருந்த பில் போடுகிறவர் புன்னகை செய்யவும், அசடு வழிந்து விட்டு, அங்கிருந்து கிளம்பினாள்.

வரவேற்பில் சென்று கேட்டதற்கு, மாலதி இன்னும் அறைக்குத் திரும்பவில்லை என்று சொன்னார்கள்.

'லாபியில்' இருந்த 'போர்டில்', ரெடிமேடு துணிகள் ஏற்றுமதியாளர்கள் கூட்டம் ஏழரைக்குத் தொடங்கும் 'இரவு விருந்தோடு' என்ற அறிவிப்பு இருந்தது.



விரைவாகச் சாப்பிட்டு முடித்துத் திரும்பினால்கூட எட்டுமணியாகி விடும். இந்த ஒரு மணி நேரம் என்ன செய்வது என்று யோசித்துவிட்டு, காஃபி ஷாப்பினுள் போய் உட்கார்ந்திருக்கலாம் என்று சுமாலினி முடிவு செய்தாள். இங்கே, பளீரென்ற வெளிச்சத்தில், வருவோர் போவோரெல்லாம் திரும்பித் திரும்பிப் பார்க்கும்படி உட்கார்ந்திருப்பதை விட, காபி ஷாப்பின் அரை வெளிச்சத்தில் ஒதுக்குப்புறமாய் அமர்ந்து கொள்வது மேல்.

புதிதாக அணிந்திருந்த சுரிதார் வேறு அவளுக்கு ஒருமாதிரிக் கூச்சத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. துப்பட்டா தப்பாக இருக்கிறதோ, என்னவோ என்று ஒரு குழப்பம். சித்தி காட்டிக் கொடுத்த மாதிரி, உயரத்தூக்கி வாரியிருந்த கூந்தல் ஒரு பக்கம் சாய்ந்து விட்டதோ என்று இன்னொரு கலக்கம்.

எல்லாவற்றையும், காஃபி ஷாப்பின் அரையிருளில் மறைத்துவிட விரும்பியவளாய் அங்கு சென்று ஒரு தூண் ஓரமாய்க் கிடந்த மேஜை முன் அமர்ந்தாள். சாவகாசமாய் வந்த வெயிட்டரிடம், ஒரு பாட் காஃபியும் ஒரு பிளேட் பக்கோடாவும் கொண்டுவரச் சொன்னாள்.

காஃபியைக் கலந்து வைத்துக் கொண்டு பக்கோடாவைக் கொறித்த போது வயிற்றில் பசி தெரிந்தது. அன்று முழுவதுமே அவள் சரியாகச் சாப்பிடவே இல்லையே! காலையில் உள்ளூர இருந்த படபடப்பில் எதையும் உட்கொள்ளவில்லை. மதியம் மனம் இருந்த நிலையில், மாலதிக்காகக் கொறித்ததுதான். அவளும், இவள் முகத்தைப் பார்த்துவிட்டு, சாப்பிடச் சொல்லி வற்புறுத்த

வில்லை. அதனால்தான், 'சித்தி வீடு உனக்காக எப்போதும் திறந்திருக்கும்? என்றாளோ?

எப்படியோ, மாலையிலும், தாத்தா வரவழைத்த வடையும் தொண்டைக்குள் சிக்கிக் கொள்ள, அப்படியே குப்பைத் தொட்டியில் போட்டாள். அதைப் பார்த்துவிட்டுத் தாத்தா ஏதாவது தொடங்கி விடக் கூடாதே என்று, ஒரு பேப்பரைக் கிழித்துக் கசக்கி அதன்மேல் போட்டு மறைத்து வேறு வைத்தாள்.

பெருமூச்சு வந்தது அவளுக்கு. பிடிக்காததை உண்ணாமல் தூரப் போடக் கூட உரிமை இல்லாமல்... இது என்ன வாழ்க்கை?

சோர்ந்த மனம் மீண்டும் சம்பத்குமாரிடம் சென்றது.

அவன் ஏன் வரவில்லை?

திருமணம் செய்துகொள்ள விருப்பமாய்த்தானே காட்டிக் கொண்டான்? ஏன், சினிமா, ஓட்டல் போகலாம் என்றுகூட அவன் அவளைக் கேட்டது உண்டே! தாத்தாவின் வளர்ப்பு முறையும், அவளுக்கே தப்பு போல ஒரு மாதிரி இருந்ததும் தானே அப்படிப் போகாததின் காரணம்?

பின் ஏன்?

சித்தி சொன்னதை நினைக்கும்போது, வெகுவாக மட்டம் தட்டப்பட்ட உணர்வு உண்டாயிற்று.

இனி என்ன?

அரைகுறையாக என்றாலும், அவளாக நினைத்தது நடக்கத் தொடங்கவே இல்லை.

அதைக் கெடுக்க தாத்தா நினைத்ததும் , குழப்பத்தில் முடிந்தது!



ஆனாலும், இந்த சம்பத்குமார் ஏன் இப்படிச் செய்தான்?

சம்பத்குமார் ஏன் அப்படிச் செய்தான் என்பதன் காரணம், திடுமென அவனது உருவமாகவே அவள் கண்முன் தோன்றி விளக்கியது! அவன் உருவமாகவும், அவனது கையணைப்பில் ஓர் அழகிய இளம்பெண்ணின் உருவிலுமாக!

ஒரு பெண்ணை, ஓர் இளைஞனோடு, சேர்த்துப் பார்த்ததுமே தவறாக எண்ணுவது தப்புதான். ஆனால், அந்தப் பெண்ணின் இடையோடு பின்னிப் பிணைந்திருந்த அவனது கரமும், 'அவனோடு ஒட்டிக் கிடந்த அவளும் வேறு விதமான எண்ணங்களுக்கு இடமே தரவில்லை?

அறிந்தவர் தெரிந்தவர் என்று யாரையும் சம்பத்குமார் அங்கே எதிர்பார்க்கவே இல்லை போலும்.

பின்னிப் பிணைந்தாற்போலவே இருவருமாக நடந்து வந்து, தட்டி விழுந்து விடாமல் இவர்களால் சேர்ந்து எப்படி நடக்க முடிகிறது என்று சுமாலினிக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது - அங்கே கிடந்த இருவர் அமரக்கூடிய இருக்கை ஒன்றில், ஒட்டிக்கொண்டே அமர்ந்தனர்.

தூண் ஓரமாய் உட்கார்ந்திருந்த சுமாலினியின் நேர்ப் பார்வையில் தான் இருவரும் அமர்ந்திருந்தனர். தப்பு செய்த சம்பத்குமார், யாரும் தன்னை கண்டு கொள்வார்களா என்ற அச்சமே இல்லாமல், அந்தப் பெண்ணை அங்கங்கே வருடியபடி அமர்ந்திருக்க அந்த ஏசியிலும் வியர்த்து விறுவிறுத்துப் போன சுமாலினி, சம்பத்குமார் தன்னைப் பார்த்துவிடக் கூடாதே என்று,

தலையைத் தாங்குபவள் போலக் கையால் பாதி முகத்தை மறைத்துக் கொண்டாள்.

என்ன அநியாயம்! என்ன துரோகம்! என்று அவளது மனம் தனியாய்த் தவித்தது.

இப்படி ஒருத்தியோடு பழகுகிறவன், அவளை, சுமாலினியை மணக்க ஏன் சம்மதிக்க வேண்டும்? தாத்தா கேட்டபோது, 'சாரி சார்! நான் வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்!' என்று உண்மையைச் சொல்லியிருக்க வேண்டியதுதானே?

அதற்காக அவனை அடித்துவிடப் போகிறார்களா? கடத்திவிடப் போகிறார்களா? அல்லது கையைக் காலைக் கட்டி இழுத்து வந்து மணமேடையில் உட்கார்த்தி வைத்துவிடப் போகிறார்களா?

அப்படியே கட்டி இழுத்து வந்தாலும் அவன் விருப்பமின்றி, அவனை யாரால் தாலிகட்ட வைக்க முடியும்? எதற்காகத் திருமணத்தில் விருப்பம் போலக் காட்டிக் கொள்ள வேண்டும்? 'மோதிரம் போட வருகிறேன்' என்று... மோதிரத்துக்கு அளவுகூட அவனேதானே வந்து கேட்டு வாங்கிப் போனான்?

முகத்தில் ஓங்கி அறைந்தாற்போல, அவளுக்கு உண்மை புலனாயிற்று!

சுமாலினி சரியான முட்டாளேதான்! ஏற்கெனவே ஒருமுறை அனுபவப்பட்டிருந்தும், இந்த உண்மை புரிய இவ்வளவு நேரம் ஆகியிருந்தது!

சம்பத்குமாரைத் திருமணத்தில் விருப்பம்போலக் காட்டிக் கொள்ள வைத்தது, தாத்தாவுடைய ஃபவுண்டரி பேத்தியோடு அதையும் தருகிறேன் என்று அவர் சொன்ன வார்த்தை!



அய்யோ தாத்தா! ஒரு மனிதனின் உண்மை சொரூபத்தை அறிந்து கொள்ள, சொத்தில்/ ஒரு காசு கிடைக்காது என்று கூறிய நீங்களே, சொத்தைத் தருகிறேன் என்று சொல்லி, இந்த சம்பத்குமாரின் உண்மை உருவை ஒளித்து மறைக்கக் காரணமும் ஆகி அவனிடம் ஏமாந்து போனீர்களே!

ஆகப் பேத்திக்கு ஏற்ற தாத்தாதான் போலும்!

கசப்பும் வெறுப்புமாக, நெஞ்சைக் கசக்கிக் கொண்டிருந்த சுமாலினிக்குத் திடுமென மூச்சு நின்றது!

பாதி உடலை அவன் மேல் படரவிட்டிருந்த அந்தக் காதலியை அகற்றிவிட்டு, எழுந்து, அசடு வழியும் முகத்துடன், சம்பத்குமார் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்!

கடவுளே! இவனிடம் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? உள்ளூரக் கலங்கி, உடல் நடுங்கினாள் சுமாலினி.

## 6

தலையைத் தாங்குகிறவள் போல, முக்கால் முகத்தைக் கையால் மூடியிருந்த சுமாலினிக்கு, விரல்களின் இடுக்கு வழியே சம்பத்குமார் தன்புறமாக நடந்து வருவதைக் காணவும், சற்றுநேரம் ஒன்றுமே ஓடவில்லை.

கால்கள் ஒத்துழைத்திருந்தால், அங்கிருந்து எழுந்து, பின்னங்கால் பிடரியில் இடிபட எழுந்து ஓடியிருப்பாள்! மந்திர தந்திரம் ஏதேனும் பயின்று வைத்திருந்தால், அந்த இடத்தில் அப்படியே அருவமா

கிப் போயிருப்பாள்! ஆனால், இரண்டும் இல்லாத காரணத்தால் அந்த இடத்திலேயே, கால்கள் வேரோடி விட்டாற்போல அப்படியே அமர்ந்திருந்தாள்!

அத்தோடு, அவளுக்குத் தன் மீதே ஆத்திரமும் கூட!

இங்கே தப்பு செய்தவன், சம்பத்குமார், கொஞ்சிக் குலவ இன்னொருத்தியை வைத்துக் கொண்டே பணத்துக்காக அவளை மணந்து கொள்ள முன்வந்தவன்... முன்வந்தவன் என்று இறந்த காலத்தில் சொல்வது தவறு. இன்னமும் திருமணத்தை நிறுத்தும்படி அவன் வீட்டில் இருந்து தகவல் எதுவும் இல்லை. மாறாக, இரண்டொரு நாளில் மறுதேதி சொல்லவே தாத்தாவை அவன் வந்து பார்க்கப் போவதாகத்தான் தகவல் கொடுத்திருந்தார்கள். எனவே, முன்வந்திருப்பவன் என்று நிகழ்காலத்தில் தான் சொல்ல வேண்டும்.

ஒழுக்கத்தவறு, மணக்க இருக்கும் பெண்ணுக்குத் துரோகம் அவமதிப்பு என்று அத்தனை குற்றங்களையும் ஒட்டுமொத்தமாய்ச் செய்திருக்கும் சம்பத்குமார் தான் அவளைக் கண்டதும் அஞ்சி நடுங்கி ஓட வேண்டும்!

ஆனால், அவன் வெறும் ஓர் அசட்டுச் சிரிப்புடன் தைரியமாக அவளை நோக்கி வர, அவள் அஞ்சிக் கலங்குவது எவ்வளவு முட்டாள்தனம்?... முட்டாள் தனம்தான்! ஆனால் அது உண்மையும்கூட...

இப்போது சம்பத்குமார் பேசும்போது அவனிடம் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது என்று அவள் உறைந்துபோய் அமர்ந்திருக்கையில், சம்பத் குமார், அவள் அமர்ந்திருந்த மேஜையை ஒட்டியிருந்த சீனுக்கு மறுபுறம் சென்றான்.



பின்புறமாக வந்து அவளைத் தொட்டுகிட்டு தாஜாப் பண்ணப் போகிறானா? கடவுளே! சும்மாவே தொட்டுப் பழக அவள் சம்பத்குமாரை அனுமதித்தது இல்லை! இன்றைய மனநிலையிலோ அவளுக்கு வாந்தியே வந்துவிடுமே!

எழுந்து சென்று விடலாம் என்றால், ஒன்று, பில் இன்னமும் வரவில்லை! அடுத்து, கால்களை அழுத்தி ஊன்ற முயன்றாலே வெடவெடவென்று நடுங்கின!

அசையமாட்டாமல் அவள் காத்திருக்கையில், "நீ இவ்வளவு தூரத்துக்குப் பொறுப்பற்றவனாய் நடந்து கொள்வாய் என்று நான் சற்றும் நினைக்கவில்லை!" என்று ஓர் ஆண் தணித்த குரலில் சீறுவது கேட்டது.

அப்படியே பாம்பின் சீறல்தான்!

ஒரு சிறு மவுனத்துக்குப் பின், "அவர்கள் நாளைக் காலையிலேயே கிளம்பப் போவதாகத் தகவல். பில் தயார் பண்ணச் சொல்லியிருப்பதாக 'ரிசப்ஷனில்' கூறினார்கள். நீ நாளையே விழுப்புரம் சென்று, பெரியவர், பெண், இருவரிடமும் நல்லபடியாக நடந்து கொள்" என்றான் அந்தச் 'சீறல்' அதிகாரமாக.

"இப்போதைக்கு அவர்களிடம் நீ மன்னிப்புக் கேட்டு விட்டாயில்லையா?... என்னடா, கேட்டாயா, கேட்கவில்லையா?" என்று அதட்டிக் கேட்டான் சீறல்.

"நே... நேரமில்லை..."

இது சம்பத்குமாரின் குரல்!

ஆக, அவன் சமாலினியைப் பார்த்துவிட்டு, அவளை நாடி வரவில்லை! அவனை அதட்டி, அதிகாரம் பண்ணும் வேறு யாரையோ பார்த்து விட்டுத்தான்

அசடு வழிய வந்திருக்கிறான். தானுக்கு மறுபுறம் நிற்கும் அவன் யார். வேறு யார்! சம்பத்குமாருடைய சர்வாதிகாரி- அந்த பாபுவாகத்தான் இருக்க வேண்டும் என்ன அதட்டு அதட்டுகிறான்?

இவர்களுக்கெல்லாம், பிறரை அதட்டி விரட்டுவது தான் வேலை! அதில்தான் ஏகப்பட்ட ஆனந்தம்!

எங்காவது, குனிந்த தலையைக் கண்டால் போதும்! குட்டிக் குட்டி சந்தோஷப்படுவார்கள் என்று ஆத்திரத்துடன் எண்ணினாள் சமாலினி.

சம்பத்குமார் தப்பு செய்தான் என்பது உண்மை தான். ஆனால் அதைக் கண்டிக்க இவன் யார்? கோபப்படவோ, கண்டிக்கவோ உரிமை உள்ளவள் அவள் - சமாலினிதானே? இவன் என்ன இடையில் புகுவது?

சமாலினியின் மனதில், அந்த பாபுவின் மீது ஏற்கெனவே இருந்த ஆத்திரம், இன்னமும் அதிகமாகிற்று.

''என்னடா நேரமில்லை?'' என்று அவனும் ஆத்திரத்துடனேயே அதட்டினான். ''நீ எங்கே போயிருந்தாலும், தெருவுக்குத் தெரு 'பி.சி.ஓ.' இருக்கிறது. கூப்பிட்டுப் பேசமுடியாமலா போய்விடும்? பேசவேண்டும் என்கிற எண்ணம் இல்லை என்று சொல்லு. இதுமாதிரிப் பெண்களோடு சுற்றிக் கொண்டிருந்தால் அந்த நினைப்பு எல்லாம் எங்கிருந்து வரும்? முதலில் இந்தப் பழக்கத்தை விடு!''

''உனக்குப் பெண்களைப் பிடிக்காது என்பதால் எல்லோரும் சன்னியாசிகளாகி விட முடியுமா?'' என்று சம்பத்குமாரும் எரிச்சலைக் காட்டினான்.



''சன்னியாசியாக வேண்டாம். 'எய்ட்ஸ்' வந்து செத்து விடாதே என்று தான் சொல்கிறேன். ஒழுங்காகத் திருமணம் செய்துகொண்டு ஒரே பெண்ணுடன் நல்லபடியாக இரு என்றுதான் சொல்கிறேன். இதோபார், நீ அந்தப் பெண்.. அவள் பெயரென்ன? ச... சமாலினி தானே? அந்த சமாலினியைத் தான் நீ மணந்தாக வேண்டும்! ஏதோ, நல்லவேளையாக நேற்று நீ அடித்த கூத்தினால் மாற்ற முடியாத கேடு ஒன்றும் நேர்ந்து விடவில்லை! ஏதோ வேலையாக அவசரமாகப் போயிருப்பதாகச் சித்தப்பாவும், சித்தியும் பெரியவரிடம் சொல்லி சமாளித்து வைத்திருக்கிறார்கள். இதற்கு மேலும் உன் குசும்புகளை அங்கே காட்டாதே! நாளைக்கு முக்கிய வேலையாக, அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேள். இப்போதே போய்க் கேள் என்பேன்; ஆனால் இரவாகி விட்டது. அத்தோடு ஓட்டல் அறையில், அந்தப் பெண் அழுது கிழுது ஆர்ப்பாட்டம் செய்து ரசாபாசம் ஆகிவிடக் கூடாது - அல்லது, இப்போதைக்கு டெலிஃபோன் செய்து, நாளைவந்து விவரம் கூறுவதாக ஒரு வார்த்தை சொல்லி வையேன்!''

''பாபு ப்ளீஸ்! இன்று முடியாது!''

''ஏன்! அந்த ரதியை விட்டு அவ்வளவு நேரம் கூடப் பிரிய முடியாதா?'' என்றவன் குரலில் இகழ்ச்சி தெறித்தது.

ஒரு சிறு மவுனத்தின் பின், ''பாபு, வேலைவேலை என்று உனக்கு உலக சுகம் ஒன்றுமே தெரியாமல் போய்விட்டது. இவள் யார் தெரிகிறதா? ஊரிலேயே 'டாப் கால் கேர்ள்' இவள்! எவ்வளவு முயன்று, இன்று முழுவதுமாக என்று இவள் எனக்குக் கிடைத்திருக்கி

நான் தெரியுமா? இப்போது உன்னிடம் பேசிக் கொண்டு இருப்பதிலேயே எனக்கு ஐந்து நிமிடம் வீண்! சொன்னதைச் சொல்லிவிட்டு சீக்கிரமாக ஆளைவிடு!'' என்று சம்பத்குமார் அவசரப்படுத்தவும், சமாலினிக்குத் தலை சுற்றியது.

சம்பத்குமார் இப்படிப்பட்டவனா? நம்பவே முடியவில்லையே!

''என்னது? டாப் கால் கேர்ளா? அப்படியானால்... இவளது 'ரேட்'டும் அதிகமாகத்தான் இருக்கும்! பணத்துக்கு என்ன செய்தாய்?... ஓகோ! வைரமோதிரம் வாங்கவென்று நான் தந்த பணம்! இடியட்! இந்தப் பைத்தியத்திலிருந்து உனக்கு நிவர்த்தியே கிடையாதா? தண்டம்! தண்டம்! சரி, என்னமாயும் போய்த் தொலை! ஆனால், அதை இன்று பார்த்துதானா வைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பெண்ணும் அவள் தாத்தாவும் முறித்துக் கொண்டால் என்ன செய்வாய்? அவர்களிடம் இன்று வராததற்கு மன்னிப்புக் கேட்டு உறவை நல்லபடியாக வைத்துக் கொள். ஏனென்றால் திரும்பச் சொல்லுகிறேன், கேட்டுக் கொள், நீ அந்தப் பெண்ணைத்தான் மணந்தாக வேண்டும்!'' என்று மீண்டும் பாபு உத்தரவிட்டான்.

''அதுதான் அவளை மணந்து கொள்கிறேன் என்று முன்பே சொல்லிவிட்டேனே! ஆனால், அதற்காக அதுகளிடம் போய் எதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்! இப்போது, இந்த இடத்தில் சமாலினி வந்து நின்றால்கூட, அவளை என்னால் இலகுவாகச் சமாளிக்க முடியும்! சமாலினிக்கு என்னிடம் ஒரே மயக்கம்! நான் நில் என்றால் நிற்பாள்; உட்கார் எனறால் உட்காருவாள்!



இதோ, இந்த ஷீலுவை அறிமுகப்படுத்தி வைத்தால்கூட, 'எவ்வளவு அழகு!' என்று அந்த முட்டாள் வாயைப் பிளந்து கொண்டு நிற்பாள்... நான் காலால் உதைத்தாலும் உதைக்கிற என் காலுக்கு முத்தம் கொடுக்கிற ரகம் அவள்! முதுகெலும்பே இல்லாத மண்புழு! அவள் பாட்டன் அந்தக் கிழவன் அதற்கும் மேலே! இப்போதே மாப்பிள்ளை மாப்பிள்ளை என்று உருகி வழிகிறான்! இன்று நான் போகாததால், அவளைக் கைவிட்டு விடுவேனோ என்று பாட்டன், பேத்தி இரண்டு பேருமே கதி கலங்கிப் போயிருப்பார்கள்! இவர்களை இந்த நிலையிலேதான் வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உள்ளூர ஒரு பயம் இருக்கும்! நாளைக்கு என் விஷயங்களில் தலையிடாமல், கண்டும் காணாத மாதிரி ஒதுங்கிப் போவார்கள்!

''ஷ். மெல்ல பேசடா, முட்டாள்... சம்பத்... நீ என்ன குடித்திருக்கிறாயா? கண்டபடி உளறுகிறாயே!''

''இரண்டே இரண்டு 'பெக்'தான்! என்னை உளற வைக்க இது போதாது!'' என்று சிரித்தான் சம்பத்குமார். ''ஆனால், உன்னிடம் நான் என்றைக்குப் பொய் சொன்னேன், சொல்லு? என்னை முழுவதுமாக அறிந்தவன் நீ மட்டும்தானே? அதனால்தான் இப்போதும் மறைக்காமல் சொன்னேன்... இப்போது உனக்கும் புரிகிறதில்லையா, இதுகளிடம் மன்னிப்புக் கேட்கத் தேவை இல்லை என்பது?''

குடித்திருக்கிறாயா என்று பாபு கேட்டபிறகு, உன்னிப்பாகக் கவனித்த சமாலினிக்குச் சம்பத்குமாரின் குரலில் இருந்த மிக வேகமான குழறலைக் கண்டுபிடிக்க முடிந்தது. குடி! கூத்தி! இன்னும் என்ன?

"தேவை இருக்கிறது! நிச்சயமாய் இருக்கிறது. ஆனால், அதை உனக்குப் புரிய வைக்க அந்தக் கடவுள்தான் வந்தாக வேண்டும்! எப்படியோ போய்த் தொலை! ஆனால்; நீ இந்தப் பெண்ணை மணந்தே ஆகவேண்டும் என்பதை மட்டும் மறந்துவிடாதே! அதில் எதாவது சிக்கல் வந்தால் என்னிடம் சொல்லு. ஃபவுண்டரி நடத்துவதை மேற்பார்வை இடும் உரிமையை அவருக்கே என்று சொல்லி மசிய வைத்து விடலாம். ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வை! அவளுக்கு நீ தாலிகட்டியே ஆக வேண்டும். போ, உன் 'டாப் கால்கேர்ள்' நெளிக்கிறாள்! கழுதை வேறு யாரையும் தேடிக்கொண்டு ஓடிவிடப் போகிறாள். போ, ஆனால் நாளை நீ விழுப்புரத்தில் இருந்தாக வேண்டும்!"

கனமான கார்ப்பெட்டில் காலடிச்சத்தம் கேளாவிடினும் ஒருவன் போவதும், சம்பத்குமார் திரும்பித் தன் கால்கேர்ளிடம் செல்வதும் நிமிர்ந்து பாராமலே உணர முடிந்தது.

சம்பத்குமாரின் சுயரூபம் சுமாலினியை அதிர வைத்தது! அவன், அவளை மணந்தாக வேண்டுமாமே! அவன் கட்டளை இட, இவனும் சரியென்கிறானே!

கையையும், காலையும் கட்டி, யாரோ அவளை மணமேடையில் கொணர்ந்து போடுவது போலவும், சம்பத்குமார், நல்ல தாம்புக் கயிற்றை அவள் கழுத்தில் கட்டுவது போலவும் ஓர் உருவகம் தோன்றி அவளை உடல் சிலிர்க்க வைத்தது!

கடவுளே! அதைத் தடுத்தே ஆகவேண்டும் என்று எண்ணும்போதே, அவளுக்கு அது முடியுமா என்ற சந்தேகமும் பதைப்பும் சேர்ந்து தோன்றி விட்டன!



நேரே இதைப் போய் தாத்தாவிடம் சொல்லிவிட்டால் விஷயம் முடிந்தது என்று உறுதியாய் அவளால் எண்ண முடியவில்லை.

குமாரசாமியின் குணமும், தாத்தா பேத்தியின் உறவும் அவ்வளவு எளிதாக எதையும் செய்ய இடம் கொடுப்பன அல்ல.

யோசிக்க வேண்டும்! இதை எப்படிச் செய்வது என்று முழுமையாகச் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும்! முதலில்... முதலில் இந்த சம்பத்குமார் அவளைக் கண்டுவிடுமுன், இங்கிருந்து போய்விட வேண்டும்!

ஏன், பார்த்தால் என்ன? நியாயத்துக்கு, அவளே போய், அவன் சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டும். அதற்கு வேண்டிய தைரியம் அவளுக்கு இல்லாவிட்டாலும், அவனாக அவளைப் பார்த்துவிட்டு, அய்யோடா இவளுக்கு நம் சுயரூபம் தெரிந்துவிட்டதே! என்று ஒதுங்கிப் போய் விடக் கூடுமே என்று யோசித்து, தன்னைக் காட்டிக் கொள்ளலாமா என்றுகூட யோசித்தாள்.

ஆனால், ஒதுங்குவதற்குப் பதிலாக, அவனே முன்னால் வந்து, அந்த பாபுவிடம் சொன்னது போல அறிமுகப்படுத்த முற்பட்டால்?

அவன் சொன்னதுபோல வாயை பிளக்காவிட்டாலும் அவளால் இயல்பாகப் பேச முடியாது. ஒருவேளை அழுகை வந்துவிட்டால் எவ்வளவு அசிங்கமாய்ப் போய்விடும்! அழுகை ஒன்றும் அதிகத் தூரத்திலும் இல்லை! இப்போதே கண்ணைக் கரிக்கிறதே!

அவன் சொன்ன மாதிரி 'முதுகெலும்பு இல்லாத மணமுக்கள்' எல்லாம் ஒதுங்கிப் போய் ஒளிந்து கொள்வதுதான் நல்லது.

ஒருவழியாய் வெயிட்டர் பில்லைக் கொண்டு வந்துவிட, கையில் இருந்த நோட்டைத் தட்டில் போட்டு விட்டு எழுந்து வெளியே விரைந்தாள்.

வெளியேயும், அந்த பாபுவா பக்கிரியா, அவன் தன்னைப் பார்த்துவிடக் கூடாதே என்று அவளுக்கு ஒரே பயமாக இருந்தது.

இவள் இங்கிருந்து வருவதைக் கண்டு விட்டு, அதற்குச் சரியாக அவன் ஏதும் திருகுதாளம் செய்து விட்டால்? அவன்தான், சம்பத்குமாருக்கும் அவளுக்கும் திருமணம் செய்து வைத்தே தீருவது என்ற உறுதியில் இருக்கிறானே? பாவி!

துப்பட்டாவைத் தலையைச் சுற்றி வடக்கத்தியாரின் முக்காடு போல போட்டுக் கொண்டே காஃபி ஷாப்பை விட்டு வெளியே வந்தாள்.

சித்தியிடம் பேச முடிந்தால், அவள் ஏதாவது நல்ல யோசனை சொல்லக்கூடும் என்று தோன்றவே, வரவேற்புப் பகுதிக்குச் சென்று, ரெடிமேடு துணிமணி ஏற்றுமதியாளர்களின் கூட்டம் முடிந்து விட்டதா என்று விசாரித்தாள்.

டின்னர் நடப்பதாகவும் அனேகமாக மேலும் அரைமணியிலிருந்து முக்கால் மணி நேரமாவது குறைந்து ஆகக்கூடும் என்ற தகவல் கிடைத்தது.

அவ்வளவு நேரம் இங்கே உட்கார்ந்திருப்பது என்றால், அந்த சம்பத்குமாரே வந்துவிடலாம்!



பேசாமல் ஒரு டாக்சி பிடித்துக் கொண்டு, அவளும் தாத்தாவும் தங்கியிருந்த ஓட்டலுக்குப் போய்விடலாம் என்றால், மறுநாள் சம்பத்குமார் விழுப்புரத்துக்கு வந்து நிற்பான்.

அவன் முகத்தைப் பார்ப்பதற்கு முன், இப்போது என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும்! உண்மையைச் சொல்லப் போனால், அவன் முகத்தைப் பார்த்துப் பேசுவதை விட, உயிரை விட்டுவிடுவது மேல் என்று அவளுக்குத் தோன்றியது.

அந்த வினாடியில், ஓர் ஐந்து நிமிடம் தனியே உட்கார்ந்து, ஆற அமர யோசிப்பதற்கு ஓர் இடம் அவளுக்கு இல்லையே!

எதை எதையோ தாங்கி, அடக்கி வைத்த கண்ணீர், இந்த ஒரு சிறு காரணத்தில் உடைப்பெடுத்து விடும் போலத் தோன்றவும், வரவேற்புப் பகுதியை விட்டு வெளியே வந்தாள்.

யாரோ காரில் வந்து இறங்கிக் கொண்டு, சாவி யைக் கார் கதவைத் திறந்துவிட்ட ஓட்டல் 'வாலே'யிடம் கொடுத்து விட்டு உள்ளே போனார்கள். அவன் காரை எடுத்து சீராகப் 'பார்க்' செய்தான்.

சட்டென சுமாலினிக்கு ஓர் ஐடியா உதித்தது.

சித்தியின் காரும் இங்கேதானே நிற்கும்? அவ ளும், சாவியை இப்படிக் கொடுத்துவிட்டுப் போயிரு தால்?

மதியத்துக்கு மேல் நடக்க இருந்த பிறபக கூட்டத்துக்கு நேரமாகிவிட்டது என்றுதான், மால அவசரமாகக் கிளம்பி வந்தாள்.

அவசரத்தில் வந்தவளுக்கு, இடம் பார்த்துக் காரை நிறுத்த நேரம் இருந்திராது.

கூட்டம் அப்போதிருந்து தொடர்ந்து நடைபெறுவ தாகத்தான் அறிவிப்பு கூறுகிறது.

இடையிடேயே சிறு ஓய்வு நேரம் கிடைத்திருந்தா லும், மாலதி அந்த நேரத்தில், அறைக்குப் போய் வந்திருக்கக் கூடுமே தவிர, காரைப் பார்க்க வந்திருக்க முடியாது.

இப்போதைக்கு, யார் முகத்திலும் விழிக்காமல், சுமாலினி உட்கார்ந்திருக்கக் கூடிய இடம், சித்தி மாலதியின் கார்தான் 'வின் வின்' என்று தெறிக்கும், இந்தத் தலைவலிக்கு இதமாகப் பின்சீட்டில், குஷனைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்துக்கூட இருக்கலாம்!

அவளுக்கு மட்டும் கொஞ்சமேனும் அதிருஷ்டம் இருந்தால்...?

இருந்தது! திரும்பிய திசையில் எல்லாம் துன்பம் வாயைப் பிளந்து கொண்டு அவளை விழுங்க வந்தபோ தும், சிறிது நேரம், எந்தவிதக் குறுக்கீடும் இல்லாமல் படுத்துக் கிடக்கும் அளவுக்கு அவளுக்கு அதிருஷ்டம் இருக்கவே செய்தது!

முதலில் அவளுக்குப் பயம்தான். ஆனாலும் துணிவை வரவழைத்துக் கொண்டு, தொண்டையையும் சனைத்துச் சீர் செய்து கொண்டு, கார்களை எடுத்து வசதியாக ஒதுக்கி விட்டுக் கொண்டிருந்த பணியாளர்க ளில் ஒருவனை மெல்ல அணுகினாள்.

''வந்து... எங்கள் சித்தி கார், நம்பர்... '' என்று சித்தியின் கார் நம்பரைச் சொன்னாள். ''வெள்ளை நிற



சியல்லோ 'மீட்டிங்' முடிந்துவரும் வரை, காரில் இருக்கச் சொன்னார்கள். காரைத் திறந்து விடுகிறீர் களா?'' என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

கார்ச் சாவிகளில் இணைத்திருந்த அட்டைகளைப் பார்த்து ஒரு சாவியை அந்தப் பணியாள் எடுத்தான். சாவிக்குரிய காரைப் பார்வையால் அலசிக் கண்டுபிடித் தவன், திரும்பி அவளை ஒருதரம் ஏற இறங்க நோக்கினான்.

''வாங்கம்மா!'' என்று அழைத்துச் சென்று கார்க்கத வைத் திறந்து விட்டான்.

முன்புறம், அடுத்த கதவைத் திறக்க அவன் செல்லுமுன், ''நான் பின் சீட்டிலேயே இருந்து கொள்கி றேன். நீங்கள், சாவியைச் சித்தியிடமே கொடுத்து விடுங்கள்'' என்று கூறி விட்டுக் காரினுள் ஏறிக் கதவைச் சாத்திக் கொண்டாள்.

முகம் சுளித்து நோக்கித் தோளைக் குலுக்கி விட்டுத் தன் இடம் சென்று நின்றான் அந்தப் பணியாள்.

''அப்பாடி!'' என்று சுமாலினி அமர்ந்திருந்தது ஒரு சில வினாடி நேரமே! அதற்குள் அவளது பிரச்னை பூதாகாரமாக உருவெடுக்கத் தொடங்கி விட்டது.

இன்று அவளுக்கு எவ்வளவு பெரிய அவமானம் நேர்ந்துவிட்டது!

அவளுக்கு மோதிரம் அணிவித்து, அவர்களது திருமணத்தை உறுதிப்படுத்த வேண்டியவன், வராமலே இருந்து விட்டான். வரவும் இல்லை; வராததின் விளக் கம் தரவும் இல்லை. அந்த அளவு மதிப்புகூட அவளுக்கு அவன் கொடுக்கவில்லை!

அதுமட்டுமா? அவளுக்கு மோதிரம் வாங்குவதற்காக அவனுக்கு கொடுக்கப்பட்ட பணத்தை, 'ஒரு கால் கேர்'ளுக்குக் கொடுத்து, அவளோடு சரசமாடிக் கொண்டு இருக்கிறான்.

இதற்குமேல் அவனை மணந்து கொள்ளவும் அவள் தயார்தான்! சீச்சி! என்ன கேவலம்!

இதையெல்லாம் தாத்தாவிடம் விவரமாக எடுத்துச் சொல்லித் திருமணத்தை நிறுத்திவிட வேண்டும் என்று சமாலினி முதலில் இலகுவாகவே தான் நினைத்தாள்.

ஆனால், அது நடக்குமா என்று இப்போது அவளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

முதலில் குமாரசாமி அவளை முழுவதாகச் சொல்ல விடுவாரா என்பதே சந்தேகம்.

இன்றுவரையில், பேத்தி ஒன்று சொல்ல வருகிறாள் என்னவென்று முழுமையாகக் கேட்டுப் பதில் சொல்வோம் என்று அவர் செய்ததே இல்லை. அநியாயமான இழப்பும், இழப்பின் விளைவான அதிக வேலையும் காரணமாக, அதற்குரிய பொறுமையும் நேரமும் அவருக்கு இல்லாது போயிருக்கலாம்; ஆனால், இழப்பு அவளுக்கும்தானே! பத்து வயதில் பெற்றவர்களை இழந்து, அந்தப் பிஞ்சுமனம் என்ன பாடுபடும்; அதற்கு ஆதரவாக இருப்போம் என்று அவர் எண்ணியதே இல்லையே!

பலமுறை முயன்று பார்த்துவிட்டு, சமாலினியும் ஒதுங்கிப் போகத் தொடங்கி விட்டாள்.

இன்றைய அவர்களது உறவு இதைச் செய், அதைச் செய் என்று குமாரசாமி ஏவுவதிலும், சரி தாத்தா, சரி



தாத்தா என்று அவள் பணிவதிலுமாகத்தான் இருந்தது. அல்லது, அவள் செய்த ஏதாவது ஒன்றைப் பிடித்துக் கொண்டு கிண்டிக் கிளறி அவளை அவர் மட்டம் தட்டுவதாக இருக்கும். வேண்டுமென்று அவளை வருத்தும் ஆவலுடன் இப்படி அவர் நடக்கிறார் என்று சொல்ல முடியாது! நான் பெரியவன். உனக்கு ஒன்றும் தெரியாது. எல்லாம் தெரிந்த எனக்குப் பணிந்து போவது உனக்கு நன்மையே தரும் என்று உணர்த்துவது தான் அவரது நோக்கமாக இருக்கக்கூடும் என்று, வளர வளர யோசித்து சமாலினி முடிவு செய்து வைத்திருந்தாள்.

அதனாலேயே, குமாரசாமியின் அதிகாரப் போக்கை அவளால் இப்போதும் பொறுத்துப் போக முடிந்தது.

ஆனால், இன்றைய விஷயம் அப்படிப்பொறுத்துப் போகக் கூடியது அல்ல!

விவரம் சொல்லி, இந்தத் திருமணத்தையே நிறுத்தியாக வேண்டும் அளவு முக்கியமானது!

'பூபதி எண்டர்பிரைசஸ்' குடும்பத்தில் பேத்தியைக் கொடுக்கப் போவதாகவும், மார்கழி மாதம் வருவதால் அவசரமாக உறுதிபண்ணிக் கொண்டு வரப்போவதாகவும் சொல்லித்தான் அவர் பேத்தியோடு சென்னைக்குக் கிளம்பியிருந்தார்.

இப்போது, அந்தப் பெரிய இடத்துடன் பேத்திக்குத் திருமணம் இல்லை என்று அவரைச் சொல்ல வைப்பது எளிதான காரியம் அல்ல!

இந்த சம்பத்குமார், குமாரசாமி தேர்ந்தெடுத்த மணமகன்! அவளது விருப்பு வெறுப்பு பற்றிய கேள்

வியே இல்லாமல், 'சம்பத்குமாருக்கு உன்னைத் திரும ணம் செய்து கொடுக்கப் போகிறேன்!' என்று அறிவித்த வர், இப்போது அவனைப் பற்றிய குறையை வேசில் ஒத்துக்கொள்ள மாட்டார்.

முதலில் சம்பத்குமாரைப் பற்றி என்று தொடங்குவ தில் இருந்து, அவளை முழுவதுமாகச் சொல்ல விடமாட் டார்! அடுத்து 'கூடத் துணையில்லாமல் காஃபி ஷாப்பு னுள் ஏன் போனாய்' என்று அதட்டுவார். பேசாமல், 'ஷாபி'யில் காத்திருக்க வேண்டியதுதானே என்று ஒரு சொற்பொழிவு நடக்கும்! பிறகு, நீ பார்த்தது சம்பத்குமா ராயிராது! என்று கண்டுபிடிப்பார்.

அலுத்துப்போய், அவளாக விலகாவிட்டாலும், குமாரசாமிக்கு அவருக்கு முக்கிய வேலை ஏதாவது வந்துவிடும்!

இந்தப்பெண் என்ன சொல்கிறாள் என்று கேட்கக் கூட நாதியற்றுப் போனோமே என்று சுமாலினிக்கு அழுகை வந்தது.

பத்து வயதில் விட்டுப்போன பெற்றவர்களை அப்போதுதான் இழந்ததுபோல, அதற்கும் அழுதாள்.

பேத்தியின் பேச்சைக் காது கொடுத்துக் கேளாதது மட்டுமின்றி, கட்டாயப்படுத்தி சம்பத்குமாரை அவள் மணக்கும்படி தாத்தா செய்து விடுவார் என்று தோன்றி விட, சுமாலினிக்கு, அதற்காகவும் ரொம்பவும் அழுகை வந்தது.

அதைவிட - சம்பத்குமாரை மணப்பதைவிடச் சாவு மேல் என்று அவளுக்கு உறுதியாகத் தோன்றிற்று.



அவன், எவளோடெல்லாமோ சுற்றிவிட்டு வர, இவள் அவனுக்காக வீட்டில் காத்துக் கிடப்பதா? முடியவே முடியாது!

அங்கே விழுப்புரத்தில் தாத்தாவின் வீட்டில் இருந் தால் தாத்தா எப்படியாவது அவளைக் கட்டாயப்படுத்தி சம்பத்குமாருக்கு மணமுடித்து வைத்து விடுவார் என்ப தும் அவளுக்கு நிச்சயமே! 'பூபதி' குடும்பத்துப் பிள்ளையிடம், பெண்ணையும் தொழிலையும் ஒப்ப டைப்பதில் அவர் அவ்வளவு ஆர்வமாக, உறுதியாக இருந்தார்.

இந்தத் திருமணத்திலிருந்து அவள் தப்பவேண்டும் என்றால், ஒன்று அவள் சாகவேண்டும்! அல்லது, அந்த வீட்டிலிருந்து வேறு எங்காவது சென்று விடவேண்டும்.

என்னவோ, சாவதற்கு, அவளுக்கு இன்னமும் மனம் வரவில்லை!

எனவே, இந்த இக்கட்டிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி, சித்தி வீட்டுக்குச் சென்றுவிடுவது! அதுவும் உடனேயே என்ற முடிவுக்குச் சுமாலினி வந்தது அப்போதுதான்!

ஆனால், தாத்தா வீடும் இல்லாமல், சித்தி வீட்டை யும் அடையாமல் இடையில் இன்னோர் இடத்தில் தான் மாட்டிக் கொள்ள நேரும் என்பது, சுமாலினிக்கு அப்போது தெரியாது.

## 7

மறுநாள் சம்பத்குமாரைச் சந்திக்க வேண்டியி ராது! தாத்தாவுக்குப் பணிந்து, அவன் சொல்லக்கூடிய

பொய்களைக் கேட்டு சகித்துக் கொண்டிருக்கவும் தேவையில்லை என்று எண்ணியதுமே, சுமாலினியின் கண்ணீர் சட்டென நின்றது.

ஆனால், எண்ணத் தொடர நிற்கவில்லை.

ஆக, சம்பத்குமார் சொன்னது பெரும்பாலும் பொய்தான் இல்லையா? என்னவோ பாபு என்பவன் எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு விட்டான். சம்பத் மாதிரி பற்றாக்குறையாக இருக்கும்படி கொஞ்சம் கொடுத்து வேலை வாங்குகிறான் என்றானே! அதுவும் பொய்தான் போலிருக்கிறது! வைர மோதிரம் வாங்கப் பணம் கொடுத்ததாக அந்த பாபு சொன்னதைச் சம்பத் குமார் மறுக்கவில்லையே!

ஆனால் சம்பத்குமார் தன் வருங்கால மனைவிக்கு மோதிரம் வாங்க, இந்த பாபு ஏன் பணம் கொடுக்க வேண்டும்? அப்படியானால், அவனாகப் பார்த்துக் கொடுக்கும் பணம்தானா இவனுக்கு?

அப்படியானால், பாபு கொடுப்பதுதான் - கொடுத்தால்தான் இவன் கைக்குப் பணம் வருமா? அதைக் கொஞ்சம் மிகைப்படுத்தி, பற்றாக் குறையாகப் பிச்சை மாதிரிப் போடுகிறான் என்று சம்பத்குமார் சொல்லியிருப்பான் போலும்.

தாத்தாவின் ஃபவுண்டரி வருமானத்தால் இந்த நிலைமாறி, சம்பத் குமாரின் கையில் பணம் புழங்கும். அவன் அதற்காகத் தன்னை நல்லபடியாக வைத்துக் கொள்வான் என்று மனப்பால் குடித்தாளே! என்ன முட்டாள்தனம்?



எண்ணிப்பார்க்கப் பார்க்க, சுமாலினிக்கு அந்தப் பாபுவின் மேல் தான் ஆத்திரம் பெருகிக் கொண்டே போயிற்று.

சம்பத்குமார் ஒரு பெண் பித்தன்! நல்லவேளையாக, அதுசமயத்தில் அவளுக்குத் தெரிய வந்துவிட்டது. இனி இந்தத் திருமணம் நிற்கப்போவது நிச்சயம்! தாத்தா அவன் பேச்சைக் கேளாவிட்டாலும் சித்தி மூலம் அடித்துப்பேசி நிறுத்தி விடலாம். அத்தோடு, சம்பத் குமார் விஷயம் தீர்ந்து விடும்.

ஆனால் பாபு!

அவனுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால், எப்படியும் சுமாலினியை மணந்தாக வேண்டும் என்று சம்பத்குமாருக்கு கட்டளை இடுவான்?

சம்பத்குமார் எப்படிப்பட்டவன் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும்; கண்ணெதிரேயே அந்தப் பெண்ணை அவனும்தான் பார்த்திருக்கிறானே! திருமண மோதிரத்துக்கான பணத்தை வேறு அவனுக்குச் செலவழிக்கிறான்! அப்படிப்பட்ட ஒருவனை மணந்தால், சுமாலினி எவ்வளவு கஷ்டப்படக் கூடும் என்று அவன் எண்ணிப் பார்க்கவே இல்லையே!

ஒரு பெண்ணின் துன்பம் அவனுக்கு அவ்வளவு துச்சமாகவா இருக்கிறது? அவள் வாழ்வை இப்படித் தூக்கிப் போட்டுப் பந்தாட, அவன் மனம் எப்படிப்பட்ட கடினமான பாறையாக இருக்க வேண்டும்!

திருமணம் நின்று விட்டது என்று சம்பத்குமார் சொல்லும்போது அவன் முகம் எப்படி மாறுகிறது என்று பார்க்க வேண்டும் என்று சுமாலினிக்கு ஓர் ஆசை உண்டாயிற்று.

அது நிறைவேறாத ஆசையாக இருக்கலாம். ஆனால், என்றைக்காவது ஒருநாள் - நல்ல தைரியத்தை வளர்த்துக் கொண்டு, அவனிடம் சென்று, என் வாழ்வைப் பற்றித் தீர்மானிக்க நீ யாரைய்யா? என்றேனும் அவனைக் கேட்க வேண்டும்! கேட்டே ஆகவேண்டும்! என்று கொதிப்புடன், உள்ளூர ஓர் உறுதி செய்து கொண்டாள் அவள்.

ஆனால், அமைதியை விரும்புகிற பெண் என்பதால், இந்தக் கொதிப்பு, கோபம் எல்லாமே அவளை மிகவும் களைப்படையச் செய்தன.

அத்தோடு, இந்த யோசனைகள் எல்லாமே இப்போதைக்கு வீண் என்று உணர்ந்ததால், அவள் முதலில் எண்ணியதுபோலவே, பின்சீட்டில் கிடக்கும் குஷன் ஒன்றை எடுத்துத் தலைக்கு வைத்து வசதியாகப் படுத்துக் கொண்டு, மனதை பாடிவிட்டமிருந்து வேறு பக்கமாக முயன்று திருப்பினாள்.

நாளைக்கு திடுமெனப் போய் நிற்கும்போது, சித்தி வீட்டில் தனக்கு என்ன வரவேற்பு கிடைக்கப் போகிறதோ என்று அவளுக்கு உள்ளூரச் சிறு படபடப்பு உண்டாயிற்று.

சித்தி வீடு என்றால், அங்கே சித்தி மட்டுமாக இருக்கவில்லை.

சித்தியுடன் மகள் ரம்யா இருக்கிறாள்! அவளுடைய தம்பிகள், அஜய், விஜய் என்று இருவர் இருக்கிறார்கள்.

எல்லோருமே நன்றாகப் பழகுகிறவர்கள்தான்! கேலியும் கிண்டலும், சிரிப்பும், சண்டையுமாக -



ரொம்பவும் அதிசயமாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு லீவுக்கு அனுப்புவதாகச் சொல்லி அதைப் பதினைந்து நாட்களாகச் சுருக்கி குமாரசாமி அவளை மதுரைக்கு அனுப்பியபோது, அங்கே எல்லோருமே அவளிடம் நன்றாகத்தான் பழகினார்கள்.

அதிலும் ரம்யாவுக்கு வாய் ஓய்வதே அவள் தூங்கும்போதுதான் என்று எல்லோருமே கேலி செய்வார்கள்! சின்ன வயதில் ஐந்து நிமிடம் பேசக்கூடாது என்று அவளுடைய தந்தை மிரட்டியதாகவும், ஐந்தாம் நிமிடம் வந்து பார்த்தபோது, அவள் உட்கார்ந்தவாறே தூங்கிக் கொண்டிருந்ததாகவும் சொல்லிச் சிரிப்பார்கள்.

அப்படி எதையாவது பற்றி அவள் பேசிக்கொண்டேதான் இருப்பாள். பேச்சின் இடையே, அம்மா, அப்பா என்று அதிகாரமாய் அழைத்து, அவள் விஷயங்கள் கேட்பதும், சொல்வதும் அவளுடைய பெற்றோரும் பொறுமையாக அவளது பேச்சைக் கேட்டுவிட்டுப் பதில் கூறியதும், அவள் பேச்சில் இலகுவாகக் கலந்து கொண்டதும் அவளுக்கு மிகவும் பிரமிப்பாக இருந்தது!

அதிலும், ரம்யா கலீர்கலீர் என்று உரக்கச் சிரித்தும், அந்தச் சிரிப்பை வீட்டினர் முக்கியமாகப் பெற்றோர் ரசித்து மகிழ்ந்ததும் கண்ணாரக் கண்டும்கூட சுமாலினியால் நம்பமுடியாத விசித்திரம்!

இங்கே, டி.வி. நிகழ்ச்சியில் ஏதாவது பார்த்துவிட்டு சுமாலினி தன்னை மீறிச் சிரித்தால்கூடக் குமாரசாமி அவளை அதட்டி அடக்குவார். "பொம்பளை சிரிச்சாப் போச்சு. புகையிலை விரிச்சாப் போச்சு" என்று பழமொழியே இருக்கிறது. இப்படிச் சத்தம்போட்டுச் சிரிப்பில் தொடங்கி வீட்டு கவுரவத்தைக் கெடுத்துவிடாதே! என்று எச்சரிப்பார்!

இந்த மாதிரிக் குறிப்பாய்க் குத்திப்பேசும்படியாக நான் என்ன தவறு செய்தேன்! என்று திருப்பிக் கொண்டு கேட்கும் தைரியம் அவளுக்கு இருக்கவில்லை! எனவே, டிவியில் நகைச்சுவை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத்தான் நிறுத்திக் கொண்டாள்!

என்ன குடும்ப கவுரவமோ! நாளைக்கு, இந்த சம்பத்குமார் வீட்டு மருமகனான பிறகும் இப்படிக் கூத்தடித்தால் அவன் இந்தப் பழக்கத்தை விடுவதாக இல்லை என்பதும் நிச்சயம்! அவனை அதட்டி மிரட்டி அடக்குவதாகச் சொல்லப்பட்ட அந்தப் பயங்கரப் பாபுவும் இதைப் பெரியதாகக் கருதி நிறுத்தப்போவதாகவும் தெரியவில்லை! எனவே இந்த மாதிரி அவன் கண்ட பெண்களோடு அலையும்போது - தாத்தா வீட்டு கவுரவம் காற்றில் பறக்காமல், கிரீடமாய் ஜொலிக்கும் போல!

கேட்டால் அவன் ஆண்பிள்ளை, அப்படி இப்படித் தான் இருப்பான். வீட்டுப் பெண்கள் தான் பொறுமையோடு இருந்து நல்வழிப்படுத்த வேண்டும் என்று அதற்கும் ஓர் ஆலோசனை அவளுக்குத்தான் கிடைக்கக் கூடும்.

பெரியவர் என்று அவரிடம் வரும் குடும்பத் தகராறுகளை அவர் தீர்க்கும் விதம் அவள் அவ்வப்போது நேரடியாகவே கண்டதுதானே!

தான் மட்டும் ஆணாகப் பிறந்திருந்தால்... என்று! ஏங்கி சுமாலினி இன்னமும் இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டாள்!

ரம்யாவுக்கு, அவளுடைய பெற்றோர் ஒரு 'சன்னி' வாங்கிக் கொடுத்திருந்தார்கள். அதில் அவள் ஸ்டை



லாக வந்து இறங்குவதை மாலதி, மாதவன் இரண்டு பேரும் ரசித்துப் பார்ப்பது சுமாலினிக்கு நினைவு வந்தது. இப்போது, காரையே அப்படி ஓட்டி வருவாள்.

தான் சித்தி வீட்டில் பிறக்காமல் போனோமே என்று அதற்கும் அழுகை வந்தது.

சீசீ! இப்படித் தன்னிரக்கம் கொள்வது தவறு. இருக்கும் கொஞ்சநஞ்ச தைரியத்தையும் அது அழித்து விடும். அதைவிட, இப்போது என்ன செய்வது என்பதை மட்டுமாக யோசிப்பது நல்லது!

இப்போதைக்குச் சித்தியுடன் மதுரைக்குச் சென்று விடுவது சும்மாவே, எந்த நிலையிலும், சித்திவீடு இருப்பதை மறவாதே என்றவள், இப்போது அடைக்கலம் தர மறுக்கப் போவது இல்லை.

இப்போதைக்குத் தூக்கமாத்திரை போட்டுக் கொண்டு தூங்கும் தாத்தா, இடையில் எழுந்து அவளைத் தேடப்போவது இல்லை. காலை ஆறரை மணி வரை அசையமாட்டார். அதன்பின்னரும் தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஏழு மணி அளவில் தான் அறையை விட்டு வெளியே வருவார்.

அந்த நேரத்தில் அவருக்கு டெலிஃபோன் செய்து அவள் சித்தியுடன் இருப்பதைச் சொல்லி விட்டால் போதும். கோபப்படுவார் தான். ஆனால், சித்தி மூலம் சம்பத்குமாரின் விஷயம் சொல்லி, சம்பத்குமாரை மணப்பதற்குப் பயந்துதான் அவள் இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் சித்தியுடன் கிளம்பிவிட்டாள் என்பதையும் புரியவைத்தால்தான், இந்தத் திருமணம் நிற்கும் பேத்தியை ரொம்பத் திட்டவும் முடியாமல் போகும்!

அவரிடம் எப்படிச் சொல்வது என்பதைச் சித்தி
பார்த்துக் கொள்ளுவார்கள்! இப்போதே என்ன அழகா
கத் தாத்தாவை மாத்திரை விழுங்க வைத்தார்கள்!
தட்டை மாற்றி விடுவோம் என்று துடித்தவர்களைத்
தடுத்து நிறுத்தினார்கள்! அதேபோல, இந்தக் கல்யா
ணத்தை நிறுத்தவும் சித்தியால் மட்டும்தான் முடியும்...

சுமாலினிக்குத்தான், விடிவு என்பது இல்லாமல்
போகும்! திருமணம் செய்து கொண்டால், தாத்தாவின்
அதிகாரத்திலிருந்து தப்பலாம் என்று அவள் எண்ணி
யது நடக்காது. மீண்டும் தாத்தாவின் கீழ். அவரது
ஏளனத்தையும் ஏவல்களையும் சகித்துக் கொண்டு
வாழவேண்டியதுதான்.

அதுவும் தான் நினைத்த திருமணம் நின்றுவிட்டது
எனும்போது வார்த்தைகள் இன்னமும் அதிகக் கூர்மையு
டன்தான் வரும். பொறுத்துக் கொண்டுதான் தீர வேண்
டும்! அவளது தலைவிதி அப்படி!

சித்தி வீட்டிலேயே இருந்துவிட்டால் என்ன என்று
ஆசையாக ஓர் எண்ணம் வந்தது. ஆனால் யோசிக்கும்
போது அது முடியாது என்ற முடிவுக்கு அவள்
வருத்தத்துடன் வர நேர்ந்தது.

முதலில், 'விருந்தும் மருந்தும் மூன்று
நாள்' விருந்தாளியாக வந்தவளிடம் பிரியம் காட்டுவ
தும், வைகை அணைக்கட்டு, கொடைக்கானல் என்று
கூட்டிப் போவதும் இயல்பு. ஆனால் வேறு விதியின்றி
அங்கேயே தங்க வந்தவளிடம் அப்படி எத்தனை நாள்
நடந்து கொள்ள முடியும்?

சித்தப்பா மாதவனுக்கு எப்பாதுமே குமாரசாமியை
பிடிக்காது. சித்தப்பா சித்தி திருமணத்தின்போது, மூத்த



சம்பந்தி என்ற நிலையைப் பயன்படுத்தி, அந்தத்
திருமணத்தைக் கடுமையாக எதிர்த்தது மட்டுமின்றி,
சித்தப்பாவின் குடும்பத்தைப் பற்றி மிகவும் தரக்குறை
வாகப் பேசினார் என்பதை அவர் மறக்கவில்லை;
மறுப்பதாகவும் இல்லை! அவ்வப்போது பேச்சில் அது
வெளிப்படும்.

சுமாலினியை இங்கே கூட்டிப் போ, அங்கே
கூட்டிப் போ என்று மனைவி மக்களிடம் அவர்தான்
கூறுவார். கூடவே, ''அங்கே அவளுடைய விழுப்புரம்
ஜெயிலுக்குள் போய் விட்டால், பிறகு இதெல்லாம்
அவள் பார்ப்பது ஏது? இப்போதே முடிந்த வரை
எல்லா இடத்துக்கும் அழைத்துப் போங்கள்!'' என்றும்
சேர்த்துக் கொள்ளுவார்.

அவர் கூறுவது உண்மைதான் என்றாலும், விழுப்பு
ரம் வீட்டைச் சிறை என்று அவளே பலமுறை
எண்ணியது உண்டுதான் என்றபோதும், சுமாலினிக்கு
மனதுக்குக் கஷ்டமாகவே இருக்கும்.

சர்வாதிகாரிதான் என்றாலும் குமாரசாமி அவளு
டைய தாத்தா அல்லவா! காட்டிக் கொள்ளத் தெரியா
விட்டாலும் அன்றி ஏடாகூடமாகக் காட்டிக் கொண்டா
லும், பேத்தியிடம் பிரியம் உள்ளவர் என்பதும் அவள்
அறிந்ததே அல்லவா!

ரம்யாகூட, அப்போதே, 'உன்னைப் பார்த்தால்
எனக்கு பொறாமையாக இருக்கிறது. வீட்டுக்குள் வருகி
றவர்கள் எல்லோரும், என் ஃப்ரண்ட்ஸ் கூட என்னை
மறந்து விட்டு உன்னையே பார்க்கிறார்களே! நீ சீக்கிரம்
போய்விடு!'' என்று ஒரு தடவை சொல்லியிருக்கிறாள்.
பிறகு அவளே அதை மறந்துவிட்டு, அழகர்கோயில்

கணவனே அருந்த அழைத்துப் போனாள் என்றாலும், அவன் வீட்டிலேயே போய் அதிகநாள் இருப்பது எப்படியாகும் என்று சொல்ல முடியாது... இருப்பது சரியல்லதான். விருப்பை வெறுப்பாக்கி இருக்கும் ஒரு பிரியமான உறவையும் கெடுத்துக் கொள்ளக் கூடாது...

சமாலினியுடைய பெற்றோர் உயிருடன் இருந்திருந்தால் கூட, ரம்யாவைப் போலத்தான் அவளை வளர்த்திருப்பார்கள். ஆனால் உரிமையும் பிரியமுமான அந்த மாதிரி உறவுக்கு அவள் கொடுத்து வைக்கவில்லையே என்று எண்ணும்போது மீண்டும் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது...

அழுகைச் சத்தம் வெளியே கேட்டுவிடக் கூடாது என்று, இறக்கியிருந்த கண்ணாடியை மீண்டும் ஏற்றிவிட்டுக் குப்புற விழுந்து விசும்பியவள், அழுது, அழுது சோர்ந்துபோய் அப்படியே கண்ணயர்ந்தாள்.

சமாலினிக்கு மீண்டும் லேசாக விழிப்பு வந்தபோது, கார், அலுங்காமல் குலுங்காமல் மிக லேசான அசைவுடன் ஓடிக் கொண்டு இருந்தது. குளிருக்கு இதமான கதகதப்பாக எதுவோ அவள் மீது போர்த்தப்பட்டிருந்தது.

சித்திதான் பின்சீட்டில் தன்னைப் பார்த்துவிட்டு, ஊருக்கு அழைத்துப் போகிறாள், என்று தூக்கக் கலக்கத்தில் எண்ணியவள், கார் அசைவினாலேயோ என்னவோ லேசாக விலகி விட்டிருந்ததை நன்றாக இழுத்து மூடிக் கொண்டு சிறிய தாயுடன் இருப்பதையே பாதுகாப்பாக உணர்ந்தபடி, மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

நவம்பர் மாதம், இரவுப் பயணம்! பெண்ணுக்குக் குளிருமென்று போர்த்தி வேறு விட்டிருக்கிறாளே



என்பதுதான் துயிலில் அமிழுமுன், சமாலினி கடைசியாக நினைத்தது.

இரவு உணவு கொள்ளாததாலோ என்னவோ, சமாலினிக்கு மீண்டும் விழிப்பு வந்தது.

சோம்பலும், அலுப்புமாய் மெல்லக் கண்திறந்து பார்த்தபோது, காரின் பின்புறக் கண்ணாடி வழியே கருநீலமாய் வானமும், அங்கங்கே கண்சிமிட்டிய நட்சத்திரங்களும் கண்ணில் பட்டு, 'பட்டுக் கருநீலப் புடவை, பதித்த நல்வயிரம்' என்று பாரதியாரின் பாட்டை நினைவுபடுத்தின. வட்டமாய் நிலவு வேறு. இடையிடையே மேகங்கள் வந்து போகாமல் இருந்தால், அழகான வரைபடம் என்றே சொல்லிவிடலாம்... என்று எண்ணும்போது தான் கார் ஓடாமல் நிற்பது அவளுக்குப் புரிந்தது.

ஏன்? என்று யோசித்தபடி மெல்ல எழுந்து அமர்ந்து பார்வையை சுழற்றினாள்.

மாலதி இருக்கும் இடமே தெரியவில்லை.

பானெட்டைத் திறந்து வைத்து அதனுள் எதையோ செய்து கொண்டு இருந்த ஓர் ஆணின் பாண்டும், டீ ஷர்ட்டும் தென்படவும் அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது.

சித்தி டிரைவரை அமர்த்திக் கொண்டு தான் ஊர் திரும்புகிறாள் போலும்! கான்பரன்ஸ், கல்யாண வேலை என்று களைத்து விட்டாள் போலும்! இப்போது காரில் ஏதோ சிறு ரிப்பேர்! டிரைவர் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

காரக் கதவைத் திறந்து இறங்கியபடி, "டிரைவர், சித்தி எங்கே?" என்று வினவினாள் அவள்.

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு துள்ளிக் குதித்து நிமிர்ந்து "யார் நீ? இங்கே எப்படி வந்தாய்?" என்று திகைப்புடன் வினவினான் அந்த நெடிய இளைஞன்!

## 8

அவளது குரலைக் கேட்டதும், அந்த டிரைவர் துள்ளித் துடித்துக் கொண்டு திரும்பிய விதத்தில், சுமாலினிக்குச் சிரிப்பு வந்தது.

முழுக்க உறக்கம் விலகியிராத நிலையில், காரோட்டியின் துடிப்பு அவளுக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. முத்துப் பற்கள் மின்ன லேசாக முறுவலித்தபடி, "நான் யாரா! நான் இந்தக் காரின் சொந்தக்காரரின் நெருங்கிய உறவினள். அடுத்தது என்ன? எங்கிருந்து வந்தேனா? இதோ இந்தக் காரின் பின்சீட்டில் இருந்து எழுந்து வந்தேன்!" என்று இலகுவாக குரலில் விளக்கிவிட்டு, மீண்டும் கேட்டாள், "ஆனால் சித்தி எங்கே டிரைவர்? கா...ணோமே..." என்று குழப்பத்துடன் வினவியபடி மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

தூக்கம் நன்றாகவே கலைந்துவிட, சுற்றுப்புறச் சூழ்நிலை அவளுள் லேசாகக் குளிர் பரப்பியது.

இது பிரதான சாலை அல்ல. செம்மண் போடப்பட்ட ஏதோ கிளைரோடு! பெரிதும் சிறிதுமாய் அங்கங்கே மரங்கள் தவிர, கட்டிடம் என்று எதுவும் இல்லை.



இங்கே எங்கேயும் மாலதி சென்றிருக்க வழியில்லை. பின்னே அவள் எங்கே?

யார் இவன்? திருடனா? சித்தியை என்னவோ பண்ணிவிட்டுக் காரைத் திருடிப் போகிறானா? சித்தியை என்ன செய்திருப்பான்? கொ... கொலை கிலை...! கடவுளே!...

"ஏ...ய்.... சி.. சித்தி எங்கே? சொல்லு! என் சித்தி எங்கே?" கலக்கமும் கோபமுமாக அதட்டினாள்.

காரில் சாய்ந்தபடி, உதட்டோரம் ஏளன வளைவுடன் அவளை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு இருந்தவன், அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான். "நாடகம் பிரமாதம்!" என்றான் எகத்தாளமாக.

இவன் சித்தியை என்னவோ பண்ணிவிட்டான் என்பது மனதில் உறுதிப்பட்டுவிட, "ஏய்!" என்ற கூச்சலுடன் சுமாலினி அவனை நோக்கிப் பாய்ந்தாள். "சொல்லு, என் சித்தியை எங்கே. மரியாதையாய் அவர்களை எனக்குக் காட்டு!" என்று கத்தியபடி, அவன் சட்டையைப் பற்றி உலுக்கலானாள்.

அவளது இரு கைகளையும் பற்றி, எளிதாக அவளைத் தடுத்தான் அவன். "நன்றாகவே நடிக்கிறாய்! நடிப்பு உன் தொழிலா? சினிமாவா, நாடகமா?"

"ஏய் என் கையை விடு! முதலில் கையை எடு!" என்று சுமாலினி தன் கைகளை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

எளிதாகப் பற்றியிருப்பவன் போலத் தோன்றிய போதும், பிடி இரும்பாக இருக்கவே, ''ப்ளீஸ், கையை விடு!'' என்றாள் அவள் பல்லைக் கடித்துக் கொண்டு.

''விட்டுவிடுவேன். உன் போலப் பெண்களின் கையைப் பிடித்துக் கொண்டு இருப்பதில் எனக்கும் ஆசையில்லைதான். ஆனால், நீ முன்போல என்மேல் பாய்ந்துவிட்டால்? ஐந்தடி தள்ளியே நிற்பதாக உறுதி தந்தால் விட்டுவிடுகிறேன்!'' என்று நிபந்தனை விதித்தான் அவன்.

சம்மதமாய் அவள் தலையாட்டவும், அவன் தன் கைகளை விலக்கிக் கொண்டான்.

கன்றிச் சிவந்து கருகருவென்ற மணிக்கட்டுகளைத் தேய்த்துவிட்டபடி, ''ஏன்... என் சித்தி எங்கே என்று சொல்கிறாயா? ப்ளீஸ்!'' என்று, சமாலினி கவலையுடன் கேட்டாள்.

''அது உனக்கல்லவா தெரிந்திருக்க வேண்டும்!'' என்றான் அவன் கேலிக்குரலில்.

புரியாமல் விழிகள் விரிய, ''எனக்கா? எனக்கு எப்படித் தெரியும்? எனக்குத் தெரிந்தால் உன்னிடம் ஏன் கேட்கிறேன்?'' என்றாள் அவள் தவிப்புடன்.

இவன் - இந்தப் பாவி சித்தியை என்னமோ பண்ணிவிட்டான். செய்வதும் செய்துவிட்டு, அவளிடம் எலிபிடிக்கும் பூனை போல எகத்தாளம் செய்கிறான் என்று சமாலினிக்குத் தோன்றிவிட்டது. எப்படியாவது, நல்லதனமாய்ப் பேசி சித்தியை இவன் எங்கே, என்ன பண்ணி வைத்திருக்கிறான் என்று அறிந்து கொண்டால்,



அங்கே ஓடிப்போய் அவளுக்குத் தேவைப்படும் உதவி செய்யலாமே என்பது அவளுக்கு.

''மூ...ன்று கேள்விகள்!'' என்றான் அவன் கிண்டலாக. ''முதல் கேள்விக்குப் பதில், 'உனக்குத்தான்' என்பது. அடுத்ததற்கு... நீ கற்பனையில் உருவாக்கிய சித்தியை, எப்படி என்ன செய்வது என்பது உனக்குத் தானே தெரியும்!...மூன்....''

''கற்பனையா? முட்டாள்! என் சித்தி... என் சித்தி நிஜமாகவே... அப்படி நான் கற்பனை பண்ணிச் சொல்லியிருந்தால், அவள் எங்கே என்று உன்னிடம் ஏன் கேட்கப் போகிறேன்? உளறல்!'' என்றாள் சமாலினி ஆத்திரத்துடன்.

''ஏனா?'' அவன் ஏளனமாக நகைத்தான்! ''பின்னே என்னோடு ஒரு பேச்சைத் தொடங்குவது எப்படி? அதுவும் ஒன்றும் அறியாத பச்சைக் குழந்தை போலக் காட்டிக்கொண்டு! சே! பெண்களிடம் எத்தனையோ சாகசங்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் இவ்வளவு தூரத்துக்கு ஒருத்தி இறங்குவாள் என்று நான் கனவிலும் கருதியது இல்லை!'' என்றான் அவன் அருவருப்புடன்.

சமாலினிக்கும் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது! சும்மாவே ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருந்தவள் அவள். ஒரே துணையாக அவள் நினைத்தது சித்தி மாலதியை மட்டுமே! இப்போது அவளது ஒரே ஆதாரமான சித்தியைக் காணவில்லை! அவள் எங்கே என்றும் தெரியவில்லை! அதற்குமேலாக, என்னமோ இவன் மகா மனிதன் போலவும், இவனிடம்

பேசிப் பழகுவதற்காக அவள் தலைகீழாக நிற்பது போல, அவன் பேசவும் அவளுக்குக் கோபம் பொங்கியது.

''என்னது, என்னது? உன்னிடம் பேசுவதற்கு ஒரு காரணமாக என் சித்தியை உருவாக்கினேனா? அப்படியாவது உன்னுடன் பேசியாக வேண்டும் என்பதற்கு நீ என்ன மகா மன்மதக் குஞ்சா!'' என்றாள் உதாசீனமாக.

மீண்டும் தோளைக் குலுக்கினான் அவன். திரும்பிச் சென்று காரின் பானெட்டை மூடியபடி, ''வெறும் மன்மதக் குஞ்சை மயக்கி என்ன லாபம்?'' என்றான் அசட்டையான குரலில்.

அவன் பேச்சின் உள்கருத்து உணர்ந்து, அவளது ஆத்திரம் அதிகரித்தது. ''மன்மதக் குஞ்சு இல்லாவிட்டால், பெரிய மகாராஜாவா! மகாராஜாக்களின் காலம் எல்லாம் மலையேறி விட்டது; நினைவிருக்கட்டும்!'' என்று கோபமும் வெறுப்புமாக அவளும் எண்ணினாள்.

''கையில் காசு இருப்பவன் எல்லாமே இந்தக் காலத்தில் மகாராஜா தான்!''

''காசு உன் ஒருவனிடம் மட்டும்தான் இருக்கும் என்று இல்லை, தெரியுமா? என் தாத்தாவிடம் இருக்கிறது! என் சித்தியிடம் இருக்கிறது!'' என்றாள் சுமாலினி.

''சித்தி'' என்று முகம் சுளித்தான் அவன். ''அந்தக் கதையை நீ விடுவதாகவே இல்லையே? அதை நான் கொஞ்சம் கூட நம்ப மாட்டேன் என்று அறிந்தபிறகும் அதையே சாதிக்கிறாயே! என்ன பைத்தியக்காரத்தனம்!''



''பைத்தியக்காரத்தனமா?'' இந்தக் கார் என் சித்தியுடையது அல்லவென்றால், தூங்குகிறவளுக்குக் குளிரக் கூடும் என்று வேறு யார் எனக்குப் போர்த்தி விடமுடியும்? அதோ, சித்தி எனக்கு மூடிவிட்ட சால்வையை பார்!'' என்று உள்ளே கையை நீட்டிக் காட்டினாள் அவள்!

எட்டிப் பார்த்துவிட்டு, ''இது... உன் சித்தி... உனக்கு அய்யோ நம் பெண்ணுக்கு குளிருமே என்று அன்... பாய்... ஆ...தரவாய் மூடிவிட்ட சால்வையாக்கும்?!'' என்று கிண்டலடித்தவன், சட்டெனக் கைநீட்டி அந்தத் துணியை எடுத்து விரித்துக் காட்டவும் மாலினி திகைத்து நின்றாள்.

அது ஆண்கள் அணியும் ஒரு கோட்டு! விலை உயர்ந்தது போலும். அந்த வஞ்சனையற்ற நிலவொளியில், அதனுள் 'லைனிங்' கொடுத்துத் தைத்திருந்த 'ஸாடின்' துணி பளபளத்தது!

''காரில் ஏறும்போது பின்சீட்டில் வீசிவிட்டு ஏறினேன். என் தொழில் தொடர்பாக நான் சந்தித்தவர் அயல்நாட்டவர். அவரும் நானும் 'டின்னர்' சாப்பிட ஏற்பாடு செய்திருந்த ஹாலுக்குள் கோட் அணியாதவர்கள் போகக் கூடாது! அதனால், இதை அணிந்து வந்தேன்...'' என்றவன், அவள் வேகமாகத் தலையசைப்பதைக் காணவும் ''என்ன?'' என்றான் எரிச்சலோடு.

இவன் சொல்வது உண்மையாக இருக்குமோ என்று கூடச் சில வினாடி நேரம் சுமாலினிக்குத் தோன்றிவிட்டது.

அழுத அயர்வில் நன்றாகத் தூங்கி விட்டிருந்தவன் அவன். கோட்டைப் பின்சீட்டில் வீசிவிட்டு அவன் கார் எடுத்தது தெரியாமல் அவன் தொடர்ந்து உறங்கியிருக்கக் கூடும். அது சாத்தியம்தான். பாதி வழியில் லேசாக விழிப்பு வந்ததும், இந்தக் கோட்டை, சித்தி மூடிவிட்ட சால்வை என்று தூக்கக் கலக்கத்தில் எண்ணி, நன்றாக வசதியாக மூடிக்கொண்டு தூங்கியதும் நினைவு வந்தது.

இவள் சொல்வது உண்மையாக இருக்கக் கூடுமோ என்று ஒருதரம் எண்ணி விட்டவனுக்குத் தலையை உலுக்கி விட்டுக் கொண்டு தீவிரமாக யோசித்த பிறகே அது உறைத்தது.

இவள் சொல்வது பொய்யே! பொய்மேல் பொய் சொல்லி அவனைக் குழப்ப முயற்சிக்கிறாள். சித்தியை என்னவோ செய்துவிட்டு, காரே அவளது என்று கதைவிடுகிறாள்!

இந்தக் கார் இவள் சொல்லுகிறபடி, இவளதாக இருந்தால் அந்த ஓட்டல் பணியாள், மாலதியின் கார் நம்பரைச் சுமாலினி சொன்னதும் இந்தக் கார்க்கதவைத் திறந்து விடுவானா? நம்பரைச் சரிபார்த்து விட்டல்லவா அவன் கதவு திறந்துவிட்டான்! இவள் சொல்வது மெய்யாயிருந்தால் அது எப்படி சாத்தியமாகும்?

மீண்டும் தலையைப் பலமாக உலுக்கிக் கொண்டு, "பொய், நீ சொல்வது எல்லாம் பொய்! இது உன் காராய் இருந்தால் ஓட்டல் 'வாலே' எப்படி எனக்குக் கதவைத் திறந்து விடுவான்! அவன் திறந்து விடாமல் பூட்டியிருந்த காரினுள் நான் எப்படி ஏற முடியும்? சொல்லேன்!" என்றான் அவன்.



"ஆனால்... என்று தொடங்கிய அவள் சற்றே தயங்கினாள்!

இந்தப் பெண் மெய்தான் சொல்லுகிறாளா? இந்த கார் அவளது என்று கண்டுபிடித்து 'வாலே'யிடம் கார் நம்பர் சொல்லிக் கதவு திறந்துவிடச் சொல்வதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு. இந்தக் கார், அவனுடைய தாயினது. மெக்கானிக் ஷெட்டில் நின்ற காரை ஓட்டலில் கொண்டு வந்து நிறுத்திவிட்டுச் சாவியை ஓட்டல் 'வாலே'யிடம் கொடுத்துப் போகும்படி ஏற்பாடு செய்து விட்டு, நண்பர் ஒருவரின் காரில்தான் அவன் அந்த அயல்நாட்டவரைச் சந்திக்கவென்று ஓட்டலுக்குச் சென்றிருந்தான்.

அடுத்தவர் காரில் சென்றதால், அவர் வசதியை அனுசரித்துச் சென்றதில் அரைமணிநேரம் முன்பாகவே ஓட்டலை அடைந்து விட்டான்!

அவன் சந்திக்கச் சென்றது ஒரு ஜப்பான்காரரை! நேரக்கணக்கு பயங்கரமாகப் பார்க்கிறவர்கள் ஜப்பானியர். எனவே, அந்த அரைமணி நேரத்தை செலவழிக்க என்று ஓட்டலில் சுற்றியபோதுதான்... அந்த ராஸ்கல்... அந்த வடிகட்டின முட்டாளைச் சந்திக்க நேர்ந்தது! அவன்...

சரி! அது வேறு விஷயம்! ஆனால், இந்தப் பெண் இது அவனது கார் என்று கண்டுபிடித்து, அதில் ஏறி அமர வாய்ப்பு இல்லைதான்... என்று எண்ணும்போதே, கார்ச் சாவியைக் கையில் கொடுத்தபோது, அந்த 'வாலே' ஒரு மாதிரிச் சிரிப்புடன், "கொடுத்து வைத்தவர், சார் நீங்கள்!" என்று சொன்னது அவனுக்கு நினைவு வந்தது.

'வாலே' காரைச் சொல்கிறான் என்று நினைத்தால்... 'இடியட்' இந்தப் பெண்ணைத் தப்பாகக் காரில் ஏற்றி வைத்து விட்டு இளித்திருக்கிறான்! கண்ணராவி! கண்ணராவி! எவன் காரிலோ ஏற வேண்டியவளை இந்தக் காரில் ஏற்றி...!

"இதோ பாரம்மா...! ஏதோ தப்பு நடந்து விட்டது என்று நினைக்கிறேன்! இது என் கார். காரின் நம்பர்..." என்று கார் நம்பரைச் சொன்னான் அவன்.

ஆனால், "அதுதான் என் சித்தி வீட்டுக் கார் நம்பரும்!" என்று அவள் உடனடியாகக் கூறவும், அவனுக்கு எரிச்சலை அடக்க முடியவில்லை.

"இது என்ன பிடிவாதமான 'சித்தி' பேச்சு?" என்று வெடுவெடுத்தவனுக்குச் சட்டென விஷயம் புரிபட்டுப் போயிற்று.

"இங்கே வந்து பார்" என்று அவளைக் காரின் முன்பக்கம் அழைத்துச் சென்றான். "பார்! இரண்டு கார்களும் நம்பர் ஒன்றாக இருக்கலாம். ஆனால் என் கார் மாம்பலம் ரிஜிஸ்ட்ரேஷன். உன் சித்தி கார் எங்கே வாங்கி எங்கே 'ரிஜிஸ்டர்' பண்ணியது? என்று அவன் கேட்கவும், அவ்வளவு நேரம் தோன்றாத்துணையாக கூடவே இருந்து, அவளுக்குத் துணிச்சலைத் தந்து கொண்டிருந்த ஆத்திரம் மறைந்து சமாலினியுள் அச்சம் துளிர்த்தது.

விழி அகல நம்பர் பிளேட்டை வெறித்தவள், அவன் கூறுவது உண்மையே என்று உணர்ந்து, "ம்...



மதுரை... மதுரையாகத்தான் இருக்க வே... வேண்டும்!" என்று வாய் குழறினாள்!

கடவுளே! யாரோ ஒரு கட்டைத் தடியன்! அவன் காரில் ஏறிப் படுத்துத் தூங்கி... இவ்...வளவு தூரம் வந்து...

சுற்றுமுற்றும் பார்த்தவளுக்கு இது என்ன இடம் எது என்று எதுவுமே புரியவில்லை.

இப்படி யாரும் இல்லாத இடத்தில் தன்னந்தனியாக வந்து... அவளாகவே வந்து மாட்டிக்கொண்டாளே!

அவனுக்கும் அவள் ஒரு பிரச்னையாகி விட, "மதுரையில் யார் வீடு?" என்று விசாரித்தான்.

"சி...சித்தி...சித்தி வீடு!" தந்தியடிக்க முயன்ற பற்களைக் கட்டுப்படுத்தி, சிரமத்துடன் பதிலிறுத்தாள் சமாலினி!

எரிச்சலுற்று, "அது தெரிகிறது! அந்தச் சித்தியாருக்கு ஏதாவது பேர் கீர்' உண்டா, இல்லையா?" என்றான் அவன் கிண்டலாக.

"மா...லதி!"

நிலவொளியில் அவனது உதடுகள் ஏளனமாய் வளையவும், "மாலதி மாதவன்! மாதவன் சித்தப்பா பெயர்... எம் அண்ட் எம் எக்ஸ்போர்ட்ஸ் கம்பெனியின் உரிமையாளர்கள்!" என்றான் அவன் அவசரமாக.

"என்ன எக்ஸ்போர்ட்?"

"துணி... ரெடிமேட் துணிகள்!"

''ம்ம்...'' என்று அவன் சற்று யோசித்தான்.

''இப்போது நீ மதுரைக்குச் சென்று பயனில்லை! உன் சித்தி சென்னையில் தான் இருப்பார்கள் இல்லையா?''

''இல்லை மதுரைக்குப் போயிருப்பார்கள்.''

''அதெப்படி உன்னை விட்டு விட்டுப் போவார்கள்? அங்கே சென்னையில் உன்னைத் தேடிக் கொண்டு.''

''தேடமாட்டார்கள்!''

''வாட்?''

''நான் கூட வருகிறேன் என்று அவர்களுக்குத் தெரியாது!''

இரு கைகளையும் உயரத் தூக்கித் தோல்வியை ஒத்துக் கொண்டான் அவன். ''கடவுளே, முருகா! சுட்ட பழம் கதையை நான் இனிமேல் முழுமையாக நம்புவேன், அப்பா! ஞானபண்டிதா!'' என்றான் உரக்க.

சித்தி தேடமாட்டாள்! ஆனால் தாத்தா? அவரிடம் என்ன சொல்வது? முதலில் எப்படிச் சொல்வது?...

உள்ளூரக் கலங்கிக் கொண்டிருந்தவள், அவனது பேச்சிலும் செயலிலுமாகத் திகைத்து நோக்கினாள்.

''ஆமாம்! நான் ரொம்பக் கெட்டிக்காரன் என்று ரொம்பவும் கர்வம் கொண்டிருந்தேன்! அவ்வையார் போலத்தான்! ஆனால், ஒரு கார் நம்பரைக் கூட ஒழுங்காகப் பார்த்து ஏறத் தெரியாத உன்னிடம்



இப்போது தோற்றேன்! உன் பேச்சில் தலைவால் கண்டுபிடிக்க இயலாத என் தோல்வியை மனதார ஒத்துக் கொள்கிறேன்! தயவு செய்து, நீயாகவே, என் கேள்விகள் எதுவும் இல்லாதபடி, எல்லாம் சொல்கிறாயா? உன் கதை, என் காரில் ஏறிப் படுத்து உறங்கிய கதை... எல்லாம்!''

அவள் தவிப்பு அவனுக்குக் கிண்டலாக இருக்கிறதா? இந்த மாதிரி இக்கட்டுகள் எதுவும் இல்லாமல், அவள் நிம்...மதியாக இருந்திருப்பாள். அவளை மணந்து கொள்ளும்படி சம்பத்குமாரை ஏவி... அதில் தொடங்கியது தானே? ''எல்...லாம் அந்தப் பாவி பாபுவால் வந்தது!''

''என்னது?'' என்று எதிரில் நின்றவன் கேட்டபிறகு தான் எண்ணியதை உரக்கச் சொன்னது புரிந்து, ''ஒன்றுமில்லை!'' என்று முணுமுணுத்தாள் அவள்.

''யார் அந்த பாபு? உன்னை அவன் என்ன செய்தான்?''

அவ்வப்போது வந்துபோன மேகங்களின் இடையிலிருந்து வந்த சற்று மங்கிய நிலவொளியில் அவள் முகத்தைக் கூர்ந்து நோக்க முயன்றபடி அவன் கேட்டதும் அவளுக்குச் சிலீரென்றது.

இவன் ஏன் அவள் முகத்தை அப்படிப் பார்க்க முயற்சிக்கிறான்?

''இப்படி நின்று கொண்டு பேசுவதை விடக் காரில் ஏறி உள்ளே வசதியாய் உட்கார்ந்து கொண்டு உன் கதையைச் சொல்லலாமே!'' என்று இலகுவாகப் பேசிய

படி அவன் காரக் கதவைத் திறக்கவும் அவளுக்கு உள்ளே நடுங்கியது.

"என் கதை உனக்கு எதற்கு?" அவளைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டு, அவளைக் கடத்திக் கொண்டு போய் வைத்துக்கொண்டு தாத்தாவிடம் பணம் கேட்பானோ? மற்றபடி அவள் கதை அவனுக்கு எதற்கு?

"உனக்கா! நல்ல மரியாதை தெரிந்தவளாகத்தான் இருக்கிறாய்! சரி, ஏறு!" என்று காரில் அவன் ஏறி ஓட்டுமிடத்தில் அமர்ந்து கொண்டு, பக்கக் கதவைத் திறந்து விட்டான்.

தன்னையறியாமல் இரண்டு எட்டு பின்னடைந்தாள் சுமாலினி.

இவன் என்னவோ திட்டமிட்டு விட்டான் என்று அவளுக்குத் தோன்றியது. காரில் ஏற்றி, அவளை எங்காவது கொண்டுபோய் மறைத்து வைத்து... தாத்தாவிடம் பணம் பிடுங்குவதோடு மட்டுமாக நிறுத்திக் கொள்வானா... அல்லது..."

கை கால்கள் வெடவெடவென்று ஓட, "ஏற மாட்டேன்" என்று கிரீச்சிட்டாள் அவள்.

"பின்னே?" என்றான் அவன் ஆச்சரியத்துடன். "இங்கேயே தனியாக நிற்கப் போகிறாயா?"

"நிற்பேன்! உன்னோடு வருவதற்கு அது மேல்"

"உன்னிஷ்டம்!" என்றான் அவன் விட்டேற்றியாக. "இந்த அருமையான ஞானோதயம் சென்னையி



லேயே உனக்கு வந்திருந்தால் எவ்வளவோ நன்றாய் இருந்திருக்கும்! இதோபார், உனக்கு எப்படியோ எனக்குத் தெரியாது! ஆனால் நான் போகவேண்டும். இப்போது காரில் ஏறப்போகிறாயா, இல்லையா?" என்று சற்று அதட்டலாகக் கேட்டான்.

"மாட்டேன், மாட்டேன், மாட்டேன்!" என்று உரத்த குரலில் கூறித் தன்னையும் திடபடுத்திக் கொள்ள சுமாலினி முயன்றாள்!

"ஒகே! உன் விருப்பம் போலச் செய். ஆனால்... கவனி, இது பிரதான சாலையல்ல. யாரோ 'ரியல் எஸ்டேட்' காரர்கள், காலனி அமைக்கப்போட்ட கிளை ரோடு. மெயின் ரோடில் நிறுத்திக் காரில் வேலை செய்தால், எவனாவது இடித்துத் தள்ளிவிட்டுப் போய் விடுவான் என்பதால் இங்கே கொணர்ந்து காரைச் சரிசெய்தேன். இதில் இப்படியே நேராகப் போனால் மெயின் ரோடுதான். அங்கே ஏதாவது பஸ்ஸை நிறுத்தி ஏறி, ஒழுங்காக உன் ஊர் போய்ச் சேர். கார், வான், லாரி என்று எதையும் நிறுத்திவிடாதே! எல்லாரும் ஒரே மாதிரி நல்லவர்களாக இருக்க மாட்டார்கள். அப்புறம் உன்னை ரொம்பவும் அலங்கோலமாகப் பார்க்கும்படி ஆகிவிடக்கூடும்...! ஒகேம்மா! பை!" என்று அவன் காரைக் கிளப்பினான்.

புதிதாக போடப்பட்ட செம்மண் ரோடு அதனால் தானோ, அல்லது அவள் கூப்பிடுவாள் என்றோ, அவன் மெதுவாகவே தான் சென்றான்!

காரின் பின்புறச் சிவப்பு விளக்குகளை வெறித்த வண்ணம் சுமாலினி அசையாமல் நின்றாள்.

செம்மண் ரோடின் பக்கவாட்டு மரங்களிலிருந்து உதிர்ந்து கிடந்த சருகுகளில் சலசலப்பு கேட்டது. பா...பாம்பாக இருக்குமோ?

மிரண்ட விழிகளைச் சுழற்றியபோது ஆங்காங்கே நின்ற மரங்கள் எல்லாம் கரும்பூதங்களாகக் காட்சி அளித்தன. சின்ன மரங்கள், சின்ன பூதங்கள்! பெரிய மரங்கள், பெரிய பூதங்கள்!

சை! பேய், பிசாசு, பூதம் என்றெல்லாம் ஒன்றும் கிடையாது என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்ட போது, நாயோ நரியோ ஊளையிட்ட ஒலி கேட்டது.

பூதம் பொய்யாக இருக்கலாம். நாயும் நரியும் நிஜமானவைதானே? வெறிநாய் ஏதாவது வந்து அவளைக் கடித்துவிட்டால் இந்தப் பகுதியில் ஓநாய் இருக்குமா? குத்துச் செடிகளும், புதர்களுமாகக் கொஞ்சம் காடுபோலவும்தானே இருக்கிறது? நரிகூட நாலைந்தாய் சேர்ந்து, வந்தால் அவளால் என்ன செய்ய முடியும்? செந்நாய்கள் கூட்டமாக வந்து பிடுங்கினால், எலும்புகூட மிஞ்சாது என்று படித்திருக்கிறாளே!

மீண்டும் சருகுகளில் சலசலப்பு கேட்டது பாம்பும் 'செட்' சேர்த்துக் கொண்டு வந்து கடிக்குமா? இது பாம்பா, செந்நாயா?

ஒன்றுமிராது! ஒன்றுமிராது... என்று அவள் தன்னைத் திடப்படுத்திக் கொள்ள வெகுவாக முயன்று கொண்டிருந்தபோது, அருகிருந்த மரங்களுள் ஒன்றிலிருந்து, ஆந்தையோ, கோட்டானோ, கர்ண கடூரமாய்க் கத்தவும் சுமாலினி மிரண்டுபோய் ஓட்டம் பிடித்தாள்.



"ஏய்...ஏ... மிஸ்டர்..."

அவளது குரல் எட்டாத தூரம் போய்விட்டானோ, கேட்டும் நிற்கத்தான் அவனுக்கு மனமில்லையோ! மெயின் ரோட்டில் திரும்பிய கார், நில்லாமல் சென்று கொண்டே இருந்தது.

கொத்தாக வந்த மேகக் கூட்டத்தினுள் நிலவும் மறைந்துவிட, சூழ்ந்து வந்த காரிருளில், தூர மறைந்து கொண்டிருந்த காரின் பின்புறச் சிவப்பு விளக்குகளை வெறித்தபடி, தன்னந்தனியே பிரமை பிடித்தவள் போல சுமாலினி நின்றாள்.

## 9

சுமாலினி அச்சத்தில் உறைந்து நின்ற நேரம் அதிகபட்சமாய்ப் பத்து நிமிடங்களாய் இருக்கலாம். அவளுக்குப் பத்து யுகங்களாகத் தோன்றிய பத்து நிமிடங்கள்!

இந்தப் பத்து நிடங்களில், பெரும் சாலையில் போக்குவரத்து நின்று போய் விட்டிருந்தது என்று சொல்வதற்கில்லை! இருக்கத்தான் செய்தது. அவள் காண, ஒரு கார், இரண்டு வேன்கள், இரண்டு லாரிகள், ஒரு பஸ் என்று ஓரிரண்டு நிமிடங்களுக்கு ஒன்றாகச் சென்று கொண்டுதான் இருந்தன.

ஆனால், அந்தக் கார்க்காரன் செல்லுமுன் மிரட்டலாகச் சொல்லி விட்டுப் போன வார்த்தைகள், அவளை

அசைய விடாமல், ஒரு குரல் எழுப்ப விடாமல் தடைகட்டிப் போட்டு விட்டிருந்தன!

உதவி கேட்டுப் போய், ஏதேனும் விபரீதத்தில் மாட்டிக் கொண்டு விட்டால்?

அந்த இடத்தில் நிற்கவும் பயந்து, அங்கிருந்து நகரவும் அஞ்சி, உடல் நடுங்க அவள் நின்றபோது, பின்புறம் திரும்பிப் பார்த்தவளுக்கு இதயம் தொண்டையுள் வந்து துடிக்கத் தொடங்கியது!

ஒரு வெள்ளைப் பூதம் ஒன்று ஓசைப்படாமல் அவளை நெருங்கிக் கொண்டு இருந்தது அவ்வளவு தான்! பின்னங்கால் பிடரியில் இடிபட அவள் ஓடத் தொடங்கி விட்டாள்!

விநாடிக்குள் விட்டுப் பறக்க முயன்ற அறிவுபூர்வமான சிந்தனையையும் சுயகட்டுப்பாட்டையும் அரும்பாடுபட்டு இழுத்துப் பிடிக்க முயன்றவாறே ஓடியவள், ஓடியவாறே, தலையைப் பின்புறம் திருப்பிப் பார்த்தாள்.

அவளைப் பின் தொடர்ந்து வந்தது பூதமல்ல, வெள்ளை நிறக் கார் ஒன்று.

இந்த நேரத்தில், இப்படிப்பட்ட ஓர் இடத்தில் அவளை ஒரு கார் தொடர்வதும் ஒன்றும் சரியில்லை தானே?

ஆனால் இப்படி எவ்வளவு தூரம் ஓடுவது? எங்கே ஓடுவது?

கலங்கியவாறே அவள் ஓடிக்கொண்டு இருந்த போது, சட்டென வேகம் எடுத்த கார், அவளைச் சுற்றிக் கொண்டு அவள் முன்னே வந்து நின்றது.



வெள்ளை நிற சியல்லோ கார்!

காரிலிருந்து இறங்கியவனும் அவன்தான்! அவனே தான்!

என்ன கொழுப்பு அவனுக்கு?! திமிர்! அகம்பாவம்! 'எக்கேடும் கெட்டுப் போ' என்று விட்டு விட்டுப் போகிற மாதிரிப் பாவலா காட்டி விட்டுப் போனவன் ஓசைப்படாமல் பின்னோடேயே வந்திருக்கிறான்!...

ஆனால், இது எப்படி சாத்தியம்? முன்னே சென்றவன், எப்படி பின்பக்கமிருந்து வந்தான்?

ஏதோ சூழ்ச்சி!

இது ஒன்றும் அவன் அறியாத இடமல்ல! கிளை வழி, குறுக்கு வழி என்று அவன் நன்றாக அறிந்த இடம்! ஒருவேளை, இந்த இடமே அவனதுதானோ?

அவனுக்கு ஒரு குட்டு வைக்கும் வேகத்துடன், ''ஏதேனும் மாயாஜாலம், மந்திர தந்திரம் படித்திருக்கிறாயா? பெருஞ்சாலையோடு அந்தப் பக்கமாய்ப் போனவன், மீண்டும் பின்புறமிருந்து வருகிறாயே!'' என்றாள் நக்கல் குரலில்.

இதற்குவிளக்கம் கூறும்போது, அவன் தன் பொய்யை ஒத்துக் கொண்டு தானே ஆகவேண்டும்?

''இதற்கு மாய மந்திரம் எதற்கு? சாதாரணப் பொது அறிவு போதுமே!... உனக்கும் அது இருந்திருந்தால் அப்போதே ஊகித்திருப்பாய்!'' என்றவன், அவள் வெட்டுவதுபோல முறைக்கவும், வந்த வழிப்பக்கமாய்க் கையை நீட்டிக் காட்டினான். ''பார், ரியல் எஸ்டேட்டில்

மனைகள் பிரிக்கும் போது, மனைகளுக்கு இடையேயும், அடுத்துள்ள பொதுச் சாலையை அடையும்படியாகவும் உள்ளே ரோடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது சட்டம். இது இந்த நெடுஞ்சாலையை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும் குடியிருப்புப் பகுதி. இங்கே ஒரு வழி என்றால், இரண்டு மூன்று செட் மனைகள் தாண்டி இன்னோர் இணைவழி இருந்தே தீரும். அதன் வழியே மனைப்பகுதியுள் புகுந்து மீண்டும் வரலாம் என்றுதான் போனேன். அதன் படியே வந்தேன்.'' என்று இழுத்தவன் லேசாகத் தோளைக் குலுக்கினான்.

இவ்வளவு ஊகிக்கத் தெரியவில்லையே முட்டாளே, என்கிறானாக்கும்! ஆனால், இதுபோலக் குடியிருப்பும், மனைப் பகுதியும், அதற்குரிய விதிகளும் பற்றி அவளுக்கு என்ன தெரியும்? என்ன தெரிய முடியும்?

தெரியாது என்று எளிமையாக ஒத்துக் கொள்வதை விடுத்து, ''அப்படித் திரும்பி வருகிற எண்ணம் இருக்கும்போது, முதலில் ஏன் போகவேண்டும்?'' என்று மிடுக்காகவே அவள் கேட்டாள்.

அவன் மீண்டும் தோளைக் குலுக்கினான். ''என்ன செய்வது? நான் என்னவோ பத்துத் தலை ராவணன் போலவும், உன்னைச் சிறைப் பிடிப்பதற்காகப் புஷ்பக விமானத்தைக் கொணர்ந்து அதில் ஏறச் சொல்வது போலவும் ஏகப்பட்ட பிகு செய்தாயே! கையைப் பிடித்து இழுத்தா, காரில் ஏற்ற முடியும்? ஒரு பத்து நிமிடங்கள் இங்கே தனியே நின்றால், தானாக ஏறுவாய் என்றுதான்!'' என்றான் அவன் இலகுவாகவே.



ஆனால், ''அப்படியாவது என்னை ஏன் நீங்கள் கூட்டிப் போக வேண்டும்?'' என்று சுமாலினி மீண்டும் முடுக்குடனேயே கேட்கவும் அவன் பொறுமை இழந்தான். ''இதோபார், நீ பழகிய வட்டாரத்தில் ஆண்கள், பெண்களை எப்படி நடத்துவார்கள் என்று எனக்குத் தெரியாது! ஆனால், நீ எக்கேடுகெட்டு, எப்படி நாசமானாலும் அக்கறையில்லை'' என்று ஒரு பெண்ணை இப்படி நடுவாந்திரத்தில் அனாதரவாய் விட்டுப்போவது என்னால் முடியாத காரியம். நீ என்னவோ.. மதுரைக்குப் போகவேண்டும் என்றாய் - அதாவது அங்கே போவதாக இருந்ததாகச் சொன்னாய். திருச்சியை அடுத்து பத்து கிலோமீட்டர் தாண்டி என் இருப்பிடம். வழியில், உன்னைத் திருச்சி பஸ் ஸ்டாண்டில், அல்லது ரயில்வே ஸ்டேஷனில் இறக்கி விட்டு விட்டுப் போகலாம் என்று நினைத்துதான் கூப்பிடுகிறேன். இப்போதாவது ஏறுகிறாயா?... அல்லது, 'ஏதோ, நம்மால் ஆனவரை சொன்னோம்; கேளாமல், பிடிவாதமாய் நாசமாகித்தான் போவேன் என்று ஒருத்தி நின்றால் என்ன செய்ய முடியும்' என்று நான் பேசாமல் என் வழியே போய் விடட்டுமா? ஏனென்றால், நீ மிஞ்சமிஞ்ச இங்கேயே நின்று உன்னிடம் கெஞ்சிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை! நாளைக்கு எனக்குத் திருச்சியில் முக்கியமான வேலை இருக்கிறது?'' என்றவன் கையைத் திருப்பி மணி பார்த்தான்.

''நாளை என்பதை விட இன்று என்பதுதான் சரி. மணி இரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. இப்போது கிளம்பினாலே, ஐந்தரை ம சுமாருக்குத் தான்

திருச்சியை அடைய முடியும். அங்கேபோய், ஓர் இரண்டு மூன்று மணி நேரமாவது தூங்கி எழுந்தால் தான் என் வேலையை ஒழுங்காகச் செய்ய முடியும்! என்ன, வருகிறாயா? இல்லையா?'' என்று கறாரக் குரலில் வினவினான்.

அதற்கு மேல் சுமாலினி வாதம் பண்ணிக் கொண்டு நிற்கவில்லை. இவன் யாரோ என்னவோ என்ற உதைப்பு இன்னமும் இருந்தபோதும், இந்த இடத்தில் தனியே நிற்பது இனி இயலாது என்பது அவளுக்கு நன்றாகவே புரிபட்டுப் போயிருந்தது. இந்த முறை கிளம்பிச் சென்றால் அவன் மீண்டும் திரும்பி வரமாட்டான் என்றும் தோன்றிவிடவே, மேற்கொண்டு எந்த மறுப்புமின்றி அவனோடு சென்று காரில் ஏறினாள்.

கார் கிளம்பியதும் அவளுக்கு ஒன்று தோன்றியது. யாரோ அறிமுகமற்ற பெண் அவள். சொல்லப்போனால், அவளது தவறால், அவன் தலையில் அநியாயமாய் சுமத்தப்பட்ட பளு! ஆனாலும், கிடைத்த இடத்தில் தூக்கி எறிந்து விடாமல், பாதுகாப்பாய் அழைத்துப் போகிறான். எந்தவிதக் கேடுமின்றி, அவள் செல்லுமிடத்துக்குப் போக வழிவகையும் செய்கிறான்!

ஆனால், அந்த பாபு, அவளுடைய ஒன்றுவிட்ட சகோதரன் ஒரு வடிகட்டின அயோக்கியன் என்று தெரிந்த பிறகும், அவனை அவள் தலையில் கட்டி அவள் வாழ்வை நாசமாக்க, அவன் ஒரு கணமும் தயங்க வில்லையே! தயக்கமென்ன? அதில் பிடிவாதமாக வேறு இருந்தானே! அவன் எப்பேர்ப்பட்ட ராட்சசனாக இருக்க வேண்டும்!



ஒத்திட்டுப் பார்த்தால், அவன் முன் இவன் தேவன் என்றே சொல்ல வேண்டும்!

உண்மை புரியாமல், இவனைக் கண்டபடி திட்டி விட்டாளே!

லேசாகத் தலையைத் திருப்பி, ஓரக்கண்ணால் அவன் முகத்தை நோட்டமிட்டாள்.

வெளியே இருந்தபோது, நிலவெளியில் ஓரளவு நன்றாகவே அவன் முகத்தைப் பார்க்க முடிந்தது! ஆனால் காரினுள், வெறும் வரிவடிவம் தெரிந்ததே தவிர, அவன் கோபமாய் இருக்கிறானா, இல்லையா என்று ஒன்றும் சொல்ல முடியவில்லை.

கார் சீராகச் சென்றது. வேகமாகச் சென்றபோதும், பயணம் சுகமாகவே இருந்தது.

இவன் தன் கோப தாபங்களைக் காரோட்டுவதில் காட்டுவதில்லை போலும்!

பேச வாயெடுத்துவிட்டு, உள்ளூரத் தயக்கத்துடன் சுமாலினி மீண்டும் சாலைப்புறம் பார்வையைத் திருப்பினாள்.

''பசித்தால், க்ளவ் கம்பார்ட்மென்டில் பிஸ்கட் இருக்கும். தாகம் என்றால், தண்ணீர் பாட்டில் மூலையில் இருக்கிறது.'' என்றது அவனது குரல்.

''இல்லை.. வேண்டாம்..'' என்று சொல்லும் போதே வயிறு காலியாக இருப்பதைச் சுமாலினி உணர்ந்தாள். மதியம் சித்தியோடு சேர்ந்து சாப்பிட்டது அதுவும் கொறிப்புதான்! அதன்பின் மாலைக் காஃபி!

பசிதான்! ஆனால் இரண்டு பிஸ்கட்டில் அடங்குகிற பசியில்லை. அரைகுறை உணவு பசியை அதிகமாகக் கிளறிவிட்டுவிடும்! முக்கியமாக, அவனது பிஸ்கட்டை எடுத்து எப்படித் தின்பது.

அவள் தலையைத் திருப்பியதைக் கவனித்து விட்டுச் சொல்கிறான் என்பதும் புரிந்தது. அவனது பார்வை சாலையில் பதிந்திருந்தபோதும், பார்வை வட்டத்தின் ஓரத்தில் அவளது அசைவும் பட்டிருக்கும் போலும்!

"நான் திரும்பிப் பார்த்தது வேறு காரணமாய்!" என்றவள் அவனது பழைய பேச்சு நினைவு வர, மீண்டும் அவன் தன்னைத் தவறாக எண்ணி விடக் கூடாதே என்று அவசரமாக, "வந்து.. நான் தப்பாக நினைத்துக் கண்டபடி பேசிவிட்டேன். சாரி!" என்று மன்னிப்புக் கேட்டாள்.

"பரவாயில்லை விடு." என்றான் அவன். சற்று இதமான குரலில் "உன் சித்திக்குப் பதிலாக, என்னைப் பார்க்க நேர்ந்த போது உனக்கு எப்படி இருந்திருக்கும் என்று என்னால் ஊகிக்க முடிகிறது! ஆனால்.. நீ இன்னும் கொஞ்சம் கவனத்தோடு செயல்பட்டிருந்தால்.. போகட்டும்! நடந்தது. நடந்து முடிந்தாகிவிட்டது! இனி நடக்க வேண்டியதைப் பார். அதைப் பற்றி யோசி." என்று முடித்தான் அவன்.

சற்று நேரம் காரில் அமைதி நிலவியது.

சுமாலினிக்குப் பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. அவன் சொன்ன போதே அந்த பிஸ்கட்டை எடுத்துத் தின்றிருக்கலாமோ என்று தோன்றியது.



ஆனால், அப்போது ஜம்பமாக மறுத்துவிட்டு, இப்போது எப்படிக் கேட்பது?

சற்றுத் தொலைவில் ஒளிவிளக்குகள் தெரிந்தன. 'மோட்டல்' என்று நியான் விளக்கு அறிவித்தது. உணவு பற்றிக் கேட்கலாமா என்று அவள் யோசித்து முடிக்கு முன், கார் மின்னலென அந்த 'மோட்டலை'த் தாண்டிச் சென்றது.

பசி இன்னமும் அதிகமாகிவிட, கைகளை மடக்கி, வயிற்றை அழுத்திய வண்ணம் சற்றே குறுகி அமர்ந்தாள் அவள்.

கார் வேகம் குறைந்து, அரைவட்டமடித்து வந்த வழியே திரும்பியது. "எ.. என்ன?" என்று அவள் கேட்கும்போதே, கார் ஒதுங்கி, 'மோட்ட'லினுள் நுழைந்தது.

"பசித்தால் சொல்வதற்கென்ன?" என்று அவன் சிறு எரிச்சலோடு கடிந்து கொண்ட போது பதிலாக அவளால் ஒன்றும் சொல்ல முடியாமல் போனாலும் 'அப்பாடா, இனி இந்தப் பசி தீரும்!' என்று நிம்மதியாகவே இருந்தது.

"இங்கே பொதுவாகவே உணவு பரவாயில்லாமல் இருக்கும்தான். ஆனால் இந்த நேரத்தில் அப்படி ஒன்றும் பிரமாதமாயிராது." என்று எச்சரித்தபடியே அவளை அவன் மோட்டலினுள் அழைத்துச் சென்றான்.

'கவுண்டரில் இரண்டு நிமிடம் பேசி விட்டு வந்தவன், "அசைவம் சாப்பிடுவாயில்லையா?" என்று கேட்டு அறிந்து கொண்டு, உணவுக்கு 'ஆர்டர்' கொடுத்தான்.

அவன் கொண்டுவரச் சொன்னதையெல்லாம் கேட்கையில், சுமாலினிக்கு பசியையும் மீறி வயிற்றினுள் தடதடத்தது.

அவன் அறியாமல் கைப்பையைத் திறந்து பார்த்தவள், மேலும் சோர்ந்து போனாள்.

இருந்த ஒரு நூறுரூபாய் நோட்டையும், சென்னையில் காஃபி ஷாப்பில், மீதி வாங்கும் அளவு நேரம் நிற்கப் பயந்து தட்டில் வைத்து விட்டு வந்தாளே.

குமாரசாமிக்கு பெண்கள் கையில் பணம் புழங்குவது பிடிக்காது! கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதிக்கிற ஆணுக்குத்தான் பணத்தின் அருமை தெரியும்; எதெதில் எப்படி எப்படிச் செலவு செய்தால், அந்தப் பணத்தின் உரிய மதிப்பு கிடைக்கும் என்பதும் அவனுக்குத்தான் தெரியும். சும்மா வீட்டில் உட்கார்ந்து, ஊர்க்கதை பேசிக் கொண்டிருக்கிற பெண்களிடம் பணத்தைக் கொடுத்தால், "தாம்தூம்" என்று வீண் செலவு செய்துவிடுவார்கள்" என்று வீட்டுக்கு வந்து போகிறவர்களிடமெல்லாம் பெரிதாகப் பிரசங்கம் செய்வார்.

திருமணம் போல ஏதாவது நல்ல காரியங்களுக்கு அழைக்க வந்தவர்களாகட்டும்; ஒரு மரியாதைக்குப் பார்க்க வந்தவர்களாகட்டும், இதுபோல ஏதாவது ரொம்பவும் பெரியதனமாய்ச் சொல்லிக் கொண்டே இருப்பார். வயதானவர், வசதியுள்ளவர் என்பதால் வந்தவர்கள் முகம் மாறாமல் காத்தபடி கஷ்டப்பட்டு அமர்ந்திருப்பதைக் கண்டு சுமாலினி எத்தனையோ தடவை மனம் கூசியிருக்கிறாள்!



அதே கொள்கையின்படி, தன் பேத்தியிடமும் அவர் பணம் கொடுத்துச் செலவு செய்ய விடுவது கிடையாது. ஏதோ ஓர் அவசரத்துக்கு என்று அவளது கைப்பையில் ஒரு நூறு ரூபாய் நோட்டும், பத்து, ஐந்து என்று ஓர் இருபத்தைந்து ரூபாயும் இருக்கும்.

அதில் ஒருதரம், கல்லூரியில் குளிர்பானம் வாங்கிக் குடித்தாள் என்று நிற்க வைத்து ஒருமணி நேரம் 'லெக்சர்' அடித்தார். வெறும் 'எசன்ஸ்' ஊற்றிய கலர்த்தண்ணீராம். அதில் பணத்தைக் கரைக்க கஷ்டப்பட்டு அவர் சம்பாதித்த பணத்தைக் கரைக்க அவளுக்கு எப்படி மனம் வந்தது? அவர் என்ன, ஃபவுண்டரிக்குப் போகும், வரும் வழியில் அங்கங்கே நிற்கும் மரம் செடி கொடிகளிலிருந்தா அந்தப் பணத்தைப் பறித்து வருகிறார்? கஷ்டப்பட்டு சம்பாதிப்பது... இத்யாதி இத்யாதி..

அவருக்குச் சாதகமாகவும் ஒன்று உண்டுதான். அவர் கஞ்சன் அல்ல! தீபாவளிக்குப் பத்தாயிரம் ரூபாய்க்குப் பட்டுச் சேலை பேத்திக்கு வாங்க அவர் தயங்குவது இல்லை. அந்தப் பத்தாயிரம் ரூபாய் சேலை அவரது கவுரவத்தை உலகுக்குப் பறைசாற்றும் ஓர் கருவி! பத்து ரூபாய்க்குப் பால் வாங்கிக் குடித்திருந்தாலும் அவர் அவளை ஒன்றும் சொல்லப் போவது இல்லை. செலவிட்ட பணத்துக்குச் சரியாகச் சத்து அவள் உடலில் சேர்ந்திருக்குமாம்! ஆனால் அவளது பெண்புத்திக்குப் பணத்தின் மதிப்பு தெரியாமல் காசைக் கொண்டு போய்க் கலர்தண்ணீரில் கொட்டிவிட்டாள் என்றார் அவர்.

அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு, அவள் தன் கைப்பையில் இருந்து பணமாக எடுத்துத் தனக்கென்று செலவு செய்தது, முன்மாலையில், சித்தி தங்கியிருந்த ஓட்டலின் காஃபி ஷாப்பில் செய்ததுதான்.

இப்போது, சும்மாவே இவனுக்கு இவ்வளவு தொல்லை கொடுத்து விட்டு, இவன் செலவில் சாப்பிட வேறு செய்வதா? அதுவும் இவ்வளவு விலை உயர்ந்த அசைவ அயிட்டங்களை?!

இந்தக் கடனை எப்படித் தீர்ப்பது என்று குழம்பும் போதே, பணத்தின் அடுத்த தேவை - மிக அத்தியாவசியமான தேவையும் அவளுக்கு நினைவு வந்தது.

திருச்சியிலிருந்து மதுரைக்கு 'பஸ்'சில் செல்லப் பணம்? 'டிக்கட்' எடுக்க வேண்டுமே!

அதற்கும் இவனிடம் பிச்சை கேட்பதா?

பசி சென்ற இடம் தெரியாமல் மறைந்துவிட, தொண்டை அடைத்துக் கொண்டு, சுமாலினிக்கு அழுகை வந்தது.

கண்ணீர் பெருகாமல் தடுக்கும் முயற்சியாய் விழிகளை அகல விரித்து, அங்கும் இங்குமாய்க் கண்களைக் அலைத்தபோது, 'கவலைப்படாதே' என்று கடவுளே சொல்வதுபோல அவளது கண்களில் ஒன்று பட்டது.

பில் கவுண்டரின் அருகே, எல்லாவித 'கிரெடிட் கார்டு'களும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தூய வெண்ணிற போர்டில், அழகான கறுப்பு எழுத்துக்கள், தெளிவாய்த் தெரியும் வண்ணம் எழுதப்பட்டிருந்தன!



அவனிடம் தான் 'கிரெடிட் கார்டு' இருக்கிறதே!

எல்லாவிதப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும்! இவன் பிச்சையில் உண்ண வேண்டாம்! மதுரைக்குச் செல்ல இவனிடம் பிச்சை கேட்கவும் வேண்டாம்!

பெரிய வெண்ணிறக் கைக் குட்டையால், கழுவிய முகத்தையும் கைகளையும் துடைத்தபடி 'டாய்லெட்'டிலிருந்து திரும்பி வந்த அவன் சுமாலினி, இருந்த இடத்திலேயே அசையாமல் வீற்றிருப்பதைக் கண்டு வியப்புற்றவனாய், 'என்ன, கை கழுவவில்லை? ஒரு வேளை..'' என்றவன் கண்கள் சிரிப்பில் இடுங்க, ''சாப்பிட்ட பிறகு ஒரேடியாகக் கை கழுவித்தான் பழக்கமோ?'' என்று கேலிக் குரலில் வினவினான்.

இலேசாகிவிட்ட மனதுடன் அவளும் பதிலுக்கு முறுவலித்தாள். ''இதோ!'' என்று எழுந்து, சாப்பாட்டு அறையில் இருந்த 'வாஷ் பேசின்' பக்கமாய் அவள் செல்லவும், ''இங்கே பாத்ரூம் சுத்தமாய்த்தான் இருக்கு!'' என்று விவரம் கொடுத்தான்.

அடிக்கடி இங்கே வந்து போகும் பழக்கம் போலும் என்று எண்ணியபடி, தலையை மட்டும் அசைத்து விட்டுச் சென்று கைகழுவிக் கொண்டு திரும்பி வந்தாள்.

அதற்குள்ளாக, அவன் முதலில் கொண்டுவரச் சொன்ன தோசை உரிய சில வியஞ்சனங்களுடன் வந்து சேர்ந்தது.

முறுவலித்தபடி, ''சூட்டோடு சாப்பிட்டு விடுவது நல்லது. இந்த நேரத்து தோசை, ஏதோ சமாளிப்பாகத்தான் இருக்கும்!'' என்றவனிடம் தலையசைத்துவிட்டு,

''பரவாயில்லை,'' என்றவள், ''உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்!'' என்று தொடங்கினாள்.

''என்ன?''

''இந்த உணவுக்கு நான் பணம் கொடுக்கிறேன். அப்புறம்...''

சிறு தயக்கத்துடன் பேசியவளை, வியந்து நோக்கி விட்டு, ''நான் 'ஆர்டர்' பண்ணிய மற்றதெல்லாம் உனக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்! என்னால் இரவு முழுவதும் விழித்திருந்து விட்டுக் காலையில் இந்த வெறும் தோசையுடன் காலை உணவை முடிக்க முடியாது. நான், கொஞ்சம் நன்றாகவும் சாப்பிடுவேன். அத்தோடு, இந்த 'மோட்ட'லில் விலையும் கொஞ்சம் அதிகம்!'' என்றான் அவன்.

''பரவாயில்லை எனக்கு...'' என்றவளின் பேச்சில் மறுபடியும் குறுக்கிட்டு, '' சென்னையிலிருந்து காரில் வந்ததற்குக் கூலியா? தேவையில்லை. உன்னை நான் சுமக்கவில்லை! 'டீசல்' செலவுக்குப் பார்த்தாலும் நீ உடன் வந்ததால் அது எனக்கு அதிகமாகிவிடவில்லை'' என்றான் அவன்.

''அதற்காக இல்லை!'' என்றாள் அவள், முயன்று, சற்று அழுத்தமான குரலை வருவித்து.

''பின்னே?'' என்று கேட்டவன், தட்டைக்காட்டி, ''எதுவானாலும் சாப்பிட்டுக் கொண்டே சொல்லு. ஆறிவிடப் போகிறது'' என்றுரைத்து விட்டு, தோசையைப் பிட்டு சட்டினி தோய்த்து ஒருவிரலால் வாயில் வைத்துக் கொண்டு அவளை நோக்கினான்.



இந்தப் பண விஷயம் பேசி முடிக்குமுன் உண்ண மனமற்றவளாய், தோசையைப் பிய்ப்பதுபோலப் பாவனை செய்தபடி, ''திருச்சியிலிருந்து மதுரைக்குச் செல்ல 'பஸ் டிக்கட்'டுக்கு எனக்குப் பணம் வேண்டும்...'' என்று விளக்கத் தொடங்கியவள், அவன் விழிகள் அகல, தோல்வியை ஒத்துக் கொண்டாற்போலக் கைகளை விரித்து, ''என் அப்பனே! ஞான பண்டிதா?'' எனவும் திகைத்துப் பேச்சை நிறுத்திவிட்டு விழித்தாள்.

''எ..என்ன?''

''அதுதான் சொன்னேனே? சுட்டப்பழம் கதை! உன் பேச்சில் தலைவால் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமாக இருக்கிறது! பஸ்சுக்குப் பணம் இல்லாதவள், இங்கே 'பில்' பணம் கொடுப்பேன் என்பானேன்? அந்தப் பணத்தை அங்கே டிக்கட் வாங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லவா?''

என்னவோ அவள் பெரிய முட்டாள் மாதிரியும், அவன் மகா மேதை போலவும் அவன் நடந்து கொண்ட விதம் ஆத்திரமூட்ட, ''பஸ் டிக்கட்டுக்குப் பணமாய்தான் கொடுத்தாக வேண்டும் அல்லவா?'' என்று சுமாலினி எரிந்து விழுந்தாள்.

அலுப்பான பெருமூச்சுடன் மீண்டும் ஒரு 'ஞான பண்டிதா' வின்பின், ''ஆமாம்! இங்கேயும் பணம் கொடுத்தால் தான் மாவாட்டாமல் வெளியே போக விடுவார்கள்!'' என்றான் அவன் சோக பாவனையுடன்.

''இல்லை!'' என்றாள் அவள் மிடுக்குடன். ''இங்கே 'கிரெடிட் கார்ட்' காட்டி கையெழுத்திட்டுவிட்டுப் போய் விடலாம்!'' என்றாள் ஏளனக் குரலில்.

''அதாவது...?''

''அதாவது என்னிடம் பணமாக இல்லாவிட்டாலும் 'கிரேடிட் கார்டு' இருக்கிறது என்கிறேன். 'கார்டைக் கொடுத்து இங்கே கையெழுத்திட்டு' 'பில்'லைக் கட்டி விட்டுப் போய் விடலாம் - பில் என்ன தொகைக்கு வந்தாலும் என்னால் முடியும்! இன்னும் கூட, வீட்டுக்கு - மனைவி, பிள்ளைகுட்டிகளுக்கு ஏதேனும் வாங்கிப் போவது என்றாலும் அதையும் பில்லில் சேர்த்துக் கொண்டு, பஸ் டிக்கட்டுக்கு உரிய பணத்தைத் தந்தால் போதும் என்பதுதான் என் கோரிக்கை! இப்போதாவது விஷயம் புரிகிறதா? அல்லது, 'விம்' 'டிபால்' எல்லாம் போட்டு விளக்கினால்தான் புரியுமா?'' என்றபோது, அவளது குரலில் எகத்தாளம் தலைதூக்கி நின்றது.

''எனக்கு வேண்டியதுதான்!'' என்று தோல்வியை ஒத்துக் கொண்ட போதும், ''ஆனால் ... உன்னிடம் கிரெடிட் கார்ட் இருக்கிறது என்றால்..'' என்று முடிக்காமல் தோளைக் குலுக்கினான் அவன்.

''ஏன்? நம்ப முடியவில்லையாக்கும்! இதோ! இதோ என் கிரெடிட் கார்ட்!'' என்று ரோஷத்துடன் கைப் பையைத் திறந்து, கிரெடிட் கார்டை எடுத்து அவன் முன் நீட்டினாள்.

கார்டில் இருந்த பெயரை ஓர் இலகு பாவனையுடன் படித்த அவனது பார்வை, சட்டெனக் கூர்மையுற்றது.



# 10

கார்டைக் கையில் வாங்கி, மீண்டும் ஒருதரம் அதிலிருந்த பெயரைப் படித்துவிட்டு, மெல்ல நிமிர்ந்து அவளை நோக்கினான்.

''உன் பெயர்..சுமாலினியா?''

''பின்னே? அப்படித்தானே, கார்டில் எழுதியிருக்கிறது? அல்லது • யாரோ ஒரு சுமாலினியின் கிரெடிட் கார்டை நான் திருடிக் கொண்டு வந்தவிட்டேன் என்று நினைத்தாயா?'' என்று, இன்னமும் கோபம் அடங்காதவளாகச் சுமாலினி அவனை ஏளனம் செய்தாள்.

ஆனால், ''சாரியம்மா. உன் கோபம் நியாயமே! நான் யோசியாமல் கிண்டலடித்து விட்டேன். மன்னித்துக் கொள்!'' என்று அவன் திடுமென இறங்கிப் பேசவும் சொல்வதறியாமல் திணறிப் போனாள்.

''ப..பரவாயில்லை..எங்கள் தாத்தா மாதிரியே நீ..நீயும், முழுதாகச் சொல்ல விடாமல் என்னை மடக்கி மடக்கிப் பேசவும் எனக்கு எரிச்சல் வந்து விட்டது..'' என்று தன் கோபத்துக்குரிய காரணத்தை விளக்க முற்பட்டாள்.

பணிவுடன் வந்து நின்றான் ஒரு 'வெயிட்டர்.' ''சார், பிரட் ரோல், முட்டை, சிக்கன் கறி தயார். கொண்டு வரவா?'' என்று அடங்கிய குரலில் வினவினான்.

கிட்டத்தட்ட அப்படியே இருந்த சுமாலினியின் தட்டை ஒருதரம் பார்த்துவிட்டு, "கொண்டுவாப்பா!" என்று அனுமதி கொடுத்தான் அவன்.

"சரிங்க சார்!" என்று மீண்டும் பணிவான குரலிலேயே உரைத்து விட்டு, அந்த 'வெயிட்டர்' வேகமாக உள்ளே சென்றான்.

விட்டால் சலாமே போடுவான் போல என்று எண்ணமிடும்போதே சுமாலினிக்குச் சுரீல் என்றது.

எதிரில் இருப்பவன் யாராக இருந்த போதும், அவளைவிட வயதில் பெரியவன், நடை உடை பாவனைகளைப் பார்க்கும்போது சமூகத்தில் ஓரளவேனும் நல்ல நிலையில் இருப்பவன் என்பதும் நன்றாகவே தெரிந்தது. அப்படி இல்லாவிட்டால் இந்த வெயிட்டரிடம் அவனுக்கு இவ்வளவு மரியாதை கிடைக்காது!

ஓர் ஓட்டல் பணியாளுக்குத் தெரிந்தது அவளுக்குத் தெரியவில்லையே! அவளைவிட வயதில் பெரியவன் என்பதைக் கூட மதியாமல், அவனை நீ என்று ஏகவசனத்திலேயே பேசி விட்டாளே!

'உனக்கா! மரியாதை தெரிந்தவளாகத்தான் இருக்கிறாய்' என்று அவன் கூறியது நினைவு வர உள்ளூர மனம் குன்றினாள்.

குறைந்தது அந்த இடத்திலிருந்தாவது-இவன் சித்தியின் பணியாளோ, திருடனோ இல்லை என்று தெளிவாகிவிட்ட அந்த நேரத்திலிருந்தாவது மரியாதைப் பன்மையைப் பயன்படுத்தியிருந்திருக்கலாம்.



அன்னியப் பெண்ணான அவளிடம், அவனும் மரியாதையுடன் பேசியிருக்கலாம்தான்! ஆனால் அவளது பேச்சு முறைக்குப்பிறகு, அவனிடம் மரியாதையை எதிர்ப்பார்ப்பதற்கு இல்லைதானே?

தப்பு செய்துவிட்ட குற்ற உணர்வுடன் மெல்ல விழி உயர்த்தி அவனை நோக்கினாள்.

"வந்து..." என்று அவள் தயக்கத்துடன் தொடங்கியதைத் தவறாக ஊகித்து, "பரவாயில்லை. சுவை பிடிக்கவில்லையென்றால் தோசையை ஒதுக்கிவிடு. மற்றது புதிதாக செய்தது. இங்கே நன்றாகவும் இருக்கும். அதைச் சாப்பிடு!" என்றான் அவன் இதமாகவே.

"அதில்லை..நான் வந்து..உங்களைத் தப்பாக நினைத்து வந்து சும்மா நீ, வா போ என்று கண்டபடி, பேசிவிட்டேன்..சாரி. ம..மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று சுமாலினி, ஒருவாறு திக்கித் திணறி நினைத்ததைச் சொல்லி முடித்தாள்.

அவன் லேசாக முறுவலித்தான். "அந்த நேரத்தில் உன் நிலையில் யார் இருந்தாலும் அப்படித்தான் பேசியிருப்பார்கள். அதைவிட் மோசமாக 'டேய்' போட்டுப் பேசியிருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை! முதலில் தொடங்கியது, கவனமற்று அப்படியே தொடர்ந்து தொடர்ந்து விட்டது! பரவாயில்லை, விட்டுவிடு!" என்றான் அவன் பெருந்தன்மையாக.

அவள் லேசாகிவிட்ட மனதோடு புன்னகை செய்து நன்றியுரைத்து விட்டு, சாப்பிடத் தொடங்கினாள்.

ஒரு விசித்திரப் பார்வையுடன், அவளையே நோக்கிய வண்ணம், "முன்பு தப்பாக நினைத்தாய் என்றாயே! இப்போது என்னைப் பற்றிச் சரியாக எல்லாம் தெரிந்து விட்டதா?" அவன் கேட்கவும், திகைத்து விழித்தாள்.

அவன் லேசாக சிரிக்கவும் கொஞ்சம் அசடு வழிந்து விட்டு, "இப்போதுதான் சொல்லுங்களேன், நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன?" என்று விசாரித்தாள்.

அதற்குள், ஆர்டர் செய்த அயிட்டங்களைக் கொணர்ந்து மேஜையில் இருவருக்கும் இடையே வசதியாக அடுக்கிவிட்டு, "பத்து நிமிடம் கழித்து மற்றது கொண்டு வரட்டுமா சார்?" என்று வெயிட்டர் வினவினான்.

இதுவே அதிகம். இதற்கு மேல் கொண்டு வந்தால் எப்படிச் சாப்பிட முடியும் என்று உள்ளே நினைத்த போதும் ஒன்றும் சொல்லாமல் சும்மாவே இருந்துவிட்டாள் சுமாலினி. அவன்தான் அதிகம் சாப்பிடுகிறவன் என்று முதலிலேயே சொல்லிவிட்டானே! ஒப்புதலாய்த் தலையசைத்து வெயிட்டரை அனுப்பிவிட்டு, "யார் என்று சொன்னால் உடனே புரிந்து கொள்ளும் அளவுக்கு நான் ஒன்றும் பெரிய புள்ளி அல்ல. தொழில் ஒன்று ஓரளவு வெற்றிகரமாகச் செய்கிறேன். என் பெயர்... புவனபூபதி..." என்று கூறியபடி அவளைக் கூர்ந்து நோக்கினான் அவன்.

அவள் முகம் லேசாக வாடவும், பார்வை அகலாது நோக்கியபடியே, "என்ன? என்ன விஷயம்?" என்று வினவினான் அவன் அந்தப் புவனபூபதி.



தலையசைத்து, "ஒ...ஒன்றுமில்லை! பூபதி என்ற பெயர் கொஞ்சம் எனக்கு...அந்தப் பெயர் எனக்கு இப்போதைக்கு அவ்வளவாய்ப் பிடிக்காத பெயர்!" என்ற சுமாலினி உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

ஏன் பிடிக்கவில்லை? என்ன காரணம்? என்று அந்த புவனபூபதி குடைவானோ என்ற சிறு கலக்கமும், கேட்டால் என்ன பதில் சொல்வது என்ற யோசனையுமாக அவள் காத்திருக்க, "பிடிக்கவில்லை என்றால் விட்டு விடுவதுதானே?" என்றான் அவன் இலகுவாக.

சஞ்சலம் அகன்று, சுமாலினி சன்னமாய்ப் பெருமூச்சு விட்டாள்.

பிரட் ரோலைக் கொஞ்சம் கொஞ்சமல்ல; ஒரு பெரிய பகுதியைப் பிட்டு தன் தட்டில் வைத்துக் கொண்டு, முட்டை, சிக்கன் என்று எல்லாமே தாராளமாக எடுத்தபடி அவன் சொன்னான். "என் நண்பர்கள் என்னைப் புவன், பூபதி, பதி என்று பலவாறாக அழைப்பார்கள். 'பூபதி' தான் 'அலர்ஜி' என்கிறாயே! வேறு எது பிடிக்கிறதோ அதைச் சொல்லிக் கூப்பிடு... ம்கூம்! அது என்றால் என் பெயர்களுள் ஒன்றுதான். இதுதான் வாய்ப்பு என்று நீ வேறு, கழுதை, குதிரை என்றெல்லாம் கூப்பிட்டு விடாதே, தாயே!" என்று அவசரமாகச் சேர்த்து சொன்னான் அவன்.

வேடிக்கை போல அவன் சொன்ன பாணியும், வார்த்தைகளும் அவளைத் தன்னைமீறி சிரிக்க வைத்தன.

அவனுடைய நண்பர்கள் போல அழைக்கும் உரிமையைப் புவனபூபதி அவளுக்குத் தந்தது வேறு உச்சிகுளிரச் செய்து விட, ''உங்களுக்கு எந்தப் பெயர் பிடிக்கும் என்று சொல்லுங்கள்? அப்படிக் கூப்பிடுகிறேன். யாரோ இரண்டு பூபதி குடும்பத்தார் அநியாயம் செய்தார்கள் என்று அந்தப் பெயரையே வெறுப்பது சரியல்ல'' என்று சுமாலினி தன்னையறியாமலேயே வாயை விட்டாள்.

அவனது கண்கள் சட்டெனப் பளிச்சிடவும், அவசரமாக, ''எந்தப் பெயர் என்றால், உங்கள் பெயர்களுள் ஒன்றைச் சொன்னேன். இதுதான் வாய்ப்பு என்று நீங்கள் வேறு. கண்ட பெயர் சொல்லி அழைக்கச் சொல்லி விடாதீர்கள்!'' என்று அவன் கூறியதையே சுமாலினி திருப்பிப் படிக்கவும், புவனபூபதியும் வாய் விட்டு நகைத்தான்.

அவள் திகைத்தாள்.

வெண்ணிறப் பற்கள் அழகாய்ப் பளபளக்க, அனாவசியமான அங்கசேஷ்டைகள் எதுவும் இன்றி அமர்ந்த குரலில், அவன் சிரிப்பதை சுமாலினி தன்னை மறந்து சில கணங்கள் பார்த்துக் கொண்டே இருந்தாள்!

ஆண்களின் சிரிப்புகூடக் கேட்கவும் பார்க்கவும் இவ்வளவு நன்றாக இருக்கக் கூடுமா! அவள் அறிந்த ஆண்களில், தாத்தா சிரிப்பதே இல்லை! சம்பத்குமார் வைணவ ரகம். சித்தப்பா மாதவன் கூட அவுட்டுச் சிரிப்பாய்ச் சிரிப்பாரே தவிர, இப்படிக் கம்பீரமாய் கூடச் சேர்ந்து சிரிக்கத் தூண்டும் விதமாய் இராது!



வாயில் வைக்கத் தோசை விள்ளலை தூக்கிய கை அந்தரத்தில் அப்படியே நிற்க, அவள் வாய் பிளந்து நோக்கவும், 'என்ன' என்பது போலப் புருவங்களை உயர்த்திக் கேட்டான் அவன்.

விநாடியில் சுமாலினியின் முகம் கன்றி சிவந்து போயிற்று.

சரியான பட்டிக்காடு மாதிரியல்லவா நடந்து கொண்டு விட்டாள்! அவளைப்பற்றி என்ன நினைப்பான்! இப்போதான், அவளைக் கொஞ்சம் கவுரவமாக நடத்தத் தொடங்கியிருக்கிறான்.

அவசரமாய் யோசித்து, ''ஒ..ஒன்றுமில்லை. முதலில்..முதலில்..பார்த்தால், சரியான முகடு மாதிரிக் கடுகடுத்தீர்கள். இப்போது, 'இம்'மென்றால் சிரிக்கிறீர்களே என்று.. என்று.. அதுதான் ஆ..ச்சரியமாகிப் போயிற்று!'' என்று எப்படியோ சமாளித்தாள்.

''ஓகோ! அப்..படியா? இருக்கும்!'' என்றான் அவன்.

தன் விளக்கத்தைப் புவனபூபதி நம்பினானா இல்லையா என்று அவள் குழம்பிக் கொண்டு இருக்கும் போதே, '' உன் தோசை ரொம்பவும் ஆறிப் போயிருக்கும். நிச்சயமாய் நன்றாயிராது! அதை ஒதுக்கி விட்டு இதைச் சாப்பிடு'' என்று அவன் கூறவும், இருவரின் கவனமும் சாப்பாட்டில் சென்றது.

ஆறிவிட்ட தோசை வலுத்துப் போய் நன்றாக இல்லைதான். ஆயினும் தயக்கத்துடன் ''இந்த உணவு கூட இல்லாமல் எத்தனையோ பேர் கஷ்டப்படுகிறார்

கள். அப்படியிருக்க இதை வீணாக்குவது தப்புபோலப் படுகிறதே!'' என்றுரைத்து, சுமாலினி மீண்டும் தோசையில் கைவைத்தாள்.

சட்டெனக் கைநீட்டி, புவனபூபதி அந்தத் தட்டை அவளிடமிருந்து அகற்றி வைத்தான். ''உலகில் எத்தனையோ பேர் பட்டினியால் கஷ்டப்படுகிறார்கள் என்பது மெய்தான் சுமாலினி. ஆனால், நீ சிரமப்பட்டு இந்தச் சுவையற்ற தோசையைச் சாப்பிடுவதால் அந்த நிலை எந்தவகையிலும் மாறப் போகிறதா? உணவை வீணாக்குவதும் தவறுதான். ஒத்துக் கொள்கிறேன். அப்போது மிகவும் பசித்த அந்த நேரத்தில், விரைவில் தயாரிக்கக் கூடியது என்ற ஒரே காரணத்தினால் மட்டுமே இந்தத் தோசையை நான் கொண்டு வரச் சொன்னேன். சூட்டோடு சாப்பிட்டால் பரவாயில்லாமல், கொஞ்சம் பசி தணிய உதவும்; அதற்குள் ஆர்டர் கொடுத்த மற்றது தயாராகி வரத் தொடங்கி விடும் என்று நினைத்தேன். அதற்காக, ஆறி சுவையற்றுப் போய்விட்ட இதை, மற்ற உணவு வகை வந்த பிறகும் நீ சாப்பிட்டுத்தான் ஆகவேண்டுமா? சொல்லு, இந்தத் தோசையைச் சாப்பிட்டு, பதிலாக வேறு எந்த உணவை மிச்சப்படுத்தி, எந்த ஏழைக்குக் கொடுக்கப் போகிறாய்?'' என்று கேட்டான். ''இதை நீ சாப்பிட்டாலும், சாப்பிடாவிட்டாலும் அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை எனும்போது, ஏன் கஷ்டப்பட்டு இதை நீ விழுங்கியாக வேண்டும்?''

பதிலே சொல்லாமல், உணவில் அவனைப் பின்பற்றத் தொடங்கினாள் அவள்.



புவனபூபதி கொண்டுவரச் சொன்ன உணவு வகைகள் நன்றாகவே இருந்தன. இதுவே அதிகம், மிஞ்சி வீணாகப் போகிறது என்று நினைத்தவள், அவனுடன் போட்டி போட்டுக் கொண்டு உண்டாள். அவன் சாப்பிட்ட அளவு அவளை விடக் கொஞ்சம் அதிகமே என்றபோதும், அவளும் ஒன்றும் குறைவாகச் சாப்பிடவில்லை! அவன் சுவைபடப் பேசிக்கொண்டே இருந்ததில், உண்ட அளவு தெரியாமல் போயிற்று?

அவள் முகத்தில் ஆச்சரியத்தைக் கண்டு, ''இரவில் விழித்திருந்தால் இருமடங்கு பசிக்கும்!'' என்று அவன் காரணம் சொன்னான்.

அத்தோடு, முன்தினம் முழுவதும் அவள் சரியாகப் பசியாறவும் இல்லையே!

பிடிவாதமாகப் 'பில்'லை அவன் கையில் எடுத்துக் கொண்டபோது உதட்டோரம் துடித்தபோதும், அவள் மறுக்கவோ, அவனைத் தடுக்கவோ இல்லை.

பில்லையும், கிரெடிட் கார்டையும் கவுண்டரில் கொடுத்து விட்டுக் காத்து நின்றபோது மேலே கடிகாரத்தைப் பார்த்தவள் மீண்டும் திகைத்தாள். இப்போது கலக்கமும் கூட.

''இங்கேயே முக்கால் மணிநேரம் ஆகிவிட்டதே! ஒரு மணிக்கு முன்பாக நாம் திருச்சிக்குப் போய் விடுவோமா?'' என்று கவலையுடன் வினவினாள்.

கேள்விக்குரிய பதிலைச் சொல்லாமல், ''ஏன்? என்ன விஷயம்? ஒரு மணிக்குள் போயாக வேண்டும் என்று என்ன அவசரம்?'' என்று புவனபூபதி பதில் கேள்வி கேட்டான்.

அவள் மறைக்க வில்லை. மறையாமல் சொல்ல வேண்டிய அவசியமும் இருந்தது. எனவே, "என் தாத்தாவுக்கு டெலிஃபோன் பண்ண வேண்டும். ஒரு மணிக்குத்தான் அவர் எழுந்து அறையை விட்டு வருவார். அவர் தேடத் தொடங்குமுன் தகவல்.. அவருடன் பேசியாக வேண்டும்.. சொல்லுங்கள், அதற்குள் திருச்சி சென்று விடுவோமா? என்று கேட்டாள்.

"போய் விடலாம். ஆறு அல்லது எப்படியும் ஆறரைக்குள் சென்று விடலாம்." என்று புவனபூபதி உறுதி கொடுத்தும் அவள் முகம் சற்றே மாறியது.

சிறுகவலையும் எதிர்பார்ப்புமாக அவனை நோக்கி, "நீங்கள், உங்கள் வீட்டுக்கும் ஏதாவது வாங்கிக் கொள்ளுங்களேன்! ஏனென்றால்..ஏனென்றால், சென்னைக்குப் பேச 'எஸ்டிடி' கட்டணமும் நீங்கள் தான் தர தந்து உதவ வேண்டியிருக்கிறது!" என்று மெல்லிய குரலில் தன் கோரிக்கையை அவன் முன் வைத்தாள்.

லேசாகத் தலையசைத்து, "இந்த பில் பணமே எல்லாவற்றுக்கும் சரியாக இருக்கும்!" என்று அவளைப் போலவே மெல்லிய குரலில் அவனும் கூறவும், அவள் முகம் தெளிந்தது.

ஒரு பெருமூச்சுடன், பில்லில் கையெழுத்திட்டு விட்டு, ஞாபகமாகக் கிரெடிட் கார்டை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டு, புவனபூபதியுடன் கிளம்பினாள்.



காரில் ஏறியதும் இவ்வளவு நேரமாய் மறந்திருந்த அல்லது புவனனின் சுவாரசியமான பேச்சினால் சற்றே ஒதுங்கியிருந்த கவலையும் மீண்டும் அவள் மனதில் பாரமாய் ஏறிக் கொண்டது.

இப்போது தாத்தாவோடு அவளே நேரில் பேசியாக வேண்டும்! என்ன பேசுவது? 'உடனே வீடு வந்து சேர்!' என்று அவர் உறுமினால் என்ன செய்வது?

அவருக்குப் பணிந்து விழுப்புரம் சென்றால், கட்டாயமாக, சம்பத்குமாரையே மணக்கும்படி ஆகிவிடும். அப்புறம் அந்த 'டாப் கால் கேர்ளை' அவளைப் போல இன்னும் எத்தனையோ பேரைத் தொட்ட கையால், அவன் அவளையும் தொடுவான்! சே! நினைக்கும் போதே வயிறு கலங்கி வாந்தி வருகிறதே! அதுவே நடந்தால் எப்படி சகிக்க முடியும்?

இனிச் சித்தி வீட்டுக்குப் போய், ஒரு மணிக்குள்ளாகத் தாத்தாவுக்கு அவளைப் பற்றிய தகவல் கொடுப்பது சாத்தியமல்ல.

ஆனால்..சித்தியிடம் முதலில் பேசி, அவர்களையே தாத்தாவிடம் பேசச் சொன்னால்?

சொல்லலாம், நல்ல ஐடியாதான்! ஆனால் இவனிடம் எதற்கெல்லாம் தான் பணம் கேட்பது? எவ்வளவு தான் கேட்பது?

இந்தப் புவனன் என்னதான் சொன்னாலும், மதுரை செல்லும் டிக்கட்டுக்கும், இந்தச் சாப்பாட்டில், அவளது பங்குக்குமே 'மோட்டல்'பில் தொகை கட்டி வருவது சந்தேகம்!

இதற்குமேல் இவனிடம் பணம் கேட்டுப் பெறுவது யாசகம்தான்.

துன்பங்கள் ஒன்றாய் வராதாம். அடுக்கடுக்காய்ச் சேர்ந்துதான் வருமாம். துன்ப எண்ணங்களும் அப்படித் தான் போலும்!

கலக்கத்தோடு கலக்கமாய், மாற்றிக் கட்டத்துணி கூட இல்லாமல் அவள் வந்திருக்கும் நிலைவேறு நினைவு வந்தது. மதுரைக்குப் போய் விட்டாலும் தான் என்ன? அடுத்த வேலைத் துணிகூட இல்லாமல் வந்திருக்கிறாளே என்று சித்தி நினைக்காமல் இருக்கலாம்! மற்றவர்கள்? பிச்சைக்காரியாகத் தானே எண்ணு வார்கள்?

கையிலிருக்கும் கிரெடிட் கார்டில் இன்னும் எவ்வளவு செலவை அடக்கமுடியும்? இரண்டு செட் சுரிதார்? அப்புறம் சோப்பு, பவுடர், கடவுளே ஒரு பெண்ணுக்கு என்னவெல்லாம் தேவைப்படுகிறது! இவை அனைத்துக்குமா கையேந்துவது?''

சற்று நேரம் வருத்தமும் வேதனையுமாக யோசித்துப் பார்த்துவிட்டு, வேற வழியில்லை, எவ்வளவோ அவமானமாக இருந்தபோதும் கையேந்தித்தான் ஆக வேண்டும் என்ற முடிவுக்கே சுமாலினி வர நேர்ந்தது. அல்லது சம்பத்குமாரை மணக்க நேரிடும். அந்த நிலைக்கு, நடுத் தெருவில் நின்று திருவோடு ஏந்திப் பிச்சை எடுப்பதுகூட மேல் என்று அவளுக்குத் தோன்றியது.

இன்னொன்றும் தோன்றியது. தாத்தாவுக்கு அவள் டெலிஃபோன் செய்வதைவிடச் சித்தியிடம் எல்லாம்



சொல்லி, அவளை அவரிடம் தெரிவிக்கச் சொல்வது தான் சரி. ஒன்று, இரண்டு டெலிஃபோன் கால்களுக்குப் பதிலாக ஒன்றோடு முடியும். புவனபூபதியிடம் ஏற்கனவே கேட்ட ஒரு எஸ்டிடி கட்டணத்தோடு செலவு முடியும். அடுத்தது, தாத்தா அவளை அதட்டி மிரட்டி, விழுப்புரத்துக்கு வரவழைத்து சம்பத்குமாரின் காலில் கட்ட முடியாது!

அந்தத் துர்ப்பாக்கியத்தைச் சித்தி எப்படியாவது தடுத்து விடுவாள்! ஆனால், அதன்பிறகும் ஒருநாள் விழுப்புரம் சென்றுதான் ஆகவேண்டும்; அங்கே தாத்தாவின் கடு சொற்களையும் கடுமொழிகளையும் அனுபவித்துத் தான் ஆகவேண்டும்! அவளுக்கு வேறு கதியில்லை!

சிலையாக அமர்ந்தவளிடம் புவனபூபதி ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு ''என்ன, தூக்கம் வருகிறதா? அல்லது, ஒரு கட்டைத் தடியனோடு காரில் எப்படிப் போனாய் என்று தாத்தாவிடம் திட்டு வாங்கப் போவதை எண்ணி இப்போதே கவலையா?'' என்று கேட்டான்.

ஆமாம்! அந்தத் திட்டும் பட்டுத்தான் ஆகவேண்டும். அவள் மட்டும் கூடக் கொஞ்சம் கவனத்தோடு நடந்து கொண்டிருந்தால்?

''உப்பைத் தின்றால் தண்ணீர் குடித்துத்தான் ஆக வேண்டும்? தப்பு செய்தால், தண்டனையும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்?'' என்று அவள் உலக நியதி விளம்பிக் கொண்டிருந்த போதே உள்ளே ஏதோ முரண்டியது!

இந்தப் பயணத்தின் விளைவுகளைப் பற்றிக் கலங்கினாளே தவிர, இந்தப் பயணத்தைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு வகையில் நன்றாய்த்தான் இருக்கிறது என்றது அவளது பொய்யறியாப் பூ மனம்.

அதுவும் அந்த அதிகாலை 'மோட்டல்' சாப்பாடு இந்தப் பிறவியில் மறக்கக் கூடியதா? அவள் அறிந்த வரையில் அப்படித் திருப்தியாக அவள் உண்டதே இல்லையே! இடையிடையே புவனன் அடித்த சிறு ஜோக்குகளும், லேசான கால்வாரல்களும்! அதை நினைக்கும்போது அவளது தவறின் விளைவான துன்பங்கள் எல்லாமே ஈடுகட்டப்பட்டு விட்டதாக அல்லவோ தெரிகிறது!

இப்போதுகூட இவனோடு கூட அமர்ந்து செல்வது எவ்வளவோ பாதுகாப்பானதாகத்தானே தோன்றுகிறது! யாரோ ஒரு கட்டைத் தடியனிடம் தனியாக மாட்டிக் கொண்டு, வேறு வழியின்றி, அவனோடு செல்வது போலவா இருக்கிறது? இல்லையே! மாறாக சுகமாக, நிம்மதியாக அல்லவா இருக்கிறது!

இந்தப் பயணம் விரைவில் முடிந்து விடுமே என்று வருத்தமாகக் கூட...

திடுக்குற்றவளாய், சுமாலினி நிமிர்ந்து அமர்ந்தாள். யாரோ ஒரு கட்டைத்தடி... தடியன் என்று இல்லைதான். ஆனாலும், நல்லவனாகவே இருந்தாலும், அவன் அன்னியன்தானே? அவனோடு பயணம் போய்க் கொண்டே இருக்க விரும்புவது மூடத்தனம் அல்லவா? சரியான மட்டியாகிக் கொண்டுதான் போகிறாள்!



சலிப்புடன் தன்னைத் தானே கடிந்து கொண்டவளுக்கு ஒன்று உறுத்த "தாத்தா திட்டுவார் என்று எப்படித் தெரியும்?" என்று வினவினாள்.

காரை வளைவில் கவனமாகச் செலுத்திவிட்டு, "ஊகம் தான்" என்றான் புவனபூபதி.

"என்ன ஊகம்?" என்றாள் அவள் நம்பாத குரலில். ரம்யாவை நினைத்து, "இப்போதெல்லாம் பெண்களுக்கு எவ்வளவோ சுதந்தரம் கொடுக்கிறார்களே!" என்றாள் தொடர்ந்து.

"இருக்கக்கூடும்! என்றான் அவன் இலகுவாக. "ஆனால், அப்படி சுதந்திரமாக வளர்க்கப்படுகிறவர்கள், இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல், சித்தியுடன் மதுரைக்குக் கிளம்ப மாட்டார்கள்!" அதுவும் கையில் ஒரு மாற்றுடைகூட இல்லாமல்! போகட்டுமா என்று அனுமதி கேளாவிட்டாலும், போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிறவர்கள்தான் உண்மையான சுதந்திரத்தோடு வளர்கிறவர்கள்!"

உண்மையே. ஒரு வார்த்தைகூட மறுப்பதற்கில்லை. பக்கத்தில் தோழி வீட்டுக்குச் செல்வதானாலும், எங்கே போகிறேன் என்று வீட்டில் சொல்லாமல் ரம்யா செல்வதில்லை. வீட்டில் யாரும் இல்லை என்றாலும், துண்டு சீட்டில் எழுதி, டெலிஃபோன் கருவியின் அடியில் வைத்துவிட்டுத்தான் போவாள்.

இப்படி ஒளிந்து மறைந்து, ஊர்விட்டு ஊர் ஓடும் நிலைமை, உண்மையிலேயே சுதந்திரமாய் வளர்க்கப்படுகிறவளுக்கு வராததுதான்.

இதுவே ரம்யாவாக இருந்தால், பெரியவர்கள் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை இப்படிப்பட்ட அயோக்கியன்! அதனால், அவனைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று தெளிவாக எடுத்து உரைத்திருப்பாள்.

அதைவிட சிறப்பு என்னவென்றால், சித்தி, சித்தப்பாவும் அவள் பேச்சைக் காது கொடுத்துக் கேட்டு, மகளின் அபிப்ராயத்துக்கு மதிப்பளித்துத் திருமணத்தை அவர்களாகவே நிறுத்தியும் இருப்பார்கள்!

"ஒன்று சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது!" என்றான் புவனபூபதி.

"என்னது?"

நேற்று முழுவதும் எனக்கு நிறைய வேலை பகலில் கொஞ்சம் ஓய்வெடுக்கக் கூட நேரமே கிடைக்கவில்லை!"

இதை ஏன் தன்னிடம் கூறுகிறான் என்பது புரியாமல், "ம்?" என்றாள் சுமாலினி.

"இரவிலும் தொழில் துறை டின்னர் முடிந்து, ரிப்போர்ட் தயாரித்து இன்றைய வேலைக்காகச் சென்னை அலுவலகத்தில் வைத்துவிட்டு, உடனே கிளம்பியிருக்கிறேன்."

"ம்?"

"நான் இயந்திரம் அல்ல. மனிதன்! மனித உடம்புக்கு ஓய்வும் கட்டாயம் தேவை என்பது உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். ஓட்டும்போது, அசதியில் நான் என்னை மீறி உறங்கிவிட்டால்.. வண்டி, நீ, நான் எல்லாம் என்ன கதியாவோமோ தெரியாது!"



"அய்யோ!" என்றாள் அவள் பயந்து. "ஓரமாய் நிறுத்தி, கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு பிறகு ஓட்டுகிறீர்களா?"

"அதற்கு அவகாசமும் இல்லை. அது பாதுகாப்பானதும் இல்லை. அதை விட, இருவருமாகப் பேசிக் கொண்டே போனால், பேச்சு சுவாரசியத்தில் தூக்கம் விலகிவிடும்!"

"செய்..யலாம்..! ஆனால் என்ன பேசுவது?" இவனுக்குச் சுவாரசியம் தட்டும்படி தன்னால் என்ன பேச முடியும் என்ற கவலை அவளுக்கு.

"எத்தனையோ பேசலாம்.. உதாரணத்துக்கு, உன்னுடைய அந்த பாபு பற்றிப் பேசலாமா?" என்று இலகுவாகக் கேட்டான் புவனபூபதி.

"பாபுவா?" என்று திகைத்தாள் அவள்.

பாபுவைப் பற்றி இவனுக்கு என்ன தெரியும்?

அதையே, அவனிடமும் அவள் கேட்டபோது, "பாபு பற்றி நீதான் சொன்னாய்?" என்று அவளை மேலும் திகைக்க வைத்தான் அவன். "ஏதோ எல்லாம் அந்தப்பாவி பாபுவால் வந்தது! என்றாயே? அவன் அப்படி என்ன செய்தான்?"

## 11

சுமாலினிக்கு நினைவு வந்துவிட்டது.

அங்கே முதலில் புவனனைப் பார்த்தபோது, யோசித்தபோது தன்னையறியாது உரக்கச் சொல்லிவிட்ட வார்த்தைகள்!

அப்போதும் 'யார் அந்த பாபு? அவன் என்ன செய்தான்?'' என்ற இதே கேள்விகளைத்தான் கேட்டான்! இப்போதும் அதையே தொடர்கிறான்! ஏன்?

அவனுக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாத ஒருவன், இவள் வாழ்வில் ஏதோ செய்தால் அதுபற்றி இவனுக்கு என்ன வந்தது?...ஒன்றுமிராது! ஏதோ சும்மா பொழுது போக்குப் பேச்சக்காகக் கேட்கிறான்! ஆனால், அவளுக்குத் தான் சொல்ல மனமில்லை!

அந்தப் பாபுவின் அயோக்கியத்தனத்தையும், ஆணவத்தையும் இவனிடம் பிட்டுவைப்பதில் அவளுக்கு ஒரு தயக்கமும் இல்லைதான்.

ஆனால், அத்தோடு சேர்ந்து அவளது வாழ்க்கை அவலமும் அல்லவா அரங்கேறும்!

தன் வருத்தங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேச மனமற்று, சுமாலினி வாளாவிருந்தாள்.

அவளது மவுனத்தைக் கவனியாதவன் போல, ''அவன், உன்னைத் தூக்கிப் போய்த் தாலிக்கட்ட முயன்றானா?'' என்று புவனன் வினவினான்.

சம்பத்குமாரிடம் அந்த பாபு பேசியது சுமாலினிக்கு நினைவு வந்தது. ''ச்சு!'' என்றாள் வெறுப்புடன்.

''அல்லது... தாலிகட்டாமலே தொட முயன்றானாக்கும்!''

''கன்னை நோண்டியிருப்பேன்!'' என்றாள் அவள், ஆத்திரத்துடன். ''அப்படியெல்லாம் அவன் என்னை நெருங்க முடியாது!... அவன்...அந்த பாபு அதைவிட மோசம்!''



''அதைவிட மோசம் கூட இருக்கிறதா?''

''இல்லையா ?'' என்றாள் அவள் கொதிப்புடன். ''அந்த மாதிரியெல்லாம் நீங்கள் சொன்ன மாதிரியெல்லாம் ஒருவன் பண்ணினால் அவனுக்கு அந்தப் பெண்ணிடம் ஆசை... அல்லது ஏதோ ஓர் ஈர்ப்பு இருந்திருக்கும்: அதனால் அப்படிச் செய்து விட்டான் என்று சொல்லவேணும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இவன்...'

''இவன் என்னதான் செய்தான்?''

''இவன், ஓர் அயோக்கியனை என்னை மணக்கும்படிக் கட்டாயப்படுத்தினான்!'' என்றாள் அவள் கடித்த பற்களினூடே வார்த்தைகளைத் துப்பினாள்.

அவன் பேசாமல் திரும்பிப் பார்ப்பது போலத் தோன்றவும், அவசரமாக ''என் பேச்சில் தலைவால் புரிவது இப்போது, மெய்யாகவே சிரமம்தான். நான் எல்லாம் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும்... சரி, அதைச் சொல்லுவதால் எனக்கு ஒன்றும் கேவலம் இல்லை. அவனுக்குத்தான்... அந்த பேடி பாபுவுக்குத் தான் அசிங்கம்... சொல்கிறேன்.. கேட்டுவிட்டு நீங்களே முடிவு பண்ணுங்கள்!'' என்று தொடங்கி, தன் கதையை அவனிடம் சொன்னாள்.

எப்படி மாப்பிள்ளைப் பையனான சம்பத்குமார் வராத போதும், அவனுடைய சித்தப்பா, சித்தியை மிரட்டித் தட்டு மாற்றச் சொன்னான் என்பதைச் சொல்லி அதை மாலதி சாமர்த்தியமாகத் தடுத்ததைக் கூறினாள். பிறகு, ஒரு கால் கோளுடன் வந்த சம்பத்குமாரிடம்,

அவன் சமாலினியை மணந்தே ஆக வேண்டும் என்று உத்திரவிட்டதைக் கூறினான்.

''அந்த சம்பத்குமார் ஒரு குடிகாரன். கண்ட பெண்களோடு சுற்றுகிறவன் வேறு. அவனை மணந்தால், என் வாழ்வு என்ன ஆகும்? அதைப் பற்றி அவன் ஒரு கணம் கூட எண்ணிப் பார்க்கவே இல்லையே! அவனைத் திருமணம் செய்து கொண்டே ஆகவேண்டும் என்று அப்படிக் கட்டளையிடுகிறான்! எனக்கு மனது என்னமாய்க் கொதித்தது தெரியுமா?''

''ம்ம். எனக்கென்னவோ, நீ கொஞ்சம் நியாயம் தவறிப் பேசுவதாகத் தோன்றுகிறது. குடி, கூத்தி என்று குணம் கெட்டு அலைந்தவன் அந்த சம்பத்குமார்தானே! மோதிரம் போட வருவதாக சொல்லிவிட்டு. திருமண உறுதி என்றால் மணமகன் மணமகளுக்கு மோதிரமும் போடுவான்தானே? வருவதாகச் சொல்லிவிட்டு வராமல் இருந்து கொண்டவன் அவன்! அவனுக்காகக் காத்திருந்த பெண்ணின் மனம் என்ன பாடுபடும் என்று நினைத்துக் கூட அவன், அந்த சம்பத்குமாரை விரட்டியிருக்கலாம்!''

''இல்லவே இல்லை!'' என்று சமாலினி திட்டவட்டமாக மறுத்தாள். ''அப்படி அவனை அதாவது எனக்காக எண்ணிப் பார்த்தவன் என்றால், பிற்காலத்தில் இப்படிப்பட்ட ஓர் அயோக்கியனை மணந்து நான்படப்போகும் துன்பம் பற்றியும், நினைத்திருக்கவேண்டும் அல்லவா? அந்த மாதிரி நன்மை, மென்மைக்கெல்லாம் அந்த ராட்சசன் மனதில் இடமே கிடையாது! வெறும் அதிகார வெறி பிடித்த மிருகம் அவன்! ஏற்கெனவே, சம்பத்



குமாருடைய சொத்துக்களின் உரிமையை எழுதிவாங்கிக் கொண்டு, அந்தக் குடும்பத்தையே ஆட்டிப் படைப்பவன்!...''

''என்னது?!''

''ஆமாம்! அந்தப் பாபு குடும்பத்துக்குச் சமமான பங்கு, சம்பத்குமார் குடும்பத்துக்கும் உண்டு. தந்திரமாய் அதன் மேல் 'பவர்' எழுதி வாங்கிக் கொண்டு, அவர்களைச் சும்மா சும்மா விரட்டுவதாகச் சம்பத்குமார் சொல்லுவார்! அந்த அதிகார வெறி பிடித்த பணப்பிசாசுக்கு, என் தாத்தாவின் ஃபவுண்டரியையும் சுபளீகரம் பண்ணி விட ஆசை. தாத்தா, எனக்கு ஃபவுண்டரியைத் தருவதாக இருப்பதை எப்படியோ தெரிந்து கொண்டு, சம்பத்குமார் மூலம் அதையும் முழுங்கிவிட்டு, எங்களையும் ஆட்டிப் படைக்க ஆசை அவனுக்கு! அதற்காகத்தான், என்னை மணந்தே ஆக வேண்டும் என்று சம்பத்குமாரை அவன் விரட்டியது. பாவி! அப்படி என் வாழ்வை நாசமாக்க இவன் யார்? அதற்கு இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? என்னைப் பொருத்த வரையில், அந்த சம்பத்குமாரை மன்னித்தாலும் மன்னிப்பேனே தவிர, அந்தப் பாபுவை ஒருநாளும் மன்னிக்கவே மாட்டேன். என்றாவது ஒரு நாள், அவனை நேரில் சந்தித்து, நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி, அவனிடம் இதைக் கேளாமல் நான் விடவே மாட்டேன்!'' என்று சமாலினி குமுறினாள்.

நெடுஞ்சாலையில், லாரியோ, வேனோ நிறுத்தி ரிப்பேர் வேலை செய்தபோது சுற்றிலும் வைத்திருந்து, பின்பு அகற்றாமல் விட்டுவிட்டுப் போன பெரும்

கற்களைச் சுற்றிக் கொண்டு கவனத்துடன் காரை ஓட்டிய புவனன் கேட்டான். "அந்தப் பாபுவை நீ பார்த்திருக்கிறாயா?" நேரில் நல்ல வெளிச்சத்தில் காண நேர்ந்தால் இனம் கண்டு கொள்வாயா? என்று வினவினான்.

"அந்தக் கொடுங்கோலனை நேரில் பார்க்கும் பாவம் இதுவரை நான் பண்ணவில்லை!" என்றாள் அவள் எடுப்பாக.

"குரல்? அது எப்படி இருந்தது?"

"அது, அவன் பாம்பு மாதிரியல்லவா சீறினான்! ஓட்டல் காஃபி ஷாப்! அங்கே, சத்தமாகப் பேசப் பயம் என்று நினைக்கிறேன். இந்த மாதிரி ஒருவனை அதிகாரம் பண்ணுகிறானே என்று கேட்கிற எல்லோரும் அவனைத் தப்பாக மதிப்பிட்டு விடுவார்களோ என்று அஞ்சியிருப்பான்! அதனால், குரலைத் தணித்து, நல்ல பாம்பு மாதிரிச் சீறினான்! தானுக்கு இந்தப் பக்கமாக, அருகிலேயே இருந்ததால் எனக்குக் கேட்டது. அப்புறம் தானே, சம்பத்குமாரைவிட இவன் மோசமானவன் என்று தெரிந்தது!" என்றாள் சுமாலினி வெறுப்புடன்.

"அந்தக் காலத்து மனிதர்கள் மிகுந்த அறிவாளிகள்!"

"எ...என்னது? என்ன திடீரென்று? ஒருவேளை, இப்போது நான் ஞான பண்டிதனைக் கூப்பிட வேண்டுமோ?" என்றாள் சுமாலினி, கிடைத்த வாய்ப்பை விடாமல்.

சிரிப்பினூடே "வேண்டாம் வேண்டாம்!" என்றான் புவனன். இதோ, நானே விளக்கி விடுகிறேன்.



'பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே' என்று அந்தக் காலத்திலேயே எழுதி வைத்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள்! இந்த அசட்டு பாபு அது தெரியாமல், மக்கு மாதிரி, உன்னிடம் மாட்டிக் கொண்டு விட்டானே!" என்று அவன் விளக்கவும், "உண்மை!" என்று ஒத்துக் கொண்டு, சுமாலினி ஏளனமாக நகைத்தாள்.

பிறகு, "நன்றாக வேண்டும் அவனுக்கு! இப்போது சித்தி, திருமணத்தை நிறுத்தி விடுவார்கள். ஃபவுண்டரியும் அவன் கைக்குப் போகப் போவது இல்லை!" என்று குதூகலித்துவிட்டு, "திருமணம் நடந்தபிறகு, சம்பத்குமாரின் சுயரூபம் தெரிய வந்திருந்தால், ஏமாந்து விட்டோமே என்று நான் எப்படித் தவித்திருப்பேன்! ஏமாற்றம் எப்படி இருக்கும் என்று அவனும் அனுபவித்துப் பார்க்கட்டும்! ஒன்றே ஒன்றுதான் வருத்தமாக இருக்கிறது!" என்றாள் அவள் யோசனையோடு.

"சம்பத்குமார் நல்லவனாய் இல்லாமல் போய்விட்டதா?" என்று புவனன் ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.

"இல்லை...யே!" என்றாள் சுமாலினி சற்றுத் திகைத்த குரலில். நியாயமாய்ப் பார்த்தால், சம்பத்குமார் இவ்வளவு கெட்டவனாக இருந்து விட்டானே! அதனால் திருமணத்தையே நிறுத்தும்படி ஆகிவிட்டதே என்று எனக்கும் ரொம்பவும் வருத்தமாய்த்தான் இருந்திருக்க வேண்டும்! மாறாக, இந்த விஷயத்தை அலட்சியம் செய்து, தாத்தா, இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்து விடுவாரோ என்ற பயம்தான் பெரிதாக இருந்தது!" என்று தன்னைத்தானே வியந்தபடி உரைத்தாள்.

''பின்னே, வேறு என்னது: அந்த ஒரே ஓர் ஒப்பற்ற வருத்தம்?'' என்றான் அவன் குரலில் சிறு கேலி தொனிக்க.

திருமணம் நடக்காது; தாத்தாவின் ''பவுண்டரி கைக்குக் கிடைக்காது என்று அறியும்போது, அந்த பாபுவின் முகம் எப்படி இருக்கும் என்று பார்க்க எனக்கு ஆசை! அது இயலாதே என்கிற வருத்தம்தான்! வேறு என்ன? இஞ்சி தின்ற குரங்கு மாதிரி அந்தப் பாபுவின் முகம் மாறுவதைப் பார்க்க.. ஊகூம்! வழியே இல்லை!'' என்று கெக்களிப்புடன் கைகளை விரித்தான் அவன்.

சற்று இடைவெளி கொடுத்து, ''அவன் பெயரே பாபுவா அல்லது மோகனதாஸ்பாபு என்று ஏதாவது சுருக்கமா?'' என்று புவனன் வினவினான்.

''ச்சு! பாபு என்று மட்டும் தான் சம்பத்குமார் சொல்வது அவருடைய பெற்றோரும், 'பாபு பாபு' என்று தான் உருகினார்கள். ஆனால், மற்றபெயர் எல்லாம் சொல்லிப் பெரியவர்களை அவமானப்படுத்தா தீர்கள்?'' என்றாள் சுமாலினி வெறுப்புடன்.

சிறு மவுனத்தின்பின், ''என்னவோ, அந்தப் பாபுவை நீ அநியாயமாய்க் குற்றம் சாட்டுவதாகவே தோன்றுகிறது. அவன் ஒன்றும் சம்பத்குமாரைப்போலக் கண்ட கெட்ட பழக்கங்கள் உள்ளவனாகவும் தெரிய வில்லை! ஒரு வேளை, அவன் தன் சித்தப்பா மகனுக்கு நன்மை செய்வதாக எண்ணி, இந்தத் திருமணத்தை நடத்த முயன்றிருக்கலாம் அல்லவா?'' என்றான் புவ னன்.



''அப்படி அவனுடைய சித்தப்பா மகனுக்கு உண் மையிலேயே நன்மை செய்ய வேண்டும் என்று அவன் நினைத்திருந்தால், சம்பத்குமாரின் கெட்ட பழக்க வழக் கங்களை அல்லவா அவன் மாற்ற வேண்டும். அதை விட்டு, நீ எப்படி வேண்டுமானாலும் இருந்து தொலை என்றல்லவா சொன்னான்! அதை விடுங்கள் புவனன், இன்றைக்கு என்ன நடந்தது? நான் யாரோ ஒருத்தி! ஏதாவது குற்றம் - திருட்டோ கொலையோ கூடச் செய்துவிட்டு, உங்கள் காரில் ஒளிந்து கொண்டு வந்திருக்கலாம்! ஆனாலும், என்னை அனாதரவாய் விட்டு விட்டுப் போக மனமின்றித் திரும்பி வந்து அழைத்து வந்தீர்கள்! பசியென்று அறிந்ததும் உணவு கொடுத்தீர்கள்! யார், எப்படிப் பட்டவள் என்று அறியா மலே இவ்வளவு உதவி செய்கிறீர்கள்! ஆனால் அந்தப் பாபு என்ன செய்தான்?''

''எ..என்ன செய்தான்?''

''என்ன..செய்தானா? என் வாழ்வை நாசமாக்கப் பார்த்தான், சார்! நான் ஒரு குடும்பப்பெண் என்பது அவனுக்குத் தெரியும். நல்ல குடும்பம் என்பதும் அறிந்த விஷயம். என்னைப்போய், அந்தக் குணம் கெட்டவ னோடு இணைத்து என் வாழ்வை அடியோடு நாசமாக்க முயன்றானே! மனிதனா அவன்? சே! அவனைப் பற்றி நினைத்தாலே பற்றிக் கொண்டு வருகிறது! இந்த அளவு ஒரு மனிதனை நான் வெறுக்கக்கூடும் என்று நான் நினைத்ததே இல்லை!'' என்றாள் அவள் வெறுப்பும் கோபமுமாக.

"இன்னும் ஒரு பழமொழி நினைவு வருகிறது! ஆனால், அதைச் சொன்னால் நீ அடிக்க வரக்கூடும்!"

இலகுவான அவனது குரலில், தானும் சற்றே இறுக்கம் தளர்ந்து, "என்ன பழமொழி?" என்று சமாலினி வினவினாள்.

"அது ஆங்கிலப் பழமொழி விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையே இடைவெளி அதிகமில்லை என்று பொருள்படும் பழமொழி அது!"

"அதாவது?"

"அதிகப்படி வெறுப்பானது, திடுமென அதிகப்படி அன்பாக மாறி விடுமாம்!"

"வெறும் எட்டுச் சுரைக்காய்! கறிக்குதவாத குப்பை!" என்றாள் சமாலினி. "இன்றைக்கு உலகிலேயே நான் மிகவும் அதிகமாக வெறுக்கும் மூன்று பேரின் பெயர்களைச் சொல்லு என்றால், பாபு, பாபு, பாபு, என்பேன். அந்த வெறுப்பு விருப்பாக மாறுவது பூமியே மாற்றிச் சுழல்வது போலத்தான் நடக்கவே முடியாத காரியம்!" என்று முடித்தாள்.

"பாவம்!" என்று அனுதாபப்பட்டதோடு, புவனபூபதியும் பாபு பற்றிய பேச்சை விடுத்து வேறு பேசத் தொடங்கினான்.

சும்மா டிவி நிகழ்ச்சிகள், டிஸ்கவரி சேனல், கம்ப்யூட்டர் விந்தைகள், கிரிக்கெட் என்று பொதுவான விஷயங்கள்.



காலையில் பஸ்,லாரி என்று போக்குவரத்து அதிகமாகவும், "திருச்சி நெருங்கிவிட்டது" என்றான் அவன்.

அவள் தலையை வெளியே நீட்டி விழியால் துழாவிவிட்டு, "மலைக் கோட்டையைக் காணோமே!" என்றாள்.

"அது இங்கிருந்து தெரியாது. உயரம் அதிகம் இல்லாதது என்பதால், இன்னும் ஊருக்குள் போனால் தான் தெரியும்! ஆனால், விரைவிலேயே ஸ்ரீரங்கம் கோபுரம் தெரியும்" என்றான் புவனன்.

சற்று வேகம் தணித்து, "ஒரு சின்ன யோசனை, சமாலினி" என்றான் அவன். "நீ மதுரையைச் சென்றடைய காலக் கெடு ஒன்றும் கிடையாதல்லவா? இனி, அருகில்தான் எங்கள் வீடு. அங்கே வந்து, கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு கிளம்பலாமில்லையா? டெலிஃபோன் கூட அங்கிருந்தே பேசலாம். உன் தாத்தாவுடன் தொடர்பு கொள்ள எப்படியும் இன்னமும் முக்கால் மணி நேரம் இருக்கிறது.."

"இல்லை புவனன். நான் சித்தியிடமே பேசிவிடலாம் என்று இருக்கிறேன். சித்தி மூலம் தாத்தாவிடம் சொல்வது எளிது... நல்லதும் கூட..."

"ம்ம்?" என்று தாடையைத் தடவிக் கொண்டான் அவன். "இது முக்கியமான, சொந்த விஷயம்! இதை உன் சித்தி மூலமாகத் தெரிவிப்பதை விட, நீயே நேராக உன் தாத்தாவிடம் சொல்வதுமேல் அல்லவா? பொதுவாக, நமக்கு மிக முக்கியமானதாய் இருக்கும் விஷயங்கள், மற்றவர்களுக்கும் அப்படியே தோன்றும் என்று

சொல்ல முடியாது. இரண்டு கைமாறிச் செல்லும்போது சொத்தென்று போய் விடுவதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்! - அதனால், உன் தாத்தாவிடம் நீயே..."

"உங்களுக்கு என் தாத்தாவைத் தெரியாது..!"

"ஒரேயடியாய் அப்படிச் சொல்வதற்கில்லை. தொழில் முறையில் அவரைச் சந்தித்திருக்கிறேன். கொஞ்சம் அதிகாரமாய்ப் பேசுவது போலத் தோன்றும்..."

"தோன்றுமா?! அதுவும் கொஞ்சமா? அவரிடம் நான் நேரடியாகப் பேசினால், அவர் அதட்டுகிற அதட்டலில், நான் உடனேயே விழுப்புரம் சென்று, அந்தப் பாபுவின் கட்டளைப்படி சம்பத்குமார் கொண்டு வருகிற தாலிக்கு அழுது கொண்டே கழுத்தை நீட்டும்படி ஆகிவிடும்! ஊகூம். என்னால் முடியாது! சித்திதான் அவரிடம் பேச வேண்டும்! இந்தக் கல்யாணம் சித்திக்கும் அடியோடு பிடிக்காததுதான். அதனால், தாத்தாவிடம் எப்படியாவது சாமர்த்தியமாகப் பேசித் திருமணத்தை நிறுத்தி விடுவார்கள்! அது அவர்களால்தான் முடியும்!" என்றாள் சுமாலினி.

"உன் விருப்பம்" என்றான் புவனபூபதி. "ஆனால், உன் சித்திக்கேனும் என் வீட்டிலிருந்து டெலிஃபோன் செய்யலாமில்லையா?"

சற்று யோசித்தவனுக்கு அதுவும் உசிதமாகப் படவில்லை!



தாத்தாவை அறிந்ததால், அவருடைய பேத்தி என்பதால் உபகாரம் செய்கிறானோ என்று தோன்றியது. ஆனால், எஸ்டிடி பூத்தில் என்றால்,எவ்வளவு பணம் ஆகிறது என்று உடனே தெரிந்து கொள்ளலாம். இப்போது முடியாவிட்டாலும், பின்னாளிலேயே எப்படியும் திருப்பிக் கொடுத்து விடலாம். அத்தோடு, இவன் வீட்டில் இவனுடைய மனைவி, மற்ற உறவினர் எல்லாம் எப்படிப்பட்டவர்களோ? இந்த விடிகாலை நேரத்தில் கணவன் ஓர் இளம் பெண்ணுடன் வந்து இறங்குவதையே எப்படி எடுத்துக் கொள்வாளோ? என்னவோ? அதற்கு மேல், டெலிஃபோன் செலவு வேறு இழுத்து வைத்தால், எப்பேர்ப்பட்ட நல்லவளாக இருந்தாலும் எரிச்சல்பட்டே தீருவாள்! எதற்கு வீண் தொல்லை!

பிடிவாதமாய் எஸ்டிடி பூத்துக்கே புவனபூபதியைப் போகச் சொன்னாள் அவள்.

ஆனால், அங்கே சித்தி மாலதியுடைய கணவர் சொன்ன சேதியைக் கேட்டதும் சுமாலினிக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

## 12

சித்தி மாலதி, இன்னமும் அவளது வீட்டுக்குப் போய்ச் சேரவில்லை. சரிதான்; அவள் சென்னையிலேயே இருந்தால், இன்னொரு கால் போட்டேனும் அவளிடம் பேச வேண்டியதுதான் என்று எண்ணியவளுக்கு, அடுத்து மாதவன் தந்த தகவல், இடியாய் இருந்தது.

அந்த ஏற்றுமதியாளர்கள் கூட்டத்தில், சில பல வாடிக்கையாளர்கள் மாலதிக்குக் கிடைத்திருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து பங்களூர் சென்று விட்டு, அப்படியே கொஞ்சம் கொள்முதலையும் முடித்துக் கொண்டு இன்னும் இரண்டு நாட்களில் அவள் மதுரை வந்து சேருவாள்.

பங்களூர் போய்ச் சேர்ந்து, தங்குமிடம், அங்கே என்னென்ன சாதித்தாள் என்பதெல்லாம், இன்று இரவு மாதவனுக்குத் தெரிவிப்பாள்!

இரவு தெரிவிப்பாள்!

அப்படியானால், தாத்தாவுடன் ஒரு மணிக்கு யார் பேசுவது? இனி அவ்வளவுதான். எதிர்காலம் என்பது ஒரு இருட்டுதான்!

கண்களில் நீர்த் திரையுடன், உடம்பெல்லாம் வெல வெலத்துப் போய் பூத்திலிருந்து வெளியே வந்தவளைப் பார்த்ததும் புவனபூபதியே திகைத்துப் போனான். "என்னம்மா, சித்திக்கு என்ன?" என்று கவலையும் கரிசனமுமாக வினவினான்.

ஆனால், சுமாலினி சொன்ன விவரம் கேட்டதும், அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது. ஆனால் அதைச் சுமாலினி அறியாமல் அடக்கி மறைத்தான்.

அப்படியே அவன் முகம் அவனது உணர்வைக் காட்டியிருந்தாலும், சுமாலினி அதைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை.



வீட்டிலும், தொழிலிலும் கிட்டத்தட்ட முழுப் பொறுப்பேற்று நடத்திய புவனபூபதிக்குச் சுமாலினியின் தாத்தா பயத்தைப் பற்றிச் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை. சம்பத்குமாரை மணந்து கொள்ள முடியாது என்று அவள் உறுதியாகச் சொன்னால் யார் என்ன செய்ய முடியும் என்பது அவனுக்கு.

தண்ணீரில் நீந்தி வாழும் மீனுக்குப் பாலைவனத்தில் அருந்த ஒரு வாய் நீர் இல்லாமல் மடிகிறார்கள் என்றால் புரியாது. அதேபோல, தானாக முடிவெடுத்து, செயல்படுத்திப் பழக்கப்பட்டிருந்த அவனுக்குத் தன் சொந்தத் தாத்தாவிடம் தன் முடிவை- முடிவு நியாயமானதும் கூட எனும்போது, அதைச் சொல்ல சுமாலினி அஞ்சி நடுங்குவது வேடிக்கையாகத்தான் இருந்தது.

டெலிஃபோன் பூத்திலிருந்து சுமாலினி வெளி வந்தபோது, அவள் முகத்தைப் பார்த்ததும், அவளுடைய சிறிய தாய்க்கு ஏதேனும் விபத்து நேர்ந்து விட்டதோ என்றுதான் அவன் முதலில் பயந்து விட்டான்.

மாறாக, அவள் தெரிவித்த விவரம் அவனுக்குப் 'ப்பூ!' என்றுதான் இருந்தது.

ஆனால், சுயமாய் ஒரு முடிவுவெடுத்து அறியாதவள் சுமாலினி. சின்னச் சின்ன விஷயங்களில்கூட அவளது விருப்பங்கள் மறுக்கப்பட்டே அவளுக்குப் பழக்கம். இப்போது, வரப்போகும் அழிவைத் தன்னால் தடுக்க முடியும் என்ற நம்பிக்கை சிறிது கூட இல்லாமல், உதவிக்கு சிறிய தாயை மலைபோல் நம்பியிருந்தவள், இப்போது அது நடவாது என்று தெரிந்ததும் இடிந்து போனாள்.

சித்தி மாலதி இல்லாமல் அவளது வீட்டுக்குப் போக முடியாது! தாத்தா தவிர வேறு போக்கிடம் கிடையாது! தாத்தாவுக்கோ, அவரைச் சார்ந்த அத்தனை பேருக்கும் அவரது சொல்தான் வேதமாய் இருந்தாக வேண்டும்!

சம்பத்குமாரை மணந்து, வாழ்நாளெல்லாம் கண்ணீர் வடிப்பது தான் அவளது தலை விதி என்று இருக்கும்போது, அவள் என்ன முயன்று என்ன பயன்!

''எனக்கு இன்னொரு 'டெலிஃபோன் காலு'க்கும், விழுப்புரத்துக்கு, பஸ் டிக்கட்டுக்கு பணமும் தருகிறீர்களா?'' என்று உதடு துடிக்க, சமாலினி புவனபூபதியிடம் வினவினாள்.

''விழுப்புரத்துக்கு டிக்கட்டா? ஏன்? மதுரைக்குப் போவதாகத்தானே ஏற்பாடு?''

''சித்தி, தாத்தாவிடம் பேச முடிந்திருந்தால், அப்படிச் செய்திருக்கலாம். இப்போது...'' என்றாள் அவள் நிராசையும் சோர்வுமாக.

அவள் முகத்தை அவன் இமை இடுங்கக் கேள்வியாய் நோக்கவும், ''ஏழு மணிக்குத் தாத்தா என்னைத் தேடத் தொடங்குமுன், நான் இருக்கும் இடத்தைத் தாத்தாவிடம் சொல்லியாக வேண்டும்... இல்லாவிட்டால்... அவருக்கு ஸ்ட்ரோக் மாதிரி எதுவும் வந்து விடக் கூடும்.. அவரிடம் நான் பேசினால், கட்டாயம் விழுப்புரத்துக்கு வரும்படிச் சொல்வார். அதை என்னால் மீற முடியாது... அப்புறம்...'' என்றவளுக்கு மேலே பேச மாட்டாமல் உதடு நடுங்கியது.



'ஷ்! அழக்கூடாது. இப்போது என்ன? உன் தாத்தாவிடம் பேசி, நீ உடனே விழுப்புரம் செல்லாதிருக்க வகை செய்ய வேண்டும்! அவ்வளவுதானே! சற்றுப் பொறு!'' என்றவன், மடமடவென்று டெலிஃபோன் பூத்தினுள் சென்றான்.

''புவனன்! வேண்டாம்...'' என்றபடி அவள் அவன் பின்னோடு சென்ற போது, அவன், தனி அடைப்புக்குள் சென்று பேசத் தொடங்கி விட்டிருந்தான்.

கடவுளே! இதற்கு வேறு அவன் வாங்கிக் கட்டியாக வேண்டுமா? 'யாரோ ஓர் அன்னியன்! அவன் மூலம் எனக்கு இப்படி ஒரு தகவல் தருகிறாயா? என்று அவனை வாட்டி வறுக்கப் போகிறார்!

தவிப்புடன் சமாலினி மிஞ்சி மிஞ்சி ஓர் இரண்டு நிமிடங்கள்தான் நின்றிருப்பாள்! அதற்குள், அடைப்புக் கதவைத் திறந்து அவளை உள்ளே வருமாறு புவனபூபதி அழைத்தான்.

சரியான மண்டகப்படி நடக்கப் போகிறது என்று அச்சத்தில் கால்கள் பின்ன உள்ளே வந்தவளிடம், 'வெற்றி' என்பதுபோல் கட்டை விரலை உயர்த்திக் காட்டி, டெலிஃபோன் கருவியைப் புவனன் கொடுத்தான். ''உன் தாத்தா உன்னிடம் பேச வேண்டுமாம்!''

கைகளின் நடுக்கத்தில் சமாலினி அந்தக் கருவியையே முதலில் கை நழுவ விட்டாள்.

ஆனால், அது கீழே விழுமுன் பிடித்து, அவள் காதில் வைத்துப் பிடித்துக் கொண்டு, ''பேசு!'' என்பது போலப் புவனன் சைகை செய்தான்.

"தா.. த்தா!.."

"மிஸ்டர் புவனன் எல்லாம் சொன்னார். அவர் வீட்டில் இருக்கும்போது, குமாரசாமியின் பேத்தி என்பதை மறக்காமல், நம் கவுரவத்துக்குப் பங்கம் வராமல் பழகு. இங்கிருக்கும் உன் துணிமணி... சித்தி தந்த சுரிதார், மற்ற சாமான் எல்லாம், கூரியரில் அவர் தந்த விலாசத்துக்கு அனுப்பி வைக்கிறேன்! புவனன் அம்மாவிடம் நல்ல பெயர் எடு! மதுரைக்குப் போவது பற்றிப் பிறகு முடிவு சொல்லுகிறேன். இப்போது, அவரிடம் ரிசீவரைக் கொடு!" என்றார் அவர்.

உலகம் என்ன, மாற்றிச் சுழலத் தொடங்கி விட்டதா?!

ஒன்றும் புரியாத திகைப்புடன், சுமாலினியின் கண்கள் புவனபூபதியின் முகத்தில் தைத்தன.

பழக்க தோஷமாய்ச் "சரி தாத்தா!" என்று வாய் உரைக்க, கை ரிசீவரைப் புவனனிடம் நீட்டியது.

அவன் என்ன சொல்கிறான் என்பதை அறியக் கவனத்துடன் காத்திருந்தவளுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

"ஓகே சார், நீங்கள் கவலையற்று இருங்கள். உங்கள் மாத்திரைகளை ஒழுங்காகச் சாப்பிட்டு உடம்பை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பேத்தியின் ஒரு பெருங்கவலை உங்கள் உடம்பைப் பற்றியதுதான். சரி சார் வைக்கட்டுமா?" என்று, அவளால் ஒன்றும் கண்டு கொள்ள முடியாத வாசகங்களுடனேயே அவன் பேச்சை முடித்து விட்டான்.



பணக் கணக்கு பார்ப்பதற்காகவே வெளியே எஸ்டிடி பூத்திலிருந்து பேச விரும்பியவள். இப்போது அவன் எவ்வளவு கொடுத்தான், என்ன என்று கவனிக்கவே இல்லை.

அவளுள்ளே ஒரே பிரமிப்பு. இவன் என்ன மாய மந்திரம் போட்டான்! தாத்தா இவ்வளவு எளிதாக, வெளியே தங்க அவளை அனுமதித்து விட்டாரே! அதுவும் இவன் வீட்டிலேயே! மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சித்தி வீட்டுக்கு அனுப்ப, அந்தப் பாட்டுப் பாடியவர்!

அதிலும், அவள் சொல்லாமல் கொள்ளாமல் வந்தது பற்றி ஒரு வார்த்தை திட்டவில்லையே!

உலகம் மாறியேதான் சுற்றுகிறதா?!

கண்முன்னே யாரோ சொடக்குப் போடுவது போல அசைவும் சத்தமும் உணர்ந்து திடுக்கிட்டுப் பார்த்தாள்.

அவன்தான்! புவனபூபதிதான் அவள் முகத்தின் முன் சொடக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

திகைத்து விழித்தவளிடம், அவன் புன்னகையோடு 'என்ன'வென்பது போல ஜாடை காட்டவும் அவள் முகம் லேசாக சிவந்தது.

இப்படிச் சுற்றுப்புறம் மறந்து யோசனையில் ஆழ்வதை முதலில் திருத்த வேண்டும்!

ஒரு சமாளிப்பு முறுவலின்பின், "எப்படி சாதித்தீர்கள்?" என்று வியப்புடன் விழி மலர வினவினாள்.

"தொழில் முறைத் தொடர்பு உண்டு என்று சொன்னேனே! அய்யாவின் அருமை பெருமைகள்

அறிந்தவர் என்பதால், உடனே ஒத்துக் கொண்டு விட்டார்!'' என்றவன் அவள் முகத்தைக் கூர்ந்து விட்டு, ''சம்பத்குமார் பற்றி கூட, உன் அபிப்ராயத்துக்கு முதலிடம் கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறார். நிம்மதி ஆயிற்றா?'' என்று அவளுக்குத் தேவைப்பட்ட அதிகப்படித் தகவலும் தந்தான்.

அவளது அபிப்ராயத்துக்குப் பெரியவர் முதலிடம் கொடுப்பதில் சமாலினிக்கு அவ்வளவாக நம்பிக்கை ஏற்படவில்லைதான். ஆனால், அவகாசம் கிடைத்திருக்கிறது! அந்த அவகாசம் முடிவதற்குள் சித்தி வந்து விடுவார்கள். அதற்கு மேல் சித்தி பார்த்துக் கொள்வார்கள். எப்படியும், இனி அவள் சம்பத்குமாரை மணக்க நேராது!

முகம் பூவாய் மலர, மகிழ்ச்சியுடன், ''நூறு சதவீதம்!'' என்றாள் அவள்.

''அப்படியானால், இனி வீட்டுக்குக் கிளம்பலாமா?''

''ஓ!'' என்று அவனோடு இரண்டு அடியெடுத்து வைத்த சமாலினி தயங்கி நின்றாள்.

''என்ன? என்ன திடீரென்று?''

''திடீரென்று ஒன்றும் இல்லை... வரும்போது நீங்களே சொன்னீர்களே!''

''எது பற்றி, என்ன சொன்னேன்?''

''ஒரு கட்டைத் தடியனோடு காரில் போனது பற்றித் தாத்தா..? என்று சொன்னீர்களே! இப்போது



ஒரு கட்டைத் தடிச்சியோடு காரில் வந்து அதுவும் இந்த நேரத்தில் வந்து இறங்கினால், உங்கள் மனைவி உங்களைத் திட்டமாட்டார்களா?'' என்று சமாலினி வினவினாள். இலகுவாக பேச அவள் முயன்றபோது குரல் இறுகி விட்டிருந்தது.

''ம்ம்...?'' என்று புவனன் தீவிரமான யோசனையில் இறங்கினான்.

கடவுளே! அவன் மனைவி சந்தேகப் பிராணி போலவே தோன்றுகிறதே என்று எண்ணும்போதே, சமாலினிக்கு வயிற்றினுள் பிசைந்தது.

''உன் கேள்விக்குச் சரியான பதிலை நேரில் கேட்டுத் தெரிந்து, அதன் பிறகுதான் சொல்ல முடியும்! அதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகுமே! பரவாயில்லையா?''

''ஏன் சார்? அவர்கள் வீட்டில்... ஊரில் இல்லையா?''

''இருப்பாள்! வீட்டில் தான் இருப்பாள்! ஆனால் எந்த ஊரில், எந்த வீட்டில் என்று தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றான் அவன் சீரியசான முகபாவனையோடு. சமாலினி புரியாமல் விழிக்கவும் ''ஆமாம்மா! அவளைத் தேடிக் கண்டுபிடித்து , கல்யாணம் பண்ணி, அவளிடம் இந்தக் கேள்வியைக் கேட்டு அதன் பிறகு தானே அவளது பதிலை உன்னிடம் சொல்ல முடியும்? எப்படியும் அவகாசம் நிறையவே வேண்டும்தானே?'' அவன் சிரித்தான்.

'ஜிவ்'வென்று வானத்தில் பறக்கும் உணர்வோடு, தானும் அவனோடு சேர்ந்து சிரித்துவிட்டு, ''மனைவி இல்லாவிட்டால், உங்கள் பெற்றோர்!'' என்றாள் அவள் விடாமல்.

''என் அப்பா இப்போது இந்த நாட்டிலேயே இல்லை. அப்படியே இருந்தாலும், என் பெற்றோர் ஒரு நாளும் என்னைத் தவறாக எண்ண மாட்டார்கள்!'' என்று முடித்தவன் ''முக்கியமான இன்னொரு திருத்தம். அந்தக் 'கட்டைத் தடிச்சி' என்கிற வார்த்தை ரொம்பவும் முரண்பாடாய்க் காதில் கர்ண கடூரமாய் ஒலிக்கிறது! மலர்க் கொடி என்று கொஞ்சம் பொருத்தமாகவே சொல்லிக் கொள்ளலாமே!'' என்று புவனன் கார்க் கதவை அவளுக்குத் திறந்து விட்டான்.

உச்சி குளிர்ந்து, உள்ளூரப் பெருமிதமுற்றவளுக்கு, இன்னொரு திருத்தமும் அவசியமே என்று தோன்றி விட, சுற்றிக் கொண்டு வந்து காரில் ஏறியவனிடம் திரும்பி, ''நீங்களும்தான் கட்டைத் தடியனாகத் தெரிய வில்லை. நல்ல உயரமாக, ஒன்று போல நன்றாகத்தான் இருக்கிறீர்கள்!'' என்றவளுக்குத் தன்னை மீறிக் கன்னம் சிவந்தது. அவன் எவ்வளவு இயல்பாகப் புகழ்கிறான். அவளுக்கு மட்டும் என்ன வந்தது? கன்னம் சிவப்பதற்கு?

சட்டைக் காலரை ஒரு சிரிப்புடன் புவனன் தூக்கி விட்டுக் கொண்டான்! ''பார்த்தால் அசப்பில் கொஞ்சம் 'பியர்ஸ் புரோஸ்னன்' போல இல்லை? அதுதான், ஸ்டார் பிளஸ்சில் 'ரெமிங்டன் ஸ்டீல்' தொடருடைய கதாநாயகன்! நல்ல உயரம், ஒரு கிராம் அளவு கூட



அதிகச் சதை இல்லாத, ஆனால் கட்டான உடல் அமைப்பு. எந்நேரமும் கண்ணில் சிரிப்பு; பளிச்சென்ற முகம் கம்பீரமான தோற்றம்...''

சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''தற்கொலைக்குச் சமம் என்று வியாசர் சொல்லுகிறார்'' என்றாள் சுமாலினி.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, எனக்குக் கேட்கவில்லையே!'' என்றபடி காரை கிளப்பினான் அவன்.

''என்னது?''

''யாரோ வியாசர் சொல்கிறார் என்றாயே, அது!''

''அச்சோ! அவர் மகாபாரதத்தில் அப்படி எழுதியிருக்கிறார்! அதைச் சொன்னேன்!''

''யாராவது பீற்றல் கேசுக்கு குட்டு வைப்பதற்காக அப்படி எழுதியிருந்திருப்பார்.''

''அதெல்லாம் இல்லை. ஒரு சபதத்துக்காகத் தற்கொலையிலிருந்து மீள்வதற்காகத் 'தற்கொலையும் தற்பெருமையும் ஒன்றே; அதனால், தற்கொலைக்குப் பதிலாகத் தற்புகழ்ச்சி செய்துகொள்' என்று கண்ணன், காண்டீபனுக்குக் கற்றுக் கொடுக்கும் வழி அது'' என்று சுருக்கமாக சுமாலினி விளக்கினாள்.

''கண்ணன் சொல்வதாக வந்ததென்றால் அது சரியானதாகத்தான் இருக்கும்! ஆனால் ஒரு முக்கியமான வேறுபாட்டை மறந்துவிட்டாயே!''

''அது என்னவாம்?''

"தற்கொலைக்குச் சமம் என்று வியாசர் குறிப்பிடுவது. தற்பெருமை! நான் உண்மையை அல்லவா சொன்னேன்!" என்று அவன் கூறிச் சிரிக்க, மறுத்து வேறு பேசத் தோன்றாமல் அவளும் சேர்ந்து நகைத்தாள் ஏனெனில், உள்ளூர, அவள் மனமும் அவனது தோற்றச் சிறப்பை ஒத்துக் கொண்டு விட்டிருந்தது!

சிரிக்கச் சிரிக்கப் புவனபூபதி பேசினானோ, அல்லது இப்போதைக்கு மலையாய்த் தோன்றிய பிரச்னைகள் எல்லாம் வெறும் பனியாய் மறைந்து விட்டதால் சமாலினியின் மனநிலை லேசாகி விட்டிருந்ததோ புவனனின் வீடு போய் சேரும் வரை அடிக்கடி காருக்குள்ளிருந்து சிரிப்புச் சத்தம்தான் கேட்டது.

இருபுறமாய், நீளச் சென்ற சுற்றுமதிலின் இடையே அமைக்கப்பட்டிருந்த கேட்டின் முன் புவனபூபதி காரை நிறுத்தவும்தான், சமாலினிக்குத் திக்கென்றது.

புவனனுடைய தாயார், மகனைத் தவறாக நினையாதவராக இருக்கலாம். ஆனால் அவளை?

புவனனே முதலில் அவளைத் தவறாக எண்ணி விடவில்லையா? பணியாள் கதவைத் திறந்து விடக் கார் உள்ளே சென்று வீட்டு வாயில் முன் போர்டிகோவில் நின்றது.

நெஞ்சு தடதடக்க நோக்கியவளிடம், புவனன் ஆதரவாய் புன்னகை செய்தான்.

காரிலிருந்து இறங்கி, அவள் புறமாய் வந்தவன், கதவு திறந்து விடுவதற்குப் பதிலாக, "சற்றுநேரம் இங்கேயே இரு, சமாலினி. நான் போய் அம்மாவை



அழைத்து வருகிறேன்." என்றவன், அவள் பதில் கூறுமுன், வேகமாக வீட்டினுள் சென்றான்.

என்ன சொல்லப் போகிறான்? தாயின் காலைப் பிடித்து வந்தவளிடம் முகம் கொடுத்துப் பேசும்படி கெஞ்சப் போயிருக்கிறானா? சே! அவன்தான் உபசாரத்துக்கு அழைத்தான் என்றால், அவளும் யோசியாது வெட்கமின்றி ஒட்டிக் கொண்டு விட்டாளே!

ஆனால், அவளுக்கும்தான் வேறு போக்கிடம் என்ன இருக்கிறது? அனாதைகளுக்கு ரோஷம் ஒரு கேடா?

சே! இப்படித் தன்னிரக்கத்தில் கரைவது முட்டாள்தனம். அதற்குப் பதிலாக, உருப்படியாக இந்த இடத்தைப் பார்த்து ரசிக்கலாம். ரசிக்க முடிகிறதோ, இல்லையோ! பார்த்துக் கொண்டேனும் இருக்கலாம்.

ரசிக்கத் தகுந்த அளவு அந்த இடம் அழகாய்த்தான் இருந்தது. சுற்று மதிலோடு ஒப்பிடுகையில், வீடு சற்று சிறியதுதான் என்றாலும், வெகு அழகாக இருந்தது. வீட்டின் முன்பகுதி முழுவதும் அழகிய பூந்தோட்டம்! அரை வட்டமாய்க் கார் ஓடும் சாலை. வட்டத்தின் நடுவே, பசிய புல்வெளியின் நடுநடுவே, வண்ணங்களாய்ப் பூத்துச் சொரியும், புதர்ச் செடிகள், ஒருபுறமாய்க் கொடி மல்லிகையும், மறுபுறமாய்ப் பிச்சியும் பந்தலில் படர்ந்து, பூத்து மணம் பரப்பின.

தன் பேத்தியின் வாழ்வுக்கும், பாதுகாப்பாய் ஒரு நல்ல பந்தலை அமைத்துத்தரத்தான் தாத்தா முயன்றிருக்க வேண்டும்! அவளது தலையெழுத்து, அந்தப்

பந்தலின் கால்கள் எல்லாமே உளுத்துப் போனவையாக அமைந்து விட்டது! ஆனால், அவளது தலையெழுத்து நன்றாயிருந்தால் அவளுடைய பெற்றோர் இறந்திருக்க மாட்டார்களே! தாய், தந்தை இல்லாத அனாதை என்றால் எல்லோரும் அவரவர் விருப்பம் போலத்தான் ஆட்டி வைப்பார்கள்!

ரோஷமும் அவமானமுமாகச் சுமாலினி துடித்துக் கொண்டிருந்தபோது, புவனனுடன் பேசியவாறே முன்னுச்சியில் கம்பீர நரையுடன், ஓர் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி வந்தார்.

அவளை நேராக நோக்கி, அவர் புன்னகை புரியவும், தன் வேலைகள் எல்லாம் மறைவதை சுமாலினி உணர்ந்தாள்.

## 13

முகம் நிறைந்த முறுவலோடு, ''வாம்மா, சுமாலினி!'' என்று புவனபூபதியுடைய தாயார் வாயார அவளை வரவேற்கவும், சுமாலினிக்கு, 'அப்பாடி' என்றிருந்தது.

புவனன் சொன்னதுபோல, அவனுடைய தாயாருக்கு மகன் மீது மிகுந்த நம்பிக்கைதான் போலும்! மகனின் ஒழுக்கத்தின் மீதும் மட்டுமல்ல; அவனது மதிப்பீட்டிலும்! மற்றபடி, இந்த வரவேற்பு அவளுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை!



தாயாரிடம் விவரம் சொல்லி அழைத்து வருவதற்காகத்தான், சுமாலினியைப் புவனன், தனியே அமர வைத்து விட்டுப் போயிருக்கிறான்!

மனபாரம் அகன்றவளாய், ''வணக்கம் அம்மா'' என்று கரம் குவித்து, சுமாலினியும் முறுவலித்தாள். ''என்னால், உங்களுக்கு மிகுந்த தொந்திரவு!'' என்றாள் மெல்லிய குரலில்.

''என்னம்மா, தொந்திரவு? உனக்கென்று தனியாக அரைக்கப் போகிறேனா, சமைக்கப் போகிறேனா? எங்களுக்குச் செய்வதில், உனக்கும் ஒரு பிடி! வா! உள்ளே வா! முகமெல்லாம் காய்ந்து வாடிக் கிடக்கிறதே! இரவெல்லாம் தூங்காதது! உள்ளே வா! நல்ல வென்னீரில் குளித்து விட்டு, இரண்டு இட்லிகளைச் சாப்பிட்டு விட்டுப் பேசாமல் படுத்துத் தூங்கு! நன்றாகத் தூங்கி எழுந்தால், உடம்பு நன்றாக இருக்கும்! வாம்மா!'' என்று சுமாலினியை உள்ளே அழைத்துச் சென்றாள்.

உள்ளே சென்ற வேலையாளை அழைத்து, எல்லோருக்கும் காபி கொண்டுவரச் செய்தார்.

''இரண்டு பேரும் போய் முகம் கழுவிவிட்டு வந்து முதலில் காஃபியைக் குடியுங்கள்.'' என்றுரைத்தார்.

சுமாலினியைக் குளியல் அறைக்கு அடையாளம் காட்டி அழைத்துச் செல்லப் பணிப் பெண் ஒருத்தி வந்தாள்.

''குளியல் அறை அலமாரியில், புது பிரஷ் இருக்கும், சுமாலினி, 'பேஸ்ட்'டும் இருக்கும். பயன்படுத்திக் கொள்.'' என்று செல்வநாயகி சொல்லி அனுப்பினார்.

விழித்தே இருந்தபோதும், சமாலினிக்கு வாய் வழ வழ என்று இருந்தபடியால், மறுக்காமல் பிரஷ்ஷை எடுத்துப் பல் துலக்கினாள்.

இந்தச் செலவை எல்லாம், புவனனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தோடு சேர்த்துக் கொடுத்து விட வேண்டும் என்று எண்ணியபடி, தன் தேவைகளை முடித்துக் கொண்டு சமாலினி திரும்பி வந்தாள்.

ஊரை நெருங்கும்போது உள்ளூரத் தயக்கம் வந்து விட்டது.

புவனனும் பல் துலக்கப் போயிருப்பான். அவனது சொந்த வீடு! குளியலைக் கூட முடித்து விட்டு வரக்கூடும்! தனியே, எப்படி அவன் அன்னையிடம் போய் நிற்பது? என்ன பேசுவது?

தயங்கியவாறே மெல்ல வந்தவளின் காதுகளில், செல்வநாயகியின் குரல் கேட்டது. ''இந்த அலுப்பிலும், களைப்பிலும், மன உளைச்சலிலும் கூடப் பூ மாதிரி இருக்கிறாள்! இவளைப் போய்... அதுதான் பேராசை பிடித்த குடும்பம் என்றாலும், இந்த மனிதர் நன்கு விசாரித்திருக்க வேண்டாமா?'' என்றார் அவர் ஆதங்கத்துடன்.

அவள் கதைதான் என்று சமாலினிக்குத் தோன்றியது. சம்பத்குமாருடைய குடும்பம் பேராசை பிடித்தது. சம்பத்குமாரைப் பற்றித் தீர விசாரித்தறியாதவர் தாத்தா!

உண்மைதான் என்றாலும் உள்ளூர அவமானமாக இருந்தது. சம்பத்குமாரைப் பற்றித் தாத்தா நன்றாக விசாரித்திருந்தால், இந்த அவமானம், தாத்தா, பேத்தி இருவருக்குமே நேர்ந்திராது!



''ஏதோ! பட்டதெல்லாம் நல்லதற்கே! ஆனால், ராணியாக வாழும் நிலைமை காத்திருக்கும்போது, குப்பை மேட்டில் தள்ள முடியுமா?! என்னடா... புவன்? புவனன்! அழகாயில்லை?''

''ஷ். அம்மா!'' என்ற புவனனின் எச்சரிக்கை குரல், அவன் தாயின் பேச்சை நிறுத்தியது.

அவள் வந்துவிட்டதைக் கண்டு விட்டு எச்சரித்தானா? அல்லது வந்து விடக்கூடும் என்று தாயின் இயல்பான பேச்சை நிறுத்தினானா? அது என்ன அவளுக்காகக் காத்திருக்கும் ராணி நிலைமை? ஒரு வேளை, இந்தப் பேச்சு அவளைப் பற்றியது அல்லவோ? அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்! இருந்திருந்து. அவளைப்போய் யார் ராணியாக்கக் காத்திருப்பார்கள்!''

தாத்தா வீட்டுச் சமையல்காரி சொல்வது போல, கழுதை மேய்க்கும் அதிருஷ்டத்தை வைத்துக் கொண்டு...

''வாம்மா!'' என்று முகம் மலரச் செல்வநாயகி அவளை அருகழைத்தார். ''என்னம்மா இலகுவாய்ச் செமிக்கும்படி இரண்டு இட்லி உண்டு விட்டுப் படுத்து உறங்குகிறாயா? அல்லது, தூங்கி விழித்த பிறகு சாப்பிடுகிறாயா? வ..வந்து இப்படி பயணம் வரும்போது புவனன்...'' என்றவரை, மைந்தன் இடைமறித்தான்.

''காஃபி மட்டும் இப்போது போதும் அம்மா. உணவாகச் சாப்பிட்டு விட்டு உடனே படுத்தால்

செரிமானம் ஆகாது. பானம் ஏதாவது கொடுத்து விட்டுப் படுத்துத் தூங்க அவளுக்கு ஓர் இடத்தைக் காட்டுங்கள்! அல்லது நின்றபடியே தூங்கிவிடுவாள்!'' என்று வேடிக்கை போல அவன் முடித்த விதத்தில் புன்னகை தோன்றிய போதும், சுமாலினிக்குத் தூக்கம் கண் சொக்கத்தான் செய்தது.

அவளாவது முன் பாதி இரவில் காரில் படுத்து உறங்கி இருந்தாள். அவன்?

யோசனையோடு நோக்கியவளிடம் புவனன் புன்சிரிப்பாய் வரிசைப் பல்லைக் காட்டினான். அவளது எண்ணத்தை வாசித்தவன் போல ''எனக்கு இது பழக்கம், சுமாலினி. இப்படி இரவில் காரில் வருவதும், பிறகு சேர்த்து உறங்கிக் கொள்வதும் பழகி விட்டது.'' என்றான் அவன்.

காஃபி நரம்புகளைத் தூண்டி விடக் கூடியது! அதைக் குடித்து விட்டு எப்படி உறங்குவது என்று அவள் உள்ளூர நினைத்திருந்தாள். ஆனால், இரவு விழிப்புக்கும், அகாலத்தில் உண்ட உணவுக்கும் ஈடு கொடுக்கும் வகையில், கொத்துமல்லி விதை, சுக்கு, ஏலம் பொடித்துப் போட்டு வந்த சுவையான காஃபி அவளுக்கு உவப்பளித்தது.

சுமாலினி உறங்குவதற்கென்று, அவளைத் தன் படுக்கைக்கே செல்வநாயகி அழைத்துச் சென்றார்.

படுக்கை உறைகளை இருவருமாக மாற்றியபோது, அவளுக்குக் கூச்சம் ஏற்படாதிருக்கவென்றோ என்னவோ, அவர் பேசிக் கொண்டே இருந்தார்.



''சென்னை வீடு என்றால் எப்போதும் தயார் நிலையில் இரண்டு படுக்கை அறைகளே இருக்கும், சுமாலினி. இது பா..பார்க்கக் கொள்ளவென்று விருந்தினர் வருகிற இடம் அல்ல. நிறையப் பேருக்கு இப்படி ஒரு வீடு இருப்பது கூடத் தெரியாது. ப..பையன் தனியாக இருந்து வேலை செய்யும்படி இருந்தால் இங்கே வந்து விடுவான். ராத்திரி பகல் என்று இல்லாமல் செய்து வேலையை முடிப்பான். வேலை என்றால் என் மகனுக்குப் பசி, தாகம், தூக்கம் எல்லாம் மறந்துவிடும்! 'மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார்...'' என்று 'கருமமே கண்ணாயினார்! பற்றி ஒரு வெண்பா உண்டு தெரியுமா? அது மாதிரி இருப்பான்...' என்றவள். ''சின்னவனின் முகத்தைப் பார்த்து விட்டு, என்ன, ஒரேயடியாகப் பிள்ளையின் புகழ் பாடுகிறேனோ? அம்மா என்றால் அப்படித்தான்! சும்மாவா?'' என்று சிரித்தார்.

சுமாலினிக்கும் சிரிப்பு வந்தது! மகனுக்கு வைத்த பெயரைக்கூட ரசிப்பவரின் இந்தப் புகழ் மாலையில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை!

''படுத்துத் தூங்கு, அம்மா! வேற்றிடமாய் எண்ணாதே! இது உன் சொந்த வீடு என்று எண்ணிக் கொள்!'' என்றார்.

அவள் படுத்ததும் ஒதுக்கி விடப்பட்டிருந்த ஜன்னல் திரைகளை இழுத்து விட்டுவிட்டு, அறைக் கதவைச் சாத்திக் கொண்டு அவர் வெளியே செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, அவர் சொன்ன மாதிரியே, சொந்த வீடு வந்த உணர்வே உண்டாயிற்று!

அவளுடைய அன்னை உயிரோடு இருந்திருந்தால், இப்படித்தான் மகளின் இதம் நாடி, வேண்டியது செய்திருப்பாள்...

சமாலினி மீண்டும் விழித்து எழுந்தபோது, மணி பத்தரைக்கு மேல் ஆகி விட்டது. அசைவே இல்லாமல், படுத்த நிலைமாறாமல் தூங்கியது அவளுக்கு ஆச்சரியமே! ஏனெனில், ஏதேனும் தேர்வு சமயத்தில், அதிக நேரம் விழித்திருந்து படித்தாலும் கூட, ஆழ்ந்த தூக்கமின்றி இடையிடையே அரைகுறையாய் விழிப்பதும், படுக்கையில் புரள்வதுமாய் உறங்கித்தான் அவளுக்குப் பழக்கம்!

அடுத்திருந்த குளியல் அறையில் முகத்தைக் கழுவிக் கொண்டு, அதிக நேரம் உறங்கிவிட்டோமென்ற குழப்பமும் கூச்சலுமாக வெளிவந்தவளை, புவன பூபதி, அவளுக்கு முன் விழித்து, குளித்து சாப்பிட்டு, வேலைக்கென்று வெளியே கிளம்பிப் போய் விட்டான் என்ற தகவல், மேலும் வெட்கத்தை அளித்தது.

''நான்தான் ஒரே கும்பகர்ணியாக உறங்கி விட்டேன் ஆன்ட்டி! இப்போது நான் என்ன செய்யட்டும் சொல்லுங்கள்! உங்களுக்கு உதவியாய் ஏதாவது வேலை செய்தால் எனக்கு நன்றாய் இருக்கும்!'' என்றாள் மெதுவாக.

''என்ன உதவி! ஒன்றும் வேண்டாம்! குளித்துச் சாப்பிட்டு நிம்மதியாய் ஓய்வெடு! அல்லது, நேரமாகி விட்டதே சாப்பிட்டு விட்டுக் குளிக்கிறாயா?''



சமாலினியின் மனதோடு, முகமும் சேர்ந்து வாடியது. குளிக்கலாம்! தண்ணீர், சோப் எல்லாம் இங்கே கிடைக்கும்தான்! ஆனால் மாற்றுடை? அத்தோடு, அவள் இங்கே எத்தனை நாட்கள் இருக்க வேண்டும்?

''என்னம்மா?'' என்று செல்வநாயகி பரிவுடன் வினவினார்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''ஆன்ட்டி நான்...நான்... வந்து புவனன்...உங்கள் மகன் என்னைப் பற்றி எல்லாம் சொல்லியிருப்.. சொன்னாரில்லையா, ஆன்ட்டி?'' என்று சிறு கலக்கத்துடன் சமாலினி வினவினாள். பெரிதாக விவரம் சொல்லும் அளவுக்கு, முக்கியமாய் அவள் அவனுக்குத் தோன்றாது இருந்திருந்தால்... என்று திடுமென அவளுக்கு மனம் குழம்பி விட்டது!

அவள் ஓர் அனாதை! தாத்தாவின் ஆதரவில் வாழ்கிறவள், வேண்டாச் சுமையாய், அர்த்த ராத்திரியில் அவனது தலையில் வந்து விழுந்தவள்! இதற்கு மேல் அவளைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

தாழ்வுணர்ச்சியில் அவள் தடுமாறிக் கொண்டு இருந்தபோது, புன்னகை பூத்தபடி, செல்வநாயகி பேசினார்.. ''சொன்னானம்மா! எல்லாமே சுருக்கமாய்ச் சொன்னான்! ஆனால், இஞ்சினில் ஏதோ சத்தம் வருகிறதே என்று இறங்கிப் பார்த்துக் கொண்டு இருந்தபோது, சித்தி, டிரைவர் எங்கே? என்று நீ திடீரென்று தோன்றிக் கேட்டாயாமே! அதை மட்டும் விளக்கமாக விவரித்தான். 'வனதேவதை, மோகினிப் பிசாசு பற்றி எல்லாம் எனக்கு நம்பிக்கையே கிடையாதும்மா! ஆனால், திடீரென்று, வானத்திலிருந்து வந்து குதித்தவள்

ஒவ்வியெல்லாம் குளித்து விட்டு, அதில் ஒன்றை எடுத்து அணிந்து கொள்! அவ்வளவுதானே, பிரச்னை?'' என்று மேலும் அவர் எளிதாக உரைக்கவும், சுமாலினி முழுமையாகவே நிம்மதியுற்றாள்.

சிரித்த முகமாய், ''இன்னும் ஒன்றே ஒன்று, ஆன்ட்டி! எனக்குச் செய்வதற்கு ஏதாவது வேலை தர வேண்டும். சும்மாவே இருந்தால் போரடிக்கும்!'' என்று, அங்கே உட்கார்ந்து சாப்பிடாமல் உபயோகமாய் இருக்கவும் வழி தேடிக் கொண்டாள்.

''செய்யேன்! என்னுடனேயே இரு. உன் தலையில் வேலையைக் கட்டி விட்டு, நான் ஜாலியாய் மேற்பார்வை பார்க்கிறேன். பூமாவுக்குக் கூட அப்படித்தான் வேலை பழகிக் கொடுத்தேன்! ''இத்தனை வேலையாட்கள் இருக்கும்போது நான் ஏன் பண்ண வேண்டும்' என்பாள் பூமிக்குட்டி. செய்கிற வேலை உனக்குத் தெரிந்திருந்தால்தானே, அதை வேலையாள் சரியாகச் செய்யும்படி ஏவவும் முடியும் என்பேன் நான். இப்போது, அங்கே ஸ்டேட்சில் அப்படிக் கற்றுக் கொண்ட வேலைகள் மிகவும் உதவியாய் இருப்பதாக எழுதியிருந்தாள்...'' என்றபடி, அலமாரியைத் திறந்து சில உயர்ந்த ரகச் சுரிதார்களை எடுத்துக் கொடுத்தார் பெரியவர்.

''எதற்கும் இரண்டே இரண்டு இட்லி சாப்பிட்டுப் பாரேன்!'' என்று மீண்டும் வற்புறுத்தினார்.

''இல்லை ஆன்ட்டி. பின்னிரவில், அந்த நேரத்தில் நிறையச் சாப்பிட்டு எனக்குப் பழக்கம் இல்லை! அதுவே வயிற்றில் இன்னமும் கூட லேசாக அடைத்துக் கொண்டு இருப்பதுபோல இருக்கிறது. உங்கள் காபி



தான் இந்த அளவுக்கேனும் ஜீரணிக்க வைத்திருக்கிறது என்று தோன்றுகிறது. இப்போது குளித்து விட்டு வந்தால் நல்ல பசி எடுத்துவிடும், என்று நினைக்கிறேன். அதனால் இட்லி வேண்டாம். ஆன்ட்டி!'' என்றாள் அவள் கொஞ்சம் கெஞ்சும் குரலில்.

''சரிம்மா!'' என்று ஒத்துக் கொண்டு, அவளைக் குளிக்க அனுப்பினார் செல்வநாயகி.

சுமாலினி குளித்து வந்ததும், இருவருமாகச் சேர்ந்து மதிய உணவு உண்டார்கள். டி.வி. பார்த்தார்கள். பார்த்ததைப் பற்றி 'கமென்ட்' அடித்தார்கள். வீட்டைச் சுற்றிலும் நாற்புறமும் பரந்திருந்த தோட்டத்தைச் சுற்றினார்கள்.

அங்கிருந்த மரம் செடிகளுக்கெல்லாம் செல்வநாயகி ஒரோர் கதை வைத்திருந்தார்.

அவரது திருமணத்தின்போது, இலங்கையிலிருந்து ஒரு நண்பர் கொணர்ந்து கொடுத்த யாழ்ப்பாணத் தென்னை; வேப்பமரத்துக் காற்று நல்லது என்று பாடத்தில் வந்ததென்று, சாலை ஓரத்திலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்து, அவருடைய பையன் வைத்த வேப்பம் செடியில் ஓங்கி வளர்ந்து விரிந்து நிழலும் சுகமான காற்றும் பரப்புவது! அதனடியில் உட்கார சிமிண்ட் பெஞ்சுகள் கூட அமைக்கப்பட்டிருந்தன! மகள் பூமாவுக்குப் பிடித்த வாதாம் கொட்டை மரம், புவனனுடைய தந்தை கொணர்ந்து வைத்த பங்கனப் பள்ளி...

''உங்களுக்குப் பிடித்தது என்று நீங்களாக வைத்து வளர்த்தது எது ஆன்ட்டி?''

மெல்லச் சிரித்தார் செல்வநாயகி. ''வீட்டில் உள்ள மற்றவர்களுக்குப் பிடித்தால் அது எனக்கும் பிடித்துப் போய் விடும்! எனவே, இங்கிருக்கும் ஒவ்வொரு மரமும் எனக்கும் பிரியமானதே. அந்த ஜாதிச் செடி பூமா ஆசைப்பட்டு வைத்தது. இந்த மல்லி...''

''உங்கள் பிள்ளை புவனன் வைத்ததாக்கும்! உங்கள் வீட்டில் பிள்ளைகளுக்குப் புவனன், பூமா என்று பெயர் வைத்திருக்கிறீர்களே! உங்கள் உலகம் பிள்ளைகள் ஒன்றா ஆன்ட்டி? அல்லது உலகம் மக்களுள் அடக்கமா?''

ஆசையாகச் சமாலினியின் கன்னம் தொட்டு திருஷ்டி கழித்தார் செல்வநாயகி. ''அழகாய் இருப்பதோடு அழகாகவும் பேசுகிறாய்! ஆனால், நீ நினைப்பது போலெல்லாம் இல்லை. எல்லாம், என் மாமனார் வைத்த பெயர்கள். மகனுக்கு மாமனார் பெயரே அதனால் பெயர் சொல்லிக் கூப்பிட முடியாமல் பா...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவர் தொண்டையில் ஏதோ நெருட, இருமிச் செருமிவிட்டு, ''பார்த்துப் பார்த்து ஏதாவது வேறு பெயர் சொல்லி அழைப்போம்... கண்ணா, ராஜா...என்று, இதுபோல...'' என்று முடித்தார்.

அவர் சொல்லிக் கொண்டு இருந்தபோதே, வெள்ளை சீயல்லோ வழுக்கிக் கொண்டு உள்ளே வந்து நின்றது.

பெண்கள் இருவரையும் தோட்டத்தில் கண்டதும், புவனனும், காரிலிருந்து இறங்கி அங்கேயே வந்தான்.

புன்னகையோடு வந்தவனின் வேக நடையை தலை சரித்து நோக்கினாள் சமாலினி.



''என்ன? ராஜ நடை போலக் கம்பீரமாய் இருக்கிறதா?'' என்று கர்வம் போல, ஆனால், கண்ணில் சிரிப்புடன் வினவினான் அவன். ''பார்த்துக் கொண்டே இருக்கலாம்போல...''

''ஐயோ!'' என்று உதட்டைப் பிதுக்கினாள் சமாலினி. ''நான் ஒன்றும் உங்களது இன்றைய நடையை ரசித்துக் கொண்டு இருக்கவில்லை. நீங்கள் கம்பூன்றி நடக்கும்போது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்துக் கொண்டு இருந்தேன்!''

''கம்பூன்றியா? என்ன அநியாயம்? நல்ல ஆரோக்கியமான இரண்டு கால்கள் இருக்கும்போது நான் ஏன் கம்பூன்றி நடக்க வேண்டும்?''

''வேறு வழியிராதே!''

''ஞான பண்டிதா''

யோசனையாய் நோக்கிய செல்வநாயகியிடம் கண் சிமிட்டி விட்டு, ''என்ன செய்வது? உங்கள் அம்மாவுக்கு உங்கள் புகழை விட்டால் வேறு பேசவே முடியவில்லையே! பட்டுத்தானே ஆக வேண்டும்!'' என்றாள் சமாலினி மர்மமாய்.

''ஞானபண்டிதா! தயவு பண்ணிக் காப்பாற்றப்பா!''

''என்னவோ, பெரிய கெட்டிக்காரன் என்று சொல்லிக் கொண்டீர்கள்! இந்தச் சின்..ன விஷயத்துக்குப் போய் ஞானபண்டிதனைக் கூப்பிடுகிறீர்களே! நானே சொல்லட்டுமா?'' என்றாள் சமாலினி நமுட்டுச் சிரிப்பாய்.

''மற்றபடி விஷயம் தெரிய வழியில்லை போலிருக்கிறது!''

''சொல்கிறேன்! உங்கள் அம்மா உங்களைப் பற்றியே பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அப்படி மகன் மகன் என்று உருகிக் கொண்டிருந்த நேரத்தில் நீங்கள் வந்தீர்கள். ஒருவரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது, அவரே வந்தால் அவர் நூறு வயது வாழ்வார் என்பார்கள். நூறு வயதாகும்போது, கம்பு ஊன்றித்தானே நடந்தாக வேண்டும்! எப்படி விளக்கம்?'' என்று இப்போது கர்வம் காட்டியது அவள்!

''பிரமாதம்!'' என்று கேலியாகக் கைதட்டினான் புவனபூபதி. ''இலக்கியப் பரிசுகளை எல்லாம் அநியாயமாய் யார் யாருக்கோ கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்! இங்கே ஓர் அரும் பெரும் இலக்கியவாதி இருப்பது அவர்களுக்குத் தெரியவில்லையே!'' என்று பெரியதாக வருத்தம் தெரிவித்து விட்டு,'' என்னைப் பற்றி அப்படி என்னவெல்லாம் சொன்னார்கள்? என்று விசாரித்தான்.

வேப்ப மரத்தை காட்டினாள் அவள். ''அது நீங்கள் வைத்ததாமே! சாலையோரம் வளர்ந்து வருகிறவர் போகிறவர்களுக்கெல்லாம் நிழலும், ஆரோக்கியமான காற்றும் கொடுத்து விடக்கூடாதே என்று பிடுங்கிக் கொண்டு வந்து இங்கே உங்கள் இடத்தில் வைத்து விட்டதாகச் சொன்னார்கள்!''

புன்னகை விரிய, ''என்ன செய்வது? ஒரு விஷயத்தைப் 'பகப்போல' என்று சொல்கிற ரகமும் உண்டு. அதையே மாடு மாதிரி என்கிற திணுசும் இருக்கத்தானே செய்கிறார்கள்! அப்புறம்? வேறு என்ன சொன்னார்கள்?'' என்று துருவினான் புவனன்.

''ம்ம்...?'' என்று தீவிரமாய் யோசிப்பது போலப் பாவனை செய்து விட்டு, ''வேறென்ன? உங்கள் தாத்தா



பெயரை உங்களுக்கு வைத்துவிட்டு, அந்தப் பெயர் சொல்லிக் கூப்பிட முடியாமல் வேறு பெயர் சொல்லி அழைத்தது பற்றியெல்லாம் விளக்கோ விளக்கு என்று விளக்கினார்கள்!'' என்று சுமாலினி சிரித்தாள்.

கூடச் சேர்ந்து சிரிப்பார்கள் என்று சுமாலினி எதிர்பார்த்ததற்கு நேர் மாறாய், அன்னை, மகன் இருவர் முகத்திலிருந்தும் சிரிப்பு மறைந்திருந்தது.

உதடு மட்டும் சிரித்த நிலையில் இருக்க சட்டென ஏதோ கேள்வியாய்ப் புவனன் தாயை நோக்க, மகனின் அதே எச்சரிக்கைப் பார்வையோடு, மறுப்பாய்ச் செல்வநாயகி தலையசைத்தார்.

தனக்குத் தெரியாமல் மற்றவர் இருவரும் ரகசியம் பேசுவது போல, சுமாலினி உணர்ந்தாள்!

## 14

ஆனால் அந்தப் பார்வைப் பரிமாற்றம் விநாடிக்கும் குறைவான நேரத்திலேயே நடந்திருக்க வேண்டும்!

ஏனெனில் சற்று குழம்பிப் போன சுமாலினி ஒரு தரம் இமை தட்டி விழித்து நோக்கியபோது மற்ற இருவர் முகங்களும் இடையே மாறவே இல்லை போலப் புன்னகை பூசியிருந்தன.

சுமாலினி, மீண்டும் குழப்பமுற்று நோக்கியபோது, ''இந்த அம்மாமார்களுக்கே இது ஒரு பொல்லாத பழக்கம்! கேட்க ஒரு காது கிடைத்தால் போதும்; பிள்ளைகள் பெருமையை அள்ளிவிடத் தொடங்கி

விடுவார்கள். கேட்பவருக்கு அது பிடிக்குமா போரடிக்குமா என்று யோசிப்பதில்லை. என் அம்மா எவ்வளவோ அறிவாளியே என்றாலும், அவர்களும் ஓர் அன்னைதானே?'' என்று புவனன் லேசாகச் சிரித்தான்.

கூடச் சேர்ந்து, சுமாலினியின் வாய் முறுவலித்த போதும், கண்களின் குழப்பம் முழுமையாக அகலாதது கண்டு, ஆனால் கண்டுகொள்ளாத பாவனையோடு ஓர் இருக்கையில் அமர்ந்தபடி, ''சின்ன வயதில் நான் செய்த அசட்டுத் தனங்கள் சிலது உண்டு சுமாலினி. அம்மா அதையெல்லாம் சொல்லிவிட்டார்களோ என்று பயந்து போனேன்! நல்ல வேளை! அதை ஒன்றும் சொல்லவில்லை என்று தெரிகிறது!'' என்றான் இலகுவாக.

ஓகோ! அதுதான் மிரண்டு விட்டான் போல! அவன் சொல்வது உண்மையும்தான். செல்வநாயகிக்கு மக்களைத் தவிர வேறு எண்ணம் இருப்பதாகவே தோன்றவில்லைதான். மற்றபடி, மகன் கொணர்ந்து விட்டான் என்பதற்காக இந்த வேப்ப மரத்தைக் கூட வீட்டுத் தோட்டத்தில் இப்படிப் பராமரித்து வளர்ப்பாரா, என்ன?

அவனுடைய அன்னை உயிரோடு இருந்திருந்தாலும் இப்படித்தானே என் மகன் இப்படி என் மகன் அப்படி என்று பேசியிருப்பார்கள்? சும்மா ஒன்றுமில்லை போலக் காட்டிக் கொண்டாலும், புவனனுக்கு உள்ளூரப் பெருமைதான் என்பது தெளிவாகத் தெரிகிறதே!

கடைசி நேரத்தில் அம்மா என்னை நினைத்திருப்பார்களா என்று சுமாலினியின் எண்ணம் ஓடிற்று.



சுமாலினியுடைய பெற்றோர் பற்றிப் பொதுவாக யாரும் அவளிடம் அதிகம் பேசியது இல்லை! முக்கியமாகக் குமாரசாமி எதுவும் சொன்னது இல்லை! இழப்பில் இறுகிப் போனவர் அவர். வேலையாட்களுடன் பேத்தி பேசினாலும் பிடிக்காது. எப்போதாவது அவர் இல்லாத சமயங்களில், சமையல்காரம்மாளோ, காரியஸ்தரோ, வீட்டு மருமகப் பெண் எவ்வளவு அழகி, குணவதி என்று சொன்னதுண்டு.

தாயார் பிரியமாயிருந்தது சுமாலினிக்கு நன்றாகவே நினைவிருந்தது. பசித்தவன் பழங்கணக்குப் பார்க்கிற மாதிரி, அவ்வப்போது அதை அவள் நினைப்பதும் உண்டுதான். ஆனால், இன்று என்னவோ, அந்த நினைவில் தொண்டை அடைத்தது.

வேதனையான நினைவுகளை அகற்ற விரும்பியவளாய், ''உங்கள் தோட்டம் முழுவதையும், ஆன்ட்டி சுற்றிக் காட்டினார்கள். நீங்கள் இன்னும் கொஞ்சம் தாமதமாக வந்திருந்தால் வீட்டையும் சுற்றிக் காட்டியிருப்பார்கள்!'' என்றவள், ''இங்கே மகன் வைத்த மரம், மகன் வளர்த்த கொடி என்று நிறையச் சொன்னார்கள். வீட்டினுள் சொல்வார்களா? இந்த அறை என் மகன் தெருவில் எடுத்த வந்த செங்கல்லை வைத்துக் கட்டியது. இது என் மகன் பாண்டியாடக் கோடுபோட்டது. அப்படியா, ஆன்ட்டி?'' என்று கண் சிமிட்டிக் கேட்கவும் செல்வநாயகி சிரித்தார்.

''கிண்டலா? இரு இரு உனக்கும் ஒன்று பிறக்கும்! அப்போது எப்படி, எதைப் பற்றிப் பேசுகிறாய் என்று நானும் பார்க்கத்தானே போகிறேன்!''

உச்சுக் கொட்டினாள் சமாலினி. "கற்பனையிலேயே 'பால்காரி' மாதிரிக் கோட்டை கட்டுகிறீர்களே, ஆன்ட்டி! முதலில் எனக்குத் திருமணம் ஆனால்தானே நீங்கள் சொன்ன அடுத்த கட்டம் வரும்!" என்று சோகம் காட்டிப் பெரியதாக ஒரு மூச்சு விட்டாள்!

"உனக்குத் திருமணம் ஆவதற்கென்ன? உன் அழகுக்குக் 'க்யூ'விலே நின்று கொத்திக் கொண்டு போய் விடுவார்கள். அதற்குள் முடித்து விட்டால் நல்லது!"

'எது ஆன்ட்டி? எது நல்லது?

"உன் திருமணத்தைத் தான் சீக்கிரமாய் உனக்குத் திருமணம் செய்யா விட்டால் ஊரில் உறவு நட்பு எல்லாம் வாயில் 'க்யூ'வில் வந்து நிற்பார்கள்!"

இந்தப் பேச்சு- அது பொய்யே என்றாலும், கொஞ்சம் சமாலினியைக் குளிர வைத்தது. அவளைப் பற்றியும் ஆசையாய், பெருமையாய்ப் பேச ஆள் இருக்கிறார்களே!

"தோட்டத்தை அம்மா சுற்றிக் காட்டினார்கள் அல்லவா? வீட்டை நான் காட்டுகிறேன் வா!" என்று, புவனன் எழுந்தான்.

"இல்லையில்லை. நீங்கள் இப்போதுதான் வேலை முடிந்து வந்திருக்கிறீர்கள். சற்று நேரம் ஓய்வாய் உட்கார்ந்திருங்கள்! வீடு எங்கே போய் விடப் போகிறது? பிறகு பார்த்துக் கொள்ளலாம்!" என்றாள் சமாலினி அவசரமாக.

மெச்சுதலாய் அவளை நோக்கி விட்டு, "சமா சொல்வது சரிதானடா. இருவரும் உட்கார்ந்துக்



கொண்டு இருங்கள். நான் டிபன், காபி இங்கே கொண்டு வரச் சொல்லிவிட்டு வருகிறேன்." என்று கூறிவிட்டு, செல்வநாயகி எழுந்து உள்ளே சென்றார்.

"உன்னை அம்மாவுக்கு மிகவும் பிடித்து விட்டது! எதிர் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் என்பது சரிதான் என்று தெரிகிறது." என்றான் புவனபூபதி சாதுவாய்.

சந்தேகமாய் நோக்கியவாறே, "எனக்கும் ஆன்ட்டியை மிகவும் பிடித்திருக்கிறது! ஆனால் இதில் எதிர்த் துருவம் எங்கிருந்து வந்தது? நாங்கள் இருவருமே பெண்கள்தானே?" என்றாள் சமாலினி.

"என் அம்மா புத்திசாலி!" என்று அவன் சிரியாமல் சொல்லவும் "இப்போது புரிகிறது!" என்றாள் அவள் உடனேயே.

அவன் கேள்வியாய் நோக்கவும், "உங்கள் அம்மாவுக்கு. உங்களையும் பிடித்திருக்கிறதே?" என்றுரைத்து சமாலினி கலீர் என்று சிரிக்க, அவனும் அந்தச் சிரிப்பில் இணைந்தான்.

சிரிக்கும்போதே அவளுக்கு உள்ளூர ஆச்சரியம்! இவனோடு எவ்வளவு எளிதாகப் பேசி சிரிக்க முடிகிறது! வார்த்தைக்கு வார்த்தை, திருப்பிக் கொடுப்பதும், கேலியும், கிண்டலுமாய்க் காலை வாருவதும்! இதெல்லாம் இல்லாமல் இவ்வளவு நாள் எப்படி உயிர் வாழ்ந்தாள்!

மாலைச் சிற்றுண்டியின் பின், புவனன் சமாலினிக்கு வீட்டைச் சுற்றிக் காட்டினான்.

அவ்வளவு பெரிய இடத்துக்கு அந்த வீட்டுப் பரப்பு சிறியதே! மாடியில் கட்டடம் என்று இல்லை.

மொட்டை மாடிக்குச் செல்ல படிக்கட்டுகள் மட்டும் இருந்தன. படிக்கட்டு முடியும் இடத்தில் ஒரே ஓர் அறை மட்டிலும்.

அறையின் கதவு திறந்து மொட்டை மாடியைக் காட்டச் சொன்னான். ''பூமா திருமணத்துக்கு முன், பௌர்ணமி நாட்களில் இங்கே இருந்தால், நிலாச்சோறு சாப்பிடுவோம்! சாம்பார், அவியல், ரசம், நெய்... எல்லாம் கலந்து பிசைந்து அம்மா தருவார்கள். அப்பா உட்பட, மூவருமே முழுங்குவோம். பூமா, உணவில் கொஞ்சம் கணக்குப் பார்ப்பாள்! ஆனால் அவளும் நிலவில் உட்கார்ந்து சாப்பிடும்போது, இரு மடங்கு சாப்பிடுவாள்!'' என்றான்.

''மதுரையில், சித்தி வீட்டில் ஒரு நாள் அப்படிச் சாப்பிட்டோம். ஆனால்...என்றவள், சற்று யோசித்து, இங்கே இருந்தால் என்கிறீர்களே! பொதுவாக இங்கே இருப்பது இல்லையா?'' என்று வினவினாள்.

''இல்லை!'' என்றான் அவன். ''பொதுவாக வசிப்பது சென்னையில் தான். வேளச்சேரி தாண்டி பங்களா இருக்கிறது. ஊர் உலகத்துக்கு, இப்போதைய எங்கள் வீடு என்றால், அதுதான். ஆனால், தனியாக இருக்க வேண்டும் என்று தோன்றினால் இங்கே வந்து விடுவது. தாத்தா காலத்திலிருந்து உள்ளது இந்த வீடு. அப்போது விவசாயம் மட்டும்தான். தொழிலைத் தொடங்கி வளர்த்தது அப்பாதான்!'' என்றவன் அவளிடம் ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு மேலே தொடர்ந்தான்.

''நாலு ஆண்டுகளுக்கு முன் அப்பாவுக்கு 'ஸ்ட்ரோக்' வந்தது!



''அதிக ரத்த அழுத்தமா, புவனன்? உங்கள் அம்மா அருகில் இருந்தால், மனதில் இறுக்கமெல்லாம் மறைந்து விடுகிறதே! உங்கள் அப்பாவுக்கு எப்படி...?

''அது... தொழிலில் வைத்த அதிகப்படியான ஈடுபாட்டால் வந்தது. அப்பாவுடைய தம்பியின் மடத்தனமான போக்காலும் வந்தது. பூமாவின் பிரிவினாலும் தான். வீவில், ஸ்டேட்சிலிருந்து அத்தான் இங்கே வந்திருந்தார். டாக்டர் அவர். முதல் பார்வையிலேயே பிடிவாதமாய் அவரை மணந்து கொண்டு, கிளம்பி விட்டாள். ஆனால், வேடிக்கை என்னவென்றால், அப்பாவுக்கு 'பைபாஸ்' சர்ஜரி, அத்தான்தான் செய்தார். வேலை 'டென்ஷன்' கூடாது என்றும் அவர்தான் சொன்னார். ஆண்டுதோறும் 'செக்கப்' என்கிற பெயரில் அப்பா அங்கே போய் இரண்டு மூன்று மாதம் இருந்து விட்டு வருவார். பேரன் பிறந்த பிறகு, போவது அதிகமாகி விட்டது!''

''உங்கள் அம்மா? ஒரு வாய், பிள்ளை என்றால், உடனேயே பூமா என்கிறார்கள். அவர்களுக்கும் மகளைப் பார்க்க, பேரனைக் கொஞ்ச ஆசையாக இருக்கும் அல்லவா?''

''உண்டுதான். எனக்குத் திருமணம் ஆகி, மனைவியிடம் என்னை ஒப்படைத்தபிறகு, அவர்களும் அப்பாவோடு சேர்ந்து 'காடாறு மாதம் நாடாறு மாத'மாய் அங்கும் இங்குமாய்த்தான் இருக்கப் போகிறார்களாம்!'' என்று புவனன் நகைத்தான்.

முழுமனதோடு அந்தச் சிரிப்பில் கலந்து கொள்ள அவளால் முடியவில்லை. மாறாக, ''அப்படியானால் விரைவிலேயே உங்கள் திருமணத்தை எதிர்பார்க்க

ளாம்? வந்து... தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என்று ஏதோ சொன்னீர்களே!'' என்று கேட்டாள்.

இயல்பாகக் கேட்டு விட்டபோதும், உள்ளூர அவளுக்கு ஆச்சரியம் தான். முன் தினம் நள்ளிரவு வரை புவனன் யாரென்று அவளுக்குத் தெரியாது! பார்த்தது கூடக் கிடையாது. இளைஞன் வேறு! அவளிடம் திருமணத்தைப் பற்றிச் சர்வ சாதாரணமாகப் பேசிக் கொண்டு நிற்கிறானே! வேறுபாடு, ஒதுக்கம் ஒன்றுமே தோன்றவில்லையே!

'பெரியவர்களாகப் பார்த்துச் செய்து வைத்த கல்யாணம். முன்னே பின்னே அவரைப் பார்த்தது கூடக் கிடையாது! ஆனால் திருமணமான பிறகு தயக்கமே தோன்றவில்லை!'' என்று திருமணமான தோழி ஒருத்தி சொன்னது நினைவு வந்தது.

என்ன பைத்தியக்காரத்தனம்! தோழி சொன்னது அவளுக்குத் தாலி கட்டிய கணவனைப் பற்றி! இவன் யாரோ அன்னியன்!

பைத்தியக்காரத்தனமேதான் என்பது போல அவன் சொன்னான். ''கண்டுபிடித்தாகி விட்டது! வீட்டுப் பெரியவர்களுக்குச் சம்மதம்தான். கிட்டத்தட்ட திருமணம் முடித்தான மாதிரிதான்!''

வாட்டத்தை முகத்தில் காட்டாமல், அவனை வாழ்த்த அவள் அரும்பாடுபட வேண்டியிருந்தது.

கீழ்த்தளம் வசதியாய் அமைந்திருந்தது. கொஞ்சம் பழைய மாடல். விசாலமான அறைகள். பெரிய ஜன்னல்கள். ஜன்னல்களுக்கு மேல், கலர்க் கண்ணாடிகள், அதில், அழகான படங்கள்! தாத்தா காலத்து வீட்டை, நன்கு பராமரித்து வந்திருக்கிறார்கள்!



முன்புறம் பெரிய கூடம். உள்ளே பெரிய ஹாலின் இருபுறமும் இரண்டிரண்டு அறைகள். விசாலமான சமையல் அறை. அருகே ஸ்டோர் ரூம், என்று வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்து வீடு கட்டப்பட்டிருந்தது. பழமையைப் பாதுகாத்தபோதும், மிக்சி, கிரைண்டர், ஃபிரிஜ் என்ற இன்றைய வசதிகளுக்கும் குறைவில்லை.

சமையல் அறையின் வழியே தோட்டத்தில் இறங்கி, வீட்டைச் சுற்றிக் கொண்டு வந்தபோது; ஒரு முக்கியமான முரண்பாடு சுமாலினியின் மனதில் பட்டு உறுத்தியது.

பொதுவாகப் பூட்டிப் புழங்கும் பழக்கம் இல்லாதது போலத் தோன்றிய அந்த வீட்டில், முன்புறக் கூடத்தை ஒட்டியிருந்த ஓர் அறை மட்டும் இறுக மூடப்பட்டிருந்தது! அதைத் திறந்து காட்ட, புவனன் முயற்சிக்கவும் இல்லை!

ஒரு வேளை, தட்டு முட்டுச் சாமான்கள் போட்டு வைக்கும் அறையோ என்று சுமாலினி, முதலில் நினைத்தாள். ஆனால், சுற்றி வரும்போது, அந்த அறையில் ஏசி பொருத்தப்பட்டிருப்பதைக் காணவும், ஆச்சரியத்தோடு, புவனனை நோக்கினாள்.

''இது...'' என்று அவள் தொடங்குமுன், ''இந்த அறை மட்டும் தனிப்பட்டது, சுமாலினி இங்கே, மற்றவர்கள் புழங்க அனுமதி கிடையாது. பெரும்பாலும் நான் தவிர்க்க முடியாத சில தருணங்களில் அம்மா... மற்றபடி... தவறாக எண்ணாமல், எக்காரணம் கொண்டும், இந்த அறைக்குள் செல்வதில்லை என்று நீ எனக்கு உறுதி தர வேண்டும்!'' என்றான் அவன்.

சமாலினிக்கு உள்ளூர வலித்தது. இந்தப் புவனன், அவளிடம் ஒன்றை மறைக்க நினைக்கிறான் என்ற எண்ணம் அவளுள் வேதனையை எழுப்பியது.

ஆனால், அதற்காகத் தன்னையே கடிந்து கொண்டு, ''சரி, புவனன்!'' என்றாள் அவனது பேச்சுக்கு இணங்கி.

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''அது என் அலுவல் அறை! அங்கே வேறு யாரும் வரக்கூடும் என்பது என் கவனத்தைக் கலைக்கும்!'' என்றான் புவனன்.

வேலை நேரத்தில் இடையே யாராவது வந்தால் கவனம் குறையக் கூடும்! அது சாத்தியம்தான். ஆனால், வரக்கூடும் என்பதே எப்படி?

கேட்டாள்!

''வேண்டுமென்று இல்லாவிட்டாலும், ஒழுங்கு படுத்தி உதவி செய்வதாக எண்ணியே இடம் மாற்றி வைத்து விடக்கூடும். இப்போது எல்லாம் நான் வைத்த இடத்தில் இருக்கும். தேவைப்படும்போது, அங்கங்கே இருந்து எடுத்துக் கொள்வேன். சுத்தம் செய்யவென்று வேலையாளைக் கூட உள்ளே விடுவதில்லை பூட்டியே வைத்திருப்பேன். அதை நீ தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது!'' என்றான் அவன்.

ஒப்புதலாய்த் தலையாட்டியவளுக்கு, அந்த அறை, பின்னொரு காலத்தில் அவள் தலையில் விழப்போகிற இடியை உள்ளடக்கி வைத்திருந்தது தெரியாது!



## 15

புவனனின் வீட்டு வாசம், சமாலினிக்கு மிகவும் பிடித்திருந்தது.

பத்து வயதிலிருந்து, அவளிடம் யாரும் தனிப் பட்ட அன்பு காட்டி அவளுக்குப் பழக்கம் இல்லை! சித்தி மாலதியின் வீட்டில், தானும் ஒருத்திதான். அப்போதும், வீட்டுப் பிள்ளைகள் மூவரும், உரிமை யோடு பெற்றோரிடம் பழகும்போது, இவள் ஒதுங்கித் தான் நின்று விடுவாள். அந்த அளவு பழகியதும் கூட ஒரே ஒருதரம் தான்.

இங்கே செல்வநாயகியின் பரிவும் பாசமும் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. கூடவே, புவனனின் சீண்டலும், கிண்டலும், அதற்குப் பதில் கொடுப்பதும், அவளுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்க, ஒவ்வொரு நாளும் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

இடையிடையே, தாத்தா தனியாக வீட்டில் என்ன செய்கிறாரோ என்று கொஞ்சம் ஒரு மாதிரி வருத்தம் தோன்றும். ஆனால், அவள் வீட்டில் இருந்தாலும், அவர் பேத்தியோடு பேசி மகிழ்வது ஒன்றும் கிடையாதுதானே? அப்போதும் தனியாகத்தான் உட்கார்ந்திருப்பார்? எனவே அவள் இங்கிருந்தாலும், அங்கிருந்தாலும் ஒன்றுதான்! அவரது மாத்திரை மருந்துகளை மட்டும் ஒழுங்காகச் சாப்பிட்டார் என்றால், அதுபோதும்!

அதே எண்ணமாய், சுமாலினி மருந்து மாத்திரைகளை வேளைக்கு ஒழுங்காகச் சாப்பிட்டு, உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுமாறு, அவருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பி வைத்தாள்.

சுமாலினி, திருச்சிக்கு வந்த மறுநாளே அவளது துணி மணிகள் கூரியர் மூலம் புவனனின் அலுவலகத்துக்கு வர, அங்கிருந்து அவன் கொண்டு வந்து கொடுத்தான். அணிகலன்களோடு, ஒரு கவரில் இரண்டு ஆயிரம் ரூபாயும் வைத்துக் குமாரசாமி அனுப்பியிருந்தது, சுமாலினிக்கு வியப்பையும் கூடவே மகிழ்ச்சியையும், ஒரு தென்பையும் கூட அளித்தது.

ஏதோ ஒரு தேவை என்றால், ஐம்பது, நூறுக்கு கூட அடுத்தவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாமே!

செல்வநாயகியும், புவனனும் அன்பாகவே நடந்து கொண்டாலும், 'தாய் பிள்ளை என்றாலும் கூட வாயும் வயிறும் வேறு' என்கிறதே பழமொழி!

காலையில் எழுந்தால், வீட்டுத் தோட்டத்திலேயே புவனன் சற்று நேரம் 'ஜாகிங்' செய்வான். செல்வநாயகி ஒரு சுற்று நடப்பார். அவரோடு நடக்கத் தொடங்கியவளைப் புவனபூபதி "உனக்கு என்ன வயதிருக்கும்? நாற்பது இருக்குமா? கூடுதலா?" என்றெல்லாம் சீண்டித் தன்னோடு ஓட வைத்தான்.

காலைச் சிலுசிலுப்பில் ஓடுவதே ஓர் உற்சாகமான விஷயம். அதுவும் அவனோடு! பிறகு சேர்ந்து உட்கார்ந்து பேப்பர் படிப்பது, உலக நடப்பு அலசுவது, காபி அருந்துவது... எல்லாமே வேடிக்கைப் பேச்சின் நடுவே நடக்கும்.



சிற்றுண்டி முடிந்தபின் வேலை என்று, வாயில் கூடத்தை ஒட்டிய அலுவல் அறைக்குள் புவனன் புகுந்து கொள்வான்; அல்லது, திருச்சி நகரினுள் இருக்கும் அலுவலகம் சென்று வருவான். அந்த நேரத்தில் செல்வநாயகி, சுமாலினியைத் தன்னுடன் இருத்திக் கொள்வார்.

'போகிற இடத்தில் நல்ல பேர் சொல்ல வேண்டும்' என்று தாத்தாவின் விழுப்புரம் வீட்டு சமையல்காரம்மாவிடம் கற்றுக் கொள்ளச் செய்த உருப்படிகள் எல்லாம் அங்கே அரங்கேறும். அதில், செல்வநாயகி, சில திருத்தங்கள் கூறுவார். மற்றும் இங்கே உள்ள தனி அயிட்டங்கள் கற்றுக் கொடுப்பார்.

மாலை மீண்டும் புவனன் இவர்களோடு சேர்ந்து கொள்ள, பொழுது வெகு இனிமையாகக் கழியும்.

ஒரு நாள், உருளைக் கிழங்கை மசித்து, கொஞ்சம் மாவு சேர்த்து, அதற்குள் காய்கறிப் பூரணம் வைத்து, அடித்த முட்டை, ரொட்டித் தூளில் பிரட்டி, சுமாலினி ஒரு புது வகை சமோசா செய்திருந்தாள். அதற்குப் பேரீச்சம் பழம், இஞ்சி, வெல்லம், சீரகம் சேர்த்து அரைத்து வடிகட்டிய 'சாஸ்' வேறு.

சமையல் புத்தகத்தில் படித்தது பாதி, அதில் சொந்த ஐடியா பாதியாகச் சேர்த்து செய்து வைத்திருந்தது நன்றாயிருந்தது போலத்தான் அவளுக்குத் தோன்றியது.

வெங்காயம், வெள்ளரிக்காய், தக்காளி, அழகாக வட்டமாக வெட்டி, சுற்றிலும் வைத்து, இரண்டு மல்லித் தழையை சமோசா மேல் பரப்பி, அழகாகத் தட்டில் இட்டுப் புவனனிடம் நீட்டினாள்.

ஸ்பூனால் ஒரு சிறு விள்ளல் எடுத்துச் சுவை பார்த்துவிட்டு, முகம் மாறாமல், ''இது யார் செய்தது?'' என்று அவன் வினவ, ''ருசி எப்படி இருக்கிறது?'' என்று சுமாலினி பதில் கேள்வி கேட்டாள்.

''யார் செய்தது என்று தெரிந்தால் அதன் பிறகு சொல்வேன்!'' என்றான் அவன் தோளைக் குலுக்கி.

சுவை அவனுக்குப் பிடிக்கவில்லை என்று சுமாலினிக்குத் தோன்றி விட்டது. செய்தது அவள்தான் என்றால் நாள் முழுவதும் கிண்டல் செய்வான். வாயில் எதை வைக்கவும் பயந்த மாதிரி, வயிற்றை அழுத்தி, நெஞ்சைத் தடவி, பெருமூச்சு விட்டுப் பாவனை செய்வான்!

எனவே, கண்ணால் ஜாடை செய்தபடி, ''ஆன்ட்டி தான்! சுவையே சொல்லவில்லையா?'' என்று ஒரு போடு போட்டாள்.

ஆனால், உடனேயே, ''அய்யோ! இதெல்லாம் எனக்குத் தெரியாதப்பா!'' என்று செல்வநாயகி கழன்று கொண்டார். ''இதில் என்னவெல்லாம் கலந்து செய்திருக்கிறது என்று கூட எனக்குத் தெரியாது, சாமி!''

''அம்மாடியோவ், ஆன்டி! பெரியவர்களாயிருந்து இப்படி செய்யலாமா!'' என்று சுமாலினி பெரிதாகக் குறைப்பட, ''பெரியவளாக இருப்பதால் தான், இப்படிப் பேசவேண்டியிருக்கிறது!'' என்று செல்வநாயகி புருவம் உயர்த்தி எடுப்புடன் கூறி முறுவலித்தார்.

''பெரியவர்களுக்குரிய இலக்கணம் பற்றி நீங்கள் இருவரும் பட்டி மன்றம் தொடங்குமுன், செய்து வைத்ததை எல்லாம் என் தட்டில் கொட்டி விட்டீர்களா



னால், ஆற அமரச் சாப்பிட்டபடியே உங்கள் விவாதத்தை கவனிப்பேன்!'' என்றான் புவனன்.

''எங்கள் வீடு உன் கண்ணீர் வெள்ளத்தில் முழுகாமல் இருப்பதற்காகவாவது, நன்றாயிருக்கிறது என்று சொல்லித்தானே ஆக வேண்டும்?!'' என்று புவனன் சோகமாய்க் கேட்க, எல்லோருமாய் நகைத்தனர்.

''அவனுக்குப் பிடித்து விட்டது என்றுதெரிந்ததால் தான் நான் உன்னைக் காட்டிக் கொடுத்தேன்'' என்றார் செல்வநாயகி. மெச்சுதல் மட்டுமின்றி அவளை அவன் மட்டம் தட்டிப் பேசுவதும் உண்டு.

''சும்மா இருக்கும் நேரத்தில் கார் ஓட்டப் பயிலுவதுதானே?'' என்றான். ''கற்றுக் கொள்வதானால், பயிற்றுவிக்க ஆள் வரச் சொல்கிறேன்!''

''தானா? ரோடெல்லாம், நெருநெருவென்று எத்தனை வாகனங்கள்! இதில் எப்படி ஓட்டுவது?'' என்று அவள் தயங்கினாள்.

''பின்னே, வாகனங்கள் எல்லாம் ரோடுகளில் ஓடாமல் வீட்டிலும் தோட்டத்திலுமா ஓடும்? சாலைகளில் கார் ஓட்டுகிறவர்களும் மனிதர்கள் தான்; தெரிந்து கொள்... ஆனால் இவளால் அதெல்லாம் முடியாதும்மா. இவள் சுத்தப் பயந்தாங்குளி. நான் சின்ன வயதில் ஓட்டிய மூன்று சக்கர சைக்கிள் பரண்மேல் கிடந்ததே, அதை எடுத்துக் கொடுங்கள். இந்த அறைக்குள்ளேயே ஓட்டிக் கொண்டு இருக்கட்டும்! இவள் அதற்குத்தான் லாயக்கு!'' என்றான் அவன் கடுமையாக.

அவள் முகம் வாடி நிற்க, ''என்னடா இப்படிப் பேசுகிறாய்?!'' என்றார் செல்வநாயகி.

''பின்னே என்னம்மா? ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிய வேண்டாமா? சும்மா மக்கு மாதிரி உட்கார்ந்திருந்தால், யார் மதிப்பார்கள்? யார், என்ன கொடுமை செய்தாலும், விரல் அசைக்காமல் பொறுத்துப் போவார்கள் இந்த அம்மா. அப்போதுதானே, எல்லோரும் பாவம் என்று இரக்கமாய்ப் பேசுவார்கள்.''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை! எனக்கு யார் இரக்கமும் தேவை இல்லை! நான் ஒன்றும் பயந்தாங்கொள்ளியும் இல்லை. எப்போதிருந்து கார் ஓட்டும் பயிற்சியைத் தொடங்குவது? இன்றைக்கே நான் தயார்!'' என்றாள் அவள் ரோஷத்துடன்.

அன்றைக்கே பயிற்சிக்குரிய காரோடு ஒரு பெண்மணி வந்து அவளுக்குக் கார் ஓட்டக் கற்றுக் கொடுத்தார்.

அன்று செவ்வாய்க்கிழமை! பேச்சினூடே, ''ஸ்டார் ப்ளஸ்சில் 'மைண்ட் யுவர் லாங்வேஜ்' பார்ப்பாயா?'' என்று புவனன் விசாரித்தான்.

''பார்த்தேன். விட்டு விட்டேன்'' என்றாள் அவள் உணர்ச்சியற்ற குரலில்.

''ஏன்? பிடிக்கவில்லையா?'' என்றான் அவன் வியப்புடன்.

''பிடித்தது. விழுந்து விழுந்து சிரிக்க வைக்கும் அருமையான நகைச்சுவைத் தொடராயிற்றே! ரொம்பவும் பிடித்தது! அதனால்தான் விட்டு விட்டேன்!''

''புரியவில்லை!?''

''அந்தத் தொடர் பார்க்கும்போது ரொம்பவும் சிரிப்பு வரும். அடக்க மாட்டாமல் சத்தமாகச் சிரித்து



விடுவேன். தாத்தாவுக்குப் பிடிக்காது! 'பொம்பளை சிரிச்சால் போச்சு! புகையிலை விரிச்சாப் போச்சு' பழமொழி சொல்லி...''

ஒரு தரம் அந்த ஆங்கிலத் தொடரைப் பார்த்த போது, தாத்தா இருப்பதை கவனியாது வாய்விட்டு நகைத்ததும், தன் சிரிப்புச் சத்தத்தில் தானே மகிழ்ந்ததும், அதற்கு முற்றுப்புள்ளி விழுந்ததும், அப்போதே நடப்பது போல அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

எதிர் சோபாவில் அமர்ந்திருந்த புவனபூபதி எழுந்து வந்து அவளது கைகளைப் பற்றி எழுப்பினான்.

திகைப்புடன் நோக்கியவளிடம், ''இந்த வீட்டில், நீ, உன் விருப்பம் போல இருக்கலாம், சமாலினி! வேண்டுமளவு டி.வி. பார்க்கலாம்; ஆடலாம், பாடலாம்! வாய் வலிக்கப் பல் சுளுக்க வேண்டும் மட்டும் வாய்விட்டுச் சிரிக்கலாம். யாரும்... யாரும் உன்னைத் தடுக்கமாட்டார்கள்! தடை செய்ய விடவும் மாட்டேன்! இது சத்தியம்!'' என்று உறுதி கொடுத்தான்.

ஊற்றாக மகிழ்ச்சி மிகுதியாய்ப் பெருக, ''நன்றி!'' என்று கிளுகிளுத்துச் சிரித்த சமாலினி, நெகிழ்ந்து போய், எம்பி புவனனின் தாடையில் மிக இயல்பாய் இதழ் பதித்து விட்டு, உடனேயே வெகுவாய் திகைத்துத் தடுமாறி முகம் சிவந்து போனாள். ''சாரி சாரி... சாரி... நான்... நான் தெரியாமல்... வந்து சாரி!'' என்று திக்கித் திணறினாள்.

பெண்களைப் பற்றிய அவனது அபிப்ராயம் அறிந்தும் என்ன மடத்தனம் செய்து விட்டாள்! அது மட்டுமா? முழுதுமாக ஒரு வாரம் கூடப் பழகியிராத

ஓர் அன்னியனை முத்தமிட அது தாடையில் என்றாலும் முத்தம் முத்தம்தானே! அவளால் எப்படி முடிந்தது?

கலக்கமும் குழப்பமுமாக விலக முயன்றவளை, அவனது பிடி தடுத்தது!

மீண்டும் திகைத்து நோக்கியவளிடம், ''எதற்கு 'சாரி', சுமி?'' என்று வினவினான் புவனன். ''ஓர் இயல்பான உணர்வு வெளிப்பாடு! கபடற்ற செயல் இதில் வருத்தப்படவோ, கூச்சப்படவோ ஒன்றுமே இல்லை, தெரியுமா?! உண்மையைச் சொல்லப்போனால், பெரும்பாலும் உணர்ச்சிகளை அடக்கி, அடக்கி இறுக்கத்துடன் நீ இருப்பதைப் பார்த்து அம்மாவும் நானும் எவ்வளவு வருத்தப்பட்டிருக்கிறோம்; தெரியுமா? விழுப்புரத்தில் எப்படியோ? இங்கே, இந்த வீட்டில், நீ சுதந்திரமாக இரு. இருக்க வேண்டும்!'' என்றான் அவன், உணர்ச்சிக் கரகரப்புடன் கூடிய குரலில்.

பார்த்துக்கொண்டே இருந்த சுமாலினியின் கண்கள், சட்டெனப் பனிச்சிட்டன.

''சுதந்...திரமாகவா? அப்படியானால், இந்த வீட்டில் எங்கே வேண்டுமானாலும், அங்கே நான் போகலாம், வரலாமா!'' என்றாள் குறும்பாக.

அந்தக் குறும்பை ரசித்தவனாய், சாவி மாட்டும் இடத்தைக் காட்டி, ''அறைச் சாவியும், அதில்தான் தொங்குகிறது. ஆனால் உரிய காலம் வரும் வரை, என் வார்த்தையை மதித்துப், பொறுத்திருப்பாய் என்பது நம்பிக்கை! அந்த உரிய காலம் விரைவிலேயே வெகு விரைவிலேயே வந்து விடும் என்பது என் நம்பிக்கை!'' என்றுரைத்து, அவளது கன்னத்தை லேசாக நிமிண்டி விட்டான் அவன்.



ஜிவ்வென்று வானில், பறந்து, என்னென்னவோ கற்பனை செய்ய முயன்ற மனதை அரும்பாடுபட்டு, சுமாலினி, அடக்கி வைத்தாள்.

சற்றுப் பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்த சற்று வசதியுள்ள, ஓர் அனாதைப் பெண்ணிடம் அன்னையும் மகனுமாக ஆதரவு காட்டுகிறார்கள்! அவ்வளவே! இதில், அனாவசியமாக அர்த்தங்களைக் கற்பனை செய்து வீணாக வேதனையை இழுத்துக் கொள்ளக் கூடாது! சின்னஞ் சிறு வயதில் இழக்க நேர்ந்த அன்பு இறையருளால் ஏதோ ஓர் வகையில் மீண்டும் கிடைத்திருக்கிறது. இந்த அன்பை, அன்பாகவே ஏற்று மகிழ்வது நல்லது!

பசித்தவனுக்கு பஞ்சாமிர்தம்தான் வேண்டும் என்பது இல்லை! அவனுக்குப் பழைய சோறுகூட அமுதம்தான். இயல்பாகக் காட்டப்பட்ட இந்த அன்பு, சுமாலினிக்கு இந்திர போகமாகவே இருக்கவும், அதற்கு மேல் ஆசைப்படாமலே அவளால் ஆனந்தமாக இருக்க முடிந்தது!

சிகரம் வைத்தாற்போல, அடுத்த ஞாயிறன்று, கையில் தேவையான உணவை எடுத்துக் கொண்டு, புவனன், அவளை வெளியே அழைத்துச் சென்றான்.

எங்கே என்று கேட்டால், ஒரு மர்மச் சிரிப்பு மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

நெடுஞ்சாலையில், ''ஓட்டு'' என்று காரை அவள் கையில் அவன் கொடுத்தது, சுமாலினி ஓரளவு எதிர் பார்த்ததுதான். முதலில் சற்றுத் தடுமாறியபோதும், விரைவிலேயே சமாளித்துக் கொண்டு ஒழுங்காகவே ஓட்டினாள்.

சற்று நேரம் ஓட்டிவிட்டு, சாலை ஓரமாய் ஒதுக்கி நிறுத்தி, ''பரவாயில்லாமல் ஓட்டுகிறேனா?'' என்று வினவினாள்.

''பத்து நிமிடம் ஓட்டுவதில் என்ன இருக்கிறது? மணிக்கணக்காய் ஓட்டினால்தான், நீந்துவது, சைக்கிள் ஓட்டுவது போல இதுவும், அனிச்சை செயல், உடம்போடு ஊறிப்போகும்! ஓட்டு. இன்று முழுவதும் 'ஸ்டியரிங் வீல்' உன் கையில்தான் இருக்கப் போகிறது! போவது நெடுஞ்சாலை. ஓட்டிக் கொண்டே போ! அப்போதுதான் இறுக்கம் அடியோடு தளரும்.'' என்றான்.

முதல் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, சாலையின் மேடு பள்ளங்கள், ஸ்பீட் பிரேக்கர்கள், முன்னும் பின்னுமாகப் பலவித வேகங்களில் செல்லும் பல வகை வண்டிகளுக்கு ஏற்பக் கை, கால்கள், தாமாகவே கியரை மாற்றி, க்ளட்ச், பிரேக், ஆக்சிலேட்டரை மிதிப்பதைச் சமாலினி உணர்ந்தாள். கை கால்கள் தாமாகவே, சரியானபடி இயங்கவும், சுற்றியுள்ள காட்சிகளைக் காணவும், ரசிக்கவும், அதுபற்றி எண்ணமிடவும் கூட அவளால் முடிந்தது.

அதன் பிறகே, செல்லும் சாலையைக் கவனித்தவளுக்கு, உள்ளூர ஒரு துணுக்கம் உண்டாயிற்று. விழுப்புரம் வழியே சென்னை செல்லும் சாலை அது. இப்போது, புவனன், அவளை அவளுடைய தாத்தா வீட்டில் கொண்டு விட்டு விடப் போகிறானா? அப்படியானால் அவளது உடைகளை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்க மாட்டானா? ஒரு வேளை, தாத்தா செய்ததுபோல, அவற்றை 'கூரியரி'ல் அனுப்புவானோ?



ஓரக் கண் பார்வையில், அவன் முகத்தில் இருந்த புன்னகை படவும், வாய்விட்டு எதுவும் கேளாமலே மீண்டும் சாலையில் கவனத்தைப் பதித்தாள்.

அவள் கேட்டாலும், ஏதாவது கேலி கிண்டல் தவிர, ஒழுங்கான பதில் ஏதும் வரப்போவது இல்லை! இருக்கட்டும்! சரக்கு மலிந்தால், தானாகச் சந்தைக்கு வந்துவிட்டுப் போகிறது!

கொஞ்ச தூரத்தில், அவர்கள் இருவரும் அன்று அதிகாலையில் உணவருந்திய 'மோட்டல்' தென்பட்டது.

மெல்லச் செலுத்திய பார்வை, மீண்டும் புவனனின் முகத்தில் நமுட்டுச் சிரிப்பையே காணவும் அவள் காரிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தலானாள்.

சற்றுப் பொறுத்து, அவள் தோளில் தட்டி, ''இனி நான் ஓட்டுகிறேன்.'' என்று கூறி இடம் மாற்றிக் கொண்டான் அவன். காரின் வேகத்தைக் குறைத்து, வலப்புறமாய் சாலையின் குறுக்கே சென்று, செம்மண் பாதை ஒன்றில் காரை இறக்கியவாறே, ''நன்றாய் ஓட்டுகிறாய்! இனி, நெரிசல் உள்ள தெருக்களில் ஓட்டிப் பழகு!'' என்றவன் இலகுவாகக் காரைத் திருப்பி, நிறுத்தினான்! ''இடம் தெரிகிறதா?''

திகைப்புடன் சுற்றிப் பார்த்து விட்டுத் தலையசைக்கத் தொடங்கும் போதே புரிந்து விட்டது. சின்ன பூதங்கள்! பெரிய பூதங்கள்!

கண்ணுக்கு குளுமையாகப் பச்சைப் பசேல் என்று, பெரிதும் சிறிதுமாக மரங்களைக் கரும் பூதங்கள் என்று நினைத்தது நினைவுக்கு வரச் சிரிப்பு வந்தது!

காற்றிலே சலசலத்த சருகுகளைப் பாம்பு, செந்நாய் என்றெல்லாம் எண்ணினாளே!

மறையாமல் சொல்லிச் சிரித்த போது, "எல்லாமே அப்படித்தான். இன்னதென்று தெளிவாகத் தெரியாத போது, என்னவோ என்ற அச்சம் தோன்றி இல்லாததை எல்லாம் கற்பனை செய்ய வைத்துவிடுகிறது! கதவு மூடியிருக்கும்போது தானே, மறுபுறம் இருப்பது சிங்கமோ, புலியோ என்ற அச்சமெல்லாம்! திறந்துவிட்டால், அங்கே அழகான சித்திரம் கூட இருக்கலாம்." என்றான் அவன்.

அவள் சற்றே வியந்து நோக்கவும், தோளைக் குலுக்கி, "உலக நடப்பைச் சொன்னேன்!" என்று முடித்தான்.

உலக நடப்பை அவளுக்கு எடுத்துச் சொல்வானேன்? இது அவளுக்குக் கூறும் அறிவுரையே! "அப்படி யாரைப் பற்றி நான் தப்பாக நினைத்துக் கொண்டு இருக்கிறேன்?" என்று நேரடியாகவே சுமாலினி கேட்டாள்.

சிறு மவுனத்தின் பின், "பாபு!" என்றான் அவன்.

முகம் சிவக்க, "அவன் பொல்லாதவன்!" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

"அவனை நீ நேரில் பார்த்ததில்லை; பழகியதில்லை! அப்படியிருக்க, அவன் பொல்லாதவன் என்று உனக்கு என்ன நிச்சயம்?"

"அவன் பேச்சைக் கேட்டிருக்கிறேனே! அது போதாதா? அவன் என் வாழ்வை நாசமாக்க இருந்தவன்! ப்ளீஸ், நல்ல நேரத்தில் அந்த நாசக்காரனின்



பேச்சு எதற்கு? வேண்டாம்! ப்ளீஸ் புவனன்!" என்றாள் அவள் கெஞ்சும் குரலில்.

விட்டுக் கொடுப்பதன் அறிகுறியாய் மீண்டும் தோளைக் குலுக்கினான் புவனபூபதி.

சற்று யோசித்து, "இந்த இடம் உங்களுக்கு முன்பே அறிமுகமானது தான்! மெய்தானே?" என்று சுமாலினி வினவினாள்.

இனம் விளங்காத ஒரு பார்வையை அவள் முகத்தில் நிறுத்தி, "ஆம்", என்பது போலத் தலையாட்டினான் அவன். "இங்கே சற்றுத் தள்ளி ஒரு தொழிற்சாலை கட்டிக் கொண்டு இருக்கிறேன். இதெல்லாம் அந்தத் தொழிற்சாலை வருகிறது என்று தெரிந்ததுமே அமைக்கப்பட்ட குடியிருப்புப் பகுதி?" என்று விளக்கினான்.

"ஓகோ!" என்று அவள் கதை கேட்கவும், முகம் மாறி ஒரு சிரிப்புடன், "இதில் நாலு பிளாட்டை சேர்த்து வாங்கியிருக்கிறேன்." என்றான் அவன்.

"நாலா?! எதற்கு? நாலு வீடா கட்டப் போகிறீர்கள்?"

"நாலையும். சேர்த்துப் பெரியதாக ஒரு தாஜ்மகால் கட்டப் போகிறேன். ஒரு மறக்க முடியாத ஞாபகத்தின் சின்னமாக!" என்று அவன் ஒரு கனிந்த பார்வையுடன் கூற, சுமாலினியின் கன்னங்கள் எழிலாய்ச் சிவந்தன!

சமாளித்துக் கொண்டு, "ம்... சும்மா! அப்புறம் திருச்சி வீட்டை என்ன செய்வீர்களாம்? அங்கே உங்கள் வேப்ப மரம் வேறு இருக்கிறது!" என்று அவள் நினைவூட்டினாள்.

"தாஜ்மகாலில் யார் வசிக்கிறார்களாம்?"

அவன் சற்றுத் திகைத்து விழிக்கவும், "இதில் ஒரு கலையரங்கம் கட்டுவேன். இது ஒரு பெரிய குடியிருப்பு! ஏதாவது விழா, வைபவங்களுக்கு அவர்களுக்கு வாடகைக்கு விடுவேன். அரங்கத்தின் பெயரிலும், அழகான கட்டுமானத்திலும் அது நினைவுச் சின்னமாகவும் விளங்கும்!" என்று புவனன் அறிவித்தான்.

என்ன பெயர், என்ன அமைப்பு என்று கேட்க விடாமல் ஒருவிதப் பரபரப்பும் கூச்சமும் தடுக்க, சுமாலினி பேச்சை மாற்றினாள். கண்ணில் சிரிப்புடன் அவனும் விட்டுக் கொடுத்தான்!

அங்கேயே உணவருந்தி விட்டு, இப்படியே சற்று நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு, இருவருமாக வீடு திரும்பினர்.

திரும்பி வரும்போது முழுக்க முழுக்க கார் ஓட்டியது சுமாலினி தான்.

அதற்கும் ஒரு பாராட்டுக் கிடைக்கவே, உற்சாகத்தில் உள்ளம் துள்ள, வீட்டினுள் வந்தவள், அவர்களை எதிர்கொள்ள வந்த செல்வநாயகியோடு கூட வந்த அந்த இளம் பெண்ணைக் கண்டதும் திகைத்து நின்றாள்.

"அத்தா...ன்! உங்களுக்காகவே வந்திருக்கிறேன். இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீர்கள்?" என்று சிணுங்கியபடியே, வந்து, புவனபூபதியின் தோளில் கிள்ளையாகத் தொற்றிக் கொண்டாள் அந்தப் பெண்!

சுமாலினியின் நெஞ்சத்துக்குள் ஒரு தாஜ்மகால் நொறுங்கலாயிற்று.



## 16

அந்தப் பெண்ணின் பெயர் ரூபா என்பதற்கு மேலாக, புவனனோ, செல்வநாயகியோ அதிக விவரம் ஏதும் சொல்லவில்லை! சொல்லப்போவதாக இல்லை என்று சுமாலினிக்குத் தோன்றியது! 'அவள்'... என்று பேச்செடுத்தாலே, இருவருமே ஒன்று, பேச்சை மாற்றினர்; அல்லது அகன்று போயினர்.

அவளோ, 'அத்தான்' 'அத்தான்' என்று கொஞ்சினாள்! கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்காத குறைதான்.

வாய் ஓயாமல் அவள் பேசினாள்.

சமீபத்தில் சிங்கப்பூர் சென்று வந்திருப்பாள் போல! அவள் பேச்சு, பெரும்பாலும் அதைப் பற்றியே இருந்தது.

அதை என்றால், சிங்கப்பூரைப் பற்றி அல்ல! அங்கே அவள் எங்கெங்கே போனாள், என்னென்ன பார்த்தாள் என்பது பற்றியும் அல்ல. அவள் எங்கெங்கு செல்லும்போது, என்னென்ன மாதிரி ஆடை அணிந்திருந்தாள்; அதை மற்றவர்கள் யார், யார், எப்படி எப்படிப் பார்த்து ரசித்துப் பாராட்டினார்கள் என்பது தான் அவளது மூச்சு விடாத பேச்சின் மூலம் பிறருக்கு அறிவிக்கப்பட்ட முக்கிய விவரமாக இருந்தது.

அவ்வப்போது அவளது பார்வை சுமாலினி மீது படிந்த போதும், அவளை ஒரு பொருட்டாக மதித்து, அவளோடு ரூபா பேசுவது இல்லை.

அறிமுகத்தின் போது - குடும்ப நண்பருடைய பேத்தி, ரொம்பவும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க,

பேத்தியை கொஞ்ச நாள் இங்கே அனுப்பி வைத்திருக்கிறார் என்று செல்வநாயகி உரைத்ததும், சும்மா பெயருக்காக ஒரு தரம் தலையசைத்த பின், சுமாலினி, என்று ஒரு பெண் அங்கே இருப்பது அவனுக்கு நினைவுக்கு வரவே இல்லை!

''அந்த சிவப்பு வண்ண 'ஷிஃபான்' உடையில் நான் அங்கே போய் நின்றேனா?! எல்லோரும் அசந்து போனார்கள்! என்னை 'மாடலிங்' பண்ணக் கூடக் கூப்பிட்டார்கள். அதெல்லாம், அத்தானைக் கேட்டுக் கொண்டு தான் என்று விட்டேன்! மனைவி 'மாடலிங்' செய்வது சில ஆண்களுக்குப் பிடிப்பது இல்லையல்லவா? அதனால்தான் அப்படிச் சொன்னேன்! நீங்கள் என்னத்தான் சொல்கிறீர்கள்!''என்று புவனாவின் சட்டைக் காலரைச் சரி செய்து விட்டபடி அவள் கேட்டாள்.

அவளது கேள்வியை ஒதுக்கி, ''அடடே! உனக்குத் திருமணமாகி விட்டதா? யாரம்மா அந்த அசட்டு ஆண்மகன்?'' என்று புவனன் கிண்டலாகக் கேட்கவும், ''போங்கள், அத்தான், இதிலுமா விளையாட்டு?!'' என்று அவன் மார்பில் செல்லமாகக் குத்தினாள் அவள்.

இலகுவாக அவளைப் பற்றி விலக்கி நிறுத்தி விட்டு ''இதோ பார், எனக்கு ஓர் ஆளைப் பார்க்க நேரம் ஆகிறது! கூட வந்தாயானால் பஸ் நிறுத்துமிடம் எதிலாவது இறக்கி விடுகிறேன்!'' என்று ரூபாளை அழைத்தான் புவனன்.

ஒரு வினாடி யோசித்து விட்டு, ''அத்தை! மற்ற விவரமெல்லாம் உங்களிடம் அப்புறமாய்ச் சொல்லுகிறேன்!'' என்று கூறிவிட்டு, புவனனின் தோளைப் பற்றியவாறே அவள் செல்ல, வெளியே காருக்கு இருவருமாக சென்றார்கள்.



உள்ளூர வேதனையுற்றவளாக அவர்களைச் சுமாலினி நோக்கினாள். அவள் கையை அவன் தட்டிவிடவில்லையே! ஏன்? என்று அவளுக்கு ஒரே குழப்பம்! தாஜ்மகால் கட்டப் போகிறேன் என்று சொன்னானே!

சந்தேகம் தெளியத்தான் செல்வநாயகியிடம், சுமாலினி ரூபா பற்றி விவரம் வினவியது!

'சொந்தக்காரப் பெண்! மிகவும் உரிமை எடுத்துப் பழகுவாள்' என்றுரைத்து விட்டு, அவசரமாக அங்கிருந்து அகன்று விட்டார், செல்வநாயகி!

சுமாலினி பிரமித்து நின்றாள்.

அன்றுவரை செல்வநாயகி, சுமாலினியிடம் பழகிய விதம் மிகவும் சகஜமானது. வயதுக்குரிய பந்தா கூட இல்லாமல், மிகவும் அன்பு காட்டி, உரிமை கொடுத்து, அந்த வீட்டில் அவருக்குச் சமம் போலவே அவளை நடத்தினார். வேலையாட்களையும் அதே போல நடந்து கொள்ளச் செய்தார். புவனனும் சுதந்திரம் தந்திருந்ததால், சித்தி மாலதியின் வீட்டை விடவும் இந்த வீடு அவளுக்குச் சொந்த வீடாகத் தோன்றத் தொடங்கியிருந்தது.

வீடு சொந்த வீடு என்றால், வீட்டினர் சொந்த மனிதர்கள்தானே? அப்படி நினைத்துத்தான் அவள் தயக்கமின்றி கேட்டு விட்டாள்.

ஆனால், செல்வநாயகியின் சுருக்கமான பதிலும், மேலே பேச இடம் கொடாமல் விலகிச் சென்று விட்டதும் அவளுக்கு முகத்தில் அடித்த மாதிரி வேதனையாக இருந்தது.

அந்தப் பெண் ரூபாவின் உறவு, சுமாலினியின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டது என்று சொல்லாமல் சொல்லி அறிவுறுத்துகிறார்.

மேற்கொண்டு, ரூபா பற்றி நேரடியாகக் கேட்க அவளுக்கு வாய்வராவிட்டாலும், அவ்வப்போது ரூபா மிகுந்த உரிமை காட்டிப் பழகும் போதெல்லாம், என்ன இது என்பது போல அவளது முகபாவம் கேட்கத் தான் செய்தது. ஆனால், இருவருமே அதைக் கண்டு கொள்ள வில்லை. மற்ற வகையில் அவர்கள் இயல்பாகவே பழகியபோதும், உள்ளூர, சுமாலினி நத்தையாய்ச் சுருட்டிக் கொள்ளத் தொடங்கினாள்.

சித்தி வீட்டையே, விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்று எண்ணினோமே! எந்தவித உறவோ, உரிமையோ இல்லாத இந்த வீட்டில், ரொம்பவும் அதிக காலம் தங்கி விட்டோமோ என்று அவள் மனம் சஞ்சலப் படலாயிற்று.

அந்த எண்ணம் உறுதிப்படுவதுபோல, ஒரு நாள், புவனனும் அவனுடைய தாயாரும் பேசிக்கொண்டிருந்த ஒரு பேச்சு அவளது காதில் விழவும், அவள் மிகவும் கூசிப் போனாள்.

“என்னடா இது? ஒரேயடியாய் இந்த வீடு அவளது என்றே எண்ணி விட்டாளா? பேச்சும் நடத்தையும் கொஞ்சமும் சகிக்கவில்லை! ஜாடையாக என்ன சொன்னாலும் கண்டு கொள்ளவே மாட்டேன் என்கிறாளே! உண்மையாகவே புரியவில்லையா அல்லது புரிந்து கொள்ளாத மாதிரி நடிக்கிறாளா? முகத்தில் அடித்தாற்போல நேருக்குநேரே சொன்னால் தான் அந்த மண்டையில் உறைக்கும் போலத் தெரிகிறது!” என்றார், செல்வநாயகி, எரிச்சல் மிகுந்த குரலில்.



ரூபாவின் கீச்சுக் குரலும், சிரிப்பும் கேளாத இடம் என்று, தோட்டத்தின் மறு மூலைக்குச் சென்று விட எண்ணி, சுமாலினி ஓசையின்றி நடந்து கொண்டிருந்தாள்... யாரும் என்னவென்று கேட்டால், விளக்கம் சொல்வதற்காகக் கையில் ஒரு புத்தகம் வேறு!

மெல்ல வீட்டைச் சுற்றிச் சென்று கொண்டிருந்தவளின் செவிப்பறையில், செல்வநாயகியின் எரிச்சல் குரல் மோதவும், அவள் அப்படியே உறைந்து போய் நின்று விட்டாள்! கடைசியாக, அவள் நினைத்தது சரிதான் போல இருக்கிறது! சே! என்ன கேவலம்!

“சொல்லி விடலாம் அம்மா! ஆனால் அது வேறு விதமாய்ப் பிரச்னை உண்டுபண்ணி விடக்கூடாதே என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது. இன்னும் கொஞ்ச அவகாசம் கிடைத்திருந்தால்... பார்க்கலாம் அம்மா! நான், அவள் வீட்டில் சொல்லி வேறு விதமாய் ஏற்பாடு செய்கிறேன். தொழில் தொடர்புதான் இருக்கிறதே! அதை பயன்படுத்திக் கொள்ளலாம்.” என்றான் அருமை மைந்தன்.

கூனிக் குறுகிப் போனாள் சுமாலினி.

இவன், தாத்தாவிடம் சொல்லி, அவர் மூலமாய் விழுப்புரத்துக்கு அழைக்கச் சொல்லப் போகிறானா? தாத்தாவின் முன் கூனிக் குறுகி நிற்பது வேறு இருக்கிறதா? கடவுளே! வேண்டாம்!

அப்போதைக்கு சத்தமின்றி ஒதுங்கிப் போனவள், ரூபாவை விட்டு வரவென்று புவனன் அவளோடு சென்றதும், செல்வநாயகியிடம் வந்து நின்றாள்.

“ஆன்ட்டி, உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்... வந்து, நான் இங்கே வந்து இருபது நாட்கள்

ஆகிவிட்டதே! நான்... வந்து நாளைக்கு விழுப்புரத்துக்குக் கிளம்பட்டுமா?''

வியந்த பாவனையுடன், ''என்னம்மா நீ... ரென்று?'' என்று விசாரித்தார் செல்வநாயகி.

''அ... அதில்லை, ஆன்ட்டி தாத்தா... தாத்தாவைப் பிரிந்து இவ்வளவு நாள் நான் இருந்தது கிடையாது...'' என்றவள், விழி உயர்த்திப் பெரியவளை நோக்கி, ''விருந்தும் மருந்தும் மூன்று நாள் ஆன்ட்டி, நான் இத்தனை நாள் இங்கே இருந்ததே அதிகம்! உங்களிடம் எனக்கு என்ன உரிமை இருக்கிறது. சொல்லுங்கள்?'' என்றாள் தொண்டை அடைக்க.

''சுமா!'' என்று புருவம் சுருக்கி யோசித்த செல்வநாயகியின் முகம் சட்டென மலர்ந்தது. ஒற்றை விரல் நீட்டி, பத்திரம் காட்டிச் சொன்னார். ''ஒட்டுக் கேட்கிறவர்கள் நல்லதைக் கேட்பதில்லை' என்று சொல்வார்கள்! அவரவரைப் பற்றிய, இச்சகமற்ற உண்மை தெரியும் போது கசக்கத்தான் செய்யும் என்பதால் சொன்னது அது. நீயானால், அடுத்தவரைப் பற்றிச் சொன்னதை எல்லாம் உன் தலை மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு வேதனைப்படுகிறாயே! உனக்கு தாழ்வுணர்ச்சி இருப்பதாகப் புவனன் சொன்னது நூற்றுக்கு நூறு சரிதான் போல! என்று சிரித்தார்.

''அது... அது... தொழில் தொடர்பு என்று புவனன் சொன்னதும், தாத்தா தான் என்று எண்ணி விட்டேன், ஆன்ட்டி?'' என்று சுமாலினி அசடு வழிந்தாள்.

''சரிதான் போ! உன் தாத்தா, எத்தனை நிறுவனங்களுக்கு சப்ளை செய்வார்? அதுபோலப் புவனனுக்கும் எத்தனையோ பேரிடம் தொழில் தொடர்பு இருக்கும்



அல்லவா? ரூபாவுடைய தந்தையோடு அதே போலத்தான்! அசடு, அசடு! நாளைக்குக் கோயிலில், உன் அசட்டுத்தனம் அடியோடு நீங்க வேண்டும் என்று ஸ்ரீரங்க நாதரிடம் வேண்டிக் கொண்டு வருகிறேன்! இல்லாவிட்டால் தாங்காது!'' என்று மூத்தவர் கேலி பேசவும், சுமாலினியின் முகம் பூவாய் மலர்ந்தது.

சனிக்கிழமை தோறும், விரதமிருந்து, ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதர், திருவானைக்காவில் ஜம்புலிங்கேஸ்வரர், மலைக் கோட்டை மாணிக்க விநாயகர் என்று எல்லாக் கோயில்களுக்கும் சென்று வழிபட்டு வருவது செல்வநாயகியின் வழக்கம். அவருடைய கணவருக்கு 'ஸ்ட்ரோக்' வந்ததிலிருந்து, இந்த சனிக்கிழமை வழிபாட்டை அவர் முடிந்த அளவு விடாமல் செய்து வந்தார். அதற்காக, மகனையோ, மற்றவர்களையோ கூட வந்துதான் ஆகவேண்டும் என்று வற்புறுத்துவது கிடையாது. 'என்னுடைய வழிபாடு இது... உன் வழி எதுவாயினும் அது உன் விருப்பம்! என்று போய் விடுவார். ஒருவரது வழிபாட்டு முறையைத் தீர்மானிக்க வேண்டியது, அவரவர் இதயமே! இதில் அடுத்தவர் தலையீடு கூடாது என்பது அவரது கொள்கை.

அந்த வாரம் சனிக்கிழமை செல்வநாயகி, கோயிலுக்குக் கிளம்பிச்சென்ற சற்று நேரத்துக்கெல்லாம், ஒரு கார் வந்து போர்டிகோவில் நிற்க, தன் வழக்கமான நளின நடையுடன் ரூபா, அசைந்தாடி உள்ளே வந்தாள்.

உள்ளே வந்து, அத்தை எங்கே என்று ஆசையாகக் கேட்டவள், செல்வநாயகி கோயிலுக்குச் சென்றிருப்பதை அறிந்து வெகுவாக ஏமாற்றமடைந்தாள்.

''அத்தையிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்தால், அவர்கள் இல்லையே!'' என்று வருத்தப்பட்டாள்.

பிறகு, ''அதுவும் நல்லதுதான். அத்தை போலப் பெரியவர்கள் முன்னிலையில் சின்னவர்கள் நாம் மனம் விட்டுப் பேசவே முடியவில்லை!... முதலில் ஒன்று சொல்லி விடுகிறேன்!'' என்று ஒரு சோகப் பெருமூச்சு விட்டாள். ''நான் என்னவோ ஆசைப்பட்டேன். ஆனால், பார்க்கப் பார்க்க, என்னை விட, அத்தானுக்கு நீதான் பொருத்தம் என்று எனக்கே தோன்றி விட்டது! முன்பு எப்படி எப்படியோ, பழகியிருந்தோம் தான்! ஆனால், அது சேர்ந்து வளர்ந்ததால் ஏற்பட்ட நெருக்கம், அவ்வளவே!... எப்படியோ! நீயும் அத்தானும் நன்றாய் இருக்க வேண்டும்!'' என்று கரகரத்த குரலில் ரூபா கூறவும், சுமாலினியின் நெஞ்சு பாகாய் உருகி விட்டது.

புவனனை நேசித்து விட்டு, விட்டுக் கொடுப்பது என்றால் அது எவ்வளவு பெரிய இழப்பு! எவ்வளவு பெரிய வேதனை!

நியாயம் ஆலோசித்து, தானாகவே அதைச் செய்ய முன் வருகிறாள் என்றால்... இவள் எவ்வளவு நல்லவளாக இருக்க வேண்டும்! நல்லவளாகத் தான் இருந்தாக வேண்டும்!

இவளைப் போய், சுமாலினி தப்பாக நினைத்தாளே!

மனதின் இளக்கம், சுமாலினியின் இறுக்கத்தைத் தளர்த்தி, இயல்பாகப் பேச வைத்தது.



அவரவர் ஆசைகள், ஈடுபாடுகள், தோழிகள், குடும்பம் பற்றிய விவரங்களைப் பரிமாறிக் கொண்டனர். வெகுநேரம் பேசிக்கொண்டு இருந்த பின்னரே, ரூபா அங்கிருந்து கிளம்பித் தன் வீடு நோக்கிச் சென்றாள்.

அன்றைய பேச்சின் விளைவாகவோ, என்னவோ, அடுத்த சனிக்கிழமையன்று, சம்பத்குமார் அங்கே வந்து நின்றான்!

உடையவன் போல உள்ளே வந்து, அவள் முன்னே நின்று அவளையே சற்று வெறித்து நோக்கினான். ''இப்படிப் பண்ணிவிட்டாயே!'' என்று கேட்டவனின் குரலில் அழுகை தொனித்தது.

## 17

சம்பத்குமாரைத் திருமண வீட்டினுள்ளே கண்டதும் முதலில் சுமாலினி திகைத்துத்தான் போனாள்.

எந்தெந்த மன வேதனைகளிலிருந்து, இறுக்கங்களிலிருந்து விலகி அவை எட்ட முடியாத இடத்தில் நிம்மதியாக இருக்கிறாள் என்று எண்ணினாளோ! அந்தத் துன்பங்களின் ஒரு முக்கியமான மூலகாரணன், எதிர்பாரா வண்ணம் எதிரில் வந்து நிற்கிறான்.

இவனிடம் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது?

பழைய சுமாலினி என்றால் இப்போது 'அய்யோ' என்று இடிந்து போயிருப்பாள்! 'உன் தாத்தா வீட்டுக்குக் கிளம்பு!'' என்று அவன் அதட்டியிருந்தால், பின்னோடு சென்றும் இருப்பாள்.

ஆனால் இன்று அவளிடம் ஒரு தெம்பு இருந்தது. கேலியும், கிண்டலும், சீண்டலுமாக புவனனும் அவன் தாயாரும் அவளுள் தூண்டி விட்டிருந்த தன்னம்பிக்கை சற்றுத் தலை தூக்கியே நின்றது! சித்தி தந்த சுரிதாரில் நாமும் இன்றைய நாகரிக நங்கை என்கிற திமிரும் இருந்தது.

எனவே, 'இப்படிச் செய்து விட்டாயே!'' என்று சம்பத்குமார் அழுகுரலில் அவளைக் குற்றம் சாட்டிய போது, ''என்ன செய்து விட்டேன்?'' என்று பதிலுக்குக் கேட்கவும் அவளால் முடிந்தது.

''என்ன இப்படிச் சொல்லிவிட்டாய்? நாம் இருவரும் வருங்காலக் கணவன் மனைவி! நீ இருக்கும் இடம் கூடத் தெரியவில்லை என்றால் எனக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்? என் நிலைமை பற்றிக் கொஞ்சம் கற்பனை செய்து பார், தெரியும்! இவ்வளவு நாளும் உன்னைத் தேடித் தேடி எப்படி அலைந்தேன் தெரியுமா? பகலெல்லாம் தேடுவது, இரவெல்லாம் உன்னைக் காணவில்லையே என்று கண்ணீர் விடுவது! இந்த ஒரு மாதமாய் நான் எவ்வளவு வேதனைப்பட்டு விட்டேன் தெரியுமா?''

''நம்ப முடியவில்லையே!'' என்றபடி சோஃபாவில் அமர்ந்து கையால் ஸ்டைலாக நெற்றிக் கூந்தலை ஒதுக்கி விட்டுக் கொண்டாள் சுமாலினி.

புருவம் நெரிய, சம்பத்குமார் எதையோ யோசித்தான். மீண்டும் அவளை வெறித்து நோக்கினான்.

''உன் வருங்காலக் கணவன், உன்னைத் தேடி அலைந்ததில் நம்ப முடியாதது என்ன இருக்கிறது?'' என்று கேட்டவனின் கண்களில் குழப்பமிருந்தது. ''ஆளே மாறி விட்டாயே, சுமா?''



''ஆமாம்! சேலைக்குப் பதில் சுரிதாரெல்லாம் அணிந்திருக்கிறேனில்லையா! மாறித்தான் விட்டேன்...'' என்றவள், அவன் முகத்தில் அதிர்ச்சியைக் காணவும், ''ஆடையில் மட்டுமில்லை, நடவடிக்கையில், குணத்தில் கூட நான் துணிச்சல் மிகுந்த இன்றைய இளம் பெண் ஆகிவிட்டேன்!'' என்றாள் திடமான குரலில்.

''நீ எப்படி மாறினாலும் என் காதல் மட்டும் மாறவே மாறாது, கண்மணி..'' என்றவனை இடைவெட்டி, ''ரொம்பவும் விட்டுக் காண்கிறது மிஸ்டர் சம்பத் குமார்!'' என்றாள் சுமாலினி.

அவளது மிஸ்டர் சம்பத்குமாரில் மேலும் அதிர்ந்து நோக்கவும், ''டாப் காஸ் கேர்'ளுக்குக் கொடுப்பதற்குத் தேவையான பணம் இப்போது இல்லையாக்கும்! அதனால், உதைத்தாலும் உதைக்கிற காலுக்கு முத்தம் கொடுக்கிற முட்டாளை, முதுகெலும்பே இல்லாத கோழையைத் தேடி வந்தீர்களாக்கும்!'' என்றாள் ஏகத்தாளமாக.

''ஓ!'' சம்பத்குமாரின் முகத்திலிருந்த குழப்பம் அடியோடு மறைந்தது. பெண்களின் விஷயம் அவனுக்கு மறப்பது இல்லை! இந்தச் சுரிதாரும் அது காட்டிய எழில் வளைவுகளும் அவனுக்கு அடியோடு மறக்கவில்லை. கை கொண்டு தலையைத் தாங்கினாற்போல முகம் மறைத்து உட்கார்ந்திருந்த நிலையில், அங்கங்கே இழுபட்ட சுரிதாரும், அது காட்டிய உடல் அழகும், அருகில் அந்த அழகி இருந்தபோதும் அவன் கருத்தில் படாமல் இருக்கவில்லை! இவ்வளவு அழகான உடலுடைய பெண்ணின் முகம் கோரம் போலும், அதனால் அதை மறைத்து, 'ஸ்டைல் போஸ்' மாதிரி உட்கார்ந்தி

ருக்கிறான் என்று நினைத்தல்லவா அவள் முகத்தைப் பார்க்க அவன் முயற்சியே செய்யவில்லை! கழுதை! அவனுக்குத்தான் முகத்தை மறைத்திருக்கிறான்!

அன்று காஃபி ஷாப்பில் பேசியது, நடந்தது எல்லாம் நினைவுபடுத்திப் பார்த்தவனுக்கு முகம் வியர்த்தது. முழுமையாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு விட்டாளே! இவளை எப்படி சமாளிப்பது என்று யோசித்தவன், முழுப் பழியையும் தன் பெரியப்பா பிள்ளையின் மேல் போட்டு விட முடிவு செய்தான்.

பாக்கெட்டிலிருந்த கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொள்ளும் பாவனையில், அதே கைக்குட்டையால் முகத்தை மூடிக் கொண்டு சோபாவில் அமர்ந்து உடல் குலுங்கினான் அவன்.

இவன் என்ன, அழுகிறானா? முட்டாள்த்தனமாய் அப்படி நடந்து கொண்டேன்; இப்போது திருந்தி விட்டேன்; மன்னித்து விடு எனப் போகிறானா? அப்படிச் சொன்னால், அதை நம்ப அவள் ஒன்றும் பழைய முட்டாள் அல்லவே!

சம்பத்குமார் அவள் எதிர்பார்த்தது போலச் சொல்லியிருந்தால், சுமாலினி நிச்சயமாக நம்பியிருக்க மாட்டாள் தான்.

ஆனால், அவன் வேறு சொன்னான்!

அன்று நடந்தது முழுக்க முழுக்க நடிப்பு என்றான் அவன். அவனுடைய பெரியப்பா பிள்ளை பாபுவின் சொல்படி, அரங்கேறிய நாடகம் அது என்றான்.

'உளறல்' என்று தான் நினைப்பதைச் சுமாலினி மறையாமல் முகத்தில் காட்டினாள். ''நீங்கள் என்னை



மணந்தாக வேண்டும் என்றவர், அப்படி ஒரு நாடகத்தை ஏன் நடத்த வேண்டும்?'' என்றாள் நம்பாமையை முகத்தில் காட்டி.

''அப்படிச் சொன்னால்தானே பிற்பாடு ஒரு கோரிக்கையோடு உன்னிடம் வந்து நிற்கும்போது, நீ, அவனை நம்புவாய்! அதற்காகத்தான்!'' என்றான் சம்பத்குமார்.

''மாட்டிக் கொண்டோம் என்று எதையாவது உளறாதீர்கள், சம்பத்குமார்'' என்றாள் சுமாலினி சற்றுக் கடுமையான குரலில்.

''இல்லாதவர்கள் உண்மையைச் சொன்னால், அதுவும் கூட உளறலாகத்தான் படுகிறது. எல்லாம் என் தலைவிதி! நான் சொல்வதைக் கவனித்துக் கேள், சுமாலினி. உண்மை உனக்கே விளங்கும்!'' என்று வருத்தமான குரலில் சம்பத்குமார் விவரம் எடுத்துரைத்தான். ''உன்னைத் தற்செயலாகப் பாபு பார்த்து விட்டான். நம் திருமணம் நடக்குமுன், குறைந்தபட்சம் நிச்சயதாம்பூலம் மாற்று முன் அவன் உன்னைக் காண நேர்ந்தது என் கெட்ட காலம்தான். கூடவே, உன் தாத்தாவின் சொத்துக் கணக்கும் அவன் கைக்கு வந்து சேர்ந்திருக்கிறது! சொத்தே இல்லாவிட்டாலும் உன்னைப் போல ஒரு பேரழகியை விட்டு விட - அதுவும் நான் மணக்க விட்டு விட பாபுவுக்கு மனம் வருமா? அதனால்தான் இப்படி ஒரு நாடகம் நடிக்க வைத்தான்.''

'பேரழகி' என்ற வார்த்தையில் உச்சி குளிர்ந்து மற்றதை ஆழத் தாண்டித் துருவமாட்டாள் என்பது அவனது கணிப்பு.

அழகி என்றது இதமாகவே இருந்தபோதும், அவன் பேச்சை சுமாலினி நம்பத் தயாராக இல்லை.

''தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதுபோல இவ்வளவு கதை எதற்கு? சும்மா, திருமணம் பிடிக்கவில்லை என்று உங்களைக் கொண்டு சொல்ல வைத்திருக்கலாமே, உங்கள் பாபு!'' என்று அழுத்தத்துடன் வினவினாள்.

அவசரமாய் யோசித்து, ''அப்படிச் செய்திருந்தால் என் மேல் உனக்குள்ள அன்பை அப்படியே முழு வெறுப்பாய் மாற்ற முடியாதே! தான் ரொம்ப நல்லவன் மாதிரிக் காட்டிக் கொள்ளலாம்! உன் வாயாலேயே திருமணம் வேண்டாம் என்று சொல்ல வைத்து, உன் தாத்தா கலங்கியிருக்கும் நேரத்தில் தலையை நீட்டி, உன்னையும், சொத்தையும் தட்டிக் கொண்டு போய் விட வேண்டும் என்பது அவனது திட்டம். ஒன்று தெரியுமா உனக்கு? அன்று, காஃபி ஷாப்பில் என்னோடு இழைந்தாளே, ஒருத்தி! அவள் பாபுவுடைய காதலிகளுள் ஒருத்திதான்! முழுநேரமும் என்னைக் கண்காணிப்பதற்காக என் கூடவே இருக்க வைத்திருந்தான்!'' என்றான் சம்பத்குமார்.

அன்றைய நடப்புகளும் இந்தக் கதையுமாக, சமாலினி சற்றே குழம்பினாள். ''இன்னமும் உங்கள் பேச்சு நம்பத் தகாததாகத்தான் எனக்குப் படுகிறது'' என்றாள் அவள், பிடிவாதமாக வருவித்த தெளிவான குரலிலேயே.

''சத்தியமாய் நான் சொல்வதெல்லாம் நிஜம், சமாலினி! கடவுளே! இப்போது நான் என்ன சொல்லி உன்னை நம்ப வைக்கட்டும்? மற்றதை விடு! அன்று நடந்தது நாடகம் அல்ல, நடப்பு என்றால், அவ்வளவு விவரமான பேச்சையும் உன் காது கேட்கத்தானா நான்



சொல்லியிருக்க வேண்டும்? தூணாக அமர்ந்திருந்த, உன் பார்வையில் படும் இடத்தில்தானா நான் அந்த ராட்சசியோடு உட்கார்ந்திருக்க வேண்டும்?'' என்று சம்பத்குமார் கேட்கவும், சமாலினிக்குத் தலை சுழன்றது.

அவன் இருந்த இடம் வரை சரியாகச் சொல்கிறானே?

ஆனால், அப்போதும் அவனை நம்ப மனமற்று, ''இப்படியெல்லாம், உங்கள் பெயரையும், வாழ்வையும் கெடுத்துக் கொண்டேனும், அந்தப் பாபுவின் சொல்படி நீங்கள் அவன் பேச்சை ஏன் கேட்க வேண்டும்? மறுப்பதற்கென்ன?'' என்று அவள் கேட்டபோது சமாலினி விரும்பிய மிடுக்கு அவளது குரலில் வரவே இல்லை.

அவனும் அதைக் கண்டுகொண்டு, ''என்ன செய்வது, சமா? எங்கள் வருமானம் முழுவதும் அவன் கையில் அல்லவா சிக்கி கிடக்கிறது! நான் பரவாயில்லை! அரை வயிறு சாப்பிட்டே காலத்தை ஓட்டி விடுவேன்! ஆனால் என் பெற்றோர்? அவர்கள் பட்டினி கிடக்கும்படி நான் எப்படி விடுவது? காலடியில் எங்களைப் போட்டு மிதித்துக் கொண்டே அல்லவா இருக்கிறான், அந்த வக்கிரம் பிடித்தவன்?!''

இருக்குமோ என்று தோன்றியது அவளுக்கு. பாபுவாம் பாபு! என்ன, சம்பத்குமார் பொய்த்துப் போனான் என்பதால், இவளை அவன் மணந்து கொள்ள முடியுமா? இப்போது, சம்பத்குமார் சொன்ன கதை எவ்வளவு உண்மையோ, தெரியாது! ஆனால், அது உண்மையாக இருந்தாலும் சரி; முழுவதும் கற்பனையாக இருந்து, 'சமாலினி அன்று கண் முன்னே

கண்டு காதுகளால் கேட்டவையே மெய்யாக இருந்த
லும் அப்போதும் அந்தப் பாபு ஒரு பெரும் வக்கிரம்
பிடித்தவன்தான்.

அவன் மட்டும் இப்போது அவளிடம் அகப்பட்
டால், வார்த்தைகளாலேயே, நார் நாராகக் கிழித்து
விடுவாள்!

"இதில் எனக்குத் தாங்க முடியாத வேதனை
என்னவென்றால், நீ எதிரி பக்கம் சேர்ந்து கொண்
டாயே, சமா! எனக்கு மட்டுமல்ல; உனக்கும் அநியாயம்
செய்தவன் வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு
இருக்கிறாயே!" என்று சம்பத்குமார் மேலும் புலம்பவும்
அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என்ன மேலே மேலே உளறுகிறீர்கள். இந்த
வீட்டுத் தலைவர் வெளிநாட்டில் மகள் வீட்டில் இருக்கி
றார். வீட்டு நிர்வாகம், தொழில் நிர்வாக,1 எல்லாம்
அவருடைய மகன் புவனபூபதிதான் பார்க்கிறார்..."

"ஆமாம் புவனபூபதிதான் என் தாத்தாவின்
பெயர். 'பூபதி' எண்டர்ப்ரைசை நிறுவியவர்! அவரும்
பாட்டியும் உயிரோடு இருக்கும்போது அந்தப் பெயர்
சொல்லி அழைக்க இயலாது என்று, அவனைப் பாபு
என்று அழைத்து, அதுவே அவன் பெயர் போல
நிலைத்து விட்டது!" என்றான் சம்பத்குமார்.

"பொய்...!" என்று வீறிட்டாள் சமாலினி.

"பொய்யா...? நான் சொல்வது பொய்யா? இங்கே
உள்ள வேலையாட்களை அழைத்துக் கேட்டுப்பார்.
அவனை எப்படிக் கூப்பிடுவார்கள் என்று! வேண்டாம்!
அவர்களைக் கூட நான் லஞ்சம் கொடுத்து விலைக்கு



வாங்கி விட்டேன் என்பாய். வா! அவன் அலுவல்
அறையில் ஏதாவது தடயம் இராமல் போகாது! வா.
காட்டுகிறேன்... என் கணிப்பு சரியென்றால், அவனது
அலுவல் அறைக்குள் காலடி எடுத்து வைக்கக் கூட,
உன்னை அனுமதித்திருக்க மாட்டானே!" என்று எழுந்
தான் சம்பத்குமார்.

வெறி பிடித்தவள் போல எழுந்து மடமடவென்று
போய், சாவி மாட்டும் இடத்திலிருந்த கொத்து சாவியை
எடுத்து வந்து புவனனின் அறைக் கதவைச் சமாலினி
திறந்தாள்.

முதல் பார்வையிலேயே அவளைத் தாக்கியது. பல
தாங்கிகளில் மாட்டப்பட்டிருந்த வரைப்படங்கள். இயந்
திரங்கள், அவற்றின் இணைப்புகளை காட்டும் படங்கள்,
அவற்றுள் ஒன்றிரண்டைத் தாத்தாவின் அலுவல் அறைக்
குள் பார்த்தது நினைவு வர, சமாலினி கொதித்துப்
போனாள்! பூபதி எண்டர்பிரைசக்காக என்று அடிக்
கோடிட்டிருந்த எழுத்துகள் அவளைப் பார்த்து எள்ளி
நகைத்தன!

எவ்வளவு எளிதாக அவளை ஏமாற்றிவிட்டான்!

அவளைப் பற்றிய அத்தனையையும் அறிந்து
கொண்டவன், அவனைப் பற்றி எதுவும் சொல்லவில்
லையே! சொல்லாதது மட்டுமல்ல! பொய்! உண்மையை
மறைத்து நாடகமாடி அவளை எப்படி ஏமாற்றி விட்
டான்! ஆண்ட்டி கூட அவனோடு சேர்ந்து அவளுக்கு
அநியாயம் செய்து விட்டார்களே!

பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? மகனுக்கு
அஞ்சி, அவன் சொன்னதுபோல நடந்து கொண்டு
இருக்கிறார்கள்!

பலமுறை செல்வநாயகி 'பா...' என்று தொடங்கி விட்டுப் பேச்சை மாற்றியது, சுமாலினிக்கு அப்போது நினைவு வந்தது. ஒவ்வொன்றாக என்னென்னவோ, அன்று வரை அறிவில் படாதது அன்று மலைமலையாய் முன்னே வந்து நின்றன!

முதல் நாள் தாத்தா பெயர் கூப்பிட முடியாது என்றபோது எச்சரிக்கையாய் நோக்கினானே! தாயார் வாயை விட்டு விட்டாளோ என்று தானே? முதலில் அவளைக் காரில் வைத்து விட்டுத் தனியாக உள்ளே சென்றதே பெற்றவளைத் தயார் செய்யத்தான்!

அவ்வப்போது அவள் முகத்தில் பார்வை பதித்துப் பேசுவானே! என்னமாய் எடுத்துக் கொள்கிறாள்? எதையாவது கண்டு கொள்கிறாளா என்று கவனிக்கத் தானே?

அவள்தான் முட்டாளாய், திர்மூடமாய் ஒன்றும் புரிந்து கொள்ளாமலே இருந்து விட்டாள்!

சந்தேகப் படக்கூடத்தெரியாத முட்டாள்! இது வரை! இப்போது கண் திறந்து விட்டது!

தாஜ்மகால் கட்டப் போகிறானாமா? உச்சிக்குளிர, வாய்பிளந்து கேட்டுக் கொண்டு இருந்தாளே! தாஜ்மகால் ஒரு பெண்ணின் சமாதி என்பது உறைக்கவில்லையே!

போகட்டும்! முழு முட்டாளாகு முன் விழித்துக் கொள்ள முடிந்தது!

ஆனால், விழித்துக் கொள்ள முடிந்தது என்று சந்தோஷப்பட அவளால் முடியவில்லை! மாறாக, விழிக்க நேர்ந்து விட்டது குறித்து வருத்தமாகத்தான் இருந்தது.



இப்போதைக்கு உண்மை தெரியாமலே இருந்திருக்கலாமோ என்று மனது ஏங்கத் தொடங்கவும், மீண்டும் திகைத்தாள்.

இந்தப் பைத்தியக்காரத்தனத்துக்கு எல்லையே இல்லையா? இப்போதே இப்படி இருக்கிறது! இன்னும், புவனன் - புவனன் என்ன புவனன்? அந்தப் பாபு வந்து ஏதேனும் பசப்பத் தொடங்கினால், உள்ள மூளையும் கெட்டு விடும்!

புவனன் திரும்பி வருமுன் செல்வநாயகி தன் கோயில்களை முடித்துக் கொண்டு வந்து விடுமுன் இங்கிருந்து கிளம்பி விடவேண்டும் என்று சுமாலினி முடிவு செய்தாள்.

ஆனால் எங்கே போவது?

கழுதை கெட்டால் குட்டிச்சுவர்; சுமாலினிக்குப் போக்கிடம், விழுப்புரத்தில் அவளுடைய தாத்தா வீடு!

''பார்த்தாயா? பாபு உன்னை ஏமாற்றி விட்டான் என்று நான் சொன்னது சரிதானே!''

''சரிதான் - ரொம்பவும் நன்றி, மிஸ்டர் சம்பத் குமார்!'' என்றாள், சுமாலினி வரண்ட குரலில்.

''உனக்காக எதைச் செய்யவும் நான் காத்திருக்கிறேன், சுமா!'' என்று அவன் உணர்ச்சி ததும்பிய குரலில் கூறியது அவள் மனதில் படவில்லை.

மாறாக மேஜை மேலிருந்த டெலிஃபோன்தான் அவளது கருத்தை எட்டியது. இந்த டெலிஃபோன் மணி அடித்தால் கூட அறைக்குள் சென்று, டெலிஃபோனை எடுக்கக் கூடாது என்று புவனன் சொல்லியிருந்தான். ஏதாவது கலைந்து விடுமாம்!

சரியான மட்டி மடச்சியாக அவனது காரணத்தை நம்பி, அதன்படி நடந்தாளே! அன்று ரூபா வந்தபோது கூட, ஒருதரம் இந்த டெலிஃபோன் மணி அடித்தது. 'எடுத்துப் பேசலாம்' என்று எழுந்தவளைக் கூட 'புவனனின் காரணத்தைச் சொல்லி நிறுத்தினானே! சே! என்ன பைத்தியக் காரத்தனம்!

தலையை உலுக்கி விட்டுக் கொண்டாள் சுமாலினி. இந்த மாதிரித் தன்னிரக்கங்களுக்கு, இன்னமும் வாழ்க்கை முழுவதும் அவகாசம் இருக்கிறது. இப்போது அதை விட முக்கியமான வேலை இருக்கிறது!

ஒரு பெருமூச்சுடன், சுமாலினி மேஜை அருகே சென்று டெலிஃபோன் ரிசீவரை எடுத்தாள்.

''பொறு! இப்போது என்ன செய்யப் போகிறாய்?'' என்று சம்பத்குமார் அவசரமாகக் கேட்டான்.

''தாத்தாவுடன் பேசப் போகிறேன். உடனே கிளம்பி, அங்கே வருவதாகச் சொல்ல வேண்டும்.

''வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறாய், பாபு, ஏற்கெனவே உன் தாத்தாவையும் ஏமாற்றி அவனுக்குச் சாதகமாக்கி விட்டான்! அவன் பேச்சில் வல்லவன்!'' என்றான் சம்பத்குமார்.

உண்மைதான். இங்கு வந்த அன்று, காலையில் முதல் முதலாகப் பேசியபோதே அவனது சொல்லை, அவர் ஒத்துக்கொள்ளும்படிச் செய்து விட்டான்தான், ஆனாலும்...

''எனக்கும் வாய், மூளை எல்லாம் இருக்கிறதல்லவா?'' என்று விட்டு, அவன் செயலற்று விழித்துக் கொண்டிருக்கும்போதே, குமாரசாமியின் டெலிஃபோன் எண்களைச் சுமாலினி தட்டினாள்.



''ஹலோ...வ்'' என்ற அவரது குரலைக் கேட்டதும், சுமாலினிக்குத் தொண்டையை அடைத்தது. ''நான் தான் தாத்தா!'' என்று சலுகையாக உரைத்தவளுக்குத் தாத்தாவிடம் தனக்கு இவ்வளவு அன்பு இருக்கிறதா என்று ஆச்சரியமாகக் கூட இருந்தது!

அவரும் முதலில் அன்பாகத்தான் - அன்றுவரை அவர் வெளிப்படையாகக் காட்டியிராத அளவு அன்புடன்தான் பேசினார்.

ஆனால் பாபு என்ற புவனபூபதியைப் பற்றிச் சொல்லி, உடனே கிளம்பி விழுப்புரத்துக்கு வரப்போவதாக அவள் கூறவும் அவர் நிறம் மாறி விட்டார்!

''அறிவிருக்கிறதா உனக்கு?'' என்று சீறினார். ''ஒருவர் உண்மையான அன்பு காட்டினால் புரிந்து கொள்ளத் தெரிகிறதா உனக்கு? ஒன்றும், தெரியாத முட்டாள்! முட்டாள்! ஏதோ கொஞ்சம் புத்தியோடு பிழைப்பாய் என்று பார்த்தால் பெண் புத்தியைக்காட்டி உன்னையும் கெடுக்கப் பார்க்கிறாய். தனியாக நீ எங்கும் வரவேண்டாம். நாளைக்கு நானே கிளம்பி அங்கே வருகிறேன். உருப்படியாக உன் திருமணத்தைப் பேசி முடித்து விட்டுத்தான் மறுவேலை எனக்கு! போனைக் கீழே வை!'' என்று அதட்டிவிட்டு, பேத்தியின் பதிலுக்காகக் காத்திராமல் ரிசீவரை வைத்துவிட்டார்.

தாத்தா பழைய காலத்து மனிதர். பெண் என்பவள், மகளாய்த் தந்தையையும், மனைவியாய்க் கணவரையும் கடைசியாகத் தாயாய்ப் பிள்ளையையும் சார்ந்து வாழ வேண்டியவள் என்பது அவரது உறுதியான எண்ணம்.

கூடவே பூபதி குடும்பத்திடமும் பிரேமை உண்டு. இப்போது அவர் இங்கே வந்தால் முடிந்தால் திருமணத்

தைக் கூட் முடித்து விட்டுத்தான் விழுப்புரத்துக்குத் திரும்புவார்.

அவர் மட்டும் என்றால் கூட, ஓரளவேனும் தன்னால் இப்போது சமாளிக்க முடியும் என்ற திடம் சுமாலினிக்கு இருந்தது. ஆனால் புவனன்?

வெற்றிக்காக எதையும் செய்யக் கூடியவன் அவன். அவளது நேசத்தைக் 'கூடப்' பயன்படுத்தி அவளைப்பணிய வைக்க முயல்வான். அவனோடு மோதிப் பார்ப்பது முட்டாள்தனம்!

எப்படியும், புவனனோடு ஒரு கூரையின் கீழ் இருப்பதோ, அவன் முகம் பார்த்துப் பேசுவதோ இப்போதைக்கு அவளால் முடியாது!

''என்ன சொன்னார்? நான் சொன்னது சரிதானே? உன் தாத்தாவும், பாபுவிடம் மயங்கி விட்டார்தானே?'' என்று தொணதொணத்த சம்பத்குமாரை சுமாலினி வெறித்து நோக்கினாள்.

''எனக்கு உங்களால் ஒரு உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டாள்.

''இதைக் கேட்க வேறு வேண்டுமா? என்ன செய்ய வேண்டும்? சொல்லு! நீ காலால் இட்டதை தலையால் செய்யத்தான் நான் காத்துக் கிடக்கிறேனே! இவர்களிடமிருந்து காப்பாற்ற, இப்போதே உன்னை மணந்து கொள்ள வேண்டுமா? சொல்லு! செய்கிறேன்'' என்று அவன் பரபரத்தான்.

''வேண்டாம்!'' என்றவள் மேலே பேசுமுன், ''வேறு என்ன செய்ய வேண்டும்? இவர்கள் அறியாமல் உன்னை மறைத்து வைக்க வேண்டுமா? கிளம்பு...



அல்லது விழுப்புரத்துக்கே வேண்டும் என்றாலும் உன்னைக் கூட்டிப்போய் விடுகிறேன். முதலில், பாபு திரும்பி வருமுன் நீ இங்கிருந்து கிளம்பிவிட்டால் மேலே என்ன செய்வது, என்று பிறகு பார்த்துக் கொள்ளலாம்!'' என்று அவளை அவசரப்படுத்தினான்.

''எனக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்ய முடியுமா? நான் திருமணமே செய்து கொள்ளப் போவது இல்லை அதனால்...''

''உன் இஷ்டம். உன் விருப்பத்துக்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன்! ஒரு வேலைதானா பெரிய காரியம்? ஆனால், எதற்கும் சீக்கிரமாய்க் கிளம்பு. பாபுவோ, பெரியம்மாவோ வந்துவிட்டால் அப்புறம் உன்னை அறைக்குள்ளேயே அடைத்துப் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என்று அவன் அவளை விரைவாக அங்கிருந்து கிளப்ப முயன்றான்.

சுமாலினிக்கும் அது சரியென்றே தோன்றியது.

ஒரு காகிதத்தை எடுத்து, ''சாயம் வெளுத்துவிட்டது. இன்று வரை உண்டதற்கான பணத்தை எப்படியும் திருப்பி விடுவேன். தயவு செய்து என்னைப் பின் தொடர வேண்டாம்!'' என்று எழுதி உறையில் இட்டு ஒட்டி, டெலிஃபோன் மேலே வைத்தாள்.

மீண்டும் அறையை பூட்டிச் சாவியை வழக்கமான இடத்தில் தொங்கவிட்டாள். கைக்கு அகப்பட்ட துணிமணிகளை ஒரு பையில் அடைத்துக் கொண்டு கிளம்பினாள்.

வியப்புடன் நோக்கி அருகில் வந்து, ''அம்மா கிட்ட, சின்ன அய்யா கிட்ட என்னங்க சொல்லட்டும்

சின்னம்மா?'' என்று கேட்ட பணியாளிடம் விலாசம் எழுதி அறைக்குள் வைத்திருப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டு, சம்பத்குமாரின் காரில் ஏறினாள்.

அதன் பிறகுதான் அவளுக்குத் தெரிந்தது, சம்பத்குமார் ஓர் ஒழுக்க பலவீனன் மட்டுமல்ல; பசுத்தோல் போர்த்திய புலியும் கூட என்பது!

## 18

சம்பத்குமாரோடு காரில் செல்லும்போது, சமாலினி மிகவும் மனவேதனையோடு இருந்தாள். புவனன் பொய்த்துப் போனான் என்பது என்னவோ, அவளது உறுப்புகளில் ஒன்றை இழந்து விட்டாற்போலத் துன்பத்தை அவளுக்கு அளித்தது. அதே தவிப்பில் இருந்தவளுக்கு புற உடலின் சுகங்கள் பற்றிய எண்ணமே இல்லைதான்! ஆனாலும், அந்தப் பதினைந்து கிலோ மீட்டர் பயணம் முடிவதற்குள் அவளது உடம்பும், மனதும் மிகவும் களைத்துப் போயிற்று.

பெரிய ரோடுகள் எதிலும் அவன் செல்லவில்லை! எதிரே பாபு வந்து விட்டால் ஆபத்து என்று அவன் காரணம் சொன்னபோது, அது சரியாகத்தான் தோன்றியது. ஆனால், சந்து பொந்துகளில், சரியில்லாத மேடு பள்ளமான ரோடுகளிலும் அவன் வேகமாகவே சென்றது. அதுவும் ஆள் நடமாட்டம் இருந்தபோதும் வேகம் தணியாமல் ஓட்டியது, பலமுறை அவளது இதயத்தைத் தொண்டையில் வந்து துடிக்குமாறு செய்தது.

கடைசியாக, ஒரு தனிவீட்டின் முன் கார் நின்றபோது, அவளுக்கு 'அப்பாடி' என்று இருந்தது.



காரை விட்டு இறங்கி, லேசாக உடம்பைத் தளர விட்டவள் சுற்றும் முற்றும் பார்த்து, ''இது யார் வீடு சம்பத்குமார்?'' என்று விசாரித்தாள்.

''உள்ளே வந்து பாரேன்'', என்று இலகுவாகப் பேசியபடி, அவளது துணிமணிப் பையைக் கையில் தூக்கியபடி முன்னே சம்பத்குமார் நடந்தான்.

''பாருங்கள் சம்பத்குமார், என்னிடம் ஓர் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. கொஞ்சம் எளிமையாக ஓர் இடம் பார்த்துத் தந்தீர்களானால் அங்கு தங்கிக் கொண்டு வேலைக்குப் போய் வருவேன்'' என்றுரைத்தபடி சமாலினி அவனைப் பின் தொடர்ந்தாள்.

''தங்கும் இடம் பிரச்னை இல்லை, சமாலினி. இது வேண்டியவர்கள் வீடுதான். உள்ளே வா'' என்று வீட்டினுள் அவளை அழைத்துச் சென்றான் அவன்.

''வேண்டியவர்கள் என்றால்?'' என்று சாதாரணமாகக் கேட்டபடி, சம்பத்குமாரைத் தொடர்ந்து உள்ளே வந்த சமாலினி, அவளது பையை வைத்து விட்டுத் திரும்பிச் சென்று கதவை உட்புறமாய்ப் பூட்டுவதைக் கண்டாள்.

என்னவோ, உறுத்த, ''ஏன் பூட்டுகிறீர்கள்?'' என்று சற்று அதட்டலாகக் கேட்டாள்.

''ஒவ்வொரு கேள்வியாகப் பதில் சொல்கிறேன். கேட்டுக் கொள்.'' என்றவன் குரலில் சற்றே திமிர் கலந்திருந்தாற் போல சமாலினிக்கு ஓர் ஐயம்!

''முதல் கேள்வி, இது யார் வீடு என்பது! சரிதானே? இது என் தாய் மாமா மகளின் வீடு. அவள் பெயர் என்ன தெரியுமா? ரூபா... ரூ... பா! அதோ

வருகிறானே அவனேதான்'' என்று சிரித்தான் சம்பத் குமார்.

ரூபா தான் வந்து கொண்டிருந்தாள். "நீ, சம்பத்குமாருடைய மாமா மகளா?'' என்று வியப்புடன் சுமாலினி விசாரித்தாள். யாரும் சொல்லவில்லையே என்று எழுந்த திகைப்பு உடனே மறைந்தது. யார் என்னவென்று... விளக்கினால், அது புவனையாப் என்பதில் வந்து முடியுமே!

"ச...த்தியமாய்!'' என்றாள் ரூபா அழுத்தம் திருத்தமாக. "வேறு எப்படி பாபு எனக்கு அத்தான் ஆனார் என்று நினைத்தாய்? சம்பத்குமார், என் அத்தை மகன், அதாவது அத்தான்! சம்புவுடைய பெரியப்பா மகனும் அதே உறவுதானே?'' என்று கிளுக்கிச் சிரித்தாள் அவள். "எனக்கு முறை மாப்பிள்ளை!''

சம்பத்குமாரிடம் திரும்பி, "அத்தான், எல்லா ஏற்பாடும் செய்துவிட்டேன். மாலை, துணிமணி எல்லாமே ரெடி. அய்யருக்கு மதியத்துக்கு மேல்தான் நேரம் இருக்கிறதாம். சரி, கல்யாணம் என்று நடப்பதுதானே முக்கியம்! எப்போது வேண்டும் என்றாலும் வாருங்கள் என்று விட்டேன்...'' என்று சொல்லிக் கொண்டு இருந்தவளை இடைமறித்து, "யார் திருமணம்?'' என்று சுமாலினி கேட்டாள்.

"வேறு ஆள் பிடித்திருக்கலாமே!'' என்றான் சம்பத்குமார்.

"இது ஒழுங்கான கல்யாணமாயிருந்தால் வேறு ஆள் பிடித்திருக்கலாம் தான். ஆனால், இது 'கசமுச' கல்யாணம் ஆயிற்றே! கொடுக்கிற பணத்தை வாங்கிக் கொண்டு, நம் விருப்பம் போல ஆடுகிற ஆள்தான் நமக்குத் தேவை!'' என்றாள் ரூபா சாதாரணமாக!



சற்றே முகம் வெளிற, இருவரையும் மாறி மாறிப் பார்த்தபடி, "நீங்கள் இருவரும் என்ன பேசுகிறீர்கள்? யாருடைய கல்யாணம் நடக்கப் போகிறது?''

"வாயில் விரலை வைத்தால் கூட கடிக்கத் தெரியாத, பெண்ணாம்! பிரமாதம்தான்போ! அம்மா, தாயே, கல்யாணம் உனக்குத்தான். உனக்கும் சம்பு அத்தானுக்கும் புதுச்சேலைகூட வாங்கி வைத்திருக்கிறேன்! நல்ல பெண்ணாய் அதைக் கட்டிக்கொண்டு வந்து அத்தான் கையால் தாலியை வாங்கிக் கொண்டு, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து நல்லபடியாய்த் திருமணத்தை முடித்துக்கொள்!'' என்றாள் ரூபா கிண்டல் குரலில்.

இவள் என்ன உளறுகிறாள்! இப்படியெல்லாம் யார் திருமணம் செய்வார்கள்!

"முடியாது! சும்மவேணும் கண்டபடி உளறாதீர்கள்!'' என்றாள் சுமாலினி அழுத்தமான குரலில்.

"உளறலா?'' என்றாள் ரூபா ஆத்திரத்துடன். "ஏண்டி நான் எவ்வளவு காலமாகப் பெரிய அத்தானுக்காகக் காத்துக் கொண்டு இருக்கிறேன். நீ இடையில் வந்தவள் அடித்துக் கொண்டு போக விட்டுவிட்டு சும்மா இருப்பேன் என்றா நினைத்தாய்?... அங்கே அத்தான் வீட்டில் இந்தம்மாளுக்கு எவ்வளவு உரிமை தெரியுமா, சின்னத்தான்? வருங்கால மகாராணி என்று பட்டம் கட்டாத குறைதான்! இவளைப் பற்றிக் கேட்டால் சரியாகப் பதில் சொல்வதும் கிடையாது. அதனால்தான், சனிக்கிழமை அவர்கள் இருவரும் இல்லாத நேரம் பார்த்துப் போய் இவளிடம் விஷயத்தைக் கறந்தேன்! என்னை விரட்டவேறு திட்டம்; அத்தான் அப்பா

இப்போது பாபு அத்தானுக்குத் தானே சப்ளை செய்கிறார்! அதைப் பயன்படுத்தி, ஜெய்ப்பூர் சலவைக்கல் மொத்தமாக வாங்கி வரும்படியும், ஒரு பதினைந்து நாள் அங்கே குடும்பத்தோடு ஜாலியாகத் தங்கியிருந்து அப்படியே சலவைக்கல் வாங்கிக் கொண்டு வரும்படியாக உத்திரவு! செலவு பில்லை அத்தான் கட்டிவிடுவதாக ஆசை காட்டியிருக்கிறார்! சரி சரி என்று விட்டுக் கடைசியாக நான் மட்டும் நின்று விட்டேன்! நான் இங்கே இருப்பது இன்னமும் பாபுவுக்குத் தெரியாது! இவளுக்காக என்னை விரட்டுகிறாரா? அப்போதே திட்டம் போட்டு விட்டேன்!

''ஆனால் பெரியத்தான் சதி நமக்கு நல்லதாக முடிந்தது. இப்போது வசதியாக வீடு காலியாக இருக்கிறது. யாருடைய இடையூறும் இல்லாமல் கல்யாணம் செய்யலாம்!'' என்று சம்பத்குமாரிடம் குதூகலித்த ரூபா, சுமாலினியிடம் திரும்பி, ''கத்தி கித்தி ஆர்ப்பாட்டம் செய்தால் யாராவது உதவிக்கு வருவார்கள் என்று மனப்பால் குடித்துக் கொண்டிராதே! பக்கத்து வீட்டில் ஒரு பைத்தியம் இருக்கிறாள். அவள் கத்துகிறாள் என்று நினைப்பார்கள். இங்கிருந்து நீ கத்துகிறாய் என்று யாரும் எண்ண மாட்டார்கள். அதனால், தொந்தரவு பண்ணாமல் ஒழுங்காகக் கல்யாணத்தைப் பண்ணிக் கொள்!'' என்று மிரட்டலோடு முடித்தான்.

''ஆமாம், வீணாக உடம்பைப் புண்ணாக்கிக் கொள்ளாமல் ஒழுங்காகத் திருமணத்துக்குச் சம்மதித்து விடு!'' என்று சம்பத்குமார் அவன் பங்குக்கு அதட்ட, சுமாலினிக்கு இன்னமும் தன் காதுகளில் விழுவதை முழுமையாக நம்பவே முடியவில்லை.



இந்த காலத்தில் கூடக் கட்டாயக் கல்யாணம் செய்வார்களா என்ன? மற்ற இருவரின் பேச்சும் அவளுக்குப் பைத்தியக்காரத்தனமாகத்தான் தோன்றியது. இந்த இரு கிறுக்குகளிடமும் இருந்து, நல்லபடியாக எப்படித் தப்புவது என்பதில் அவளது யோசனை சென்றது.

பின்புறம் சமையல் அறையில் ஏதோ சத்தம் கேட்டது. அங்கே யார் இருக்கிறார்கள் என்று சுமாலினி யோசிக்கும் போதே, ரூபா பேசினாள். ''இருந்திருந்து அத்தையை ஏன் அழைத்து வந்தாய் சின்னத்தான்?'' என்று கேட்டாள்.

உள்ளே இருப்பவள் வருணி என்பதை அறிந்த அளவில் சுமாலினியின் மனம் சோர்ந்தது. அவளால் யாருக்கு என்ன உதவி கிடைக்கக் கூடும்? ஊகூம்!

''என்ன செய்வது ரூபா?'' என்றான் சம்பத்குமார் தன் மாமன் மகளுக்குப் பதில் சொல்லும் வகையாக. ''அம்மாவுக்கு, எப்படியாவது எனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட வேண்டும் என்று ஒரே பிடிவாதம்! இவளோடு திருமணம் நின்றுவிட்டது என்று தெளிவானதும், தன் அண்ணனிடம் உன்னைப் பெண் கேட்க வேண்டும் என்று என்னோடு கிளம்பி வந்து விட்டார்கள்! ஆனால், அதுவும் நல்லதாய்த்தான் இருக்கிறது!'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருந்த போதே சமையல் அறையிலிருந்து ஆத்திரத்துடன் கத்தியபடி வருணி வந்தாள்.

''கழுவக் கொள்ள ஒரு வேலைக்காரி இல்லாமல் என்னால் சமைக்க முடியாது! ஏதாவது ஓட்டலில் என்னத்தையாவது வாங்கி வாருங்கள்! அல்லது பட்டினி

கிடங்கள்!'' என்று கூறியபடி வந்தவள், சுமாலினியைப் பார்த்ததும், ''ஜ! பெண் வந்தாயிற்று அப்படியானால் கல்யாணச் சாப்பாடே வாங்கிடலாம்! பாயசம் வடையோடு வாங்கி வாடா!'' என்றாள் குதூகலமாக!

''ஆன்ட்டி கல்யாணம் எல்லாம் ஒன்றும் நடக்காது நான் ஒரு நாளும் சம்பத்குமாரை மணக்க மாட்டேன்!'' என்றாள் சுமாலினி உறுதியான குரலில்.

''நீ மணக்கிறாயா இல்லையா என்று உன்னை யாரடி கேட்கப் போகிறார்கள்? பிடித்து வைத்துத் தாலியைக் கட்டப் போகிறேன். அவ்வளவு தான்!'' என்றான் சம்பத்குமார் வெகு அலட்சியமாக.

''அப்படி நீ கட்டாயத் தாலி கட்டினால் அதை ஏற்று உன் மனைவியாக வாழ இது என்ன அல்லிராணியின் காலம் என்று நினைத்தீர்களா? அப்படி நான் ஒன்றும் பழங்காலப் பத்தாம் பசலி அல்ல! கழற்றி உன் மூஞ்சியிலேயே விட்டெறிந்து விடுவேன்'' என்றாள் சுமாலினி ஆத்திரத்துடன்.

கன்னத்தில் போட்டுக் கொண்டு, ''அய்யய்யோ! தாலி எல்லாம் கழற்றி வீசக் கூடாதும்மா... அது புனிதமானது!'' என்றாள் வருணி.

சுமாலினியைச் சற்று வெறித்துவிட்டு, ''தாலியைக் கழற்றி வீசிவிடுவாயா! அப்படியானால் மற்றவகையில் என் மனைவியாகிவிட்டு அதன் பிறகு இந்த வீட்டுக்கு வெளியே போ! ஆனால் ஒன்று! அந்த வகையில் அந்தச் சாமியார் பாபுவை விட, நான் ரொம்பவே கெட்டிக்காரன்! நான் கிடைப்பதே உன் நல்லகாலம் என்றே கொள்!'' என்றான் சம்பத்குமார் இறுகிய குரலில்!



அந்தக் காஃபி ஷாப் பெண் சுமாலினிக்கு நினைவு வந்தாள். உடல் முழுவதும் அருவருப்பில் சிலிர்த்தது. சுற்று முற்றும் பார்த்தாள். வாயிலை உட்புறம் பூட்டியவர்கள். பின் கதவையும் பூட்டித்தான் வைத்திருப்பார்கள். வாயில், பின் வாயில் எந்தப் பக்கம் ஓடினாலும் இவர்கள் அவளைப் பிடித்து விடக்கூடும். நிச்சயம் பிடித்து விடுவார்கள்!

அது ஒரு மூன்று வரிசை வீடு. நடுவில் கூடமும், இருபுறமும் அறைகளும் இருந்தன. சுமாலினி நின்ற பக்கமாக ஓர் அறை திறந்திருந்தது.

சட்டெனப் பாய்ந்து, அந்த அறைக்குள் சென்று, சுமாலினி, கதவை உட்புறமாய்த் தாளிட்டாள்.

இருக்கட்டும் எப்படியும் இவர்கள் இருவருமே அவர்களது திட்டத்தின் மடத்தனத்தைப் புரிந்து இயல்பு நிலைக்குத் திரும்பத்தான் போகிறார்கள். அதுவரை - அது இரண்டு மணிநேரமோ, இரண்டு நாட்களோ சுமாலினிக்கு இந்த அறைதான் அடைக்கலம்!

சம்பத்குமார், ரூபா இருவருமே ஓடி வந்து 'கதவை திற!'' என்று அதட்டினார்கள்! விரட்டினார்கள்!

ஆனால் சுமாலினி அசைவதாக இல்லை என்று அறிந்ததும் ''கழுதை கிடக்கட்டும், ரூபா! இரண்டு வேளை கும்பி காய்ந்தால் தானாகக் காலில் வந்து விழுவாள் அதுவரை, கதவை வெளிப்புறம் பூட்டு'' என்றான்.

சுமாலினியின் சிறையாகிவிட்ட அறையின் எதிர்ப்புறமாய் அமைந்திருந்த அறையின் உட்புறத்தில் டெலிஃபோன் ஒலித்தது. வசதியாக சோபாவில் சாய்ந்து கிடந்த

ரூபா ஏழ மனமின்றி "நீயே பேசு" என்று கூறியதற்கிணங்க அங்கே சென்று பேசிவிட்டு வந்த சம்பத் குமாரின் முகத்தில் ஆத்திரமும் ஒரு குரூர திருப்தியும் கலந்து காணப்பட்டன.

ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு நின்ற சுமாலினியை அலட்சியமாக நோக்கி "டெலிஃபோனில் யார் தெரியுமா? உன் ஆசைக் காதலன் பாபுதான். உன்னைப் பற்றித்தான் ஆ...சையாகக் கவ...லையாக விசாரித்தான். உடனே பஸ் ஸ்டாண்டில் கொண்டு விடாவிட்டால் செத்து விடுவேன் என்று மிரட்டினான்! அதனால் கொண்டு விட்டேன். விழுப்புரத்துக்கு டிக்கட் எடுத்தான், பிறகு தெரியாது என்று விட்டேன். முதலிலேயே தன்னிடம் ஏன் சொல்லவில்லை என்று கேட்பானே! அதனால் முந்திக் கொண்டு சுமாலினி இங்கே எங்கே வந்தாள்? எப்படி வந்தாள் என்றேனா பயலுக்கு வாயே திறக்க முடியவில்லை!" என்றான் ஏளனமாக!

"என்ன பொய்!" என்றாள் சுமாலினி ஆத்திரமும் அருவெறுப்புமாக.

"அந்தக் கள்ளப் பயல் சொன்ன பொய்யை விடவா நான் சொல்லிவிட்டேன்?" என்று திருப்பினான் சம்பத்குமார். "தான் யார் என்பதையே மறைத்து ஏமாற்றினானே! போகட்டும்! விழுப்புரத்துக்குப் போய், அந்தக் கிழட்டு எருமையோடு முட்டிக் கொள்ளட்டும். கிழ ராஸ்கல்! சுமாவுக்கு வேறே பெரிய இடம் கூடி வந்துவிட்டது... ஃபவுண்டரி கூட வேண்டாம் என்று விட்டார்கள்! சொத்து பத்து எதுவும் இல்லாமல் பெண்ணை மட்டும் கேட்க நானும் சரியென்று விட்டதாகவா சொன்னாய்? இருடா இரு! எல்லாவற்றுக்கும்



சேர்த்து உன் கண்ணில் விரலைவிட்டு ஆட்டுகிறேன்! காலில் விழுந்து கும்பிட வைக்கிறேன்...!

எதிர்காலத்தில் என்னென்ன செய்யப்போவதாக இருக்கிறான் என்று, சம்பத்குமார் மிரட்டல்களை அள்ளி வீசிக் கொண்டிருந்த போது, சுமாலினியின் மனம் வேறு மாதிரி வேலை செய்தது.

புவனனின் அன்பு மெய்யானதாக இருக்குமோ! தாத்தாவின் 'பெரிய இடம் அவன் தான்!... பவுண்டரி, சொத்து எதுவும் வேண்டாம் என்றான் என்றால் தாத்தாவின் சொத்துக் கணக்குப் பார்த்து, அவளைத் தானே மணக்கப் புவனன் முடிவு செய்ததாக சம்பத் குமார் கூறியது பொய்! பத்தோடு பதினொன்றாக அவன் கூறிய பொய்களுள் ஒன்று. அதைப்போய் ஏன் நம்பினாள்! இந்தத் தாத்தாதான், புவனன் ஒன்றும் வேண்டாம் என்று சொன்னதை, அவளிடம் ஏன் சொல்லியிருக்கக் கூடாது?

ஆனால் இப்போது அதெல்லாம் முக்கியம் அல்ல! புவனன், விழுப்புரம் சென்று, திரும்பி மீண்டும் இங்கே தேடி வரும்வரை எச்சரிக்கையோடு இந்த அறைக்குள்ளேயே இருக்க வேண்டியதுதான். பசி, தாகம் எல்லாம் சகித்துக் கொள்ளவேண்டியதுதான்!

ஆனால் அவன் இங்கே என்று தேடி வருவானா? வரவேண்டும்! கடவுளே புவனன் வரவேண்டும்!

சுமாலினி அசோக வனத்து சீதையாய் இவ்வாறு வேண்டிக் கொண்டிருக்க, கோணல் மூளைகள் இரண்டும் வேறு திட்டம் தீட்டின.

''நான் கணக்கில் பட்டினி கிடக்க சுமாவினி துணிந்து விட்டால், என்ன செய்வது, என்பது ரூபாவின் கவலை!

''பார் அத்தான் புவனனை மணக்கத் தலைகீழாக நட என்றால் எப்படியாவது முயற்சி செய்து நான் நடந்து விடுவேன். இவளுக்கும் அப்படித்தான் இருக்கும்? அதனால் கும்பி காய்ந்தால் என்ற உன் வசனம் அதற்கு சரிப்படாது. அதனால் கதவைத் திறக்க வழி பார்க்க வேண்டும். என்றாள் அவள்.

''இங்கே யாராவது கார்ப்பென்டர் கிடைப்பானா?''

''இவளைப் பிடித்து வைத்திருக்கும் விஷயம் இன்னும் நாலு பேருக்குத் தெரிவதற்கா? நீயும் தான் பொறி இயல் கல்லூரியில் சில ஆண்டு படித்தாயே! பாஸ் பண்ணா விட்டாலும் இந்தவேலை கொஞ்சமேனும் தெரியாதா?

''தெரியும்... ஆனால் அதற்கான கருவிகள்...

''போய் வாங்கி வா! இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன். முன்புறம் ஓடுவாளோ, பின்புறம் பாய்வாளோ என்று கூட இல்லாமல் அவளே ஓர் அறைக்குள் முடங்கிக் கொண்டாள். அதையும் வெளியே தாளிட்டாயிற்று. பிறகென்ன? போய்வா, அத்தை வேறு, சாப்பாடு சாப்பாடு என்கிறார்களே? அதையும் சேர்த்து வாங்கி வா!'' என்று சம்பத்குமாரை அனுப்பி வைத்தாள்.

''அய்யய்யோ! வீட்டுக் கதவை உடைத்தால் அண்ணன் வந்து திட்டமாட்டானா?'' என்று வருணி கவலைப்பட்டாள்.



''வேறு என்ன செய்வது? இந்த அறிவு கெட்டவள் தான் ஒழுங்காகத் தாலிகட்டிக் கொள்ள மாட்டேன் என்கிறாளே!'' என்றாள் ரூபா எரிச்சலோடு.

''ஆனால்... ஆனால் சுமாதான் தாலிகட்டினாலும் கழற்றி வீசி விடுவேன் என்கிறாளே! பிறகு நீங்கள் கதவை உடைத்துதான் என்ன பிரயோசனம்?''

''எனக்குப் போய் இப்படி ஒரு மக்கு அத்தையா? அத்தை! தாலி கட்டாமலே உன்பிள்ளை முதலிரவு நடத்தப் போகிறான்! அதாவது இவளைக் கற்பழிக்கப் போகிறான்! அப்புறமாவது கட்டிக் கொள்வான் இல்லையா? இவள் சம்புவைக் கட்டிக் கொள்ளாவிட்டாலும் பிறகு, பாபு இவளைச் சீந்த மாட்டார்! அதற்காக...''

திகைப்புடன் ''ஆனால் அது தப்பு இல்லையா?'' என்றாள் வருணி. ''சம்பு அப்படி இப்படி நடக்கிறவன் தான்! அதனால் 'ரேப்'பெல்லாம் அய்யோ! வெளியே தெரிந்தால் அவனைச் சிறையில் போட்டு விடுவார்களே!'' என்று வருணி பதறினாள்.

''என்ன செய்வது? இந்தச் சனியன்தான் சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறதே!'' என்றாள் ரூபா ஆத்திரத்துடன்.

''நான்... நான் சொல்லிப் பார்க்கட்டுமா?''

''நீயா!?'' என்றாள் ரூபா ஏளனமாக. உடனேயே, ''அவளும் உன்னைப் போலத்தான். இருவருக்கும் ஒத்துப் போனாலும் போகும். சொல்லிப்பார். ஆனால், அவள் பேச்சில் மயங்கி, கதவைத் திறந்து விட்டு விடாதே! எப்படியும் முன்னே பின்னே இரண்டு வழியையும் பூட்டி விட்டேன். இவ்வளவு நடந்த பிறகு இவள்

சம்புவுடைய மனைவி ஆகாமல் வெளியே போனால், நிச்சயமாய் சம்புவுக்கு ஜெயில்தான். நினைவு இருக்கட்டும்!'' என்று அவள் மிரட்டவும், முகம் வெளுத்து, ''அய்யோ சாமி நான் செத்தாலும் அந்தக் கதவை மட்டும் 'திறந்து விட மாட்டேனப்பா!'' என்றாள் அத்தையம்மாள்.

பிறகு மெல்லச் சென்று ''கண்ணூ சுமாலினி...'' என்று தேனொழுக வருணி அழைத்தாள்.

அத்தைக்கும் மருமகளுக்கும் நடந்த பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த சுமாலினி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஓர் ஏளனச் சிரிப்புடன், நேர் எதிர் அறைக்குச் சென்று, டி.வி.யை ஓடவிட்டாள் ரூபா. அங்கிருந்து சோபா ஒன்றை, ஒரு கண்ணை இங்கே வைத்தபடி டி.வி. நிகழ்ச்சியையும் கவனிப்பதற்கு வசதியாக இழுத்து போட்டுக்கொண்டு அமர்ந்தாள்.

சுமாலினி கவனிக்கிறாளா, இல்லையா என்பது இல்லாமல், வருணி, அவளுக்குப் புத்தி சொல்லிக் கொண்டே போனாள். அவள் பேச்சின் சாராம்சம் இதுதான். சம்பத்குமாருக்கும் சுமாலினிக்கும் திருமணம் ஆகிவிட்டால் சுமாலினியுடைய தாத்தாவின் சொத்து வருமானத்தில் இருவரும் வளமாக வாழலாமே!

கேட்டுக் கொண்டே இருந்த சுமாலினிக்குச் சட்டென ஓர் யுக்தி தோன்றியது. அது பலித்தால் இவள் மூலம் புவனனிடம் தொடர்பு கொண்டு விடலாம்!



# 19

வருணியின் எண்ணம் முழுவதும், சுமாலினி
யோடு வரக்கூடிய சொத்தில்தான் இருக்கிறது என்பது
அவள் பேச்சிலிருந்து வெளிப்படையாகவே சுமாலினிக்
குப் புரிந்தது.

சம்பத்குமாருக்காவது பழிவாங்கும் வெறியும்
சேர்ந்திருந்தது. ரூபாவுக்கோ புவனன் தேவைப்பட்
டான். ஆனால், வருணியின் ஆசை எல்லாம் வருங்கா
லம் வளமாக இருக்க வேண்டும் என்பதே. அதற்குரிய
குறுக்கு வழிதான் சுமாலினியை மகன் மணப்பது!
சுமாலினியை மகன் மணந்தாலும் பணம் வராது என்று
ஆகிவிட்டால் அவன் மாறி விடுவான். இந்தக் கூட்டைத்
தடுத்தால் பணம் கிடைக்கக் கூடும் என்று. ஆனால்,
கட்சியே மாறி விடக்கூடும் என்பது அவளது ஊகம்.

அந்த ஊகத்தின் அடிப்படையில், ''என்னைக் கல்யாணம் செய்தாலும் தாத்தாவின் சொத்து எதுவும் கிடைக்காதே, ஆன்ட்டி?'' என்றாள் அவள் சோகமாக.

''அதெப்படி? உன் தாத்தாதான் ஃபவுண்டரியை உன் பேரில் எழுதி வைத்து இருக்கிறாரே! அதுவே போதுமே!'' என்றாள் வருணி.

''அது மெய்தான், ஆன்ட்டி. ஆனால், கோபமாய் தாத்தா வீட்டை விட்டு வெளியேறும்போது, 'உங்கள் சொத்தும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம்' என்று எல்லாவற்றையும் திருப்பி எழுதிக் கொடுத்து விட்டுத்தானே வந்தேன்!''

''அய்யய்யோ!''

''ஷ். மெல்ல ஆன்ட்டி. நீங்கள் கத்தினால் ரூபா வந்து திட்டினாலும் திட்டுவாள்!''

''ஆ... ஆமாம், ஆமாம்! அவளுக்கு எப்போதுமே நான் ஒரு மக்கு என்கிற எண்ணம்! போகட்டும். நீ சொல்லு நீ எழுதிக் கொடுத்ததை மாற்ற ஒரு வழியும் கிடையாதா?''

''கிடையாது ஆன்ட்டி! அது மட்டுமில்லை; தாத்தா சொத்து பேத்திக்கு என்று பிறகு எப்போதாவது வரக்கூடும் என்பதற்கும் வழியில்லை. எல்லாம் தாத்தாவின் சுய சம்பாத்தியம். இப்போது, அவர் பார்த்திருக்கிற பையனை - உங்கள் பாபுவைத்தான் கல்யாணம் செய்யாவிட்டால், ஒரு நையாபைசா கூடத் தரமாட்டேன், தர்மத்துக்கு எழுதி விடுவேன் என்று சொல்லி விட்டார்!'' என்று சுமாலினி கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

சுமாலினியின் அறிவிப்பின் பிரதிபலிப்பு அவளே எதிர்பாராத அளவு இருந்தது.

அச்சமும் கவலையும் முகத்தில் வெளிப்பட, நெஞ்சை அழுத்திக்கொண்டு, ''கடவுளே! கடவுளே! அப்படியானால் இனி என்னதான் செய்வது? உன் வழி வருமானமும் இல்லாமல், பாபு தரும் பணமும் நின்று விட்டால் எப்படி வாழ்வது?'' என்று வருணி நடுங்கிக் கலங்கினாள்.

என்னவோ பொறிதட்ட, ''பாபு தருவானேன் ஆன்ட்டி? உங்கள் பங்குப் பணம், நீங்களே எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே?'' என்று சுமாலினி விசாரித்தாள்.



''அதெப்படி முடியும்? எங்கள் பங்கைத்தான் அப்பனும் பிள்ளையுமாக முழுசாகப் பாபுவுக்கு விற்று விட்டார்களே! ரேசு, பொம்பளை, குடி... பங்கு வருமானம் எல்லாம் தின்று, பங்கு மேல் கடன் வாங்கி... பெரியவர் போலப் பொய்க் கையெழுத்துப் போட்டு... அம்மாடி! இன்னொருத்தராய் இருந்தால் என் வீட்டுக்காரரைப் போலீசில் பிடித்துக் கொடுத்திருப்பார்கள். பெரியவருக்குக் கூடக் கோபம் தான். பாபு கண்ணுதான், இப்படி பங்கை விலைக்கு வாங்கிக் கடனை அடைத்தான். மற்ற தப்பை மன்னித்துவிட்டு விட்டான். சம்புவுக்கும் வேலை கொடுத்து. அதுபோக எங்கள் செலவுக்கு அலவன்சு கொடுத்து... இல்லாவிட்டால் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் போயிருக்கும்!'' என்று புலம்பித் தீர்த்தாள் பெரியவள்.

அதையே பிடித்து, ''சம்பத்குமாருக்கும் எனக்கும் கல்யாணம் நடந்தால் கூட, அதேதான் நடக்கும், ஆன்ட்டி! ஒரே ஒரு வித்தியாசம், நானும் சேர்ந்து பட்டினி கிடக்க வேண்டும்!'' என்று வேகமாய்க் கூறி மிரட்டினாள் சுமாலினி.

கவலையும் பயமுமாக வருணி கண்ணீர் வடிக்கும் வரை காத்திருந்து விட்டு, ''இதிலிருந்து தப்ப ஒரு வழி இருக்கிறது, ஆன்ட்டி!'' என்றாள்.

''என்னது?'' என்று ஆவலோடு நோக்கியவளிடம், ''எப்படியாவது புவனுக்குத் தகவல் சொல்லுங்கள். ரூபாவிடம், உங்கள் கணவரிடம் பேசப் போவதாகச் சொல்லிப் போக்குக் காட்டி விட்டு, புவனிடம் இந்த இடம் சொல்லி வரச் சொல்லுங்கள். உங்கள் அலவன்சை ஒரு காசு குறையாமல் அப்படியே கொடுத்து

விடவேண்டும் என்று அவரிடம் நான் சொல்லுகிறேன்'' என்று வழி சொல்லிக் கொடுத்தாள். சொல்லிக் கொடுத்து விட்டுத் தடதடக்கும் நெஞ்சோடு, வருணியின் பதிலுக்குக் காத்திருந்தாள்.

இதுகூட, நிச்சயமான விடுதலைக்குரிய வழி அல்லதான். முதலில், வருணி அவளை நம்ப வேண்டும்! அடுத்து ரூபாவைச் சமாளிக்க வேண்டும்! அவள் அறியாமல் புவனனோடு தொடர்பு கிடைக்க வேண்டும்! அதன் பிறகு அவனுக்கு இவர்கள் இருக்கும் இடம் தெரிவிக்க வேண்டும்! இது அவ்வளவும், சம்பத்குமார் வருமுன் நடந்து முடிய வேண்டும்.

எல்லாம், நல்லபடியாக நடந்து, புவனன் வந்து விட்டால் பிறகு கவலையில்லை! புவனன் மேல் கொண்ட கோபம் எல்லாம் எங்கே போயிற்று என்றே தெரியவில்லை. இப்போது அவனைப் பார்த்து விட்டால் அதுவே போதும் என்று இருந்தது அவளுக்கு.

முதல்படியாக, வருணி இந்தத் திட்டத்திற்கு ஒப்ப வேண்டும்?

யுகங்களாகத் தோன்றிய சில விநாடிகளின் பின் ''நீ சொன்ன மாதிரிச் செய்தால் எங்களுக்குப் பணம் வருவதற்குக் கட்டாயமாய் ஏற்பாடு செய்வாயா?'' என்று வருணி கேட்டாள்.

''கட்டாயம், ஆன்ட்டி!''

'சத்...த்தியமாய்?''

''சத்தியமாய், ஆன்ட்டி!''

''ம்ம்... சம்பு, அவன் அப்பா எல்லாம் சத்தியம் செய்தால், அப்புறம் அதை மறந்தே போய் விடுவார்



கள். அவர்களிடம் நிறையத் தடவை ஏமாந்திருக்கிறேன். நீயும் அப்படி இருந்து விட்டால்? உன்னை மட்டும் எப்படி நம்புவது?

ஒரு கணம் சுமாலினி திகைத்துப் போனாள். என்ன சொல்லி இவளை நம்ப வைப்பது? ''ஆன்ட்டி, இதோ, என் தலைமேல் அடித்து சத்தியம் செய்யட்டுமா?'' என்று கேட்டவள், அப்போதும் வருணியின் முகம் தெளியாததைக் கண்டு, ''என்னை விடுங்கள், ஆன்ட்டி, புவனன்... உங்கள் பாபு எப்படி? சொன்னால் செய்வார் இல்லையா? அவரைச் சத்தியம் பண்ணச் சொல்லுங்கள்? அவர் சத்தியம் செய்த பிறகு விவரம் சொல்லுங்கள்!'' என்றாள் அவசர அவசரமாக.

''என்ன? தலையில் எல்லாம் தட்டிக் கொண்டாகிறது? என்ன விஷயம்? அப்படி என்ன சத்தியம் செய்தாகிறது?'' என்ற ரூபாவின் குரலில் இருவருமே திடுக்கிட்டுப் போயினர்.

தலையைத் தொட்டுக் காட்டியிருக்கக் கூடாது! டி.வி. சத்தத்தில் இவர்கள் பேச்சு ரூபாவின் காதில் விழுந்திருக்காது. ஆனால், சத்தியம் செய்வது போலத் தலையைத் தொட்டது எவ்வளவு பெரிய தவறு?

வருணி பேந்த விழிக்க, சுமாலினி வேகமாக யோசித்து, ''சத்தியமா? எதற்கு புராண கதையில், தன் தலையில்தானே கை வைத்து அழிந்த பத்மாசுரனைப் போல, சம்பத்குமாரும், தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்ளப் போகிறார் என்று உன் அத்தையிடம் சொன்னேன்!'' என்று சமாளித்தாள்.

அலட்சியமாகக் கழுத்தை நொடித்து, ''அழியப் போவது யார் என்று அப்புறம் பார்க்கலாம்!'' என்றபடி.

மீண்டும் டிவியின் சத்தத்தை ரூபா அதிகப்படுத்தினாள். அவள் அறியாமல் சமாலினி சைகை காட்ட, அவள் இருந்த அறைப்பக்கம் சென்று, ''ரூபாம்மா, வந்து... வீட்டில் பீரோ கதவு பூட்டவில்லை. உன் மாமாவுக்கு ஒரு ஃபோன் போட்டு, பூட்டச் சொல்லி விட்டுடுமா?'' என்று குழைந்து நெளிந்து கெஞ்சும் குரலில் வருணி கேட்டாள்.

''ம்ம்... இரண்டு நாளாகத் திறந்து கிடக்கும் பீரோ! இன்னும் இரண்டு நாள் திறந்து கிடந்தால் என்ன ஆகிவிடும்! சும்மா கிடக்கட்டும்!'' என்று ரூபா முடித்து விட இரு பெண்களுக்கும் 'ஐயோ' வென்று இருந்தது.

பாவி! பாதகி! மேலே யோசிக்கக் கூட முடியாமல் சமாலினிக்கு நெஞ்சை அடைத்தது! இனி என்ன செய்வது?

சமாலினி திணறிக் கொண்டு இருந்தபோது, டெலி ஃபோன் மணி அடித்தது! மூவரையும் திடுக்கிட வைத்தது.

டெலிஃபோன் அறைப் பக்கமாக எட்டு எடுத்து வைத்த வருணியை ரூபா தடுத்து நிறுத்தினாள். ''நீங்கள் எடுக்காதீர்கள். சும்மா யாரிடமாவது எதையாவது உளறிக் கொட்டிவைப்பீர்கள். அது பாட்டில் அடித்து நிற்கட்டும்'' என்றாள்.

என்னவோ, அந்த டெலிஃபோனில், தன் உயிரே இருப்பது போன்ற உணர்வு சமாலினிக்கு. ''ஏன், சம்பத்குமாராக இருந்தால்? என்ன பிரச்சனையோ, என்னவோ? எங்கேயாவது 'மோதிக் காலைக் கையை உடைத்துக் கொண்டிருந்தால்?'' என்றாள் துடுக்காக.



''அய்யய்யோ! சம்பூ...'' என்று அலறியபடி டெலி ஃபோனிடம் வருணி ஓடிச் சென்று ரிசீவரை எடுத்தாள்.

பாய்ந்து சென்று ரிசீவரைப் பிடுங்கி, ''ஹலோ!'' என்றாள் ரூபா.

அந்தப் பக்கம் யார் பேசினார்களோ! சட்டெனக் குரலை மாற்றி, ''நான், வீட்டு வேலைக்காரி பேசறே னுங்கோ! ரூபாம்மா அல்லாரும் ஊருக்குப் போயிருக் காங்கோ! சம்பத் அய்யா வெளியே போயிருக்காங்கோ! சா... யந்திரம் தான் வருவாங்கோ! வந்ததும் சொல்றே னுங்கோ!'' என்று பேசிவிட்டு ரிசீவரைக் கீழே வைத் தாள்.

''குட்டிச்சுவராக்க இருந்தீர்களே!'' என்று சினத்து டன் வருணியிடம் கத்தினாள். ''ஏன், உன் அருமைப் பிள்ளைக்குக் கைகால் உடைந்தால் குடியா முழுகி விடும்? அத்தானிடம் மட்டும் நீங்கள் பேசியிருந்தால் எதையாவது உளறிக் கொட்டி எல்லாவற்றையும் கெடுத்து முடித்திருப்பீர்கள்!''

''ஏய்! என் சம்புவுக்கா கை கால் உடைந்தால் பரவாயில்லை என்கிறாய்?'' என்று அண்ணன் மகள் மேல் பாய்ந்தாள் வருணி.

''சீ! பைத்தியம்!'' என்று பெரியவளைப் பிடித்து ரூபா தள்ள இருவருக்கும் இடையே சிறு யுத்தம் நடந்தது.

''புவனா பேசியது?'' என்று கேட்ட சமாலி னிக்கு ஹோவென்று வந்தது. தப்புகிற வாய்ப்பு கையெட்டும் தூரம் வரை வந்து கை நழுவிப் போய்விட் டதே! ரூபா பேசியபோது, சும்மா கத்தியிருந்தால், கூடக்

கேட்டு வந்திருப்பானே! அவ்வளவுதான்! போயிற்று! இனி எல்லாம் தொலைந்தது!

இனி, சம்பத்குமார் வேண்டிய கருவிகள் சகிதம் வந்து விடுவான். கதவை உடைப்பான்! பிறகு...

அதைவிட, அந்த மாதிரி நிலைமை எதுவும் நேருமுன், என்னவாவது பண்ணி உயிரை விட்டு விடுவது மேல்! இவன் பேச்சைக் கேட்டுப் புவனைத் தப்பாக நினைத்ததற்குச் சரியான தண்டனையாக இருக்கும்!

சுற்றுமுற்றும் தேடியவளின் கண்களில், பாதி திறந்திருந்த அலமாரியில் மடித்து வைக்கப்பட்டிருந்த சேலையும், உட்கார்ந்து ஒப்பனை பண்ணுவதற்காகக் கண்ணாடி முன் போடப்பட்டிருந்த ஸ்டூலும், மேலிருந்து தொங்கிய மின் விசிறியும் தென்பட்டன. நடுங்கிய கால்களால், அவள் ஒரு வழியாய், அந்தச் சேலையை மின் விசிறி மீது போட்டு, கீழே இழுத்து சுருக்கு முடிச்சைப் போட்டு முடித்தபோது வாயிற் கதவு தட்டப்பட்டது.

"சம்பூ!" என்று வருணியை விலக்கிக் கொண்டு, ஓடிச் சென்று கதவைத் திறந்த ரூபா திகைத்து நின்றாள்.

"என்னை எதிர்பார்க்கவில்லை, அல்லவா?" என்றபடி சிலையாகி நின்ற அவளை நகர்த்திவிட்டு உள்ளே வந்தவன் புவனபூபதி.

புவனைக் கண்ட வருணியும் திகைத்துத்தான் போனாள். ஆனால், அவளது தாய்மை, அவளை உடனே தட்டியெழுப்பி விட, அவள், சுமாலினியிடம் ஓடிச் சென்றாள்.



கதவைத் திறந்து விட்டு விட்டு, ஜன்னலிடம் ஓடிச் சென்று, "சத்தியத்தை மறந்து விடாதே" என்றபடி, உள்ளே பார்த்தவள் வீறிட்டாள்!

"வேண்டாம், வேண்டாம். வந்திருப்பது புவனன்! ஸ்டூலை உதைத்துவிடாதே!" என்று அலறினாள்.

ஸ்டூலில் ஏறி, கழுத்தில் சுருக்கை மாட்டிக் கொண்டிருந்த சுமாலினி சந்தேகமாய் நோக்கவும், "அய்யோ! நான் சொல்வது நிஜம். வந்திருப்பது பாபுதான்! பாபு இங்கே ஓடி வா! சுமாலினி தூக்கு மாட்டிக் கொண்டு இருக்கிறாள்!" என்று அலறினாள்.

அப்போதும் சுமாலினிக்கு நம்பிக்கை இல்லைதான்! ஆனால், "சுமீ" என்று அழைத்தபடி, கதவைப் புவனன் மோதவும், அவசரமாக சுருக்கை விலக்கி விட்டு ஸ்டூலிலிருந்து இறங்கி ஓடி வந்தாள்!

அதன் பிறகு, அவர்கள் இருவரும் அங்கே இருந்தது வெகு சில நிமிடங்களே!

அடுத்த மோதலுக்குப் புவனன் தயாராகி கொண்டு இருந்தபோதே உள்ளிருந்து சுமாலினி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து விட, அவளை இறுக அணைத்தபடி சில கணங்கள் நின்றான்.

உடனேயே கையணைப்பில் அவளை நிறுத்திய படியே கிளம்பி விட்டான்.

"சுமா, சுமா!" என்று தன் பெரிய உடலைத் தூக்கிக் கொண்டு வருணி ஓடி வரவும், சற்று நின்று! "பாவம், உங்கள் சித்தி!" என்றாள் சுமாலினி.

அவளை, ஒரு பார்வை பார்த்து விட்டு, "ஓகே! என்னோடு வாருங்கள் சித்தி!" என்றான் புவனன்.

மூவரும் வீட்டின் வாயில்படி இறங்கி சென்ற போது, சம்பத்குமாரின் கார் வந்து சேர்ந்து, அவனும் காரை வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

காலம் உணர்ந்து திரும்பியவனுக்கு, அன்னையின் பார்வையை நேராகச் சந்திக்க முடியவில்லை.

புவனனின் ''முட்டாள்'' - இல் மேலும் அவன் தலை குனிந்து விட, ''சொந்தமாய் அறிவு இல்லை என்றால், சொல் புத்தியாவது, நல்ல புத்தியாய்க் கேட்க வேண்டும்! இருந்திருந்து, இன்னோர் அரைவேக்காடு தானா கிடைத்தாள்? இன்றே கிளம்பி, செகந்திராபாத் போ! அடுத்த வாரம் பூனா போக வேண்டும். இந்தப் பக்கம் இனி உன்னை நான் பார்க்கக் கூடாது. புரிகிறதா? சித்தியைக் கூட்டிப் போய்ச் சென்னையில் விட்டு விட்டுப்போ. அவர்களிடம் தப்பாக ஒரு வார்த்தை பேசினாய் என்று தெரிந்தாலும் தொலைத்து விடுவேன்! ஜாக்கிரதை!'' என்று எச்சரித்தான்.

''தைரியமாகப் போங்கள் சித்தி!'' என்று சிறிய தாயாரை, அவருடைய மகன் வசம் ஒப்புவித்து விட்டு, சுமாலினியுடன் கிளம்பினான்.

நேரே வீடு சேர்ந்து, அவனது அலுவல் அறைக்குள் அவளை அழைத்துச் செல்லும் வரையிலும் கூட அவன் அவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. அவளாகப் பேச முயன்றபோதும் அவன் அவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

தப்பாயிற்று என்றபோதும், உயிரை விடும் அளவுக்குப் போய் விட்டிருந்ததால் சுமாலினியும் உள்ளூர வெலவெலத்துப் போயிருந்ததால், மேலே பேசும்



முயற்சியைக் கைவிட்டு, பேசாமல் சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

அவளது நிலை உணர்ந்தது போல, காரின் வேகம் மட்டும் சற்றே குறைந்தது. மற்றபடி, வீடு வந்து சேர்ந்து அறைக்குள் அழைத்துச் செல்லும் போது, அவனது பிடி அழுத்தமாகத்தான் இருந்தது.

இப்போது என்ன? அவளைத் திட்டப் போகிறானா? ஆனால், அவனும் தானே தப்பு செய்தவன்? அவன் மட்டும் சம்பத்தைத் திருமணத்துக்குத் தூண்டாமல் இருந்திருந்தால்.... பிறகு தான் யார் என்பது மறைக்காமல் சொல்லியிருந்தால்... இந்தக் குழப்பம் கிழப்பம் என்று ஒன்றுமே நேர்ந்திராதே!

ஆனால், இப்படியெல்லாம் ஏதேதோ காரண காரியங்கள் மனதில் தோன்றினவே தவிர, முன் போலப் புவனனைப் பிரிந்து சென்று விடவேண்டும் என்ற எண்ணம் மட்டும் மறந்தும் தலை காட்டவே இல்லை! ஓர் அரை நாள் பிரிவு அந்த அளவுக்கு அவளை மாற்றி விட்டிருந்தது.

அவனும் அவளும்தான் முக்கியம்! இருவரும் இணைந்திருப்பதுதான் முக்கியம்! மற்றபடி யார் என்ன செய்திருந்தாலும், அது தப்போ சரியோ எதுவாயிருந்தாலும் அது பெரிய விஷயம் அல்ல! இந்த அருகாமையும் அது நிச்சயம் என்பதுமே போதும்!

இந்த மனநிலையில் இருந்ததாலேயோ என்னவோ, அவனது அறையில் கொண்டு நிறுத்தி, புவனன் அவளை உறுத்து நோக்கியபோது சுமாலினிக்குச் சிரிப்பு தான் வந்தது. ''என்ன சிரிப்பு?'' என்று அவன் உறுமியபோதும்!

''பின்னே? சம்பத்குமார் மாதிரிப் பயந்து நடுங்குவேன் என்று நினைத்தீர்களா? உங்கள் சித்தப்பா மகனுக்குக் குற்றக் குறுகுறுப்பு! எனக்கென்ன வந்தது?'' என்றாள் அவள் நகைமுகமாகவே!

''ஏன்? நீ தப்பே செய்யவில்லையா? சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி விட்டாயே! ஒரு ஃபைல் எடுக்க வந்தேன்! நீ சம்பத்தோடு போனது தெரிந்தது. அவன் சொல்லாமல் கொள்ளாமல் கூட்டிப் போனது ரொம்பவும் மனதை உறுத்தியது. என்னவோ தப்பு என்று தோன்றவும்தான் அவ்வளவு தேடினேன்! இல்லாவிட்டால்...'' என்றவன் சட்டென அவளை இழுத்து இறுக அணைத்தான். மூச்சுத் திணறும் அளவுக்கு இறுக்கம்.

பிறகு விடுவித்துக் கேட்டான். ''தூக்கு மாட்டிக் கொண்டு நின்றாயே! எதற்கும் துணிந்து நிற்க வேண்டாமா? அப்படி என்ன ஆகி விடும்?'' என்று கடிந்தான்.

''உங்களுக்குத் தெரியாது! சம்பத்குமார் என்னை....'' என்று தொடங்கியவள் தயங்கி நிறுத்தினாள். சம்பத்குமார் மெய்யாகவே அந்த அளவுக்குத் துணிந்திருப்பானா? ஒரு வேகத்தில் சொன்னது! என்னதான் ரூபா தூண்டி விட்டாலும்...

''சம்பத் வெறும் சாரைப் பாம்பு!'' என்றான் புவனனும். ''சீறத் தெரியுமே தவிரக் கடிக்கும் துணிவு கிடையாது. ஆனால், ரூபா! அவள் பேய்! அங்கே சம்பத்தின் குரல் கேட்கவும்தான் நான் பயந்து போனது! வழக்கமாக ஓட்டலில் தங்குகிறவன் அவன். அங்கே இல்லை. அவன் மாமா வீட்டுக்கு முயன்றால் இவன் எடுக்கிறான். மாமா வீட்டில் யாரும் இல்லாதபோது இவன் ஏன் அங்கே போனான் என்று ஏதோ ஒரு



உறுத்தல். திரும்பவும் ஃபோன் செய்து பார்த்தால் ரூபாவின் குரல். சித்தி சத்தம் வேறு. உடனே அவள் வேலைக்காரி போலக் குரல் மாற்றிப் பேசியதும் சேர்ந்துதான் என்னவோ என்று ஓடி வந்தேன். வந்தால்.... மீண்டும் அணைத்தவனின் உடல் நடுங்குவதை உணர்ந்து, சுமாலினி அவனது முதுகை மிருதுவாய் வருடிக் கொடுத்தாள்.

அவன் சற்று இறுக்கம் தளரவும், ''ஏதோ குடும்பத்தோடு வெளியூர் அனுப்பியதாக அனுப்ப முயன்றதாக ரூபா சொன்னாள். சும்மா 'வராதே' என்றிருக்கலாம் அல்லவா?'' என்று வினவினாள்.

''எப்படிச் சொல்வது, சுமி? அவள் அம்மாவோடு கூடப் பிறந்தவர் மகளாயிருந்தால் கூடச் சொல்லியிருப்பேன். சித்தியுடன் பிறந்தவர் மகளாயிற்றே! குடும்பத்தில் வீண் தகராறு ஆகிவிடுமே!''

சற்று விலகி, அவனை யோசனையோடு, நோக்கினாள் அவள். ''நீங்கள் தான் பாபு என்பதை ஏன் மறைத்தீர்கள்?''

''பிரமாதமான கேள்விதான்!'' என்று அவளது மூக்கைப் பிடித்து ஆட்டினான் புவனன். ''நீதான் 'பாபு' என்ற பெயர் சொன்னாலேயே தீயாய் நின்றாயே! உன்னைப் பார்த்தாயிற்று. பார்த்த பிறகு விட முடியாது என்று தெரிந்தாயிற்று. 'பாபு' என்றால் முதலிலேயே வெட்டிக் கொள்வாயோ என்ற பயம். புவனனாக உன் அன்பைச் சம்பாதித்துக் கொண்டு பிறகு சொல்லலாம் என்று பார்த்தேன். என்ன முயன்றும், உன் 'பாபு வெறுப்பு' மாறவே காணோம்!''

''பின்னே? சம்பத்குமார் மாதிரி ஒருவனுக்கு என்னை மணமுடிக்க ஏற்பாடு செய்தீர்களே! ஒரு பெண்ணின் கதி என்ன ஆகும் என்று யோசிக்கவில்லைதானே?'' என்ற போது, அப்போதும் அவளுக்குத் தொண்டை அடைத்தது.

''கண்மணி கண்மணி!'' என்று அவளைத் தட்டிக் கொடுத்தான் புவனபூபதி. ''பார், நான் ஏன் இந்த ஏற்பாடு செய்தேன் என்பதை முதலில் உன்னிடம் விவரமாகச் சொல்லி விடுகிறேன்! இதைச் சொல்லு. ஒரு குடும்பத் தலைவனின் கடமை முதலில் யாருக்கு? மனைவிக்கு. அப்படித்தானே?''

அவள் தலையாட்டினாள். அடுத்து மக்களுக்கு. அதன்பின் அவனது பொறுப்பில் வாழும், அடுத்த நெருக்கமான உறவினருக்கு. அவர்கள் தவறே செய்தாலும், அவர்களைக் காப்பதும், காத்து நல்வழிப்படுத்துவதும், ஒரு நல்ல வாழ்வை அமைத்துத் தருவதும் அவனது கடமை! நான் அதைத்தான் செய்தேன்! உன் தாத்தாவைப் பார்த்திருக்கிறேன். பேசியிருக்கிறேன். அவர், போல அவருடைய வாரிசான நீயும் நிமிர்ந்து நிற்பாய் என்று நினைத்தேன். சொத்து வேறு உன் கையிலே இருக்கும்போது, அவன் குடுமி உன் கையில் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அது உன்னைப் பார்க்குமுன்பு!

''பார்த்த பிறகு?''

''முதல் கடமை உன்னதாகி விட்டது!''

''சம்பத்குமாரை என்ன செய்யப் போகிறீர்கள்?''

''நீ என்ன செய்யச் சொல்கிறாயோ, அதை!''



''புவன்...'' என்றவள் தயங்க ''என்னடா!'' என்று உருகினான் அவன்.

''சம்பத்குமாருக்கு இப்போது திருமண ஏற்பாடு எதுவும் செய்யாதீர்கள்!'' என்றாள் அவள்.

''சரி. ஆனால் அவன் வாழ்வு?''

''அவரது இன்றைய நிலைக்கு, அவரை மணக்கிறவளின் வாழ்வு வீணாகிவிடும். அனாவசியமாய் ஒரு பெண்ணின் பாவம் நமக்கு எதற்கு? கொஞ்ச நாள் இப்படியே பணத்தை இழுத்துப் பிடியுங்கள். கையில் பணம் இல்லாவிட்டால் அதிக தப்பு செய்ய முடியாது! அவர் கொஞ்சம் திருந்திய பிறகு பார்ப்போம்!''

''தேவியார் உத்திரவு!'' என்று சிரித்தான் அவன்.

''தாத்தா நாளை வருகிறாராம்! தி... திருமணம் முடிவாகி விட்ட மாதிரிப் பேசினார்!''

''ஒரு மாதம் முன்பே எங்களுக்குள் முடிவாகி விட்டது.''

அவள் புரியாமல் நோக்கவும், ''இங்கு வந்த அன்று காலையில், உன் தாத்தாவிடம் நான் பேசினேனே, நினைவிருக்கிறதா? என்ன சொன்னேன் தெரியுமா? ஒன்றில்லாவிட்டாலும் இன்னொரு வகையில் எங்கள் வீட்டு மருமகள்தான் நீ. அதனால் என் அம்மாவிடம் இருக்கட்டும் என்றேன்!''

''ஓகோ! அதுதானா அவர் அப்படி அமைதியாகப் பேசினார்!'' என்றவள், அவனை வியந்து நோக்கினாள்.

அவன் உருகி, ''என்னடாம்மா!'' எனவும், தலையசைத்து, ''பாபுவாய் உங்களை அவ்வளவு வெறுத்தேன்!

ஆனால், இப்போது? நீங்கள் சொன்னது போல, வெறுப்புக்கும், விருப்புக்கும் இடையே இடைவெளி அதிகம் இல்லை தான் போலும்!'' என்றாள் அவள்.

''ஆமாம், மயிரிழையினும் மெல்லிய ஒரு கோடு தான்! அது தாண்டி வந்து விட்டால், அன்புதான்! காதல்தான்!'' என்றவன் மீண்டும் அவளை இறுக அணைத்தான்.

''எ...என்ன?'' என்றாள் அவள் மூச்சுத் திணறிய படி.

''நம் இருவருக்கும் இடையே, இடைவெளியே கூடாது என்று பார்த்தேன்!'' என்று கண்சிமிட்டிச் சிரித்தான் அவன் - பாபு என்கிற புவனபூபதி.